
கல்கி
புத்தாண்டு
மலர்
இந்த இதழில்:
காலச்சக்கரம்
KALKI
ஏப்ரல் 11, 1965
35 காசு

டிவிஎஸ் ரீடிரெடிங்கின் உயர்தரத்திற்குச் சிறந்த சான்று

டிவிஎஸ் ரீடிரெட் செய்த ஒரு டயர் 56,394 மைல் உழைத்தது - இன்னும் உழைக்கக்கூடிய நல்ல நிலைமையில் இருக்கின்றது *

இணையற்ற சாதனை *

புது டயர் டிரெட்	36,987 மைல்
டிவிஎஸ் முதலாவது ரீடிரெடிங்	41,073 மைல்
டிவிஎஸ் இரண்டாவது ரீடிரெடிங்	15,321 மைல்
இன்னும்	10,000 மைல் ஓடக்கூடும்



இப்பொழுது இது இரண்டாவது முறை ரீடிரெட செய்யப் பட்டது. மூன்றாவது முறையும் இது ரீடிரெடிற்கு உகந்தது. இவ்வித உழைப்பு, டிவிஎஸ் ரீடிரெட் செய்த டயர்களில் சாதாரணம். இதற்கு அடிப்படைக் காரணம் விஞ்ஞான ரீதியில், துளியும் பிசகாமல், கண்ணும் கருத்துமாக டிவிஎஸ் பணி செய்வதே.

நாங்கள் கையாளும் முறை:

(1) டயர்களை சுத்தம் செய்து, சிறு கண்ணாடித் துண்டுகள், ஆணிகள், கற்கள், முதலியவற்றை அப்புறப்படுத்தி, உள்ளும் புறமும் சுத்தப்படுத்தி, புதுப்பிப்பதற்கு வேண்டிய பக்குவம் செய்கிறோம்.

(2) கேஸிங்குகளுக்கு தேவையான இடங்களில் புதிய லேயருகளை (plies) கொடுத்து பலப்படுத்துகிறோம்.

(3) எக்ஸ்ட்ரா-திக் காமெல்-பாக் ரப்பரை உபயோகப்படுத்துகிறோம். இந்த ரப்பர் கெடாமல் இருக்கும்பொருட்டு, குளிர்சாதன அறையில் அடைத்து வைத்திருக்கிறோம்.

டிவிஎஸ் ரீடிரெடிங் செய்வதால் ஒரு டயருக்கு அதிக மைல்கள் கிடைக்கின்றன. அதனால் ஒரு ரூபாய்க்கு இன்னும் அதிக டயர் மைல்கள் கிடைக்கின்றன.

TVS டிவிஎஸ் —

இந்தியாவிலேயே மிகப்பெரிய ரீடிரெடிங் ஸ்தாபனம்

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட் (டிவிஎஸ் ஸ்தாபனம்)

தொழிற்சாலைகள்: பங்களூர் · கோயமுத்தூர் · சென்னை · புதுக்கோட்டை · செகந்திராபாத் · திருநெல்வேலி

குறிப்பு: தற்பொழுதும் உழைக்கும் டயரின் படம் இது. இந்த ரிகார்டுகளை எங்கள் சென்னை ஆபீஸில் என்றும் பார்வையிடலாம்.

JWT-TVS 31-2944


கல்கி



பொருளடக்கம்

குரோதி பங்குனி 29 ❁ ❁ ❁ ❁ ❁ ஏப்ரல் 11

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



பத்தாண்டில் ஜகம் முழுதும் சுகம் காண ஜகத்குருவின் அருளை நாடுகிறோம்.



மலர் 24 ○ இதழ் 37

பத்திரிகைத் தொழில் பரிதவிக்கிறது!

நமது நேயர்கள் யாவருக்கும் விசுவாவசு வருட நல்வாழ்த்துக்களை அளிக்கிறோம்.

எந்தப்புறம் பார்க்கிலும் அந்தகாரமாயிருக்கும் சூழ்நிலையில் புத்தாண்டு பிறந்திருக்கிறது. வியட்நாம் கலவரத்தால் அகில உலகமும் கலக்கமுற்றிருக்கிறது. உள்நாட்டிலோ ஆட்சி மொழிக் குழப்பமும், புதிய பட்ஜெட்டும் எல்லையில்லாத உற்பாதங்களை விளைவித்துள்ளன. அகில உலகப் பிரச்னைகளும் நாட்டுப் பிரச்னைகளும் இவ்வாறிருக்கப் பத்திரிகைத் துறை ஒரு பயங்கரமான சூழ்நிலையில் புது வருடத்தைத் தொடங்குகிறது.

பத்திரிகைக் காகிதத்தின் மீதுள்ள இறக்குமதி வரி உயர்த்தப்பட்டிருப்பதாலும், விலைவாசிகளின் உயர்வை ஒட்டி நிர்வாகச் செலவு பெருகியிருப்பதாலும் 'கல்கி'ப் பிரதியின் விலையை இவ்விதழிலிருந்து ஐந்து காசுகள் உயர்த்த வேண்டியுள்ளது என்று சென்ற இதழில்தான் எழுதியிருந்தோம். எழுதிய மை காயுமுன்பே பத்திரிகைத் துறையின் தலையில் மற்றொரு பேரிடி விழுந்தது.

பத்திரிகைகள் உயிர் வாழ்வதற்கு ஜீவாதார சக்தியளிப்பது விளம்பரங்களிலிருந்து கிடைக்கும் வருமானம் தான். விளம்பரங்கள் கணிசமாகக் குறைந்துவிட்டால் பத்திரிகைகள் செத்து மடிய வேண்டியதுதான். பத்திரிகைகளின் வாழ்வுக்கும் தாழ்வுக்கும் முக்கிய காரணமாகிய விளம்பரத் துறையில் பாரத அரசாங்கம் விவேகமின்றிப் புகுந்து விபரீதம் விளைவித்திருக்கிறது.

விளம்பரம் **பெறுகிற** பத்திரிகைகளுக்குத்தான் அது வருமான அம்சம் என்பதும், விளம்பரம் **செய்கிறவர்களுக்கு** அது செலவினமே என்பதும் யாருக்கும் புலனாகக் கூடிய உண்மை. ஆனால் பணப் பசி பிடித்திருக்கும் சர்க்காருக்கு இந்த உண்மை புலனாகவில்லை. விளம்பரச் செலவுக்கு மிகவும் அற்பமான ஒரு வரம்பு கட்டி, அதற்கு மேல் போனால் விளம்பரம் செய்கிறவர்கள் தாங்கள் செய்யும் விளம்பரத்துக்கு வருமான வரி கட்ட வேண்டும் என்று சமீபத்தில் ஒரு துக்ளாக் சட்டம் விதிக்கப்பட்டது.

சர்க்கார் விதிக்கிற வரம்புக்கு மேல் விளம்பரம் செய்தால் அந்தச் செலவை நியாயச் செலவாக வரி இலாகா ஒப்புக் கொள்ளாது என்றும், அந்தத் தொகைக்கு வரி உண்டு என்றும் விதிமுறை வெளியானதை அடுத்து, பத்திரிகையாளரும் விளம்பர ஸ்தாபனத்தினரும் கலக்கமடைந்து கிளர்ந்தெழுந்தனர்; நிலைமை எவ்வளவு பயங்கரமானது என்பதைச் சர்க்கார் ஓரளவு உணரும்படி செய்தனர். இதன்பின் குறிப்பிட்ட விதிமுறையை நிறுத்தி வைத்து விட்டு, சம்பந்தப்பட்ட துறையினரின் ஆலோசனையுடன் புதிய விதிகள் பிறப்பிக்கப் போவதாக அரசாங்கம் கூறியுள்ளது.

எப்போதுமே பாரத சர்க்கார் கடைப்பிடிக்கும் தந்திரம் ஒன்று உண்டு. அரசாங்கம் ஒரு கடுமையான நடவடிக்கையை உத்தேசித்தால், அதைவிடக் கடுமையான ஒரு திட்டத்தை வெளியிடும். திட்டத்துக்கு எதிர்ப்பு ஏற்படும். உடனே திட்டத்தின் கடுமையை ஓரளவுக்குக் குறைக்க முன்வருவது போல் அரசாங்கம்

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி — பாப்பா
— பாரதியார்

பாசாங்கு செய்து, தான் முதலில் உத்தேசித்திருந்த கடுமையான திட்டத்தையே அமுலாக்கும்; அதே சமயத்தில் சர்க்கார் ஏதோ விட்டுக் கொடுத்து விட்டாற் போன்ற பிரமையை உண்டுபண்ணித் தனது 'காருண்யத்துக்காக' அறியாமை நிறைந்த நாட்டில் நற்பெயரும் எடுக்கும். ஒட்டகத்தின் முதுகெலும்பு முறியுமளவுக்குப் பாரத்தை ஏற்றி விட்டு, அதன் பின் ஒரு வைக்கோற் புரியை அதிலிருந்து எடுத்தெறிந்து ஒட்டகத்தை ஏமாற்றுவது போன்றதே பாரத சர்க்காரின் வரி விதிப்பு — வரிக் குறைப்பு நடவடிக்கை.

நாம் ஒட்டகத்தைப் போல் ஏமாறக் கூடாது. 'புதிதாக விதி செய்கிறோம்' என்று கூறி, வரி விலக்கு வரம்பை மட்டும் உயர்த்துவதோ, சில இனங்களுக்கு மட்டும் விலக்கு அளிப்பதோ நியாயமான முடிவாகாது. இவ்வாறு செய்வதால் பாரத சர்க்காரின் பிரசித்தி பெற்ற பட்சபாதச் சலுகை ஆட்சிக்கு மேலும் ஓர் இனம் ஆளாவதைத்தான் காண்போம். விளம்பரம் செய்வது குறித்த சுதந்திர உரிமைகள் இது வரை இருந்தது போலவே எவ்வித மாறுபாடுமின்றி நீடிக்கப்பட வேண்டும். இதுவே நியாயம். தற்போது சர்க்காரின் இறக்குமதி வரி காரணமாகவும், வாழ்க்கைச் செலவுப் புள்ளி உயர்ந்திருப்பதாலும் பத்திரிகைத் தொழிலில் லாபம் காண்பது சாத்தியமே அல்ல. வரவுக்கும் செலவுக்கும் ஈடு கட்டினாலே போதும் என்பதுதான் நிகழ்கால நிலைமை. எனவே விளம்பர வருமானத்தில் எவ்வளவு சிறிய சதவிகிதம் குறைந்தாலும் அந்த அளவுக்குப் பத்திரிகைகள் நஷ்டத்தில்தான் நடந்தாக வேண்டும். இதை ஒருகாலும் ஒப்புக் கொள்வதற்கில்லை. 'மைனிந்தியா' பத்திரிகையில் ஸ்ப்ராட் அவர்கள் ஆணித்தரமாக எடுத்துக் காட்டியிருப்பது போல், பாரத சர்க்காரானது இதுவரை பத்திரிகைத் தொழிலின் நன்மைக்காக எதுவுமே செய்ததில்லை. ஆயிரமாயிரம் கோடி ரூபாய்கள் செலவிட்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுத்து நிறைவேற்றி வருகிறார்கள். ஆயினும் ஒரு சல்லிக் காசுகூடப் பத்திரிகை நலனுக்காகச் செலவிடப்படவில்லை. மேருமலை போலப் பெருகியுள்ள திட்டக் கமிஷன் புஸ்தகங்களில் பத்திரிகைத் தொழிலபிவிருத்தி பற்றி ஒரு வார்த்தைகூடக் கிடையாது. நன்மை செய்யாததோடு மட்டுமின்றி அத்தொழிலுக்குத் தீமையும் புரிந்திருக்கிறார்கள். இயந்திரங்கள், காகிதம் இவற்றின் இறக்குமதிக்கு எத்தனை குந்தகமுண்டோ அத்தனையும் செய்திருக்கிறார்கள். இதெல்லாம் போதாது என்று இப்போது விளம்பரத்தின் தலையில் கை வைக்கப் பார்க்கிறார்கள். இதற்குப் பத்திரிகையாளர் இம்மியும் இடம் தரலாகாது. ஜனநாயகம் நன்றாக நடைபெறுவதற்குப் பத்திரிகைகள் இன்றியமையாத சாதனமாகும் என்பதைச் சர்க்கார் மறந்துவிட்டதாகத் தோன்றுகிறது.

சர்க்காரின் புதிய விளம்பர விதிகள் எவ்வாறு உருப்பெறுமோ நாம் அறியோம். அவை இந்த ஏப்ரில் முதல் தேதியிலிருந்தே அமுலானதாகக் கருதப்படுமா அல்லது விதிகள் வகுக்கப்படும் நாளிலிருந்து அமுலாகுமா என்பது இன்னமும் நிச்சயமாகத் தெரியவில்லை.

புதிய விதி முறைகள் பத்திரிகைத் தொழில் நடத்துவதற்குப் பிரதிகூலமாக அமையுமானால், புதிய சூழ்நிலைக்கேற்பப் பத்திரிகைகள் தங்கள் பொருளாதாரத்தை மாற்றியமைத்துக் கொள்ளக் குறைந்தது ஆறு மாதங்கள் ஆகலாம். எனவே புது விதிகள் வெளியாகிச் சில மாதங்களுக்குப் பிற்பாடு தான் அவற்றை அமுலுக்குக் கொண்டு வர வேண்டும்.

புதிய முடிவு என்னவாக இருக்கும் என்று அறிய முடியாத இன்றைய நிலையில் விளம்பரம் செய்வோர் விளம்பரம் கொடுக்க அஞ்சுவது இயற்கை. ஏப்ரில் முதல் தேதியிலிருந்தே தாங்கள் செய்யும் விளம்பரத்துக்கு வரி செலுத்த நேரிட்டாலும் நேரிடலாம் என்பதால் பலர் விளம்பரங்களைத் தாற்காலிகமாக நிறுத்தி வைக்கக் கூடும். இதனால் பத்திரிகைகளின் வருமானம் கடுமையாகப் பாதிக்கப்படும். இந்த நஷ்டத்தைச் சர்க்கார் ஒருபோதும் ஈடு செய்யப் போவதில்லை.

சர்க்காரின் யோசனையற்ற திட்டத்தால் கடந்த சில நாட்களாகப் பத்திரிகை உலகிலும், உற்பத்தித் துறையிலும் ஏற்பட்ட மனக் குழப்பத்துக்கும் கவலைக்கும் அரசாங்கம் எப்படி நஷ்டஈடு தரப் போகிறது?

தீவிரமான எதிர்ப்பு இருந்ததால்தான் அரசாங்கத்தின் நடவடிக்கை கைவிடப்பட்டிருக்கிறது. இச்சமயத்தில் உத்தேச உத்தரவினால் எத்தகைய தீமைகள் விளைந்திருக்கும் என்பதையும் வாசகர்களுக்கு எடுத்துக் காட்டினால்தான் அவர்கள் அரசாங்கத்தின் மதியீனத்தையும், யதேச்சாதிகாரத்தையும் அறிந்து, இனி ஒருபோதும் இதுபோன்ற ஒரு திட்டத்தைச் சர்க்கார் கொண்டு வரக்கூடாது என்பதை உணருவார்கள்.

புதிய விதியின் விளைவுகள்

விளம்பரச் செலவுக்கு வரம்பு கட்டி, அதற்கு மேல் செலவிட்டால் வருமான வரி செலுத்த வேண்டும் என்ற உத்தரவின் உட்பொருள் புரிய வேண்டுமாயின் 'மெயில்' பத்திரிகை கூறும் ஓர் உதாரணத்தைப் பார்ப்போம்: தற்போது ஆண்டொன்றுக்கு அறுபது கோடி ரூபாய் வருமானமுள்ள ஒரு கம்பெனி கோடிக் கணக்கான ரூபாய்கள் விளம்பரத்துக்காகச் செலவு செய்கிறது. புதிய ஏற்பாட்டின்படி அந்தக் கம்பெனி பதினாறு லட்சம் ரூபாய்க்கு மேல் விளம்பரத்துக்காகச் செலவிட முடியாது. அக்கம்பெனி ஒரு கோடி ரூபாய்க்கு விளம்பரம் செய்யுமாயின், அரசாங்க வரம்பாகிய பதினாறு லட்சம் ரூபாய் போக மீதியுள்ள 84 லட்சம் ரூபாய் விளம்பரத்துக்காக எழுபது லட்சம் ரூபாய் வரி செலுத்த வேண்டும். விளம்பரம் செய்தால் அதற்கு வரி உண்டு என்கிற நிலையில் விளம்

பகவான் அருளைத் தமிழகம் பெற்று,
புதுவழியைத் தொடரும் மக்கள் மேலும்
சுதந்திரமும் சந்தோஷமும் அடைவார்
களாக. இந்த பாக்கியத்தில்
மக்கள் வெற்றியும் வேண்டும்.
அந்தத் துறையில் கல்கியின்
பணி என்றும்போல் நடை
பெற்று விருத்தியும் அடையும்.
ஆண்டவன் அருள்வானாக.
சி. ராஜகோபாலாச்சாரி

பரத்தை எவ்வளவுக் கெவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வாறு குறைக்கத்தான் யாருமே விரும்புவார்கள்.

இதனால் .... (1) நாட்டின் தொழிலுற்பத்தி நாசமாகும். தற்போது சோஷலிஸ தர்பாரின் கீழ் தனியார் துறையில் போட்டி முறை மூச்சைப் பிடித்துக்கொண்டாவது உயிர் வாழ்கிறதெனில் அதற்கு விளம்பரமே உறுதுணையாகும். புதிய தொழிலகங்கள் தங்கள் உற்பத்தியையும், வியாபாரத்தையும் பிரசாரப்படுத்த விளம்பரம்தான் பேருபகாரம் புரிகிறது. புதிய உற்பத்தியாளர்கள் விளம்பரம் செய்கையில் பழைய உற்பத்தியாளரின் தொழில் படுத்துவிடக் கூடாது எனில் முன்பே உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்களும் தங்கள் பொருட்களை விளம்பரப் படுத்திக்கொண்டேதான் இருக்க வேண்டும். விளம்பரத்தைக் கட்டுப்படுத்தும் திட்டம், தனியார் துறையின் வயிற்றில் அடிப்பதாக எண்ணிக் கொண்டு தேச உற்பத்தியையே நாசமாக்குகிற காரியமாகும்.

(2) இன்று விளம்பர ஸ்தாபனங்களில் ஆயிரமாயிரம் மக்கள் பணி புரிகிறார்கள். விளம்பரக் கட்டுப்பாடு ஏற்பட்டால் இந்த நிறுவனங்கள் அதோகதி அடையவேண்டியதுதான். ஓவியக் கலைஞர்கள் பலரும், விளம்பரக் கலையைச் சேர்ந்த பல நிபுணர்களும் வேலையின்மைப் பூதத்துக்குப் பலியாவார்கள். சமீப காலமாக விளம்பரக் கலையில் இந்தியா பெற்றுவரும் பேரும் புகழும் பழங்கதையாகி அழிந்துவிடும்.

(3) எல்லாவற்றுக்கும் மேலாகப் பத்திரிகைகள் உயிர் வாழ்வதற்கே போராட வேண்டியிருக்கும். வருமான வரி விலக்குக்கு உட்பட்ட தொகை ஒருசில பெரிய பத்திரிகைகளுக்கு ஓரளவு விளம்பரம் செய்வதுடனே தீர்ந்துபோகும். பெரும் பத்திரிகைகளின் விளம்பர வருமானம் பெருமளவுக்குக் குறையும். சிறிய பத்திரிகைகளைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். அவை கடையைக் கட்டுவதைத் தவிர வேறு வழியே இராது.

உத்தேச உத்தரவு பிறந்ததற்குக் காரணமென்ன வென்று பார்ப்போம்.

முதலாளிகள், உயர்தர அதிகாரிகள் ஆகியோருக்காகத் தாராளமான பல செலவுகள் செய்து அவற்றைக் கம்பெனியின் செலவினமாகக் காட்டுவதால் சர்க்காருக்குரிய வரி கிடைப்பதில்லை என்றும், இந்தப் போக்கைத் தடுக்க வேண்டும் என்றும் சென்ற ஆண்டு பட்ஜெட் உரையில் நிதி மந்திரி அவர்கள் கூறினார். இதையொட்டி வருமான வரி விதி

முறைகளைச் சம்பந்தப்பட்ட இலாகா மாற்றும்போதுதான் விளம்பரச் செலவையும் வரி ஏய்க்கும் வாய்ப்பாகக் கருதிப் புதிய துக்ளாக் விதி வகுக்கப்பட்டது. இந்த நடவடிக்கை பார்லிமெண்ட் முன் விவாதத்துக்குக்கூட வராமல் வெறும் இலாகா நடவடிக்கையாகவே சர்வ சகஜமாக மேற்கொள்ளப்பட்டது. பார்லிமெண்ட், நீதிமன்றம், சர்வ கலாசாலை, பத்திரிகைகள் இந்த நான்குமே ஜனநாயகத்தின் ஜீவாதாரமான சுதந்திர உறுப்புக்கள் என்ற கொள்கைக்குச் சர்க்கார் சிறிதும் மதிப்புத் தரவில்லை என்பதற்கு இதுவே சான்று. பத்திரிகைகள் சுதந்திரமாக இயங்குவதற்கே விளம்பர வருமானம் அத்தியாவசியமாகும் என்பதை நமது அரசியல் சாஸனகர்த்தர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். இதனால்தான் பத்திரிகை விளம்பர வருமானத்தின் மீது விதிக்கக்கூடிய வரித் தொகை ராஜ்ய சர்க்காரைச் சேருமெனினும், மேற்படி வரி விதிக்கும் பொறுப்பு அகில தேசத்துக்கும் பொதுவான பார்லிமெண்டின் உரிமையே என அவர்கள் கருதினார்கள். அரசியல் சாஸனத்தின் 269 (f) பிரிவையும், ஏழாவது ஷெட்யூலின் 92வது அம்சத்தையும் கவனித்தால் இவ்வுண்மை தெளிவாகும். அவ்வாறிருக்கப் பத்திரிகை வருமானத்தைப் பெருமளவுக்குக் குறைக்கக் கூடிய ஓர் உத்தரவை இலாகா மூலம் வெளியிட்டது மகத்தான தவறாகும். வரி ஏய்ப்பதற்காகத் தொழிலகங்களைச் சேர்ந்த தனி நபர்களுக்குச் செய்யும் சொந்தச் செலவாக விளம்பரச் செலவை ரிவினியூ இலாகா கருதியது எதனால் என்பதும் ஆண்டவனுக்கே (அல்லது நிதி மந்திரிக்கே) வெளிச்சம்.

இத்தகைய ஓர் உத்தரவைப் பிறப்பித்ததில் அரசாங்கத்தின் நோக்கம் என்ன என்பதையும் நாம் ஐயமற அனுமானிக்க முடியும். தனியாருடைய விளம்பரம் குறையக் குறையப் பத்திரிகைகள் சர்க்கார் விளம்பரத்தைத்தான் எதிர்பார்க்க வேண்டும். அவ்வாறு 'எதிர்பார்ப்பதற்கு' என்னென்ன செய்ய வேண்டும் என்பதை எழுதவே கைகூசுகிறது. சுருங்கச் சொல்கிறோம்: பத்திரிகைச் சுதந்திரத்தையும் பத்திரிகையாளரின் மனச்சாட்சியையும் பறி கொடுத்துவிட்டு, நாட்டின் ஏடுகள் ஆளும் கட்சிக்குத் தாளம் போட்டால்தான் வாழ முடியும் என்ற நீச நிலை ஏற்படும். பாரதப் பத்திரிகைகள் யாவும் ஸோவியத் ருஷியாவின் **பிராவ்தா** போல் அரசாங்க அறிக்கைகளாகவே மாறிவிடும். இந்த இழிநிலை பத்திரிகை உலகுக்கு ஏற்படாமல் காப்பாற்ற வேண்டும் என்பதே புத்தாண்டுத் தொடக்கத்தில் நாம் கணநாதனிடம் செய்துகொள்ளும் பிரார்த்தனை.

புத்தாண்டுக்கொரு புனிதத் தொண்டு



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ ஆசாரிய ஸ்வாமிகளது ஆக்ஞைப்படி சென்ற பதினான்கு ஆண்டுகளாக மாயூரத்திலுள்ள திருப்பாவை - திருவெம்பாவை மத்தியக் குழு தொடர்பில் ஆண்டுதோறும் மார்கழி மாதத்தில் பாவை மகாநாடுகள் நடத்தப்படுகின்றன. திருப்பாவை, திருவெம்பாவை புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.


குழந்தைகளுக்கு இந்தப் பாசுரங்களை மனப்பாடம் செய்வித்து அதன் மூலம் அவர்களிடம் தெய்வ பக்தியை ஊட்ட வேண்டும் என்பதே இதன் நோக்கம். ஓரளவு இந்நோக்கம் நிறைவேறியிருக்கிறது.

சென்ற மார்கழி மாதத்தில் இரண்டாயிரம் ஆரம்பப் பள்ளிகளுக்கு ஒன்றே முக்கால் லட்சம் திருப்பாவை — திருவெம்பாவைப் புத்தகங்கள் அனுப்பப்பட்டன. புத்தகங்களை அந்தந்தப் பள்ளிகளுக்கு அனுப்புவதற்கும், இது சம்பந்தமாகப் பள்ளிகளுடன் கடிதப் போக்குவரத்து செய்வதற்கும் ரூபாய் 6,000 மதிப்புள்ள தபாற்கூலி செலவாயிற்று.

நம் மாகாணத்தில் சுமார் 21,000 ஆரம்பப் பள்ளிகள் உள்ளன. அவைகளில் ஐந்தாவது வகுப்பில் மட்டும் பயிலும் ஒவ்வொரு குழந்தைக்கும் மார்கழி மாதத்துக்குள் பாவைப் புத்தகம் கிடைக்கச் செய்ய வேணும் என்பது ஸ்ரீ ஆச்சாரிய ஸ்வாமிகளின் அவா. இவ்வாறு ஐந்தாவது வகுப்பில் மட்டும் சுமார் மூன்று லட்சம் குழந்தைகள் நம் ராஜ்யத்தில் இருக்கிறார்கள். இவர்களுக்குத் தேவையான புத்தகங்களை அனுப்பவும், கடிதப் போக்குவரத்து செய்யவும் சுமார் ரூ. 15,000 வரை தபாற்கூலி செலவாகும்.

நமது குழந்தைகளுக்குத் தெய்வபக்தியும் நல்ல குணங்களும் ஊட்டும் பாவைப் பாடல்களை மனப்பாடம் செய்விக்கும் பணியில் எல்லோரும் பொறுப்புக் கொண்டு உதவ வேண்டும் என்பது ஸ்ரீ ஸ்வாமிகளின் திருஉள்ளக் கருத்து. அன்பர்கள் யாவரும் தங்கள் சக்திக்கேற்பப் புத்தாண்டு தொடக்க நாளிலிருந்து பாவைப் புத்தகங்களை அனுப்ப வேண்டிய அஞ்சல் செலவுக்காகத் தபால் பில்லைகள் அனுப்பி இந்த நற்பணியில் ஈடுபட வேணும் என்பது ஸ்ரீ ஆசாரிய ஸ்வாமிகளின் அருளாணை.

தபால் பில்லைகளை **மானேஜர், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம், ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள் மடம், காஞ்சிபுரம் என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.**


கைத்தறித் தொழில்.
சோஷலிஸம்
சோஷலிஸம்
PK



கபாட பந்தனம்

திருக்கூவம் நதி தீரத்தில் அமைந்துள்ள சென்னையம்பதியின் வட எல்லைப்புறத்தின் கண், குடித்தனக் கிருஹ நிர்மாண மகா முனியின் அருளால் நூதனமாகத் தோன்றியுள்ள வி. ஐ. டி. நகர் எனும் திவ்விய க்ஷேத்திரத்திலே, உமாபதி என்ற உத்தமரும், அவரது தர்மபத்தினி தமயந்தியும் விருந்தினரை ஓம்பி, அவர்களுக்குக் காப்பி, கோகோ, தேயிலை, எலுமிச்சம்பழத் தண்ணீர் முதலியன கொடுத்து, இல்லறம் நடத்தி வந்தனர்.

தமயந்தி ஒரு பெண் மகவைச் சுகமாக ஈன்றெடுத்தாள். ஆண்டவன், அழகு தொட்ட கைகளின் ஆறு விரல்களால் அவளைத் தொட்டருளியிருக்கிறான் என்று குழந்தையைப் பார்த்தவர்கள் கூறி அதன் அழகைப் புகழ்ந்தார்கள்.

உத்தியோக விற்பன்னர்கள் தயாரித்துள்ள 'டெலிபோன் கெய்ட்', 'சட்டசபை வாக்காளர் ஜாபிதா' ஆகிய கிரந்தங்களை உமாபதி ஆராய்ச்சி செய்து பார்த்து முடிவில் 'மாதங்கி' என்ற பெயரைத் தெரிந்தெடுத்து அந்த அழகான பெயரைச் சௌந்தர்யவதியான தமது மகளுக்குச் சூட்டினார்.

ஆஸ்திரேலியா தேசத்தின் அகண்ட பசும் புல்தரைகளில் ஆனந்தமாய் மேய்ந்த ஆவினங்கள் சொரிந்த பாலினின்றும் தயாரித்த பால் மாவை, மாதங்கி பாட்டிலினின்றும் ரப்பர் மூலமாக உறிஞ்சி உண்டு நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தாள்.

வருஷங்கள் உருண்டோடின. மாதங்கி கல்லூரியில் நான்கு வருட காலம் சாஸ்திரோக்தமாகப் பயின்று, நாலு பிரதம பாடங்கள், ஆறு உப பாடங்கள், பதினெண் விளையாட்டுப் பந்தயங்களைக் கற்றுத் தேர்ச்சியடைந்து, அதற்கான கருப்புப்

பட்டாடையைத் தானே வாடகைக்கு வாங்கித் தானே மாட்டிக் கொண்டாள்.

பட்டதாரியான அவள் பதியைப் பிடிக்கப் போகிறாளா, பாத்திரத்தைக் கழுவப் போகிறாளா, பரத நாட்டியம் கற்றுக் கொள்ளப் போகிறாளா என்ற ரகசியங்களை உலகத்தினருக்கு அறிவித்து அவர்களைக் கடைத்தேறச் செய்ய விரும்பிய ஒரு பத்திரிகை நிருபர் அவளைப் புகைப்படப் பெட்டியுடன் பேட்டி காண வந்த காலை அவள், ''தாங்கள் தயவுசெய்து இப்போது வெளியே போங்கள்'' என்று சொல்லிப் புறமுதுகிட்டு நடையைக் கட்டச் செய்தாள்.

அவள் தந்தை அவளுக்குத் தக்க பருவத்தில், மூன்று பத்து பிராயத்துக்கு முன்னரே மணவினை முடிக்க நிச்சயித்து வரன் தேடுவான் வேண்டி, பெட்டி, படுக்கை, ஜாதகம், இவற்றுடன் தேசாந்திரம் சென்று வரப் புறப்பட்ட காலை, குடும்ப ஜோசியர் குறுக்கிட்டுக் கூறினார்: ''அஹோ உமாபதியே! தாங்கள் தலைகீழாக நின்றாலும் தண்ணீர் மேல் நடந்தாலும், விண்வெளியில் பறந்தாலும் தங்கள் மகளுக்கு இன்னும் பத்தாண்டுகளுக்குத் திருமண பாக்கியம் கிட்டாது. ஏழேவெளின் நட்சத்திரங்களின் மன்னனும் வடதிசையில் நிலையாய் நின்று கொண்டிருப்பவனுமான துருவன், மாதங்கியைத் தன் கண்களைச் சிமிட்டிச் சிமிட்டிக் கவனித்துக் கொண்டேயிருக்கிறான். அதன் பயனாக அவளுக்குப் பத்து வருடங்கள் கழித்த பின்னரே துருவமான குமார யோகம் அடிக்கப் போகிறது. அப்பொழுதுதான் விவாகம் ஆகும்!''

ஜோதிட சிகாமணியின் இம்மொழி கேட்ட உமாபதி கட்டி வைத்திருந்த படுக்கையைப் பிரித்துப் போட்டுப் படுத்து நித்திரை செய்து எழுந்த போது தம் மகளின் திருமணத்தைப் பற்றி முற்றும் மறந்திருந்தார்.

கல்வி அறிவும் பகுத்தறிவும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற மாதங்கி அருமைப் பொழுதை வீணாக்காது, பலவும் கற்று, பல் எழுத்துப் பண்டிதையாகப் பரிணமிக்கலானாள். அவள் ஹிந்தி எழுத்து, சுருக்கெழுத்து, தட்டெழுத்து முதலிய எழுத்துக்களை ஐயங்கசடறக் கற்றுத் தேர்ந்தாள்.

குமாரசாமியின் காரியாலயத்தில் குமாரி மாதங்கி ஒரு குமாஸ்தாவாக ஒரு 'குர்ச்சி'யில் குந்தினாள்.

அவள் வேலைக்கமர்ந்த பிறகு பூமி தன்னைத் தானே முப்பது முறை சுற்றிக் கொண்டு வந்ததும் அவளுக்குச் சம்பளம் கிடைத்தது. அதில் தனக்கு மாதாந்திரக் கைச்செலவுக்குத் தேவைப்பட்டதைத் தவிர பாக்கியைப் பாங்கில் கணக்கேற்படுத்திப் போட்டு வந்தாள். அவளுக்கென்று பிறந்திருக்கிறவர் — கண்டு பிடிக்கப்பட வேண்டிய ஆசாமி — அவர் எதிர் ஜாமீன் கேட்டால் கொடுத்துத் தொலைப்பதற்காக அவள் அப்படிச் செய்து வந்தாள்!

இத்தகைய மாதங்கி, வி. ஐ. டி. நகர் வாஸினி ஒரு நாள் வீதியில் உள்ள ஒரு சிறிய சிமெண்ட் மண்டபத்தின் கீழே நின்று கொண்டிருந்தாள். அந்த மண்டபம், காலம் சென்றுவிட்ட ஒரு திவான்பகதூரைப் பற்றி எல்லோரும் ஞாபகம் வைத்துக் கொள்வதற்காக அவரது நான்காவது மனைவியும், தத்துப் பிள்ளையும் கட்டி வைத்த மண்டபம். அதன் கீழ் யாரும் இலவசமாக நிற்கலாம்.

மாதங்கியின் நடை, உடை, பாவனைகளுக்கு நேர் விரோதமாக அவள் ஆடை, அலங்காரங்கள் மட்டும் அடக்க ஒடுக்கமாக இருந்தன. அவள் தான் ஏறிச் செல்ல வேண்டிய பஸ் வருகிறதா என்று பார்த்துக் கொண்டேயிருந்தபோது வீதியின் எதிர்ப்புறமிருந்து ஒரு வாலிபர் தெருவைத் தாண்டி வந்து கொண்டிருப்பதைக் கண்டாள். அப்போது அவள் உடல் பதறினாள். ஏனென்றால், அந்த வாலிபன் குனிந்த தலை நிமிராமல், தெருவின் இந்தப் பக்கம், அந்தப் பக்கம் பாராமல் நடந்து வந்து கொண்டிருந்தான்.



அவன் ஏன் ஒரு புர்கா தரித்துத் தலையை மூடிக் கொள்ளவில்லை என்று ஆச்சரியப்பட்டாள் மாதங்கி. ஏனென்றால், அவன் முகத்தில் அவ்வளவு நாணம், கூச்சம், வெட்கம் இன்னும் அது போன்ற மற்ற என்ன எல்லாமோ குடிகொண்டிருந்தன.

அவன் அவளைக் கடைக்கண்ணால்கூடப் பார்க்க முயற்சி செய்யவில்லை.

இப்படி இரண்டு தினங்கள் சென்றன. அன்று மாதங்கி அதே பஸ் ஸ்டாண்டுக்கு வந்த போது ஒரே கூட்டமாயிருந்தது. அங்கிருந்த பஸ் இன்ஸ்பெக்டர் எல்லாரையும் வரிசையாக நிற்கும்படி சொன்னார். மாதங்கி வரிசையில் நின்றபோது தனக்கு முன்னால் அந்தத் தலை நிமிராத வாலிபன் நின்றிருக்கக் கண்டாள். அவன் இராணுவ வீரன் போல் அந்தப் பக்கம் இந்தப் பக்கம் அசையாமல் விறைப்பாக நின்றிருந்தான்

வெட்கத்தால் உடல் அப்படியாகி விட்டிருக்கிறது என்று மாதங்கி நினைத்தாள். அவளுக்குப் பின்னால் நாலைந்து பேருக்கப்பால் நின்றிருந்த ஒரு பெரியவர், ''வசந்தன்! வசந்தன்!'' என்று கூப்பிட்டார். அந்த வசந்தன் திரும்பிப் பார்க்கவில்லை. ''கொஞ்சம் அவரைக் கூப்பிடுகிறீர்களா?'' என்று அந்தப் பெரியவர் மாதங்கியைக் கேட்டுக் கொண்டார். மாதங்கி தன் தலையை நீட்டி வசந்தன் முகத்தைப் பார்க்க முயன்று கொண்டே, ''உங்களைக் கூப்பிடுகிறார்கள், ஸார்!'' என்றாள். வசந்தன் பதிலளிக்கவில்லை!

மற்றொரு நாள் மாதங்கி வரிசையில் நின்ற போது பின்னால் மூன்று பேருக்கு அடுத்தபடியாக வசந்தன் நின்றிருப்பதைக் கண்டாள். ஆனால் அவன் தன்னைப் பார்க்கவில்லை. பார்த்திருந்தால் இன்னும் பின்னால் போயிருப்பான் என்று அவள் நினைத்தாள்.

பஸ் வருவதற்கு வெகு நேரமாயிற்று. மாதங்கிக்குப் பின்னால் நின்றவர்களுக்கு அலுப்பேற்பட்டுப் போய் அவர்களுக்கெதிரில் வீதியில் வந்து நின்ற ஒரு டாக்ஸியிலேறிக் கொண்டு சென்று விட்டார்கள். இதன் விளைவாகக் குமாரி மாதங்கிக்குப் பின்னால் ஓர் அங்குலத்துக்கருகிலேயே வசந்தன் நிற்க வேண்டியதாயிற்று. தன் மூச்சு அவள் பிடரியில் பட்டு விடுமோ என்று பயப்பட்டு மூச்சு விடுவதையும் அடக்கிக் கொண்டான். தான் திரும்பிப் பார்த்தால் அவன் எங்கே நழுவி விடப் போகிறானோ என்று மாதங்கி பயந்து முன் பக்கம் பார்த்தவண்ணமே ஒரு கற்சிலை போல நின்றிருந்தாள்.

கூச்ச உணர்ச்சியைத் தாங்க மாட்டாத வசந்தனுடைய கைகள் ஒன்றையொன்று பிசைந்து கொண்டிருந்தன. அப்போது அவன் தான் ஒரு காகிதத்தைப் போட்டுக் கசக்கிக் கொண்டிருப்பது போல் உணர்ந்தான். கைகளைக் கவனித்தான். அவன் பக்கமாகப் பறந்து வந்திருந்த மாதங்கியின் புடவையின் மேல் தலைப்பு அவன் கைகளில் அகப்பட்டுக் கொண்டிருந்தது.

மறு கணம் அவன் நின்றிருந்த இடம் காலியாயிற்று! அந்த இடத்தில் அடுத்தாற் போலிருந்தவர் குடியேறினார்.

இதற்குப் பிறகு ஒரு நாள் பஸ் ஸ்டாண்டில் ஒரே கூட்டமாயிருந்தது. பஸ் இன்ஸ்பெக்டர் இல்லாததால் எல்லாரும் வரிசை முறைக்கு ஸ்நானம் செய்து விட்டிருந்தனர். திடீரென்று ஒரு காலி பஸ் வந்து நின்றது. எல்லாரும் அடித்துப் பிடித்துக் கொண்டு, தங்களை அதற்குள் திணித்துக் கொண்டனர். வசந்தன் ஒரு காலை பஸ் படியில் வைத்த சமயம் பார்த்துக் கண்டக்டர் மகராஜ் ஊதுகுழல் நாதத்தைக் கிளப்பவே வண்டி கிளம்பி விட்டது.

வசந்தன் கீழே விழாமல் சமாளித்துக் கொண்டு திரும்பினான். ஆனால் 'பஸ் கம்பியைப் பிடித்துத் தொங்கிக் கொண்டே போயிருக்கக் கூடாதா என்று அவனுக்குத் தோன்றிற்று. ஏனென்றால், மாதங்கி அங்கே நின்று கொண்டிருந்தாள்.

''இந்தக் கண்டக்டர்களை நன்றாக உதைக்கணும்!'' என்ற வார்த்தைகள் அந்த மெல்லியளின் வாயினின்றும் வெளிப்பட்டன.

வசந்தன் தன்னையும் மீறி அவளை நோக்கினான். அவன் முகம் மலர்ந்தது. மாதங்கியின் உதடுகளில் புன்னகை தோன்றிற்று. அவன் முகத்தில் ஒரு விதமான 'தேஜஸ்' நிறைந்திருக்கக் கண்டாள். அவன் கண்கள் அழகாய் ஒளி பொருந்தியவையாய் ஒரு யோக்கியனுடையவற்றைப் போல் இருந்தன. இப்படிப்பட்டவனா கூச்சப்படுகிறான் என்று மாதங்கி ஆச்சரியப்பட்டாள்.

வசந்தன் தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தான். அவன் தொண்டையினின்றும் வார்த்தைகள் வெளியே வருவதற்காகப் பெருமுயற்சி செய்து கொண்டிருந்தன.

''ம...ன்...னி...க்...க...ணு...ம்...... .. அன்று.... கையில்..... பு.....ட.....வைத்... தலை...தலை...'' என்று மென்று விழுங்கினான்.

''பாதகமில்லை!'' என்றாள் மாதங்கி.

பிறகு, ''பாவம்! என் உறவினர் ஒருவர் பெரிய வைத்தியர். காது செவிடு, தெத்துவாய் இதெல்லாவற்றையும் குணப்படுத்தி விடுவார்......'' என்றாள்.

''யாருக்குத் தெத்துவாய்? யாருக்குக் காது செவிடு?'' என்று வசந்தன் சற்றுக் கோபமாகவே கேட்டான்.

''மன்னிக்கணும். நான் தவறாக நினைத்தேன். கூச்சம் போலிருக்கிறது'' என்றாள் மாதங்கி.

''சாதாரணமாக அது எனக்குக் கொஞ்சம் உண்டு......''

''தாங்கள் எங்கே வேலை செய்கிறீர்கள்?'' என்று மாதங்கி விசாரித்தாள்.

''சர்க்கார் காரியாலயத்தில்.''

''தங்கள் பெயர்?''

''வசந்தன்!'' என்று அவன் உபாத்தியாயர் கேள்விக்குப் பதில் அளிக்கும் மாணவனைப் போலக் கூறினான்.

''தந்தையின் பெயர்?''

''அருணாசலம்.''

''தாங்கள் பிறந்த தேதி?''

''14—4—1938.''

''தந்தை ஜீவித்திருந்தால் அவர் வயது?''

''அறுபத்தேழு!''

''தாய் உயிரோடிருந்தால் அவர் வயது?''

''ஐம்பது!''

''தாங்கள் இதுவரை கொடிய ரோகத்தினால் பீடிக்கப்பட்டிருக்கிறீர்களா? அல்லது வைத்தியசாலையில் இருந்திருக்கிறீர்களா?''

வசந்தன் இதற்குப் பதில் சொல்லாமல் சிரித்தான். ''தாங்கள் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் வேலை பார்க்கிறாற் போல் இருக்கிறது'' என்றான்.

''இன்னும் ஒரு மணி நேரமாவது காத்துக் கொண்டிருக்க வேண்டும் போலிருக்கிறதே. எப்படிப் பொழுதைப் போக்குவது?'' என்றாள் மாதங்கி. வசந்தன் சகஜமாகக் கூச்சம் விட்டுப் பேசியதில் அவள் மட்டற்ற மகிழ்ச்சியுற்றிருந்தாள்.

''கதை சொன்னால் பொழுது போகும்!''

''பேஷான யோசனை. சொல்லுங்கள், கேட்டுக் கொண்டிருக்கிறேன்'' என்று மாதங்கி சிரித்துக் கொண்டே சொன்னாள். வசந்தன் நல்லவன், அவனோடு தாராளமாகப் பேசலாம், பழகலாம் என்று அவள் மனத்தில் பட்டிருந்தது.

"நானு! நான் இத்தனை பேசியதே அதிகம். கதை சொல்கிறதாவது? நீங்கள் சொல்லுங்கள்."

"சொல்லி விடுவேன், ஜாக்கிரதை!" என்று கூறி மாதங்கி வேடிக்கையாகப் பய முறுத்தினாள்.

"நான் துணிந்து கேட்டுக் கொண் டிருப்பேனுக்கும்!" என்று வசந்தன் சிரித்துக் கொண்டே கூறினான்.

மாதங்கி கண்களை மூடிக் கொண்டு இரண் டொரு நிமிடம் யோசனை செய்தாள். பிறகு கண்களைத் திறந்து தொண்டையைக் கனைத் துக் கொண்டாள். வசந்தனைப் பார்த்துக் கடைக் கண்ணால் புன்னகை புரிந்து விட்டுச் சொல்லலானாள்.

ஃ ஃ ஃ

ஒரே ஒரு பொட்டைவெளியிலே தேசிகர் என்று ஒருவர் வசித்து வந்தார். அவர் ஒன்றரை மனை நிலம் வாங்கி அதில் ஒரு வீடு கட்டிக் கொண்டிருந்தார். சுற்றுவட்டில் ஒரு மைல் தூரத்துக்கு வேறு வீடு எதுவும் கிடையாது. வேறு பலரும் அங்கே மனைகள் வாங்கியிருந்தார்கள். ஆனால் அவர்கள் இன்னும் வீடுகள் கட்டவில்லை. தேசிகர் தமது வீட்டு வாசலில் ஒரு மூங்கில் கம்பத் தில் 'தேசிக புரம்' என்று எழுதிய அட்டை யைத் தொங்க விட்டுக் கொண்டிருந்தார். அந்த இடத்துக்குச் சாலை, குழாய், மின் சாரம், எதுவும் வரவில்லை.

அவர் மனைவியின் பெயர் நாயகி. அவர் களுக்குக் கலாவதி என்றொரு பெண் இருந் தாள். கடவுள் ஒவ்வொரு நபரையும் சிருஷ் டிக்கும்போதும் அவர்களுக்குள்ள மொத்தக் 'கோட்டா'வைக் குறைப்பதில்லையே. அவர் கலாவதியின் மூளையை மிக மிக அபாரமான தாக அமைத்து விட்டார். அதற்கேற்ப அழகுக்கு வேண்டிய பாகம் குறைந்து போய் விட்டது.

அவள் படிப்பில் முதலாவதாக மட்டுமே இருந்தாள். ஏனென்றால் முதலாவதற்கு மேல் அரை, கால் என்று குறிப்பிடுவது வழக்க மில்லையல்லவா ?

அவள் கல்லூரிக்குச் செல்லுவதற்காகத் தினமும் வீட்டிலிருந்து ஒன்றரை மைல்

கலை உலக பாஸ்கரன் அஸ்தமித்தது!

புதிய தமிழ் வருடப் பிறப்பின்போதே நம் நேயர்களுக்கு நன்கு அறிமுகமான நல்ல தமிழறிஞர் ஒருவரின் மறைவுக்குக் 'கல்கி' துயரம் தெரிவிக்கிறது. வேங்கடம் முதல் குமரிவரை வாழ்கின்ற தமிழ் மக்களும், வேங்கடத்துக்கு அப்பாலுள்ள தமிழர்களும் சென்ற வாரம் மாபெரும் கலை அதிர்ச்சிக்கு உள்ளானார்கள். கல்கி அன்பர்களின் அன்ப ரும் தமிழ் மக்கள் அனைவரும் கலைமணி என்று மனமாரப் பாராட்டிய ரசிகப் பெரு மகனுமாகிய தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள் தமது அறுபத் தோராவது வயதில் சென்ற மாதம் 31ந் தேதி காலை இறைவன் திருவடி சேர்ந்தார் என்ற செய்தி கேட்டுக் கலை உலகம் கண் ணீர் வடித்தது.

திரு தொண்டைமான் அவர்கள் செய்துள்ள கலைப் பெரும் தொண்டுகளைக் 'கல்கி' வாசகர்கள் நன்கு அறிவார்கள். டி. கே. சி. என்ற கலைக் கடலி லிருந்து தோன்றிய இந்தக் கார்மேகம் தமிழைப் பொழிந் தது. கலையை வளர்த்தது; பண்பாட்டைப் பயிராக்கியது.

இரவும் பகலும் கலை ஆனந் தம் என்ற அநுபவத்தையே லட்சியமாகவும் பொழுது போக்காகவும் கொண்டு தானெல்லாம், சென்ற சென்ற இடங்களிலெல்லாம் தமிழன் னைக்கும், கலை அன்னைக்கும் சேவை செய்தது தொண்டை மானின் உள்ளம். தமிழ் நாட்டுக் கோயில்களின் கலைச் சிறப்புக்களை யும், புராண வரலாறுகளையும், தத்துவ நுட்பங்களையும், இலக்கியச் செய்திகளையும் தெளிவோடு தொகுத்து எல்லோரும் புரிந்து அனுபவிக்கும் எளிய தமிழில் ஒரு குழந்தை யின் உற்சாகத்தோடு 'கல்கி'யில் அவர் எழுதிய கட்டுரைகள் வளரும் தமிழில் ஒரு புதிய துறையையே அமைத்துக் கொடுத்தன.

தஞ்சையில் தொண்டைமான் அவர்கள் உதவிக் கலெக்டராக இருந்தபோது, தஞ் சைக் கலைக்கூடம் அங்கே உருவாகியது. அதி லுள்ள சிலைகள் எங்கெங்கோ இருந்து தொண் டைமான் அவர்களால் வெளி உலகுக்கும் ஒளி உலகுக்கும் கொண்டு வரப்பட்டவை. அக் கலைக்கூடமே தொண்டைமான் நினைவுக்கு ஒரு கலைச் சின்னமுமாகும்.



திரு பாஸ்கரத் தொண்டைமான்

ரெவினியூ இலாகாவில் ஆரம்ப நிலையில் சேர்ந்து, பல படிகள் முன்னேறி, ஜில்லாக் கலெக்டராக நியமனமாகி, ஓய்வு பெற்றவர் திரு பாஸ் கரன் அவர்கள். ஆனால் அவர் என்றுமே ஓய்வு பெறாது அல் லும் பகலும் அனவரதமும் செய்து வந்த மகத்தான பணி கம்பன் கவிப் பணியும், கல்வித் தமிழ்ப் பணியும், கோயிற் கலைப் பணியும் ஆகும். இந்தப் பணிக்கு ஓய்வேது? இதற்கு மரணம்தான் ஏது? அவர் கட்டி நிறுத்திய கல்லும், எழுதி நிறுத்திய சொல்லும் அவ ருடைய புகழை என்றென்றும் உணர்த்திக் கொண்டிருக்கும்.

தூரம் நடந்து பக்கத்திலுள்ள ரயில்வே ஸ்டேஷனுக்குச் செல்வாள். ஒரு 'போர்' புத்தகம் தூக்கிக் கொண்டு போவாள். வரும் போது வாசக சாலைகளிலிருந்து வேறு பல பருமனான புத்தகங்களையும் எடுத்துக் கொண்டு வருவாள். இந்தப் பழக்க வழக்கங்களினால் அவள் கால்களும், கைகளும் நன்றாக வலுவுற்றிருந்தன.

அவள் தான் செல்லும் வழியில் வரும் ஆடுகள், மாடுகள் முதலியவற்றைக் கவனிப்பாள். ஒரு சமயம் அவள் பக்கத்தில் ஒரு நரி வந்தது. அதைத் துரத்திக் கொண்டு போனாள். மரங்களிலேறும் ஓணான்கள், அணில்கள் இவற்றை ஆவலுடன் பார்ப்பாள். அவளுக்கு நாளடைவில் மிருகங்கள் விஷயத்தில் சிரத்தை ஏற்படவே, அவள் 'பிராணி நூலை' இஷ்டபாடமாக எடுத்துக் கொண்டாள்.

பல தினங்கள் அவள் இருட்டியபிறகு வீடு திரும்பி வருவது வழக்கம்.

கல்லூரி விசேஷ தினக் கொண்டாட்டத்தன்று வீடு திரும்பும் போது மணி ஒன்பதாகி விடும். ஆனால் அவளுக்குப் பயமே தோன்றவில்லை. ஒரு சமயம் அவள் தோழி ஒருத்தி, ''ஏன், கலா, இருட்டில் போகிறாயா? யாராவது காலாடிப் பசங்கள்....'' என்று ஆரம்பித்தாள். ''என்னைப் பார்த்து யாரும் ஆசைப்பட்டு விட மாட்டான். ஆகையால் எனக்கு அது விஷயத்தில் பயமே கிடையாது'' என்றாள்.

கலாவதியின் தந்தை அவளுக்கு வரன்கள் பார்த்துக் கொண்டேயிருந்தார். தில்லியில் வேலை பார்த்த கேதாரி என்ற ஒரு வாலிபனும் 'பெண்ணைப் பார்க்க'ச் சம்மதித்தான். அதற்காகச் சென்னைக்கு வர அவனுக்கு லீவு கிடைக்க வில்லை. தேசிகர் ஒரு யோசனை சொன்னார். நாகப்பூருக்குத் தம் பெண்ணை அழைத்து வருவதாகவும் அங்கே வந்து பார்த்து விட்டு அடுத்த விமானத்திலேயே திரும்பி விடலாமென்றும் எழுதியிருந்தார். அந்த ஏற்பாட்டுக்குக் கேதாரியும் அவன் பெற்றோர்களும் சம்மதித்தனர்.

குறிப்பிட்ட தினத்தில் கலாவதி தன் பெற்றோர்களுடன் நாக்பூர் சென்றாள். விமான கூடத்திலேயே பிரயாணிகள் தங்கும் அறையில் உட்கார்ந்திருந்தாள். தில்லியிலிருந்து வர வேண்டிய விமானம் ஒரு மணி நேரம் தாமதித்து வந்தது. கேதாரி தனது பெற்றோர்கள் புடைசூழ வந்து விட்டான்.

பிரயாணிகள் தங்குமிடத்தில் அதிகக் கூட்டமில்லை. அங்கேயே பெண் பார்க்கும் வேடிக்கை நடந்தது.

'டில்லிக்குச் செல்லும் விமானம் இன்னும் ஐந்து நிமிஷத்தில் கிளம்பப் போகிறது' என்று ஒலிபெருக்கி கேட்டது. அவ்வளவுதான் கேதாரி யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் விழுந்தடித்து ஓடினான். அவன் பெற்றோர்கள், ''போய்த் தந்தி அடிக்கிறானும்'' என்று சொல்லி விட்டு வேகமாகப் போனார்கள். சில நிமிடங்களுக்கெல்லாம் சென்னை விமானமும் புறப்பட்டது. அதில் கலாவதியும் அவள் பெற்றோர்களும் ஊருக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்கள். அவர்கள் எதிர்பார்த்த தந்தி சில வருஷங்களாகியும் வரவே இல்லை.

கலாவதி சிறிது காலம் கல்லூரி ஆசிரியையாக இருந்தாள். பிறகு அதையும் விட்டு, பிராணிகள் ஆராய்ச்சியில் மும்முரமாக ஈடுபட்டாள்.

ஒரு நாள் அவள் சர்வகலாசாலை வாசக சாலைக்குச் சென்றிருந்தாள். அன்று ஒரே மப்பும் மந்தாரமுமா யிருந்தது. அவள் சில முக்கிய புத்தகங்களைத் தேடிக் கொண்டிருந்த போது கைக் கடிகாரத்தைப் பார்த்தாள். மணி நான்காகியிருந்தது.

அவள் தேடிய புத்தகங்கள் அகப்படவில்லை. புத்தக ராக்குகளின் கீழே குனிந்து பார்த்தாள். தரையில் படுத்துக் கொண்டு அடி வரிசையைக் கவனித்தாள். அவளுக்கு நேரம் போனதே தெரியவில்லை. கடிகாரத்தைப் பார்த்தாள். நாலரையாகி யிருந்தது. மறுபடியும் புத்தகங்களைத் தேடிக் கொண்டிருந்தாள்.

ரொம்ப நேரமாகத் தேடிக் கொண்டிருக்கிறோமே என்று எண்ணினாள். கடிகாரத்தைக் கவனித்தாள். அது நின்று விட்டது. ஓடவில்லை என்று தெரிந்தது. திறந்திருந்த ஜன்னல் வழியாக வெளியே பார்த்தாள். மழை பெய்து கொண்டிருந்தது. மின்சார விளக்குகளின் வெளிச்சம் மங்கலாகத் தெரிந்தது. அவசரம் அவசரமாக வீட்டுக்குப் புறப்பட்டாள். அவள் மூன்றாவது மாடியில் இருந்தாள். படிகளில் இறங்கி இரண்டாவது மாடிக்கு வந்தாள். வழியில் உள்ள கதவு சாத்தி வெளிப் பக்கம் பூட்டப்பட்டிருந்தது. பயம் என்பதையே அறிந்திராத அவளுக்குக் கூடத் 'திக்'கென்றது. டெலிபோன் செய்யலாம் என்று நினைத்தாள். ஆனால், அது கீழே இருக்கிறது என்ற ஞாபகம் வந்ததும் அந்த ஆசையை மறந்தாள். அவளுக்கு என்ன செய்வதென்று முதலில் தோன்றவில்லை. பிறகு பொழுதை வீணாக்காமல் புத்தகங்களைப் படித்துக் கொண்டிருக்கலாம், பொழுது விடிந்ததும் அங்கிருந்து வெளியேறுவதைப் பார்த்துக் கொள்ளலாம் என்று தீர்மானித்தாள்.

அவள் எத்தனை புத்தகங்களைப் புரட்டிப் பார்த்திருப்பாளோ அவளுக்கே தெரியாது. அவள் புத்தக ராக் வரிசைகளின் இடையே ஒரு கோடியில் நின்று கங்காரு பிரசவிக்கும் விதத்தைப் பற்றிய தகவல்களைப் படித்துக் கொண்டிருந்தாள். அப்போது யாரோ நடந்து வருவதுபோன்ற காலடிச் சத்தம் கேட்டது. கலாவதி திரும்பிப் பார்த்தாள். ஒரு மனித உருவம் தெரிந்தது. மறுகணம் அந்த உருவம் 'வீல்' என்று கத்திக் கொண்டே கீழே விழுந்தது. கலாவதி......அந்த....''

ஃ ஃ ஃ


மாதங்கி இப்படிச் சொல்லி வந்த சமயம் ஒரு பஸ் வந்து நின்றது. ''என் பஸ் வந்து விட்டது. நான் போகிறேன்'' என்று அவள் வசந்தனிடம் கூறியவண்ணம் விரைந்து சென்றாள்.

''நாளைக்குப் பாக்கிக் கதையைச் சொல்லணும்!'' என்று வசந்தன் கூறியது அவள் காதில் விழுந்தது.

காலச்சக்கரம்







தங்கப்பன்

போர்முனையில் எதிரியை நேருக்கு நேர் சந்தித்து வெற்றி காண்பது கூட எளிது. ஆனால் பசுத்தோல் போர்த்த புலி போல உலவி வரும் ஜனநாயகவிரோத சக்திகளுடன் போராடுவதுதான் மிகக் கடினம். நம்மைப் போன்ற இளைஞர்கள் சதா விழிப்புடனிருக்க வேண்டும்!

செல்லம்

அன்புக்கும் காதலுக்குமிடையில் உள்ள நுண்ணிய வேறுபாடுகளை நான் அறியாதவள் அல்ல. கல்யாணமானால் எல்லாம் சரியாகப் போய் விடும் என்றனர் வீட்டிலிருந்த பெரியவர்கள். நானும் அவ்வாறே நம்பினேன். ஆனால் என் நம்பிக்கை? அது வீண் போகுமா... போகாதா?

தீனதயாளு

எத்தனையோ சிரமங்களைத் தாங்கி விடுதலைக்கு அடிகோலிய என் போன்றோருக்கு இன்று சௌகரியமாக வாழ உரிமை இல்லையா? நேற்றுப் பிறந்தவர்கள் இன்று என்னை எதிர்க்கிறார்கள். நான் பதில் சொல்லித்தானாக வேண்டுமா, என்ன?

கி. ராஜேந்திரன்





உஷா

வாழ்க்கையை நன்கு அனுபவிப்பதே ஒரு கலை; அதைக் குறைவறக் கற்றுத் தேற வேண்டும். அதற்குச் சமூகத்தில் நமது அந்தஸ்து உயர வேண்டும். உயர்ந்து கொண்டே இருக்க வேண்டும்!

மிருநாளினி

வேலிக் கம்பு உறுதியாக நிற்பது போல் தோன்றும் வெளிப் பார்வைக்கு. உள்ளுக்குள்ளே செல் அரித்திருப்பது தெரியாது. தொட்டால் போதும் பொல பொலவென்று உதிர்ந்து விடும். கம்யூனிஸம் இந்த வகையிலேதான் ஊடுருவ வேண்டும்; ஜனநாயக வேலியைத் தகர்க்க!

அன்று 1952

‘யானைப்பெட்டி’

அத்தியாயம் 1

ஊரின் பிரதானமான இரண்டு சாலைகளுள் ஒன்றன் வழியே அந்த நீண்ட சைக்கிள் ஊர்வலம் சென்று கொண்டிருந்தது. சைக்கிள்களை ஓட்டிச் சென்றவர்கள் மொத்தம் இருபது பேர்கள் இருக்கலாம். யானைப் படம் வரையப்பட்ட அட்டையில் நீண்ட கழியைப் பொருத்தி அதனை ஒரு கையில் பிடித்துச் சென்றார்கள் சிலர். மற்றவர்கள் யானைக் கொடியேந்திய படியே சைக்கிளைச் செலுத்தினார்கள். ஒவ்வொரு சைக்கிளின் முன்புறத்திலும் ஒரு சிறு யானைக் கொடி பறந்தது.

அந்தச் சைக்கிள் ஊர்வலத்தின் மத்தியில் ஒரு கிழட்டு யானையும் தள்ளாடியபடி நடந்து சென்று கொண்டிருந்தது. அதன் முன்னும் பின்னுமாகப் பத்துப் பத்து சைக்கிள்களில் சவாரி செய்தவர்கள் யானையின் நிதானமான நடைக்கு ஏற்பச் சைக்கிள்களையும் மெதுவாக ஓட்டிச் செல்ல முடியாமல் சிரமப்பட்டார்கள்.

"ஓய்! சர்க்கஸ்காரரே! கொஞ்சம் எட்டி அடி எடுத்து வையும்!" என்று கேட்டுக் கொண்டான் மெதுவான ஓட்டத்தில் சைக்கிள் சாய்ந்து சரிவதைத் தவிர்க்க முடியாமல் தவித்துக் காலூன்றி நின்ற ஒருவன்.

யானையின் தும்பிக்கையில் இலேசாகக் கரம் பதித்து இட்டுச் சென்றவன் ஒரு சர்க்கஸ் கோமாளி. "ஜம்போவை வாடகைக்கு எடுத்ததுபோல், கொஞ்சம் செலவுகூட ஆனாலும் பரவாயில்லை என்று எங்க சர்க்கஸின் சைக்கிள் வீரர்களையும் கூட்டிக்கிட்டு இருக்கணும். அவங்க இப்படியா 'பாலன்ஸ்' பண்ணத் தெரியாமல் திணறுவாங்க?" என்றான் அவன்.

"இதற்கெல்லாம் பணத்தை எண்ணிப் பார்த்துக்கிட்டிருந்தால் நடக்குமா? தேர்தல்னா சும்மாவா?"

"என் பொழைப்பிலே நீ ஏனய்யா மண்ணைப் போடணும்னு நினைக்கிறே?" என்று காரசாரமாகக் கேட்டான் சைக்கிள் ஓட்டி.

சர்க்கஸ் கோமாளி ஒரு மழுப்பல் புன்னகையை உதிர்த்தான். முகம் முழுவதும் அவன் பூசியிருந்த சாயத்தின் விளைவாக அந்தப் புன்னகை ஒரு பரிதாபத் தோற்றத்தையே ஏற்படுத்தியது!

யானை மேல் ஒரு சிறுவன் கம்பீரமாக அமர்ந்து தன்னைச் சுற்றிலும் அலட்சியப் பார்வையை வீசிக் கொண்டிருந்தான். இவர்களுடைய பேச்சு எதுவும் அவன் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை. யாருக்கும் கிடைக்க மாட்டாததான ஓர் அரிய வாய்ப்பு தனக்கு மட்டும் கிட்டிவிட்ட பெருமை அவன் முகத்தில் மிளிர்ந்தது. 'யானைச் சவாரி என்றால் என்ன, இலேசா?'

சில விநாடிகளுக்கு ஓய்வெடுத்துக் கொண்டு சோடா குடித்துத் தொண்டையை நனைத்துக் கொண்ட சைக்கிள் ஊர்வலத் தலைவன் இப்போது தன் வாகனத்தில் ஆரோகணித்து முதலிடத்துக்கு விரைந்தான். பழைய பல்லவியை மீண்டும் தொடங்கினான். முக்கோண வடிவத்திலிருந்த நீண்ட குழலைக் கையிலேந்தி வாய்க்கு நேராகப் பிடித்து, அடித்தொண்டையில் அலறினான்:

"ஓட், ஃபார் !"

"எலிபெண்ட் பாக்ஸ்" என்று மற்றப் பத்தொன்பது கண்டங்களிலிருந்து பேரிரைச்சல் எழும்பியது.

யானையையும் அதன் மேல் அமர்ந்திருக்கும் சிறுவனையும் சர்க்கஸ்கோமாளியையும் மாறி மாறிப் பார்த்துக் குதூகலிக்கும் சிறுவர் கூட்டம் ஊர்வலத்தைச் சூழ்ந்து கொண்டது.

"யானைப் பெட்டிக்கே.....!" என்று ஊர்வலத் தலைவன் கரகரப்பான குரலில் ஒலி எழுப்பவும், "ஓட்டுப் போடுங்கள்!" என்று சைக்கிள் ஊர்வலத்தைச் சேர்ந்த பிறருடன் சர்க்கஸ் யானையை வேடிக்கை பார்க்கக் கூடிய சிறுவர்களும் ஒன்றாகக் . கோஷமிட்டார்கள். ஒரே உற்சாகம் அவர்களுக்கு.



''டேய், தங்கப்பா! என்னையும் ஏத்திக்கோடா!'' என்று சிறுவன் ஒருவன் கெஞ்சாத குறையாகக் கேட்டான். தங்கப்பன் அவனைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. கைகளை விட்டு விட்டுச் சைக்கிள் ஓட்டுவதுபோல், யானைச் சவாரியும் செய்யத் தெரியும் என்று காண்பித்துக் கொள்ள விரும்புபவன்போல் கரங்களை மார்போடு அணைத்தாற்போல் கட்டி, தலையைச் சற்றுச் சாய்த்து உயர்த்தினான். அவனையும் அறியாமல் அவன் புருவங்கள் வளைந்து எழுந்தன. வழவழப்பான பச்சை லாட்டின் சொக்காயில் கரங்கள் உராய்வது அவனுக்கு ஓர் அலாதியான ஆனந்தத்தை அளித்தது.




TIARA
CREME SHAMPOO

''சத்தியபுரித் தொகுதி வாக்காளப் பெருமக்களே! உங்கள் மேலான வோட்டுக்களை யானைப் பெட்டிக்கே போட்டுத் தியாகசீலரான திருவாளர் சுப்புராமனை ஆதரியுங்கள்!'' என்று சைக்கிள் ஊர்வலத் தலைவன் குட்டிப் பிரசங்கம் புரிந்தான்.

அதைத் தொடர்ந்து,—

''ஓட் ஃபார்.....!''

''எலிபெண்ட் பாக்ஸ்!''

''யானைப் பெட்டிக்கே.....!''

''ஓட்டுப் போடுங்கள் !''

என்று மீண்டும் பலத்த கோஷங்கள் எழுந்தன.

''தங்கப்பா! நீயும் கத்தேண்டா !'' என்றான் கீழே நடந்து வந்த அவன் நண்பனொருவன். அப்போதுதான் விழிகளைச் சற்றுத் தாழ்த்தினான் தங்கப்பன். அதுவும் கீழே இருப்பவனைத் துச்சமாக நோக்குகிற மாதிரியாகத்தான். 'உங்களைப் போல நான் சாமான்யப்பட்டவனல்ல, கும்பலோடு கோவிந்தாவாகக் கோஷம் போடுவதற்கு' என்பது போலிருந்தது அந்தப் பார்வை.

இதற்குள் இரு பிரதான வீதிகளும் சந்திக்குமிடத்தில் நின்ற உயரமான மணிக் கூண்டினை ஊர்வலம் அணுகிவிட்டது. சைக்கிள் ஊர்வலத்தில் பங்கு பற்றிய ஒருவனிடமிருந்து சிறிய முக்கோண வடிவக் குழலொன்றைச் சர்க்கஸ் கோமாளி கையில் வாங்கி யானையின் தும்பிக்கையில் வைத்தான். யானை தும்பிக்கையை மேலே உயர்த்தித் தங்கப்பனிடம் அதனை நீட்டியது. தங்கப்பன் குழலைப் பெற்றுக் கொண்டு வாயில் பொருத்திக் கணீரென்ற குரலில் பாட ஆரம்பித்தான் :

பாருடாப்பா பாருடாப்பா பாருடாப்பா பார்!
—நல்லாப்
பாருடாப்பா பாருடாப்பா பாருடாப்பா பார்!
யாஆஆஆனை. யானைப் பெட்டிக்கே
உந்தன்—ஓட்டைப்
போடுடாப்பா போடுடாப்பா போடுடாப்பா
போடு.
போடுடாப்பா போடுடாப்பா போடுடாப்பா
போடு !

தங்கப்பன் பாடி நிறுத்தியதும், ''உய்ய்! உய்ய்! ஹோ! ஹோ!'' என்று ஒரே ஆரவாரக் கூக்குரல்! கை தட்டல், அமர்க்களம் !

சாலையில் அவசரமாகச் சென்று கொண்டிருந்தவர்கள் நின்று ஊர்வலத்தை வேடிக்கை பார்த்தார்கள்; குழாயடியில் தண்ணீர் பிடித்த மாதர்கள் குடம் நிரம்பி வழிவதையும் வேறு பல குடங்கள் க்யூ வரிசையில் காத்து நிற்பதையும் பொருட்படுத்தாமல் நின்றார்கள்; கடைக்காரர்கள் வியாபாரத்தை மறந்து தமாஷை அனுபவித்தார்கள். பொருள் வாங்க வந்தவர்கள் வாயைப் பிளந்தார்கள்.

வெற்றிலைப் பாக்குக் கடை கதவோரத்தில் விரலில் மிச்சமிருந்த சுண்ணாம்பைத் தடவி விட்டுக் கடைசி வெற்றிலையையும் மடித்து வாயில் போட்டுக் கொண்டபின், புகையிலைப் பொட்டலத்தை நிதானமாகப் பிரித்து இடது உள்ளங் கையில் வைத்து மூன்று விரல்களால் கொஞ்சம் புகையிலையை இலேசாக உதறி எடுத்தவாறே, ''பார்த்தீர்களா, மாருதி ! யானைப் பெட்டிக்கு வோட்டுச் சேகரிப்பதற்காக யானையையே கொண்டாந்துட்டார் சுப்புராமன்!'' என்று அதிசயித்தார் ஒருவர்.

''அவருக்குச் சௌகரியமா இந்தச் சமயம் பார்த்துப் பக்கத்து டவுனிலே சர்க்கஸ் கூடாரம் போட்டிருக்கே, அதைச் சொல்லும்!'' என்றார் மாருதி என அழைக்கப்பட்டவர்.

''சாயங்காலத்துக்கு மேலேதான் சர்க்கஸ் ஆரம்பம். அதனாலே காலை நேரத்திலே சும்மா இருக்கிற யானையை இப்படி வீதி வீதியா அழைச்சுக்கிட்டு வந்தால் சுப்புராமன் கொடுக்கிற வாடகை மேல் வரும்படிதானே சர்க்கஸ்காரனுக்கு? அதோடே சர்க்கஸுக்கு விளம்பரத்துக்கு விளம்பரமுமாச்சு'' என்றார் முன்னவர் புகையிலையை வாயில் போட்டபடி.

''நீங்க என்ன இந்தப் புகையிலைப் பழக்கத்தை விடப் போவதில்லையா ? என்னை யெல்லாம்விட ரொம்ப சீனியரான உங்களுக்கு நம்ப ஹெட்மாஸ்டருக்கு இதெல்லாம் பிடிக்காது என்பது தெரிஞ்சு இருக்குமே? நாசூக்காகப் பல தடவைகளில் நாம் மாணவர்களுக்கு இது விஷயங்களில் முன்மாதிரியாக விளங்கணும் என்று சொல்லியிருக்கிறாரே'' என்றார் மாருதி.

''ஸீனியராக இருப்பதால்தான் கொஞ்சம் துணிச்சலாகக் காரியம் செய்யறேன் நான் ! நிஜமா முயன்று பார்க்கிறேன் மாருதி, முடியலே ! கிளாஸ் எடுக்கறப்போ வாயைக் கொப்பளித்து விட்டுத்தான் போகிறேன். அப்புறம் 'பீரியட்' முடிகிற வரையில் முக்கால் மணி நேரம் மனசை எப்படி அடக்குகிறேன்னு எனக்கே ஆச்சரியமா யிருக்கும்! அது

சரி, என்ன 'காம்பொஸிஷன்' நோட்டுப் புத்தகங்களை யெல்லாம் இன்னைக்கு நீங்களே தூக்கிக்கிட்டு வந்துட்டீங்க? இதுவும் புதுசா ஹெட்மாஸ்டர் போட்டிருக்கும் உத்தரவோ?"

"அதெல்லாம் இல்லே, ஷண்முகம் ஸார்! அந்தப் பயல் தங்கப்பன் வழக்கமா வீட்டுக்கு வந்து இதைச் சுமந்துக்கிட்டு வருவானில்லே; அவனை இன்னைக்குக் காணோம். இங்கே வந்த பிறகு பார்த்தால் யானை மேலே உட்கார்ந்து டப்பா பாட்டுப் பாடிக்கிட்டிருக்கான்!"

"அட, அந்தப் பயல் தானா அது?" என்று கேட்ட ஷண்முகம் சட்டைப்பையிலிருந்து மூக்குக் கண்ணாடியை எடுத்து மூக்கின் மேல் பொருத்திக் கயிற்றால் காதைச் சுற்றிக் கட்டியவாறே முகத்தை நீட்டி உற்றுப் பார்த்தார். "அடே, ஆமாம்! இத்தனை நேரம் யாரோன்னு நெனச்சுக்கிட்டிருந்தேன். கண்டிச்சு வையுங்க — மாருதி!" என்றார்.

"ஆகட்டும் விசாரிக்கிறேன்" என்றார் மாருதி. பின்னர் யானை — சைக்கிள் ஊர்வலத்தால் மீண்டும் கவரப்பட்டவராக, "நம்ப தீனதயாளு இதற்குப் போட்டியா என்ன ஊர்வலம் விடப் போறார்ன்னு பார்க்கணும்" என்றார்.

"அவருடைய சின்னம்தான் நம்ப வீதிகளிலே தினம் தினம் யாரும் அழைக்காமலே வளைய வந்துக்கிட்டிருக்குதே! ஊர்வலம் வேறே எதற்கு?" என்றார் ஷண்முகம்.

"அவர் பொல்லாதவரய்யா! இதற்குள்ளே 'ஐடியா' ஏதாகிலும் யோசித்து வைத்திருப்பார். திடீருன்னு நம்மை அசந்து போக வைச்சுடுவார். தேர்தலுக்குச் சரியா நாலு மாசம் இருக்கிறப்போ நேருஜி, கட்சியின் காரியக் கமிட்டியிலிருந்து ராஜிநாமா செய்து அதிர்ச்சி வைத்தியம் பண்ணலியா? அந்த மாதிரி இவரும் 'குபுக்'கென்று ஏதாவது பண்ணிப் பிரமாத நல்ல பேர் சம்பாதிச்சுடுவார்!"

இந்தச் சமயத்தில், "அதோ! அதோ காரிலே தீனதயாளுவே போகிறாரே" என்றார் மாருதி. "பக்கத்திலே இருப்பது யாரு? அவர் மகளா? பள்ளிக்கூடத்திலே கொண்டு விடப் போறாப்பலே இருக்கு. பார்த்தீங்களா யானை ஊர்வலத்தைப் பெண்ணுக்கு வேடிக்கை காட்டுகிறார்? அடேடே! வண்டியை நிறுத்தச் சொல்லிட்டாரே!"

அவர்கள் இருந்த இடத்துக்குப் பத்தடி தொலைவில்தான் அந்தப் பெரிய சவர்லெ கார் நின்றது. அதனுள்ளே இருந்து தூய்மையான, வெண்மையான எட்டு முழக் கதர் வேஷ்டியும் ஜிப்பாவும் அணிந்து தலையில் கதர்க் குல்லாயுடன் காட்சியளித்த ஒருவர் இறங்கினார். பின்னர் காரை நோக்கித் திரும்பித் தமது கரங்களை நீட்டினார். பட்டுப் பாவாடையும், சொக்காயும், கழுத்தில் கனமான தங்கச் சங்கிலியும், காதில் சின்னஞ் சிறு குடை விரித்தாற்போன்ற ஜிமிக்கியும் அணிந்த சிறுமி அவர் கரங்களில் தாவினாள். சிரித்துக் கொண்டே அவளைத் தட்டாமாலை விளையாடுவது போல ஒரு சுழற்றுச் சுழற்றித் தூக்கி எடுத்துத் தோளில் வைத்துப் பிடித்துக் கொண்டார். கலகலப்பான சிரிப்புடன், காற்றை அளைவது போல் கால்களை முன்னும் பின்னுமாக ஆட்டி மகிழ்ந்தாள், குழந்தை உஷா. தீனதயாளுவின் நெஞ்சில் விழுந்த ஒவ்வோர் உதையும் அவருக்குப் பரமானந்தத்தைக் கொடுத்தாற்போலிருந்தது. மாறாத புன்னகையுடன் மகிழ்ச்சி பொங்க நின்ற அவர் சுட்டிக் காட்டிய திக்கில் குழந்தையின் குறுகுறுப்பான பார்வை திரும்பியது.

யானையையும் அதன் மேல் இருந்த சிறுவனையும் அடி உதட்டைப் பற்களால் கடித்தபடி உன்னிப்பாய்க் கவனித்தாள் உஷா. பிறகு தகப்பனாரின் தலைக்கருகே குனிந்து ஏதோ கேட்டாள். 'இல்லை' என்பது போல் தீனதயாளு இலேசாகச் சிரத்தை அசைத்தார். சிறுமியைத் தோளிலிருந்து இறக்கி மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டார்.

"தானும் யானை மேல் உட்காரலாமா என்று குழந்தை கேட்கிறாப் போல இருக்கு. பார்த்தீங்களா மாருதி அவர் சாமர்த்தியத்தை! யானை ஊர்வலமெல்லாம் குழந்தைத்தனமான



"இந்த வருஷம் மழை நிறைய பெய்யுமாம்."

"என்னது.... கொஞ்சம் உரக்கச் சொல்லுங்க. வீட்டுக்காரர் வந்து நிற்கிறார். அவருக்குக் காது மந்தம்!"


உலகெங்கும்
ஏற்க்கப்படுகின்றன!
ஓரியண்ட்
விசிறிகள்
ஓரியண்ட் ஜெனரல் இண்டஸ்ட்ரீஸ் லிட்.
கல்கத்தா - 54
ASP/OG1-4/65

செயல்கள் என்று நிமிஷ நேரத்திலே நிருபிச்சுட்டார்!'' என்றார் ஷண்முகம்.

தினதயாளு குழந்தையைக் காரில் ஏற்றினார்; தாமும் ஏறிக் கொண்டார்.

''எம். எல். ஏ. கிளம்பியாச்சு! சரி, காரிலே இருக்கிற அந்த அம்மாள் யாரு?''

''அவரோட தங்கையா யிருக்கும். பெண்டாட்டியை அவர் பறிகொடுத்து ரொம்ப வருஷமாச்சே.''

கார் கிளம்பி விரைந்தது. ''மணி அடிக்க இன்னும் பத்து நிமிஷம்தான் இருக்கு. வாங்க, போகலாம்'' என்று கூறி வேகமாக நடந்தார் மாருதி.

அத்தியாயம் 2

தேர்தல் சர்க்கஸ்

அரை மணி நேரம் தாமதமாக வந்து வகுப்பு அறையின் வாசலில் நின்றான் தங்கப்பன். அவன் இப்போது பச்சை லாட்டின் சொக்காய் அணிந்திருக்கவில்லை. சர்வ சாதாரணமான சட்டைதான். அதிலும் வண்ணானுக்குப் போய் வந்தது போன்ற மடிப்புக்கள் ஏதுமில்லை; உடல் கசங்கியும், காலர் சுருண்டும் இருந்தன. எனினும் சுத்தமாகத் தோய்த்து உலர்த்தப்பட்ட சட்டைதான் அது.

''ஏண்டா லேட்?'' என்று கேட்டார் மாருதி. காரணம் அவருக்கே தெரிந்ததுதான். இருந்தாலும் மற்றப் பையன்கள், உபாத்தியாயர் அவனை விசாரிக்காமல் இருந்து சலுகை காட்டினார் என்று நினைத்து விடக் கூடாதல்லவா?

தங்கப்பன் பதில் பேசாது நின்றான். இடது பக்கக் குதிகாலை வலது கால் கட்டை விரல் சொறிந்து கொடுத்தது.

''ஏண்டா! ஊமையாகிவிட்டாயா?'' என்று இரைந்தார் மாருதி.

''தேர்தல் சர்க்கஸ் பண்ணினான் ஸார்!'' வகுப்பின் ஒரு மூலையிலிருந்து விஷமத்தனமான கூக்குரல் எழுந்தது.

''யானைச் சவாரி!'' என்றான் இன்னொரு பையன்.

''ஸைலன்ஸ்!'' என்று அதட்டினார் மாருதி.

''டப்பாப் பாட்டு பாடினான் ஸார்!'' ஒரு சிறுவனால் ஆர்வத்தை அடக்க முடியவில்லை. துடிப்புடன் சொல்லி விட்டான். ''அதற்காகக் காசு கொடுத்தாங்க. வெங்கடா லாட்ஜிலே புகுந்து வாங்கித் தின்னுட்டான்!''

''ஆன் தி பெஞ்ச்!'' என்றார் மாருதி. சந்தோஷமாகத் துள்ளி எழுந்து நின்றான் அந்தப் பையன். 'குட்டை' வெளிப்படுத்திய பெருமைக்குப் பின் அதற்காகப் பத்து நிமிஷங்கள் இந்தத் தண்டனையை அடைந்தால்தான் என்ன?

''போ! நீயும் ஏறி நில்லு கடைசி பெஞ்சு மேலே!'' என்று தங்கப்பனைப் பார்த்துக் கூறிவிட்டுப் பாடத்தைத் தொடர்ந்தார் மாருதி.

கட்டளைக்குக் கீழ்ப்படிந்து கையைக் கட்டிக்கொண்டு கடைசிப் பெஞ்சு மீது ஏறி நின்ற தங்கப்பனுக்குப் பாடத்தில் கவனம் செல்லவில்லை. யானை மீது உட்கார்ந்து இதே போல் கையைக் கட்டிக்கொள்கையில் லாடின் சொக்காய் எத்தனை வழு வழுப்பாக இருந்தது! அதைக் கழற்றித் தருமாறு கேட்டுத் திருப்பி வாங்கிக் கொண்டு விட்டாரே சுப்புராமனின் வீட்டிலுள்ள அவர் கணக்குப்பிள்ளை. பாட்டுப் பாடறபோது மட்டும் போட்டுக்க என்றுதான் அதைக் கொடுத்தாங்களாம். சுப்புராமனின் பிள்ளைக்கு எந்தக் காலத்திலோ தைத்தது. இன்று அவனுக்கு அது சின்னதாகத்தான் இருக்கும்..... போனால் போகட்டும்; எட்டணாக் காசு கொடுத்தாங்களே! கோதுமை அல்வாவும் மசால் தோசையும் எவ்வளவு பிரமாதமாயிருந்தன! அவற்றின் ருசி தங்கப்பனின் நாவை இன்னும் சூழ்ந்துகொண்டிருந்தன. அம்மா எங்கே இதையெல்லாம் செய்கிறாள்? எப்போ பார்த்தாலும் பழைய சோறும் வற்றல் குழம்பும் தான்!.....

மத்தியானம் இடைவேளையின்போது கட்டுரை நோட்டுப் புத்தகக் கட்டைக் கொண்டு போய் உபாத்தியாயர்கள் அறையில் மேஜை மீது வைத்துவிட்டுத் தயங்கி நின்றான் தங்கப்பன்.

''என்ன?'' என்றார் மாருதி.

''ஸார்! இந்தக் கட்டுச் சுமக்கிற வேலை எனக்கு வேண்டாம் ஸார்! எல்லாரும் கேலி செய்கிறார்கள்!'' என்றான் தங்கப்பன்.


''என்னடா சொல்கிறார்கள்?''

''நான் கட்டுத் தூக்கிக் காக்காய் பிடிக்கிறேனாம்!''

மேஜையைச் சுற்றியிருந்த உபாத்தியாயர்கள் குபீரென்று சிரித்தார்கள்.

''பார்த்தாயா மாருதி! இங்கே கூட 'பாலிடிக்ஸ்' புகுந்து விளையாடுகிறது!'' என்றார் ஷண்முகம்.

''இதை என்ன மிகைப்படுத்திப் பேசப் போய் விட்டீர்கள்? நமது நகர சபை அங்கத்தினர்கள் பள்ளி நிர்வாகத்திலே இடையூறாது தலையிடுவதனாலே நமது முதல்வர் கால் காகிதத்தில் ராஜிநாமாக் கடிதம் கொடுத்துவிடலாமா என்றுகூட யோசித்து வருகிறார்'' என்றார் தமிழ்ப்பண்டிதர்.



''பையனை வைச்சுக்கிட்டு இதையெல்லாம் பேசாதீங்க'' என்ற ஷண்முகம் தங்கப்பனின் காதைப் பிடித்துத் திருகித் தம் பக்கமாக இழுத்தார். ''டேய்! பழம் வேணுமாடா, பழம்? கையை நீட்டு, தருகிறேன்'' என்று கூறி அவன் உள்ளங்கையில் 'சுளீர்' என்று பிரம்பால் ஒரு தட்டுத் தட்டினார். ''சாப்பிடு!'' என்றார்.

சாப்பிடுவது போல் பாவனை செய்து விட்டு மறுபடியும் கையை நீட்டினான் தங்கப்பன். ''இன்னும் கொஞ்சம், ஸார்!'' டிராயிங் மாஸ்டர் ஷண்முகத்துக்கு இது பிடித்தமான விளையாட்டு என்று அவனுக்குத் தெரியும்.

''தங்கச்சிக்கு எடுத்துக்கிட்டுப் போடா'' என்று கூறி மீண்டும் உள்ளங் கையில் 'பட்'டென்று தட்டினார் ஷண்முகம்.

''தங்கச்சி எனக்கு இல்லே ஸார். அம்மா தான் இருக்கா'' என்று கூறியபடியே கால் சராய்ப் பைக்குள் 'பழத்'தைப் போட்டுக் கொண்டான் தங்கப்பன்.

''ஏண்டா! யானைப் பெட்டியிலே ஓட்டுப் போடுங்கன்னு பாடினியே, யார் சொல்லிக் கொடுத்தது?''

''நான் வந்து உடைடாப்பா உடைடாப்பான்னு பாடிக் காண்பிச்சேன் ஸார்! நான் பாடினது நல்லா இருக்குன்னாங்க; அப்புறம் 'போடுடாப்பா போடுடாப்பான்னு பாடு'ன்னு கத்துக் கொடுத்தாங்க.''

''பேஷ்! சரிதான், நீ பாடினது எதற்காக? அதற்கு என்ன அர்த்தம்னு உனக்குத் தெரியுமாடா?'' என்று கேட்டார் ஷண்முகம்.

''ஓ யெஸ்! இப்படியெல்லாம் ஆடிப்பாடித் தேர்தலைக் கொண்டாடினா, நேருஜி வருவார்! அதற்காகத்தான்!''

கலகலவென்ற நகைப்புக் கிடையே மாருதி மின்சாரம் தாக்கியவர் போலத் துள்ளி எழுந்து நின்று, ''அட ஆண்டவனே!'' என்று கூறிக் கரத்தை உதறினார். ''ஹெட்மாஸ்டரிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு நம்ப பசங்களுக்கு 'டிம்பக்டு' எங்கே இருக்கிறது என்று கற்றுக் கொடுப்பதற்கு முன்னால் நம் நாட்டில் ஜனநாயகம் எப்படி நடக்கிறது என்று கற்றுத் தர வேண்டும்'' என்றார்.

''ஒரு சிறு திருத்தம். எப்படி நடைபெறுகிறது என்றல்ல; எப்படி நடைபெற வேண்டும் என்று பிள்ளைகளுக்குப் பாடம் போதித்தல் நலம்!'' என்றார் தமிழ்ப் பண்டிதர்.

''மாணவர்களை அரசியலில் இழுத்துவிடுகிறோம் என்று ஆட்சேபனை எழும்பும்'' என்றார் ஷண்முகம்.

''ஆனால் பள்ளி நிர்வாகத்தில் நகர சபை அங்கத்தினர்கள் அரசியலை இழுப்பது குறித்

துத் தடை ஏதும் இருக்க முடியாதல்லவா?'' என்றார் தமிழாசிரியர்.

சம்பாஷணை தங்கப்பன் கேட்கவேண்டிய அவசியமில்லாத திசைகளில் திரும்புவதாக மாருதிக்குத் தோன்றவே, ''சரி, நீ போ, போ!'' என்று அவனை விரட்டினார். பின்னர் திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டவர் போல அவனைத் திரும்பவும் அழைத்து ''நோட்டுப் புத்தகங்களை உபாத்தியாயருக்காகத் தூக்கிக் கொண்டு வருவதை உனக்கு அளிக்கப்பட்ட ஒரு கௌரவமாக நினைக்க வேண்டும். மற்றப் பையன்களுக்கு அந்த உரிமை கிடைக்க வேண்டுமானால் அவர்களும் உன்னைமாதிரி நல்லமார்க் வாங்கவேண்டுமென்று சொல்லு! கேலி செய்வதையெல்லாம் ஒருபோதும் பொருட்படுத்தாதே! தெரிந்ததா?'' என்று சற்றுக் கடுமையான குரலில் கூறினார்.



''துணிமணிகளைத் தோய்த்துப்போட்டதும், கை கால் அலம்பத் தொட்டியிலே நூறு பக்கெட் கிணற்றிலிருந்து நீர் இழுத்துக் கொட்டி, வீடு பூராவும் ஒட்டடை அடிச்சவுடனேயே, சோபா மேஜைகளைச் சுத்தமாகத் துடைத்து, படங்களையும் கண்ணாடியையும் அழுக்குப்போக....''

''அடடா! மூச்சுவிடாம வேலையைச் சொல்றீங்களேயம்மா! உங்களுக்கு ஏற்கெனவே பிளட் பிரஷராச்சே!''

தலையைப் பலமாக ஆட்டி விட்டுச் சிட்டாகப் பறந்தான் தங்கப்பன். அவனுக்கு வாத்தியார் தன்னைப் பாராட்டினாரா, கோபித்தாரா என்றே புரியவில்லை.

'டிபன்பாக்ஸி'லிருந்த தயிர்சாதத்தை நிமிஷமாகக் காலி செய்துவிட்டுக் கை கழுவிய பின் கால்சராய்ப் பைக்குள் கையை நுழைத்தான் தங்கப்பன். அந்தப் பையின் அளவுக்குக் கச்சிதமான பருமனுடையதாக இருந்த டென்னிஸ் பந்து உள்ளே திணிக்கப்பட்டிருந்தது. அதனைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பிதுக்கி வெளியே எடுத்தான்.

பள்ளியின் ஒரு மூலையில் சுவரில் ஒரு சிறிய வளையம் இருந்தது. மொட்டை மாடியிலிருந்து மழை நீரைக் கீழே கொணரும் குழாயினைச் சுவரோடு ஒட்டினாற்போலப் பொருத்தி வைப்பது அந்த வளையத்துக்கு ஏற்பட்ட வேலை. ஆனால் எக்காரணத்தாலோ குழாய் உடைந்துவிட வளையம் மட்டும் சுவரில் பதிந்திருந்தது.

தங்கப்பன் பந்தைத் தரையில் நாலு தடவை தட்டி எடுத்தான். பின்னர் ஓர் எம்பு எம்பி அந்த வளையத்தினுள் பந்தைப் போட முயன்றான். பந்து அதனுள் விழவில்லை. சுவரில் மோதித் திரும்பியது. மறுபடியும் பந்தைத் தட்டியபடியே ஒரு பிரதட்சணம் வந்தான். பின்னர் மிக அலட்சியமாக ஒரு நொடிப்புடன் திரும்பித் தாவிப் பந்தைக் குறிபார்த்துப் போட்டான். இப்போது அது வளையத்தின் வெளிப்புறத்தில் பட்டுத் திரும்பியது அவன் கரத்துக்கு. தங்கப்பன் விடவில்லை. கடந்த ஐந்தாறு நாட்களாகவே அந்தப் பந்து அவனிடம் படாத பாடு பட்டு வருகிறது. தன்னைப் பெரிய பாஸ்கெட் பால் வீரனாகக் கற்பனை செய்துகொண்டு விளையாடுவான் தங்கப்பன். பந்தை யாருடனும் பகிர்ந்து கொள்ளவும் பிடிக்காது அவனுக்கு! பள்ளிக்கூடத்தின் அந்த மூலை முடுக்கில் அவன் விளையாடுவது அவன் நண்பர்களுக்குத் தெரியவும் தெரியாது!

பத்தாவது முறையாக அவன் பந்தை வீசியபோது அது கணக்காக வளையத்தினுள் நுழைந்து கீழே விழுந்தது. ஒரே உற்சாகத்துடன் துள்ளிக் குதித்தான் தங்கப்பன். அவன் ஆனந்தத்தைப் பகிர்ந்துகொள்கிற மாதிரியாக யாரோ கைகொட்டிச் சிரித்து, ''ஜோர், ஜோர்! பலே ஜோர்!'' என்று ஆரவாரிக்கும் சத்தம் கேட்டது.

யார் கண்ணிலும் படாதவாறு தான் அங்கு விளையாடுவதாக நினைத்துக்கொண்டிருந்த தங்கப்பன் திடுக்கிட்டு நிமிர்ந்து நோக்கினான்.

வலதுபக்கம் காம்பவுண்டுச் சுவருக்கு மேலே ஒரு சிறுமியின் அழகிய முகம் மட்டும் தெரிந்தது.

''ஏய் பையா! நீதானே இன்னைக்குக் காலமே யானை சவாரி செய்தது?'' என்ற மிகுந்த ஆச்சரியத்துடன் கேட்டாள் உஷா. **(தொடரும்)**

சித்திரக் களஞ்சியம்



பத்திரிகை நிருபர் விண்வெளி வீரரைப் பேட்டி காண்கிறார்: "நீங்கள் இந்தப் பூமியை விட்டு மற்ற கிரகங்களுக்குப் போக ஆவல் கொண்டதற்கு அடிப்படைக் காரணம் என்ன?"

"நம்ம தையற்காரரிடம் ஒரு ஜிப்பா தைச்சுத் தரமுடியுமான்னு கேட்டேன்... 'ஓ தாராளமா தைச்சுத் தரேனே, என்றார்."





ஃ மூக்கின் இரண்டு புறமுமுள்ள தசை நார்களைத் தும்முவது போன்ற பாணியில் சுருக்கவும். மூக்கின் மீதுள்ள தோலில் நிறையச் சுருக்கங்கள் விழவேண்டும்.

ஃ நாசித் துவாரங்களைப் பெரிதாக்கும் வகையில் மூக்கின் தசைநார்களை இருபுறமும் இழுக்கவும்.

ஃ வாயின் இரு கோடிகளையும் தனித் தனியாகக் கீழ்ப்புறமும் வெளிப்புறமும் இழுத்து நீட்டவும்.

ஃ முத்தமிடுவதற்கு முயலுவது போன்ற வகையில் உதடுகளை அழுத்தமாகக் குவிக்கவும்.

ஃ கழுத்தின் இரண்டு பக்கங்களையும் சுருக்கி மார்பையும் கழுத்தையும் நிலையையும் அசைக்காமல் வைத்திருக்கவும். ஆறு விநாடிகளுக்குப் பிறகு பழைய நிலைக்குத் திரும்பவும். நெஞ்சின் மீதுள்ளதோல் மேலே எழும்பவேண்டும்.

ஃ வாயை அதிகப்பட்சம் எந்த அளவுக்குப் பிளக்க முடியுமோ அந்த அளவுக்கு எல்லாத் திசைகளிலும் திறக்கவும். அப்படியே சில விநாடிகள் இருக்கவும்.

இதற்கெல்லாம் விரல்களைப் பயன்படுத்தக் கூடாது என்பது கவனிக்க வேண்டிய விஷயம். தசைநார்களைத் தன்னால் இயங்கச் செய்ய வேண்டும்.

அது சரி, இதெல்லாம் எதற்காக என்று கேட்கிறீர்களா?

93ம் பக்கம் பார்க்கவும்.

ஆதியில் கட்டை வண்டி வந்தது. பிறகு ஜட்கா வண்டி, அப்புறம் சைக்கிள், பிறகு கார் வந்தது. அதைத் தொடர்ந்து கடன்காரன் வந்தான்.



ஸொஜ்ஜி. பஜ்ஜி. ஸஜ்ஜி — பிகே





ஓர் ஊரில் ஒரு மனிதன் இருந்தான். அவன் அறநெறி வழுவாதவன். சிறந்த தர்மவான். தினமும் மாலை நேரத்தில் சிந்து நதிக்குச் செல்லுவான். கரையில் விளக்கேற்றி வைத்து விட்டுத் திரும்புவான்.

அதே ஊரில் இன்னொருவன் இருந்தான். அவன் தினம் காலையில் சென்று முந்தியவன் ஏற்றி வந்த விளக்கை அணைத்து வருவான்.

ஒரு நாள் பெருத்த புயல் அடித்தது. பேய் மழையும் பிடித்துக் கொண்டது.

விளக்கேற்றப் போகும் நேரம் வந்தது. மழையும் புயலும் விடவில்லை. விளக்கேற்றப் போக வேண்டியவன், 'இன்றோ மழையும் காற்றுமாக இருக்கிறது. அதனால் விளக்கேற்றப் போக வேண்டியதில்லை. அப்படியே போய் ஏற்றி வைத்தாலும்தான் இந்த மழைக் காற்றில் அது எங்கே எரியப் போகிறது?' என்று எண்ணி, விளக்கேற்றப் போகவில்லை.



மறு நாள் காலையிலும் மழை விடவில்லை. வானம் பொத்துக் கொண்டு ஊற்றுகிறதோ என்று எண்ணும்படி மழை பெய்து கொண்டிருந்தது. விளக்கை அணைக்கப் போக வேண்டியவன் மழையைப் பொருட்படுத்தவில்லை. இந்தப் பேய் மழையிலும் சாரல் காற்றிலும் விளக்கு எங்கே எரிந்து கொண்டிருக்கப் போகிறது என்றும் யோசித்துப் பொழுதை வீணாக்கவில்லை. தன் பழக்கத்தை விடாமல் நதிக்கரைக்குச் சென்றான்.


அவனது தவறாத கடமை உணர்வைக் கண்டு மகிழ்ந்த வருண தேவன் அவன் எதிரே தோன்றி அவன் கேட்ட வரத்தைக் கொடுத்துச் சென்றான்.


★





புதிதாகப் பட்டணம் பார்க்க வந்த கிராமவாசி ஒருவன் ஓர் ஆபீஸில் உள்ள 'லிப்'டுக்கு அருகில் நின்று கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு வயதான ஸ்திரீ வந்து லிப்டில் ஏறிக் கொண்டாள். அது மேலே சென்றது. சில நிமிஷங்களுக்குப் பிறகு அது கீழே வந்தது; கதவு திறந்தது. ஓர் அழகான யுவதி வெளியே வந்தாள். உடனே அந்தக் கிராமவாசி, "ஆகாகா! இந்தவிஷயம் எனக்குத் தெரியாமல் போய் விட்டதே! என் மனைவியையும் அழைத்து வந்து இந்தப் பொட்டியிலே ஏற்றியிருப்பேனே!" என்று வருத்தப் பட்டுக்கொண்டான்.





"இரீசு வரை உறவு"

"எழில்வண்ணன்"

[முதல் பந்திலேயே அவுட்டாகி 'டக்' போட்ட ஓர் அப்பாவி கிரிக்கெட் வீரன் எழுப்பிய சோக கீதம்]



'இரீசு' வரை உறவு
'க்ளவுசு' வரை வியர்வை
விக்கெட் வரை ஆட்டம்
விழுந்து விட்டால் ஓட்டம்!

ஆடும் வரை ஆட்டம்
'அன்ரட்'டிலே நாட்டம்
கூடுறது கூட்டம்
ஆவல் தலை நீட்டும்!

கைகளுக்கு 'க்ளவுசு'
கால்களுக்கு 'பாட்ஸ்'
தடுக்காவிடில் 'ஸ்டம்ஸ்'
கொடுத்துவிடில் 'காச்'சு

அடித்து விட்டால் 'ஹீரோ'
தடுத்து விட்டால் 'ஸீரோ'
ஒடித்து விட்டால் 'பவுண்ரி'
கேட்டு விடு 'காமெண்ரி'!




டாக்டர்: இந்த நோயிலிருந்துதப்ப வேண்டுமென்றால் ஆப்பரேஷன்தான்.

நோயாளி: ஆபரேஷனுக்கு என்ன செலவாகும்?

டாக்டர்: என்ன, ஐந்நூறு ரூபாய் செலவாகலாம்.

நோயாளி: என்னிடம் இருப்பதே எழுபத்தைந்து ரூபாய்தானே?

டாக்டர்: பரவாயில்லை, அப்போ மாத்திரைகளைக் கொண்டே குணப் படுத்திவிட முடிகிறதா, பார்ப்போம்.




அவள் எங்கே?
ரேணுகா—படித்துப் பட்டங்கள் பெற்றவள். உயர் குடும்பத்துச் செல்வந்தரின் ஒரே மகள். சமீபத்தில்தான் தந்தை காலமானார். தந்தையின் தொழில் ஸ்தாபனத்தை நிர்வகித்து வந்த ரேணுகா தனித்தே வாழ்ந்து வந்தாள்.
கதை - கெளசிகன்
— சித்திரத் தொடர்... சித்திரம் - ரமணி..



ஒரு நாள் இரவு பத்து மணிக்கு மேல்...
அது என்ன சத்தம்? வாசல் கதவை யாரோ தட்டுகிறத் போலிருக்கிறதே...
ஐயோ, மாலதி! அவளுக்கு என்ன நேர்ந்தது— குமார்?
உங்கள் சகோதரியைக் குரூரமாகக் கொல்ல முயன்றிருக்கிறார்கள் யாரோ. அவள் அறைக்குள் ரத்த வெள்ளத்தில் கிடந்தாள். அவளை இங்கு உங்க— ளிடம் கொண்டு வருவதைத் தவிர— எனக்கு வேறு— ஒன்றுமே தோன்ற வில்லை.
மாலதி... அவள் இறந்து விட்டாளா?
இரண்டு இடத்தில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்திருக்கிறது. ஆனால் இன்னும் இதயத் துடிப்பு இருப்பதுதான் அதிசயம். என் தகப்பனாருக்குப் போன் செய்து வர வழைக்கிறேன். அவர் ஒரு டாக்டர்.
ஆமாம் அப்பா! ரொம்ப சீரியஸ்— அவசரம் அதையெல்லாம் இங்கு நீங்கள் வந்ததும் சொல்கிறேனே...ம்.. ஆமாம்.. சரி...விலாசம் குறித்துக் கொண்டீர்களா? ம்... உடனே....


அந்த அயோக்கியன் தான் இதைச் செய்திருக்க வேண்டும். அன்றைக்கே அவனைப் பற்றி என்னிடம் சொல்லியிருந்தால் இன்றைக்கு இந்த நிலை வந்திருக்காது.
வேறு விதமாக நடந்திருக்கும். மாலதிக்குப் பதில் அவனை நீங்கள் கொன்றிருப்பீர்கள். அதற்குப் பயந்துதான் மாலதி அவன் யார் என்பதை உங்களிடம் கூற வில்லை.
அதோ, அப்பாவின் கார்தான் அது..
மூச்சு மட்டும் ஓடிக்கொண்டிருக்கிறது. பிழைக்க வாய்ப்பு உண்டு. முயற்சி பலனில்லாமலும் போகலாம். நிச்ச யம் சொல் வதற் கில்லை.
என்னடா குமார்! இந்த நள்ளிரவில் உனக்கு என்னவோ ஏதோ என்று...
எனக்கு ஒன்றுமில்லை! இந்த உடலைப் பரிசோதித்து அதற்கு உயிர் கொடுக்க முடியுமா, பாருங்கள்.
அதை விடமுக்கியம் என் மகனின் நடத்தையில் எனக்கு நம்பிக்கை ஏற்பட்டாக வேண
அதை நான் விளக்கிக் கொண்டிருந்தால் அவள் உயிர் போய் விடும் அப்பா. முதலில் அவளைக் கவ னியுங் கள்.
டாக்டர் எல்லாம் உங்களுக்கு விளக்கு கிறேன்.
அப்பா உங்கள் திறமையை எல்லாம் உபயோகித்து இவளை எப்படியாவது பிழைக்க வையுங்கள்.
மருத்துவக் கல்லூரியில் நீ படிக்கும் அழகு இதுதானா? இந்தப் பெண் யார்? இவளுடைய இந்த நிலைக்கும் என்னை நீ வரவழைத்து வற்புறுத்துவதற்கும் என்ன காரணம்?

—தொடரும்

மாயக்கண்ணாடி

அரு. ராமநாதன்

தெரு ஓரத்தில், பீற்றல் கோட்டுக் காசி, பழைய செருப்புகளைச் செப்பனிடும் தொழில் நடத்திக் கொண்டிருப்பான்.

அவனுக்கு முப்பது வயசுக்கு மேலாகி விட்டது. இன்னும் கல்யாணமாகவில்லை. அன்றாட வருமானமே அவனுடைய வயிற்றுக்குச் சரியாகப் போதாது. குழாய்த் தண்ணீர்தான் பற்றுக்குறையை நிரப்ப வேண்டும். இந்த நிலையில் தன் வறுமையைப் பகிர்ந்து கொள்ளும்படி இன்னொருத்தியையும் வாழ்க்கையில் பாரமாக்கிக் கொள்ள வேண்டாம் என்று நினைத்தான். அதன் பிறகு கல்யாணத்தைப் பற்றிய நம்பிக்கைகளெல்லாம் கரைந்து போயின.

சில சமயங்களில் எதற்காக உயிர் வாழ்கிறோம் என்று ஆத்மவிசாரணைகளில் சஞ்சரிப்பான். அப்போது மாயா ரூபமான இயற்கை சும்மா விடுமா? அவ்நம்பிக்கையின் அடிப்படையிலே அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்டிருந்த ஆசைகளெல்லாம் இளமைப் பருவம் கடக்கும் தவிப்பிலே அதிதீவிரமாகக் கரை புரள முயலும். அந்த ஆசை அலைகளெல்லாம் கற்பனைகளிலே வடிகால் காணும்.

குடும்ப வாழ்க்கையின் எல்லாவற்றையுமே கற்பனையில் அனுபவித்து விடலாம் என்று காசி தீர்மானித்து விட்டான்.

கற்பனைகள் என்பவை எழுத்தாளர்களுக்கும், கவிஞர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் மட்டும் சொந்தமானவை அல்ல. இருதயத்துக்கு வேலை கொடுத்தால் ஏழைகளுக்கும் தாராளமாகக் கிடைக்கக் கூடியவைதான்.

அவற்றில் லயிக்கும்படியான இருதயம் மட்டும் மனிதனுக்கு இல்லா விட்டால் இந்த உலக வாழ்க்கையில் பிடிப்புத்தான் ஏது?

காசியின் கற்பனைகளுக்கு உரமளித்து அவனுடைய இருதயத்தை வளர்த்து வருவது ஒரு ஜன்னல்தான்.

தெருவில் எதிர்வரிசை வீடுகளில் ஒரு மூலையில்தான் இருந்தது அந்த ஜன்னல்.

அது ஒரு கண்ணாடி ஜன்னல். பொழுது விடிந்ததும் அதிகாலையில் இரண்டு அழகான வளைக் கரங்கள் அந்த ஜன்னலைத் திறக்கும்.

அந்தப் பெண்ணின் கைகளைப் பார்த்ததும், காசிக்கு வாழ்க்கையில் ஜீவ உற்சாகம் பொங்கி விடும்.

அந்தக் கைகளில்தான் எவ்வளவு நளினம்! எவ்வளவு மென்மை! எவ்வளவு அழகுக் கவர்ச்சி! அவற்றின் அசைவுகளில்தான் எவ்வளவு இன்பக் கதைகள்?

மாலை நேரமானால் அக்கைகள் பூக்களைத் தொடுக்கும். தான் முகருவதற்காகவே அவன் பூத் தொடுப்பதாகக் காசிக்குப் பிரமை ஏற்படும். அதைத் தொடர்ந்து மன மயக்கம் ஏற்பட்டு,



அந்த மயக்கத்தின் குதூகலமான லயிப்பிலே காசி கண்களை மூடிக்கொள்வான். கற்பனைகள் கட்டுப்பாடின்றி விரிந்து கொண்டேயிருக்கும்.

அந்த ஜன்னல் வழியாக அந்தப் பெண்ணின் இரண்டு கைகளும், உருவத் தோற்றத்தின் சில பகுதிகளும் மட்டும் தெரியுமே தவிர, முழு உருவமும் புலப்படாது.

அரை குறையான தோற்றங்களுக்குத்தானே அதிகக் கவர்ச்சி? அதுதானே இயற்கை மாயையின் ரகசியம்? முழுத் தோற்றத்தையும் மூலத்தோடு முற்றிலும் பார்த்து அனுபவித்துத் தீர்த்துவிட்டால் அப்புறம் மாயா பந்தத்தில்தான் என்ன சுவாரசியம் இருக்க முடியும்? ஆனால்....

ஒரு முறைகூடவா அந்தப் பெண் ஜன்னல் வழியாகத் தெருவில் எட்டிப் பார்க்க மாட்டாள்? ஒருவேளை நல்ல மறைவாக அறைக்குள்ளேயே அடங்கி வாழும் மர்மப் பெண்ணோ என்னவோ?

ஆனால் மானசிகக் காதலுக்கு முகம் எதற்கு? அந்தப் பெண்ணின் இரண்டு கைகளே காசிக்குப் போதும். அவனுடைய வாழ்க்கைக்கு உதவும் கலை அம்சங்களும் அவனது கைகள்தானே?

அந்தப் பெண்ணின் இரண்டு கைகளுக்குள்ளேயே காசியின் உலகம், இருதயம், கற்பனைகள், கனவுகள், எல்லாம் அடங்கியிருந்தன!

பொழுது இருட்டிவிட்டால் கண்ணாடி ஜன்னலில் விளக்கு வெளிச்சத்தினூடே அந்தப் பெண்ணின் நிழல் உருவ அசைவுகள்தான் தெரியும். அவற்றைப் பார்த்துக் கொண்டே காசி தன்னுடைய பழைய செருப்புக்களின் விரிப்பின் மீது படுத்துக் கிடப்பான். ஜன்னலின் விளக்கு வெளிச்சம் அணைந்து இருள் படுதா விழுந்ததும் காசியும் கனவு மயக்கத்தோடு கண்ணை மூடி விடுவான். மறுநாள் அந்த ஜன்னலைத் திறக்கும் வளைக் கரங்களைப் பார்த்த பிறகுதான் அவனுக்கு மறுபடியும் புத்துயிர் உண்டாகும்.

இவ்வாறு பத்து வருஷங்களாக அந்த ஜன்னல்தான் காசியின் இருதயத்துக்கு வாசலாக விளங்கி வந்திருக்கிறது! வாழ்க்கை என்னும் பட்டம் ஒரு மெல்லிய நூல் கயிற்றால்தான் வானத்தை நோக்கி உயர உயரப் பறக்கிறது என்று தத்துவ ஞானிகள் சொல்வார்கள். காசியைப் பொறுத்தவரை அவனுடைய வாழ்க்கைக்கு மூலாதாரமான அந்த மெல்லிய நூல் கயிறு அந்த அழகான இரண்டு வளைக் கரங்கள்தான்!

அவனுடைய வாழ்க்கை ஜிலுஜிலுவென்று பறந்துகொண்டே இருந்தது.

ஆனால் எதற்கும் ஆரம்பம் என்று ஒன்று இருந்தால் அதற்கு ஒரு முடிவும் இருக்குமல்லவா?

ஒரு நாள் பொழுது விடிந்து காசி கண் விழித்து எழுந்து காத்திருந்த போது அந்தக் கண்ணாடி ஜன்னல் திறக்கவில்லை! மத்தியானமாயிற்று. மாலை நேரமும் ஆயிற்று. அப்போதும் அந்த ஜன்னல் திறக்கவேயில்லை. வளைக் கரங்கள் தட்டுப்படவேயில்லை!

அந்தப் பெண் வேறு எங்கோ குடியேறிப் போய்விட்டாளோ? அல்லது என்ன ஆனாளோ...?

அன்றிரவு காசியும் போய்விட்டான். இந்த உலகத்தைவிட்டே அவன் போய் விட்டான்.

கதை அவ்வளவுதான்! மாய வாழ்க்கையில், முட்டாள்களின் அர்த்தமற்ற கதையும், அறிவாளிகளின் அர்த்த புஷ்டியான கதையும் அநேகமாக நம் எல்லோருடைய கதையும் அவ்வளவுதான்!



இன்றைய நாகரிகம்

நவீன கால ஓவியப் பாணி அல்லது மாடர்ன் ஆர்ட் என்றால் சிலருக்குக் கொள்ளை ஆசை; வேறு சிலருக்குக் குலை நடுக்கம்! ஆனால் 'நாம் அணிந்திருக்கும் இந்தப் புடைவையைப் போல் வேறு ஒன்றை உலகில் யாருமே உடுத்திக் கொள்ள முடியாது!' என்ற தனிப் பெருமையை நீங்கள் விரும்பினால் 'பாத்திக்' என்ற முறையில் உருவான புடைவையைத் தேர்ந்தெடுக்கலாம்.


இவ்வகைப் புடைவைகளில் முதலில் சைத்திரிகர் ஓவியம் தீட்டுகிறார். பின்னர் அது சாயம் தோய்த்து எடுக்கப்படுகிறது. ஆகவே புடைவையும் ஒரு தனித்துவம் பெற்று விளங்குகிறது. ஓவியர் திரு ஜெயகர் தமது ஓய்வு நேரத்தில் உருவாக்கிய இந்தப் புடைவையை அணிந்திருப்பவர் நிர்மலா தேவி.

புடைவை தந்து உதவியவர்கள்:
ஓவியர்கள் கைத்தொழிற் குழு,
5/1 சுப்பையா நாயுடு தெரு,
சென்னை — 7.

படம் :
சந்தாமியான்.



டி வி எஸ் வினியோகிக்கும்



JWT-TVS-2562

கந்தன் கருணை

திருமுருக
கிருபானந்தவாரியார்



23. குறுமுனியும் பெருமலையும்

பின்னர் நிகழப் போவதையெல்லாம் சிவபெருமான் திருவருளால் முன்னரே அறியும் ஆற்றல் பெற்றவர் நாரத முனிவர். பின்னால் நடக்க வேண்டியதற்கு அநுகுணமான செயல்களை முன்னரே அவர் தொடங்கி வைப்பார். அவர் விந்தகிரியை அடைந்து அதற்கு ஆசி கூறினார். ''விந்தகிரியே! மேரு மலை மிகவும் கருவப்படுகிறது. 'நான் சிவபெருமானின் வில்லாக வளைந்தேன். உமாதேவியார் என்னிடமே வளர்ந்தார். எல்லா மலைகளுக்கும் நான் அரசனாகத் திகழ்கிறேன். சந்திர சூரியரும் மற்ற கிரகங்களும் என்னையே வலம் வருகின்றன. நான் ஆயிரம் கொடுமுடிகளைக் கொண்டிருக்கிறேன். என்னுடைய ஒரு பாகத்தில் திருக்கயிலாய மலை இருக்கிறது. தேவர்கள் என்னிடம் குடிகொண்டிருக்கிறார்கள். நான் பொன்னாகத் திகழ்கிறேன். எனக்கு ஒப்பாக வேறு மலை இல்லை' என்றெல்லாம் மேருமலை செருக்குற்றுளது'' என்று கூறினார்.

நாரதர் கூறியதைக் கேட்ட விந்தகிரி ஏக்கப் பெருமூச்சு விட்டது. ''மேரு மலைக்கு எவ்வளவு அகங்காரம்? வீரபத்திரக் கடவுளாகிய சரபப் பறவை

பேருருவம் கொண்டு நரசிங்கத்தின் முன் நின்றபொழுது ஒரு பருக்கை போல் அதன் காலடியில் கிடந்த இந்த மேருவுக்கு இவ்வளவு செருக்கா? நாரத முனிவரே! மேரு மலையின் செருக்கை யொடுக்கி என் பெருமை யைக் காட்டுகிறேன்'' என்று கூறிய விந்தகிரி உடனே வளரத் தொடங்கியது. விரைவிலேயே சத்திய உலகம் வரை வளர்ந்து நின்றது. அதனால் சந்திர சூரியரின் கதி தடைப்பட்டது.

தேவரும் முனிவரும் வருந்தினர். விந்தகிரியை அடக்கக் கூடியவர் யாரென யோசித்தனர். மகா சமுத்திரத்தை உள்ளங்கை நீராக எடுத்து ஆசமனம் செய்த அகத்திய முனிவரால்தான் விந்தகிரியின் தருக்கை அழிக்க முடியும் என்று ஆராய்ந்து தெளிந்தார்கள்.



அகஸ்தியர் பார்வைக்குச் சிறியவராக இருப்பார். இதன் தாத்பரியம் வெளித் தோற்றத்தில் சிறுமை காணுமிடத்தில் தான் உள்ளார்ந்த பெருமை உறையும் என்பதேயாகும்.

அண்ட கடாகம் வரை வளர்ந்த விந்தகிரியின் செருக்கை அடக்குவதற்காகச் சந்திர சூரியரும் பிறரும் அகத்திய முனிவரை நினைந்தார்கள்.

''மகத்துவ மூடையா யோலம்
மறையுணர் மணியே ஓலம்
மிகத்துயர் படைத்தேம் ஓலம்
விமலனே ஓலம் விந்த
நகத்தினால் அலைந்தோம் ஓலம்
ஞான நாயகனே ஓலம்
அகத்திய முனிவா ஓலம்
அடிகளே ஓலம் ஓலம்!''

''தவசிரேஷ்டரான அகத்தியப் பெருமானே! கிரகங்களின் ஆகாய வழியை விந்தகிரி தடை செய்து நிற்பதால் உலகம் முழுவதும் இரவு பகல் பொழுதுகள் நிலைதடுமாறி விட்டன. அமிழ்தினும் இனிய தமிழ் கண்ட முனியே! இத்துன்பத்தை நீக்கியருள வேண்டும்'' என்று அவர்கள் வேண்டிக் கொண்டனர்.



அகத்திய முனிவர் மேரு மலைச் சாரலில் தவம் செய்து கொண்டிருந்தார். சூரிய சந்திரர் தம்மை நினைந்து வேண்டியதை அறிந்த அவர், இமையவரின் துயர் போக்கக் கருதினார். மதுரத் தமிழ் சுரந்த தவமுனியின் இதயம் கருணை மயமாகத் தானே இருக்கும்?

அகஸ்தியர் தம் சக்தியைப் பற்றித் தருக்குறவில்லை. தமக்கு ஏதும் சக்தி இருப்பின் அது இறைவன் அருளியதே எனக் கருதி அம் மகா முனிவர் சிவபெருமானை மனத்தில் தியானித்தார்.

அந்தி வண்ணப் பெருமான் நந்தியுடன் வந்து அகத்திய முனிவருக்குக் காட்சியளித்தார். குறுமுனிவர் சிவபெருமானைப் பல முறை வணங்கி வழிபட்டு, ''விந்தகிரியின் செருக்கை அகற்றி உயிர்களுக்கு நலஞ் செய்யும் ஆற்றலை அருள வேண்டும்'' என்று விண்ணப்பித்துக் கொண்டார்.

''முனிபுங்கவ! நீ வேண்டிய ஆற்றலைத் தந்தருளினோம். விந்தகிரியை அடக்கி, அதன்பின் தென் திசையில் பொதிய மலையில் சென்றிரு'' என்று சிவபெருமான் அருளிச் செய்தார்.

அகத்தியர் சிவபெருமானைத் தொழுது, ''நான் எங்கு சென்றாலும் அபிஷேகப் பிரியரான தேவரீரைப் பூசிப்பதற்கு ஒரு தீர்த்தத்தைத் தந்தருள வேணும்'' என வேண்டினார்.

சிவபெருமான் திருக்கயிலாய மலையிலிருந்த ஏழு நதிகளுள் புனிதமாகிய காவிரி நதியை அழைத்து அகத்தியருடன் போகுமாறு பணித்தார்.

காவிரி சிவபெருமானை வணங்கினாள். ''சுவாமி! இவர் ஐம்பொறிகளையும் அடக்கிய அருந்தவராயினும் ஓர் ஆடவர். இவருக்குப் பின் நான் செல்லுதல் முறையாகுமோ?'' என்று வினவினாள்.

''பெண்ணே! இம்முனிவன் தவ ஒழுக்கத்தில் ஒப்பற்றவன். மாறுபாடில்லா மனத்தினன். நம் அடியார்களில் சிறந்தவன். நீ இவன் பின் தயக்கமின்றிச் செல்வாயாக! இவன் என்

றைக்கு உன்பொருட்டாகப் பார்த்து, 'போ' என்று கை காட்டுவானே அன்றே இவனை விட்டு நீங்கி உலகில் பரவுவாய்'' என்று சிவமூர்த்தி திருவாய் மலர்ந்தருளினர்.

அகத்திய முனிவரை நோக்கி, ''காவிரியை உன் கமண்டலத்தில் ஏற்பாய்'' என்று பணித்தருளினர் ஈசன்.

காவிரிநதியை அகத்தியர் கமண்டலத்தில் ஏற்றுக் கொண்டு தென் திசை நோக்கிப் புறப்பட்டார். அவர் செல்லும்பொழுது தாரகாசுரனுடைய மாய மாபுரி சமீபித்தது. அங்கே உள்ள கிரவுஞ்சன் என்ற அசுரன் அகத்தியர் வருவதைக் கண்டான். மண்ணுலகை விண்ணுலகாகவும் விண்ணுலகை மண்ணுலகாகவும், மலையைக் கடலாகவும் கடலை மலையாகவும், சூரியனைச் சந்திரனாகவும் சந்திரனைச் சூரியனாகவும் தோற்றுவித்து மாயம் செய்யவல்ல அந்த அசுரன் அகத்தியர் வரும் வழியில் பல சிகரங்களைக் கொண்ட மலையாய் நின்றான். அந்த மலையினுள்ளே செல்வதற்கு ஒரு வழியும் இருந்தது. முனிவர் பெருமான் மலையின் நடுவே தெரிந்த வழியில் நடந்து சென்றார். சிறிது தூரம் சென்றதும் அந்த வழி மறைந்து வேறு வழி தோன்றியது. அந்த வழியைப் பின்பற்றினர் அகத்தியர். சிறிது தூரம் சென்றதும் அந்த வழியும் மாயமாய் மறைந்தது. பின்னர், வேறொரு வழி தோன்றியது. அந்த வழியாக அகத்திய முனிவர் செல்லும் பொழுது அக்கினி நெருங்கிச் சூழ்ந்தது; சுழற்காற்று வீசியது; மழை பொழிந்து இடி இடித்து இருள் சூழ்ந்தது. இருள் படிந்ததும் கிரவுஞ்சன் பற்பல மாயங்களைச் செய்தான்.

'இது அசுரர்களின் வஞ்சனை' என்பதை முனிவர் ஞானத்தால் அறிந்து அனல்போல் சினந்து நகைத்தார். தமது கையிலிருந்த பிரம்ம தண்டத்தினல் மலையில் குத்தினர். மலை நொறுங்கிப் பல துவாரங்கள் ஏற்பட்டன. அகத்திய முனிவர் சினம் கொண்டு ''அறிவற்ற அசுரனே! நீ மலை வடிவாகவே இருந்து அவுணர்கட்கு இருப்பிடமாவாய்! உன்னல் சிவநிந்தை புரிந்த அமரர்கட்குத் துன்பம் நேரட்டும். எனது கைத்தண்டினல் குத்தி உன்மீது ஏற்படுத்திய துவாரங்கள் யாவும் மாயங்கட்கு உறைவிடமாகுக. நீ பின்னெரு காலத்தில் முருகனின் வேற்படையால் மாளக் கடவாய்'' என்று சபித்தார்.

தமது கமண்டலத்தில் உள்ள நீரை மந்திரத்துடன் தெளித்து, கிரவுஞ்சனின் மாயத்தைக் கெடுத்தார் அகஸ்தியர். தென் திசை வழியில் சென்றார்.

தேவகிரிச் சாரலையை அடைந்தார் அகத்தியர். காசியிற் சென்று கண்ணுதல் பெருமானை வணங்கித் துதித்துப் புறப்பட்டார். அதன்பின் தெற்கு நோக்கிச் செல்லும் வழியில் மிகவும் உயர்ந்து வளர்ந்து நின்ற விந்தமலையைக் கண்டார். ''விந்த மலையே! யாம் பொதியாசலம் செல்ல இவ்வழி வந்தோம்; வழி விடுக'' என்றார்.

''கதிரவனும் திங்களும் செல்ல முடியாதபடி ஆகாய வழியை மறைத்து நெடிய வடிவையுடைய திருமாலைப் போல் நிற்கும் நான் குறுகிய வடிவுடைய உமக்குப் பயந்து வழி விடுவேனே? வந்தவழியே திரும்பிப் போம்'' என்று விந்தமலை கூறியது.

மேருவின் தருக்கை அறுப்பதற்காக உருப்பெருக்கி நின்ற விந்தமலை இப்போது தானே தருக்குற்று இப்படிப் பேசிற்று. ஆற்றல் உள்ளவிடத்தில் அகம்பாவமும் தானே வந்து சேர்கிறது என்பதை உணர்த்தவே இச் சரிதங்களை முனிவர்கள் தந்திருக்கிறார்கள்.

விந்தமலை கூறியதைக் கேட்ட அகத்தியர் நகைத்தார். அவரும் எல்லையற்ற ஆற்றல் பெற்றவர்தான். ஆனல் அகம்பாவமின்றி, அது ஐயன் அளித்த பிரசாதமே என்றிருந்திருந்தார். இப்போதும் ஐயனையே எண்ணினர். தமது கரத்தை நீட்டினர். குறுகிய தோற்றமுடைய அவரது கரம் மேலும் மேலும் நீண்டு கொண்டே சென்றது. சத்தியலோகத்தைத் துழாவுமளவுக்குக் குறுமுனியின் கரம் வளர்ந்தது. வளர்ந்து வரும் தமது உள்ளங்கையை விந்தமலையின் தலையில் ஆசி கூறுவது போல் வைத்தார் முனிவர். அவ்வளவே! பெருமை பேசிய பெருமலை பாதாளத்துக்குள் புதைந்து விட்டது. இந்த அற்புதத்தைக் கண்டு விண்ணவர் வியப்பெய்தினர். தமது கால்பெரு விரலால் கைலாயத்தை இலங்கேசன் மீது அழுத்திய சிவபெருமானின் திருவருள் பெற்றவர் எந்த அற்புதத்தைத்தான் செய்ய முடியாது? பாதலத்தில் அழுந்திய விந்தமலை ஆதிசேடனின் வாசஸ்தலத்தை யடைந்தது. அப்போது தான் அதற்கு அறிவும் தெளிந்தது.

''தபோதனரே! அறியாது செய்த என் குற்றத்தை மன்னிக்க வேண்டும். நான் திரும்பவும் உயர எழுங்காலம் எப்போது?'' என்று அகத்தியரிடம் விந்தமலை வேண்டியது. ''யான் தென் திசை சென்று மீளவும் இவ்வழியே திரும்பும்போது மேலெழுவாய்'' என்றார்.

அகத்திய முனிவர் தமது தென் திசைப் பயணத்தை மறுபடியும் தொடர்ந்தார்.

(தொடரும்)



கயல்விழி---

அகிலன்

"அரசகுலத்தோரே! நாங்கள் தாய்க் குலத்தைச் சேர்ந்தவர்கள். மக்களைச் சுமந்து, பெற்று, பாலூட்டிச் சீராட்டி, எறும்பு கடிக்கவும் பொறுக்காமல் பேணி வளர்த்து மனிதர்களாக்கு கிறோம். உயிர்களை ஆக்கப் பிறந்தவர்கள் நாங்கள். காக்கப் பிறந்தவர்கள் நாங்கள். உங்களால் அழிக்கப்படுவதற் காகவா நாங்கள் மக்களைப் பெற்று வளர்க்கிறோம்? உங்களைப் பெற்ற பெண் குலத்தை நீங்கள் எப்படி யெல்லாம் இந்தப் போரினல் துன் புறுத்துகிறீர்கள் தெரியுமா?"

இருபத்தாறாம் அத்தியாயம்

உரிமை போற்றும் உறவு

அந்தக் காலைப்பொழுதில் காவேரியாற்று மணற்பரப்பில் மின்வெட்டும் நேரத்துக்குள் ஏதேதோ நடந்து விட்டது. கள்வெறி கொண்ட சுந்தர பாண்டியனின் களிறு கயல் விழிமேல் பாய்ந்தது. இதைச் சிறிதும் எதிர்பாராத யானைப் பாகன் கதிகலங்கிப் போய்ச் செயலிழந்து விட்டான்.



மத்தகத்தைப் பிளந்து யானையின் குருதியைக் குடிக்க வரும் சிங்கம் போல் அதன் தலை உச்சிக்குத் தாவினான் சுந்தர பாண்டியன். பொறி கலங்கும்படி யானையின் தலையில் தன் கை வேலால் ஓங்கி அடித்தான். காலடியில் வைத்துக் கயல்விழியைத் தேய்க்கத் துணிந்த யானை, அடி தாங்காது கோப வெறியோடு அவளைத் தூக்கி வீசி எறிந்தது.

சுந்தர பாண்டியனும் யானை மீதிருந்து குதித்தான். கயல் விழி விழுந்து கிடந்த இடத்தை நாடி விரைந்தோடினான்.

ஓடியவனைத் திகைக்க வைப்பதுபோல் அங்கு மற்றோர் அதிசயம் நிகழ்ந்தது. அவனுக்கு முன்பே வீரநரசிம்மன் அங்கு ஓடிவந்தார். கயல்விழியின் தலையைத் தூக்கித் தமது மடியில் கிடத்திக் கொண்டு அவர் பதறினார். பாமினி ஓடிச் சென்று ஆற்று நீரை அள்ளி அவள் முகத்தில் தெளித்தாள்.

வீரநரசிம்மனுக்குத் தொண்டை அடைத்தது. ''மகளே! மகளே!'' என்று நாத் தழுதழுக்கக் கயல்விழியை அன்புடன் அழைத்தார். அந்த மாவீரரின் கண்களும் அவளுக்காகக் கலங்கி விட்டன. பாமினி கதறிக் கதறி அழத் தொடங்கினாள்.

குற்றம் புரிந்துவிட்ட உணர்ச்சியோடு சுந்தரபாண்டியன் மெல்ல அவர்களின் அருகில் சென்றான். அந்தக் காட்சியைக் கண்ட பல்லாயிரம் போர் வீரர்களும் தங்களை அறியாமலே தங்கள் உள்ளத்தில் அன்பு சுரந்து ஊற்றுப் பெருக்கெடுப்பதை உணர்ந்து கொண்டார்கள்.

''கயல்விழி!'' என்று மூன்று குரல்கள் ஒன்றாக இழைந்து அவளைத் துன்பத்தோடு அழைத்தன. கயல்விழி மெல்லக் கண் திறந்து நோக்கினாள். சிறிது சிறிதாக அவளுக்கு நினைவு திரும்பியது. வீரநரசிம்மன், சுந்தர பாண்டியன், பாமினி மூவரும் அவளைச் சூழ்ந்துகொண்டிருந்தார்கள். மூவரும் அவளுக்கு நேர்ந்த ஆபத்துக்காக மிகவும் வருந்தினார்கள்.

''எனக்கு ஒன்றும் நேரவில்லை'' என்று கூறிக் கொண்டே மெல்ல எழுந்தாள் கயல்விழி. காயங்கள் ஏதும் ஏற்படவில்லை என்றாலும், வலியும் வேதனையும் அவளைப் பிழிந்தெடுத்தன.

இருந்தாலும் அவற்றை அவள் வெளியிட்டுக் கொள்ளாது சுந்தர பாண்டியனைப் பார்த்தாள்.

''நான் இறந்து போயிருந்தால் இந்தப் போரைக் காண வேண்டிய துர்ப்பாக்கியம் எனக்கு நேர்ந்திருக்காது'' என்றாள் கயல்விழி.

''போர் நடக்கத்தான் வேண்டுமா?'' என்றாள் பாமினி.

திடீரென்று கயல்விழி சுந்தரபாண்டியனைப் பார்த்துப் பேசத் தொடங்கினாள்:

''இளவரசே! தாங்கள் சோழ சாம்ராஜ்யத்தின் மீது போர் தொடுத்து அதில் வெற்றி அடைந்தீர்கள். அது உரிமைக்காகவும் தர்மத்துக்காகவும், நடந்த போர். இப்போது தாங்கள் கோசல நாட்டின் மீது போர் தொடுப்பதற்கு என்ன காரணம்?''

சுந்தரபாண்டியன் வாய் திறந்து மறுமொழி கூறுவதற்குள் பாமினியே குறுக்கிட்டாள்.

''கயல்விழி! பாண்டியர் போர் தொடுப்பதில் தவறு என்ன இருக்கிறது? அவருடைய நண்பர் கோப்பெருஞ்சிங்கன் மீது படையெடுத்து அந்த நாட்டை இப்போது கோசலப் படைகள் அழித்து வருகின்றன. நண்பருக்கு ஆபத்தென்றால் பாண்டியர் கோழையைப் போல் ஒளிந்துகொண்டிருக்க வேண்டுமா? ஆபத்துக்கு உதவாத நட்பு என்ன நட்பு?''

சுந்தரபாண்டியன் திடுக்கிட்டான். பேசுவது பாமினி என்ற பகைநாட்டரசரின் குமாரத்திதானா? வீரநரசிம்மனுக்கும் மீசை துடித்தது. ''துரோகி!'' என்று தமக்குள் கூறிக்கொண்டே, ''பாமினி!'' என்று அதட்டினார்.

''ஆம், பாண்டியர் தர்மத்துக்காகத்தான் போர் புரிகிறார்!'' என்று மீண்டும் கூறினாள் பாமினி.

''நானும் என்னுடைய நண்பர் இராஜராஜனுக்காகத்தான் போரிடுகிறேன். அவர் இப்போது திருமுனைப்பாடி நாட்டுச் சிறையில் இருக்கிறார் என்பதை மறந்து விடாதே!'' என்று குமுறினார் வீரநரசிம்மன். ''சோழ சாம்ராஜ்யத்துச் சக்கரவர்த்தி பாண்டியரிடம் நாட்டை இழந்துவிட்டு, சிற்றரசர் காடவராயரிடம் சிறைப்பட்டிருப்பதைப் பொறுத்துக் கொண்டிருக்கச் சொல்கிறாயா?''

கயல்விழி இருவரிடமும் இனிய மொழிகளால் வாதிட்டாள். இருவருடைய குணநலன்களையும் போற்றினாள். இருவருடைய சிறப்புக்களையும் எடுத்துக் கூறினாள்.

''நீங்கள் இருவருமே நட்பு என்னும் அருங்குணத்தைப் போற்றும் பரந்த உள்ளம் கொண்டவர்கள். இருவருமே நட்புக்காகத் தியாகம் செய்யத் துணிந்தவர்கள். இருவருமே விவேகத்திலும் வீரத்திலும் சிறந்தவர்கள். — இத்தகைய இருவர் போர்க்களத்தில்தான் சந்திக்க வேண்டுமா?''

பாமினி குறுக்கிட்டு, ''நட்பு என்றால் அது இருவருக்கிடையில்தான் இருக்க வேண்டும் என்பதில்லையே!'' என்றாள். ''நால்வருமே நட்புக் கொண்டால் குமரி முனையிலிருந்து துங்கபத்திரைக் கப்பாலும் உள்ள சாம்ராஜ்யத்தை உறவோடும் உரிமையோடும் கட்டி ஆளலாமே!''


ஆண்கள் இருவரும் ஒருவரையொருவர் அன்போடு ஏறிட்டுப் பார்த்துக் கொண்டனர். கயல்விழி கண்ணீர் பொங்க அங்கு சூழ்ந்திருந்த பல்லாயிரக் கணக்கான போர்வீரர்களையும் சுட்டிக்காட்டி முறையிட்டாள்.

''இந்த வீரர்களில் பலர் ஆண்களையும் பெண்களையும் பெற்றெடுத்த தந்தைகள்; தலைவியரைக் கடைசிவரையில் காப்பதாகக் கரம் பற்றியவர்கள்; கட்டிளம் காளையரும் பெற்றோரின் கண்ணீர் துடைத்துக் களத்துக்கு வந்தவர்களும் இவர்களில் இருக்கிறார்கள். பாசம், பற்றுதல், காதல், நட்பு, தோழமை முதலிய அன்புணர்ச்சிகளின் அருமையை உணர்ந்தவர்கள்; அநுபவித்தவர்கள். — இவர்களை நட்பின் பெயரால் கொலை வெறியர்களாக்குகிறோம்; பலி கொடுக்கத் துணிந்திருக்கிறோம்.. ஒருவரையொருவர் கொன்று குவித்து நாம் அழியத்தான் வேண்டுமா?''

ஆவேசம் வந்துவிட்டது கயல்விழிக்கு. முன்பொருநாள் கொற்றவையாகத் தோன்றிய அதே கயல்விழி இப்போது புண்பட்டெழுந்த பூமித்தாயாக மாறிவிட்டாள்.

''அரச குலத்தோரே! நாங்கள் தாய்க் குலத்தைச் சேர்ந்தவர்கள். மக்களைச் சுமந்து, பெற்று, பாலூட்டிச் சீராட்டி, எறும்பு கடிக்கவும், பொறுக்காமல் பேணி வளர்த்து மனிதர்களாக்குகிறோம். உயிர்களை ஆக்கப் பிறந்தவர்கள் நாங்கள். காக்கப் பிறந்தவர்கள் நாங்கள்; உங்களால் அழிக்கப்படுவதற்காகவா நாங்கள் மக்களைப் பெற்று வளர்க்கிறோம்? — உங்களைப் பெற்ற பெண் குலத்தை நீங்கள் எப்படியெல்லாம் இந்தப் போரினால் துன்புறுத்துகிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?''

சட்டென்று தன் உடைவாளைக் கழற்றி வீசினான் சுந்தரபாண்டியன். வீரநரசிம்மனைப் பார்த்து, ''நான் போர் புரியாமலே என் தோல்வியை


ஏன் பெண்டெக்ஸ் ஸ்ட்ராப்புகள்
...ஏனென்றால், பல்லாண்டுகளாக நடத்திய ஆராய்ச்சியின் பலனாகத் தயாரிக்கப்பட்டது பெண்டெக்ஸ். நேர்த்தியான அதன் தோற்றம், தேர்ந்த வேலைப்பாட்டுடன் தரத்திலும் சிறந்து விளங்குகிறது. முற்போக்கான கலை நுணுக்கத் திறனுடன் பலமாதிரி டிஸைன்களில், தங்கமுலாம் பூசிய, ஸ்டெயின்லெஸ் ஸ்டீல், நைலான், பிளாஸ்டிக் மற்றும் தோல் ஸ்ட்ராப்கள் கிடைக்கின்றன
CREATIVE UNIT—14
வாங்குவதற்கு முன்பு 'Bentex' மார்க்கை பார்த்து வாங்குங்கள்

ஏற்றுக் கொள்கிறேன்'' என்றான் அமைதியோடு.

''என்ன!'' என்றார் வீரநரசிம்மன்.

''ஆம்; போர் வேண்டாம். சேந்தமங்கலம் சிறையில் இருக்கும் இராஜராஜனை உடனே விடுவிக்கும்படியாக நண்பர் கோப்பெருஞ்சிங்கருக்கு ஓலை அனுப்புகிறேன். சோழ நாட்டை இனி இராஜராஜனே ஆளட்டும்.''

''தோற்றவன் நான்; வென்றவர் நீங்கள்!'' என்று அன்போடு சுந்தர பாண்டியனைத் தழுவிக் கொண்டார் வீரநரசிம்மன்.

''விவேகத்தோடு நீங்கள் போரைப் போலவே அமைதியிலும் முந்திக் கொண்டு விட்டீர்கள். இனி நாம் நம்முடைய உரிமைகளை மதித்து உறவை வளர்த்துக் கொள்வோம். திருமூணைப்பாடிப் போரை நிறுத்தச் சொல்லி இப்போதே என் படைத் தலைவர்களுக்குக் கட்டளை அனுப்புகிறேன்!''

'' 'உரிமைகளை மதித்து உறவை வளர்ப்போம்' என்ற சொற்கள் எவ்வளவு ஆழம் நிறைந்த சொற்கள்! இந்தச் சொற்களின் பொருள் செயலானால் உலகில் போர் ஏது? அழிவு ஏது? துன்பமேது?'' என்று ஆனந்தக் கண்ணீர் பொங்கக் கூறினாள் கயல்விழி. பின்னர் வீரநரசிம்மனிடம், ''சக்கரவர்த்திகளே! உறவை வளர்ப்பதாகத் தாங்கள் கூறியது மெய்தானே?'' என்று கேட்டாள்.

''கட்டாயம் வளர்த்துக் கொள்வோம்!'' என்று கூறிச் சுந்தர பாண்டியனையும் பார்த்துச் சிரித்தார் சக்கரவர்த்தி; ''சோழ நாட்டுக்கும் எங்கள் நாட்டுக்கும் எப்படி உறவு தோன்றி வளர்ந்ததோ, அதே போல் இந்த உறவும் வளரட்டும்.''

''இளவரசியாரே! உங்கள் தந்தையார் கூறுவதைக் கேட்டீர்களா? இந்தக் கணத்திலேயே நீங்கள் எங்கள் பாண்டிய நாட்டுக்குச் சொந்தமாகி விட்டீர்கள். நாங்கள் இப்போதே உங்களை மதுரைக்கு அழைத்துப் போவதென்று முடிவு செய்து விட்டோம்.''

கலகலவென்று நகைத்த வீரநரசிம்மன், ''ஆம், அதுவே நல்லது; பகைவரான பாண்டியருக்குப் பரிந்துகொண்டு எப்போது பேசத் துணிந்தாளோ, அப்போதே இவள் கோசல நாட்டில் வாழும் உரிமையை இழந்துவிட்டாள்!'' என்றார்.

''எங்களது இளையபாண்டியரையே வென்று விட்டார் இவர். பாண்டிய நாட்டிடம் ஆழ்ந்த பற்றுதல் கொண்ட ஒருவரை நாங்கள் அரசியாகப் பெறுவது எங்கள் நாடு செய்த பாக்கியம்!'' என்றாள் கயல்விழி.

சுந்தரபாண்டியனைக் கேளாமலே, அவனுடைய திருமணப் பேச்சு அங்குமிருந்த உற்சாகத்துடன் நடைபெற்றது. அவனுக்கு அவர் பாமினியை மணம் செய்து கொடுக்க இசைந்த செய்தி காற்றைப் போல் அந்தக் களமெங்கும் பரவியது. வீரர்கள் ஆனந்த வெறி கொண்டு அங்கு கூத்தாடத் தொடங்கி விட்டார்கள்.

ஒருவரை ஒருவர் கொன்று குவிக்க வந்தவர்கள் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவிக் கொண்டார்கள். இரு நாட்டுக் கொடிகளையும் இணைத்துப் பிடித்து ஆடினார்கள். கன்னடத்து வீரன் சுந்தர பாண்டியனுக்கு வாழ்த்திசைத்தான். பாண்டிய வீரன் வீரநரசிம்மனுக்கு எக்காளமிட்டான்.

பல்வகை இசைக் கருவிகளும் அங்கே மங்கல இசையைப் பொழியத் தொடங்கின. காவேரிப் பெருக்கில் குருதி வெள்ளம் பாய்ந்தோடாமல் ஆனந்த வெள்ளம் பொங்கிச் சுழன்றது.

சுந்தரபாண்டியன் மட்டிலுமே நெடுமூச்செறிந்து நின்றான். சுந்தர பாண்டியனுக்கு அந்தக் காவேரி ஆற்றின் காட்சி, விதி வழியே காலங் காலமாகச் சுழன்றோடும் வாழ்க்கைப் பெருவெள்ளத்தின் காட்சியாகவே தோன்றியது.

இருபத்தேழாம் அத்தியாயம்

கூத்து முடிந்தது!

கோசல சாம்ராஜ்யத்தையே சுந்தர பாண்டியன் போரில் வென்று விட்டது போலவும் அந்த வெற்றிக்குப் பரிசாக அவனுக்கு இளவரசி பாமினி கிடைத்திருப்பது போலவும் பாண்டிய நாட்டுக் குடிமக்கள் பெருமை பேசிக் கொண்டார்கள். நாடே திருமண விழாக் கோலம் பூண்டு விட்டது. மதுரைமா நகரத்துக்குப் பல்வேறு நாட்டுச் சிற்றரசர்களும் வந்து குழுமியிருந்தார்கள்.

சோழன் இராஜராஜன் ஒருவன் மட்டிலுமே திருமணத்துக்கு வரவில்லை. வீரநரசிம்மன் அதற்காகத் தமக்குள்

வருந்தினர். அவருக்கு நெருங்கிய உற வினனல்லவா இராஜராஜன்?

நாடு முழுவதுமே எல்லையற்ற களிப் பில் ஆழ்ந்திருந்தபோது, அந்தக் களிப் புக்குக் காரணமாக இருந்த சுந்தர பாண்டியன் மட்டிலும் இரு வேறு உணர்ச்சிகளுக்கு இடையில் அகப் பட்டுத் தவித்தான். கயல்விழியும் விழுப்பரையரும் சேர்ந்து கொண்டு அவனுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்வ தாகவே அவனுக்குத் தோன்றியது. பெரிய பாண்டியரும் கோப்பெருந் தேவியாரும் கூட அந்தத் திருமணத்தை மிகப் பெரிய ராஜதந்திர வெற்றி என்று நம்பினார்கள். கயல்விழியை ஆலோ சனை கேட்டு ஒவ்வொரு காரியமும் அங்கு அரண்மனைக்குள் நடைபெற்றன.

சுந்தரபாண்டியனிடம் தனிமையில் நெடுநேரம் வாதாடிய குலசேகர பாண் டியர், கடைசியில் அவனிடம் கூறினார்:

''தியாகம் செய்ய முடியாத ஒன் றைத் தியாகம் செய்யச் சொல்கிறேன். இழக்கக் கூடாத ஒன்றை இழந்துவிடும் படி வேண்டுகிறேன்; உன்னுடைய துன் பம் எனக்குத் தெரியும். ஆனாலும் நம் முடைய குடிமக்களைப் போரின் அழிவி லிருந்து காக்கும் கடமை நமக்கு இருக் கிறது. அரசியல் வாழ்வில் நாம் சொந்த நலன்களைத் தியாகம் செய்யத்தான் வேண்டும்.''

சுந்தரபாண்டியனின் கண்கள் கலங் கின. ''நான் எவ்விதத் தியாகமும் செய்யவில்லை'' என்று அவன் தடு மாறினான்.

''திருமகளே பெண்ணுருக் கொண்டு கயல்விழியாக வந்திருப்பது போல் எனக்குத் தோன்றுகிறது; நம்முடைய குலதெய்வம், அந்தப் பெண்'' என்று நாத் தழுதழுக்கக் கூறினார் பாண்டியர்.

திருமணம் நிறைவேறியது. செந் தமிழ்ச் சுந்தரன் கன்னடத்துப் பைங் கிளி பாமினிக்கு மாலை சூட்டினான். நடுங்கிய அவன் கரங்களைப் பற்றிப் பாமினிக்கு மாலை சூட்ட வைத்தாள் திருமணப் பெண்ணின் தோழியான கயல்விழி. ஆனந்தக் கண்ணீர் துளிர் விட்டது அவள் விழிகளில்.

திருமணத்தை அடுத்து அன்று மாலை யிலேயே அரண்மனைக்குள் 'பாண்டித் திருமகள்' என்ற கூத்து நடைபெறுவ தாக இருந்தது. பாமினி தன் ஆவலைத் தன் தந்தையிடம் வெளியிட்டாள். அவரும் கோப்பெருஞ்சிங்கன் முதலிய அரசர்களும் சூழ்ந்து கொண்டு குல சேகர பாண்டியரிடம் தங்கள் விருப் பத்தைக் கூறினார்கள். சுந்தரபாண்டி யனைக் கூத்துடைத் தலைவனாகக் கண்டு களிக்க வேண்டுமென்ற ஆவல் அவர்களுக்கு. — மேலும், நாட்டில் வீரப் புரட்சியைத் தூண்டிவிட்டு, வெற்றியும் கொண்டு வந்த அந்தக் கூத்தைக் காண மற்ற அரசர்களும் துடித்தார்கள்.

பெரிய பாண்டியரும் கோப்பெருந் தேவியும் கூட அந்தக் கூத்தை நேரில் கண்டதில்லை. ஆகவே, அரண்மனைக் குள்ளாகவே அரங்கத்தில் அன்றிரவு கூத்து நடைபெறுவதாக இருந்தது.

பிற்பகலில் திருமணப் பெண்ணான பாமினிக்கு மலர் சூட்டிப் பொட் டிட்டு மைதீட்டி அழகு பார்க்கத் தொடங்கினாள் கயல்விழி. பேச்சோடு பேச்சாகச் சுந்தரபாண்டியனின் குணச் சிறப்புக்களையும் அவனை மகிழ்விக்கும் வழி வகைகளையும் அவளிடம் கூறிக் கொண்டு வந்தாள்.

''கயல்விழி! எல்லாவற்றையும் இன் றைக்கே கூறிவிட வேண்டாம். சிறிது சிறிதாகக் கேட்டுக் கொள்கிறேன். நான் உன்னை விட்டு இனி எப்போதும் பிரியப் போவதில்லை'' என்றாள் பாமினி.

''அவரை விட்டு நீங்கள் பிரியா திருந்தால் போதும்!'' என்று கூறி நகைத்தாள் கயல்விழி.

இரவில் நடைபெறவிருந்த கூத்தைப் பற்றிப் பேசினாள் பாமினி. ''கயல் விழி! கூத்தில் நடிப்பதற்கு அவர் இசைந்தும் கூட முதலில் நீ மறுத்து விட்டாயாமே! தலைவரும் தலைவியு மாக நீங்கள் நடிக்கும்போது, தலைவரின் கரம் பற்றிய நான் நேரில் இருந்து காணப் போகிறேன் என்ற நாணம் பிறந்து விட்டதா உனக்கு? இதோ பார்! உன்னிடம் நான் கொண்டிருக் கும் பாசத்தை எனக்கு எப்படி வெளி யிடுவதென்றே தெரியவில்லை. நீ வேறு நான் வேறு என்ற எண்ணமே நமக்குள் வேண்டாம்.''

''இளவரசி!''

''நான் உன் தங்கை. நீ என்னைப் பெயரிட்டு அழைத்தால் போதும். எனக்கும் ஓரளவு உன்னைப் பற்றித் தெரியும்.'' — பாமினி கயல்விழியின் கண்களில் பொங்கிய நீரைத் துடைத்து விட்டு, அவளை அன்போடு அணைத்துக் கொண்டாள்.

மதுரை அரண்மனைக்குப் பாமினி வந்த பிறகு அங்கு உள்ளவர்களின் வாயிலாக ஏதும் அவளுக்குத் தெரிந் திருக்கும் என்று கயல்விழி நினைத்தாள். பெரிய பாண்டியர், கோப்பெருந்தேவி

இதோ, டெல்கோவிலிருந்து இன்னுமொரு நட்சத்திரம்:

புதிய '1210' ஸீரீஸ் டிஎம்பி

205" வீல்பேஸ் பஸ் ச்சாஸிஸ்

உச்சபட்ச ஆசன இடவசதி: 51 பிரயாணிகளுக்கு

பிரயாணிகளுக்கு மிகச் சிறந்த சுகவசதியளிக்கிறது இப் புதிய டிஎம்பி பஸ் அடிச்சீலத் தளம்:

இப் புதிய வாகனங்களின் மூலமுதல் வடிவங்கள் முழுப் பரிசோதனைகளுக்கு உட்பட்டு எல்லாவகையிலும் தேறியவை.

புதிய டிஎம்பியின் சிறப்பியல்புகள்:

உபரி பார வேலைக்கான முகப்பும், பின்புற ஆக்ஸில் அஸெம்பிளிகளும்: கூடுதலான பளு சுமப்பதற்கென்றே வடிவானவை.

புதிய ஸ்டியரிங் அஸெம்பிளி: எல்லாவகையான சாலை அதிர்ச்சிகளின்றும் இதம்படக்காத்து வசதியுடன் ஓட்டத் துணைதரும் யூனிவர்ஸல் ஜாயின்ட் பொருத்தப் பெற்றது.

ஹைபாயிடு கியர்கள்: சக்கரப் பற்களின் சேர்மானத் தரத்தை மேம்படுத்தி நீடித்த ஆயுளையும் நிம்மதியான இயக்கத்தையும் வழங்க வல்லவை.

இதர நுணுக்கப் பண்புகளாவன:

புதியச் சாஸிஸ் அமைப்பு: இழுத்து நீட்டப் பண்பிலே சிறந்த, உயர் தனிச் சிறப்புள்ள ஸ்டீலாலானது:


புதிய முன்புற • பின்புற ஸ்பிரிங்குகள்: அதிக அகலமும், பருமனும், நீளமும் கொண்டவை. சுகப் பயணம் வாய்ப்பதற்கான துணை ஸ்பிரிங்குகளும், அதிர்ச்சி தாங்கும் உபரி விசைகளும் பொருத்தியவை.

ஓஎம். 312 டீசல் என்ஜின்: ஆயிரமாயிரம் வாடிக்கையாளர்கள் திருப்திபெறும் வகையிலே, பல்லாயிரம் மைல்கள் ஓட்டிப் பார்த்து, சோதனைப் பெற்றுத் தேறி, நிரூபணம் பெற்றது.

கொடுக்கும் ஒவ்வொரு ரூபாய்க்கும் உன்னதமான போக்குவரத்தின் பலனை வழங்கும் பொன்னான முதலீடே டிஎம்பி. தரத்தின் உருவமாக திருவப்பெற்றுள்ள டிஎம்பி மதிப்புக் குன்றாமல் பன்னெடுங்காலம் இயங்கவல்லது. சிக்கனம் நிறைந்த தொந்தரவற்ற சேவை, குறைவான பராமரிப்புச் செலவு —ஆகவேதான் போக்குவரத்து இயக்குவோரின் அரும் செல்வமாக விளங்கிவருகிறது டிஎம்பி.

TATA
மெர்ஸிடஸ்-பென்ஸ்

டாடா என்ஜினீயரிங் & லோகோமோட்டிவ் கோ. லிட்., விற்பனை அலுவலகம்: 148, மகாத்மா காந்தி ரோடு, பம்பாய்-1.



MBL T-4335 A -TAM

இன்னும் அங்கிருந்த அனைவருமே கயல்விழியை அந்த அரண்மனையில் பிறந்து வளர்ந்த இளவரசியாகத்தான் மதித்தார்களே தவிர, அவள் பணிப் பெண் என்ற நினைவே யாரிடமும் இல்லை. பாமினிக்கு முழுவதும் தெரிய வில்லை என்றாலும் ஓரளவு உணர்ந்து கொண்டாள்.

இரவு வந்தது. அரண்மனை மண்ட பத்துக்குள் கூட்டமும் கூடியது. பாண் டியர், வீரநரசிம்மன், கோப்பெருஞ்சிங் கன், மற்றச் சிற்றரசர்கள் ஒரு புறமும் அவர்களைச் சேர்ந்த அரண்மனைப் பெண்டிர் மறுபுறமும் வந்து அமர்ந் தார்கள். பாமினிக்கு ஒருபுறம் கோப் பெருந்தேவியும் மறுபுறம் அவள் அன்னையாரும் இருந்தனர். பல்வேறு நாடுகளின் படைத் தலைவர் கூட்ட மும் அங்கு குழுமியிருந்தது. போர்க் களங்களில் எதிர்த்து நின்று போராடிய தலைவர்களே அந்தக் கூத்தரங்கின் முன்பாக ஒருவரை யொருவர் தழுவிய வாறு நெருக்கமாக வீற்றிருந்தனர்.

கூத்தரங்கத்தில் தீவர்த்திகள் ஒளி உமிழ்ந்தன. பல்வகை இன்னிசைக் கருவிகளும் ஒன்றுகூடி ஒலி பொங்கச் செய்தன. கூத்துப் பாடலின் இன்குரல் கேட்டது.

பாண்டித் திருமகளாம் கயல்விழி அரங் கத்தில் தோன்றினாள்: செம்பொன்னின் நிறம், செங்கமல முகம், காதளவோடிய கயல், அன்ன நடை, மின்னலிடை; தோகை விரித்தாடும் கலாப மயிலென அவள் அரங்கில் ஆடினாள்.

கூடியிருந்த ஆண் பெண் அனைவ ரது உள்ளமும் அவள் உள்ளத்தோடு ஒன்றித் தோகை விரித்தது.

தலைவன் தோன்றினான். தலைவியின் கண்ணழகு, சொல்லழகு, குரல் அழகு, உடல் அழகு, நடையழகு, உள்ளத்து அழகு இவ்வளவையும் உருக்கத்தோடு பாடினான். அகத் துறைக்கென்றே தனியான இலக்கியம் தந்து அதனை இலக்கணத்தால் வேலி யிட்டுக் காத்த தீஞ்சுவைத் தமிழமுதம் அவன் உள்ளத்திலிருந்து ஊற்றாகப் பெருக்கெடுத்தது.

அவனுடைய இதயத்தின் தாபம் கேட்டுக் கூத்துடைத் தலைவி மட்டுமா சிந்தை தடுமாறினாள்? அங்கிருந்த அனைவருமே உருகினார்கள். பாமினி யின் உள்ளம் அப்போதே பறந்து சென்று அவன் காலடியில் விழத் துடித்தது.

நடிப்பா இது? நடிப்புத்தானா? அரங் கத்துள்ளிருந்த விழுப்பரையர் தமது விழிகளைத் துடைத்துக் கொண்டார்.

புத்தாண்டு உதயம்!

தமிழழகன்

கட்டவிழும்; - மலர்
   மொட்ட விழும்: - அந்தப்
பட்டிதழ் தோறும்
   பலவகை ஓவியம்; - அவை
கண்ட பரும்; - சுவை
   வண்ட யரும்; - எல்லாம்
செண்டிளம் சித்திரை
   செய்விரற் காவியம்;

நெஞ்செ ழும்பும்; - நுரைப்
   பஞ்செ ழும்பும்; - திரை
கொஞ்ச எழும்பூங்
   குளிர்புன லோடையும்! - பொன்
நெய்து விடும்; - காதல்
   எய்தி விடும்; - பதில்
கைதிக் கரைகளோ
   கண் செயும் ஜாடையும்!

புள்ளி யிடும்; - வைரம்
   துள்ளி விடும்; - அந்த
வெள்ளிப் பனி மிசை
   விண்ணும் உருண்டிடும்! - இதில்
புகுந்தி ழையும்; - சுடர்
   வகிர்ந்தி ழையும்; - மனம்
நெகிழ்ந்ததைக் காண
   நினைவும் மருண்டிடும்!

அந்தி வரும்; - மையல்
   சிந்தி வரும்; - இருட்
பொந்தில் இளநிலா
   பூச்சரம் கோத்திடும்! - ஆம்;
அழகு மயம் - நாம்
   பழகும் வயம் - அன்பில்
முழுகவே இன்றொரு
   மோகனம் பூத்திடும்!

கூத்துக் கதை வளர்ந்தது: தலைவ னும் தலைவியும் ஒருவர் உள்ளத்தில் ஒருவர் புகுந்தார்கள். கடிமணம் புரிந்து கொண்டு களிப்போடு வாழ்வ தற்கு முடிவு செய்தார்கள். திருமணத் துக்குப் பிறகு அவர்கள் நடத்த விரும் பிய இல்லற வாழ்வு பற்றிய இன்பக் கனவுகள் அரங்கத்தில் மலர்ந்தன.

எத்தனை எத்தனை இன்பக் கனவுகள் அவர்களுக்கு! தலைவி அவனுக்கோர் ஆண் மகனைப் பெற்றுத் தருவாளாம்; குழந்தைக்குப் பாலூட்டித் தாலாட் டிச் சீராட்டுவாளாம்! தலைவனோ அந் தப் புதல்வனைத் தலைசிறந்த சான் றாண்மை வீரனாக வளர்ப்பானாம்! வீட் டுக்கும் நாட்டுக்கும் உலகுக்கும் உயர்வு

தரும் வகையில் மக்களை வளர்ப்பதே பெற்றோரின் பெரும் பணியாம்! தலைவனும் தலைவியும் மாறி மாறிப் பாடினார்கள்; ஆனந்த வெறி கொண்டு ஆடினார்கள்.

கூட்டத்திலிருந்த பெண்கள் பாமினியைப் பரிகசிக்கத் தொடங்கி விட்டனர். விரைவில் பாண்டிய நாட்டுக்கு அப்படி ஓர் இளவரசனைப் பெற்றுத் தர வேண்டும் என்று கேலி பேசினர். அவள் பெருமை தாங்காது நாணித் தலை கவிழ்ந்தாள்.

வீரநரசிம்மன் பாண்டியனின் காதருகில், ''திருமண விழாவுக்கு இது மிகவும் ஏற்ற கூத்துத்தான்! இத்தகைய கூத்துக்களை இனி திருமண விழாக்களில் நடத்த வேண்டியதுதான்!'' என்று பூரிப்போடு கூறினார்.

ஆயிற்று. திடீரென்று கூத்தின் திசை திரும்பியது. பயங்கரமாகப் போர் முரசுகள் ஒலிக்கத் தொடங்கின. கட்டிளம் காளையரைப் போருக்கு அழைக்கும் பறையோசை கேட்டது.

திருமணம் தடைப்பட்டது. போருக்குச் செல்லப் பிரியாவிடை கேட்டு நின்றான் தலைவன். 'வெற்றியுடன் திரும்புவேன், இல்லையேல் வீரமரணம் எய்துவேன்' என்கிறான். 'காலமெல்லாம் காத்திருப்பேன், கன்னியாகவே தவம் இருப்பேன்' என்கிறாள் தலைவி.

போரில் அவன் வீர மரணம் எய்தினாலும், அவனை மறுபிறப்பில் தலைவனாக அடைய வேண்டும் என்பதற்காக, காலமெல்லாம் கன்னித் தவம் புரிந்து நோன்பு நூற்பாளாம் அவள்!

அத்தகைய அறக் கற்புத் தெய்வத்துக்கே சோதனை வந்து விட்டது. போர் வெறி பகை நாட்டுக் கயவன் ஒருவனின் உருவத்தில் தலைவி தனித்திருக்கும்போது வீட்டுக்குள் நுழைந்தது.

பதறித் துடித்தாள் பேதை. தப்பியோடப் பார்த்தாள். தற்கொலை செய்து கொள்ள முயன்றாள்; பொங்கிச் சீறினாள்; விம்மிக் கதறினாள்; கெஞ்சினாள்; மன்றாடினாள். 'தாய்க்குப் பிறக்க வில்லையா? தங்கை இல்லையா? தலைவி இல்லையா வீட்டில்? அவர்களுக்கும் இந்தக் கதி நேராதா?' என்று கேட்டுப் புலம்பினாள்.

தனது உள்ளத்துக் கனலைக் காக்கச் சொல்லி எல்லாத் தெய்வங்களிடமும் முறையிட்டாள் தலைவி. ஆலவாய் அண்ணல், அங்கயற்கண்ணி, பத்தினியாம் கண்ணகி, பத்திரகாளியாம் கொற்றவை, இன்னும் எல்லாத் தெய்வங்களையுமே கூவினாள்.

பயனில்லை. மயங்கி வீழ்ந்தாள். அந்தக் காட்சியின் திரையும் விழ்ந்தது.

கூத்தைக் கண்ட அரசர்கள் அனைவருமே அப்போது கண்ணீர் வடித்தார்கள். படைத் தலைவர்கள் எல்லோருமே, ''இனி போர் வேண்டாம்! போர் வேண்டாம்!'' என்று புலம்பினார்கள். வீரச் செருக்குப் பேசித் தன் இனத்தைத் தானே அழித்துக் கொண்ட தமிழ்க் குலத்து வேந்தர்களும், அயலாரை அழிக்க முயன்று தாமும் அழிந்த மற்ற அரசர்களும் போர் வெறிச் செயலின் பயங்கரமான விளைவொன்றைத் தமது கண்களால் கண்டார்கள்.

பெண்களில் பலர் தேம்பியழும் குரல் எழுந்தது.

அரங்கத்தின் திரை விலக, அங்கே போருக்குச் சென்றிருந்த தலைவன் விழுப்புண்களோடு திரும்பி வந்தான். தாபத் துடிப்போடு, பிரிவின் ஏக்கம் தந்த வெறியோடு, தலைவியின் கரத்தைப் பற்றுவதற்கு அவன் விரைந்தோடி வந்தான்.

தலைவி கொற்றவைக் கொடுந்தேவியாக மாறி அவனிடம் சீறினாள்: ''தீண்டாதீர்கள், என்னை! உடலால் மட்டுமல்ல, உள்ளத்தாலும் தீண்டாதீர்கள்! நான் நிறையழிந்தவள்; பழி சுமந்தவள்; பாவியிலும் பாவி!''


கயல்விழியின் அன்றையத் தோற்றத்தில் என்றுமே அவன் கண்டிராத ஒரு பயங்கரமான பேரொளியைக் கண்டு நடுநடுங்கினான் சுந்தரபாண்டியன். கூத்துப் பாடலை மறந்து விட்டவன் போல் மீண்டும் மீண்டும் அவள் அதையே கூறினாள்.

கண்ணீர் அருவி பொங்கியது; இதழ்கள் துடித்தன; மார்பகம் விம்மியது; அனல் கொழுந்து வீசியது அவள் நெடுமூச்சில். தடாரென்று அவன் காலடியில் வீழ்ந்து விட்டாள்.

வீழ்ந்தவளைக் கவனியாது அவன் தொடர்ந்து கதறினான்: ''பாண்டித் திருமகளே! நீ நிறையழிந்தவளல்ல; நீ பழி சுமந்தவள் அல்ல; பத்தரை மாற்றுப் பசும்பொன் நீ! பத்தினித் தெய்வமாம் கண்ணகி நீ! அங்கயற் கண்ணியின் அருமைச் செல்வி நீ! மறு இல்லாக் கற்பினளே, ஆண் குலத்தின் சான்றாண்மையற்ற வெறிச் செயலின் பழி பாவத்தை நீ சுமந்து கொண்டாய்!''

சுந்தரபாண்டியன் கீழே குனிந்தவுடன் திடுக்கிட்டான். கயல்விழியின் கண்கள் அவன் முகத்தில் நிலைக்குத்தி நின்றன. அவள்....? அவள்?

18 சிறந்த மூலிகைகள் கலந்து முதல்முதலாகதயாரிக்கப்பட்ட



ஆயுர்வேதிக்

பேஸ்ட்டும், பௌடரும்

உலகத்தில் எல்லா டூத்பேஸ்ட்டும், பௌடரும் பற்களை சுத்தம் செய்கிறது. ஆனால், ஈறுகளை பலப்படுத்த என்னென்ன கலவைகள் அதில் சேர்க்கப்பட்டுள்ளன என்று யோசித்துப் பாருங்கள். முதல் முதலாக ஆயுர்வேதிக் 'விக்கோ வஜ்ரடன்தி' (பேஸ்ட்டும், பௌடரும்) 18 சிறந்த மூலிகைகளினால் தயாரிக்கப்பட்டது. ஈறுகளை நன்றாக இறுகச்செய்து பற்களை, மிகவும் பலப்படுத்துகின்றன. ஒரு முறை உபயோகித்து திருப்தியடையுங்கள்.

விக்கோ வஜ்ரடன்தி

பேஸ்ட்டும், பௌடரும்



VICCO LABORATORIES DADAR T.T., BOMBAY 14.

மெஸர்ஸ் ஆர். எல். கௌடர் அண்டு கம்பெனி, சென்னை - 1
மெஸர்ஸ் கே. எஸ். கௌடர் அண்டு கம்பெனி, மெங்களூர் - 9
மெஸர்ஸ் என். தேசாய் கவுண்டர் அண்டு கம்பெனி, கோயமுத்தூர் - 1

"இளவரசே! தாங்கள் இறுதியாகப் பேசியது அவ்வளவும் மெய்தானே? நான் நிறையழிந்தவள் அல்லவே?" என்று மெல்லக் கேட்டாள். பிறகு, "விழுப்பரையரிடம் எல்லாவற்றையும் கூறியிருக்கிறேன்: அவர்கள் சொல்லுவார்கள்!" என்று கூறிக் கொண்டே, தன் விழிகளை இமைக்காமல் அவனை நோக்கிப் புன்னகை புரிந்தாள்.

"கயல்விழி!" என்று அந்த அரண்மனையே கிடுகிடுக்க அலறினான் சுந்தர பாண்டியன்: அவளுடைய புன்னகை பூத்த விழிகளில் புத்தொளி பொங்கி அவனது இதயத்துக்குள்ளே பரவியது. அவர்களது கடைசிக்கூத்தும் முடிந்தது.

இருபத்தெட்டாம் அத்தியாயம்

மலர்மிசை ஏகினாள்

வளர்பிறை நிலவும் வானத் தடாகத்து மீன்களும் சிந்திய ஒளியில் அங்கயற்கண்ணி அம்மையின் கோவில் கோபுரங்கள் கண்ணீரால் வரையப் பெற்ற திரைச்சீலை ஓவியங்களைப் போல் காட்சியளித்தன. அரண்மனை மேல் மாடத்துத் திறந்த வெளியில் வைகைக் காற்றுக்கூட வெம்மை கலந்தாற் போல் வீசியது. — கயல்விழியின் மேல் விழுந்து கதறிய சுந்தர பாண்டியனைப் பற்றி இழுத்துக் கொண்டு அங்கு வந்து சேர்ந்தார் விழுப்பரையர்.

கூத்தரங்கத்தில் வீழ்ந்த கயல்விழியைச் சூழ்ந்து கொண்டு அரண்மனைப் பெண்டிரும் அரசர்களும் படைத்தலைவர்களும் ஒன்றாகக் கண்ணீர் வடித்தனர். பாமினி தன் தோழியின் முகத்தோடு முகம் வைத்துக் கொண்டு கதறினாள். கோப்பெருந்தேவியார் அந்த அதிர்ச்சியிலிருந்து இன்னும் மீளவில்லை;

'போர் வேண்டாம்; இனி போரே வேண்டாம்!' என்று கதறத் தோன்றியது அரசர்களுக்கு. 'கொலை, கொள்ளை தீயிடுதல், பெண்டிரை அழித்தல் இவ்வளவும் மனிதர்கள் செய்யக் கூடிய செயல்கள்தானா?' என்ற கேள்வி ஒவ்வொருவர் உள்ளத்திலும் அப்போது எழுந்தது.

"போரில் இதுவரை நாம் உணராத ஒரு கொடுமையை இன்று நமக்கு உணர்த்திவிட்டுப் போய் விட்டாள் கயல்விழி. இந்தக் கொடுமை நம் வீட்டுப் பெண்டிரான தாய், தங்கை, தலைவியாருக்கும் ஏற்படலாம். இனியாவது நமக்குள் போரின்றி ஒற்றுமையோடு வாழ்வோம். இந்தக் கணத்திலேயே இப்படி ஒரு முடிவுசெய்துகொள்வோம்" என்று நாத் தழுதழுக்கக் கூறினார் வீர நரசிம்மன். அனைவருமே அதைப் புனிதமான முடிவாக ஏற்றுக் கொண்டனர்.

அரசர்கள் செய்துகொண்ட அந்த முடிவைத் தொலைவில் இருந்து சுந்தர பாண்டியனும் கவனித்தான். ஆனால் அவனுடைய மனம் அப்போது எதிலும் ஒட்டவில்லை.

விழுப்பரையர் அவனைத் தேற்றத் தொடங்கினார்:

"இளவரசே! கயல்விழி தெய்வமாகிவிட்டாள். அந்தக் காட்சியைத் தான் இப்போது இந்த அரசர்களின் மனமாற்றத்தில் காணுகிறீர்கள்."

"எனக்குத் தெரியாத ஏதோ ஒன்றை அவள் தங்களிடம் கூறியிருக்கிறாள் என்று தெரிகிறது? நான் அதைத் தெரிந்து கொள்ளலாமென்றால்..."

விழுப்பரையர் அவனருகில் நெருங்கி அவன் கரங்கள் இரண்டையும் பற்றிக் கொண்டார். சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தார். பிறகு மெல்லக் கூறினார்.

"கயல்விழிக்குள்ளே இரண்டு பெண்மணிகள் இருப்பதாகத் தாங்கள் கூட அவளிடம் கோபத்தோடு கூறுவதுண்டாம். அந்தக் கூற்று மெய்தான். மகேந்திர மங்கலத்தில் ஏற்பட்ட போர் நிறுத்தத்துக்குப் பிறகு அவளே என்னிடம் ஒப்புக் கொண்டாள்."

சுந்தரபாண்டியனின் நெற்றி சுருங்கியது. நெஞ்சுத் துடிப்பு இரு மடங்காகியது.

"இந்தக் கூத்தை எழுதி முடித்து அவளை இதில் நடிக்க வேண்டுமென்று நீங்கள் கொடுங்குன்றத்தில் கேட்ட போது, முதலில் மறுத்துவிட்டுப் பிறகு தங்கள் மனம் நோகக் கூடாது என்பதற்காக இசைந்தாளாம். அடுத்தாற் போல் திருவிழாவின்போது அரங்கேற்றம் நடந்தபோதும், கூத்தின் முடிவில் வேண்டுமென்றே தீக்குளிக்க முயன்றாளாம். பின்னர் தாங்கள்தாம் இளவரசர் என்று தெரிந்தவுடன், தங்கள் கண்களில் படாமலே மறைந்து வாழத் துடித்தாளாம். — இப்படி ஒரு

சித்திரையே!

நெற்குப்பை இராமசுப்பிரமணியன்

வண்ணச் சோலை பூத்திடவும்
　　வனங்கள் எல்லாம் சேர்த்திடவும்
இன்பம் மிக்க சித்திரையே
　　எழில்கள் கொஞ்ச வாவாவா!

குளங்கள் நீரால் நிறைந்திடவும்
　　குளிர்ச்சி யான பயிர்களினால்
நிலங்கள் நன்கு விளைந்திடவும்
　　நினைந்தோம் உன்னை வாவாவா!

திங்க ளான பன்னிரண்டில்
　　திகழ்வாய் முதலில் சித்திரையே!
மங்க ளங்கள் தங்கிடவே
　　வருகை தந்தோம் வாவாவா!

பறவை இனங்கள் வாழ்வது போல்
　　பாங்காய் மக்கள் ஒற்றுமையின்
உறவில் நீடு வாழ்ந்திடவும்
　　உன்னை நினைந்தோம் வாவாவா!

இளநீர் போல மனத்தெளிவும்
　　இணைந்த வாழ்வில் தினமுயர
வளமாம் தமிழில்உ ளைப்பாடி
　　வாழ்த்தி நின்றோம் வாவாவா!

ஆண்டு தோறும் வரவேற்கும்
　　அழகின் உருவச் சித்திரையே
வேண்டும் நலங்கள் கைகூட
　　மிக நீ விரைவாய் வாவாவா!

கயல்விழியும், தங்கள் மேல் வைத்த பேரன்பால், இந்த முயற்சிகளில் படுதோல்வியுற்ற மற்றொரு கயல்விழியும் அவனுக்குள்ளே இருந்திருக்கிறார்கள்.''

சுந்தரபாண்டியனுக்கு அவன் கயல்விழியோடு நடத்திய எல்லாப் போராட்டங்களுமே நினைவுக்கு வந்தன. திருக்கொடுங்குன்றத்தில் தொடங்கிய போராட்டம், பொன்னமராவதியில் முற்றிக் கிளைத்ததும், மகேந்திரமங்கலத்துப் பாசறைக்குள் அது பயங்கரமான புயலாக வீசியதும், அதை அடுத்த நிகழ்ச்சிகளும் அவன் முன்னே சுழன்றன.

மௌனமாக விழுப்பரையரைப் பார்த்தான் சுந்தரபாண்டியன். அவர் தொடர்ந்து கூறினார்:

''பாண்டித் திருமகள் என்ற கூத்தைத் தாங்கள் புனைந்தீர்கள் அல்லவா? எந்த நிகழ்ச்சியைக் கொண்டு அதைப் புனைந்தீர்களோ, எந்தத் துயரம் போரின்போது கூத்துடைத் தலைவிக்கு ஏற்படுகிறதோ, அதேபோல்...''

''அதே போல்....?'' நடுக்கமுற்றது இளையபாண்டியனின் குரல்.

விழுப்பரையருக்கும் தொண்டையை அடைத்தது. ''குலோத்துங்கர் மதுரையின்மீது படையெடுத்தபோது, அவர் குமாரன் இராஜராஜனால் நம் கயல்விழிக்கும் துன்பம் நேர்ந்திருக்கும் என்று தோன்றுகிறது. அதனாலேயே அவள் வைகை வெள்ளத்தில் வீழ்ந்து மற்றப் பெண்டிரைப் போலவே உயிர் துறக்க ஓடி வந்திருக்கிறாள். அப்போது தான் தாங்களும் விழுப்புண்ணோடு மருத்துவர் குடிலை விட்டு வெளியே சென்றீர்கள்....''

''ஐயோ, கயல்விழி!'' என்று கூவிக்கொண்டே தன் கரங்களில் முகம் புதைத்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதான் சுந்தர பாண்டியன். அவனது மயிர்க்கால்கள்தோறும் வெஞ்சினத் தீ கொழுந்து விட்டெரிந்தது. உடைவாளை உருவிச் சட்டென்று மேலே உயர்த்தினான்.

''இப்போதே நான் கங்காபுரிக்குப் புறப்பட வேண்டும். என் கயல்விழிக்குத் தீங்கிழைத்த அந்த ராஜராஜனைக் கணுக் கணுவாய்ச் சிதைக்க வேண்டும். இந்தப் பெண் தெய்வத்தின் பெயரைச் சொல்லியே அவனைப் பழி தீர்க்கவேண்டும்! — போர், போர், போர்!'' என்று வெறி கொண்டு கத்தினான் அவன்.

விழுப்பரையர் அவனைக் கட்டிப் பிடித்தார். அவனுடைய வாயைப் பொத்தினார். அவனோடு அழுது புலம்பி அவன் ஆத்திரத்தை அடக்க முயன்றார்.

''இளவரசே! கயல்விழியே கொற்றவையாக மாறித் தனக்கு நேர்ந்த பழியை மிகப் பயங்கரமான முறையில் தீர்த்துக் கொண்டாள். தங்களிடம் சக்திக் கனலாகச் சுடர் விட்டு இராஜராஜனுடைய சாம்ராஜ்யத்தைச் சரித்து வீழ்த்தி விட்டாள். மாபெரும் சோழ சாம்ராஜ்யம் இப்போது தன் பொலிவிழந்து சிற்றரசாகி விட்டது. அது போதாதென்று அவனுடைய மனைவியையே அவனுக்கு முன்னால் தனக்குக் கவரி வீச வைத்திருக்கிறாள். மேலும் இராஜராஜன் கோப்பெருஞ்சிங்கனிடம் சிறைப்பட்டுத் தன் செருக்கனைத்தும் இப்போது இழந்து நிற்கிறான். இனிமேலும் அவனை ஒரு பொருட்டாக மதித்துப் போர் நடத்த வேண்டுமா என்பதைத் தயைசெய்து சிந்தித்துப் பாருங்கள்.''

ஸ்டாண்டர்ட் ஹெரால்ட் -

கார் சவாரியில்
ஒரு புது அனுபவம்



கீழ்க்கண்ட போற்றத்தக்க வசதிகளுடன் கூடியது

- 25 அடி வட்டத்திற்குள் திருப்ப முடியும்
- ஒவ்வொரு சக்கரத்திற்கும் தனித்தனி சஸ்பென்ஷன் (Suspension) இணைப்பு இருக்கிறது (சுலபமாக அபாயமின்றி திருப்பலாம். ரஸ்தாவில் நல்ல பிடிப்பு உண்டு. முன் சக்கரத்திற்கு ஏற்படும் அதிர்ச்சி முன் சக்கரத்தின் ஸ்பிரிங்கிலேயே தாங்கிக்கொள்ளப்படுவதால், வண்டியின் பின்புறம் அதிர்ச்சியோ, ஆட்டமோ அடையாது.)
- ஒரு கட்டிறுலான சாஸிஸ் (Chassis) (மிக உறுதியான கார் அமைப்பு)
- 93% வெளிப்பார்வை வசதி.

STANDARD herald

ஸ்டாண்டர்ட் ஹெரால்ட்

உறுதியான, எழில் மிகுந்த கார்

STANDARD


தயாரிப்பாளர்கள் :

ஸ்டாண்டர்ட் மோட்டார் ப்ராடக்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட்
சென்னை-2

வினியோகஸ்தர்கள் :

யூனியன் கம்பெனி (மோட்டார்ஸ்) பிரைவேட் லிமிடெட்
சென்னை — உதகை
யுனிகான் (பெங்களூர்) பிரைவேட் லிமிடெட், பெங்களூர்

B·I



S. S. ரஜுலா

சென்னையிலிருந்து

1965 ஏப்ரல் 28 | **1965 மே 22**

சென்னையிலிருந்து பினாங்கு மற்றும் சிங்கப்பூருக்கு பிரயாணம் செய்ய விரும்பும் பிரயாணிகள் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசதாரருக்கு விண்ணப்பிக்கவும்.

மெஸர்ஸ் பின்னி & கோ., லிமிடெட்
7, அரமனைக்காரத் தெரு, சென்னை 1

அல்லது கீழ்க்கண்ட கம்பெனியின் அங்கீகாரம் பெற்ற பாஸேஜ் புரோக்கர்களுக்கு விண்ணப்பிக்கவும்

C. M. குட்டி
புரொப்ரைட்டர்: குட்டி டிராவல் சர்வீஸ்
38, அங்கப்ப நாயக்கன் தெரு
சென்னை - 1

மெஸர்ஸ் கோரனா டிராவல்ஸ்
மாஸ்காட் ஹோட்டல்
திருவனந்தபுரம்

நாகப்பட்டினத்திலிருந்து

1965 ஏப்ரல் 29 | **1965 மே 23**

நாகப்பட்டினத்திலிருந்து பினாங்கு மற்றும் சிங்கப்பூருக்குப் பிரயாணம் செய்ய விரும்பும் பிரயாணிகள் தங்களது பிரயாண டிக்கட்டுகளை கீழ்க்கண்ட விலாசத்தில் நேரிடையாகப் பெற்றுக் கொள்ளலாம்

மெஸர்ஸ். மதுரா கம்பெனி பிரைவேட் லிமிடெட்
முதல் லேன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

பினாங்கு, போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு நேரடியாக ஏற்றிச் செல்லவும், சிங்கப்பூரில் கப்பல் மாற்றி ஆஸ்திரேலியா நியூஜிலாந்து துறைமுகங்களுக்கு அனுப்பவும் சரக்குகள் சென்னையிலிருந்தும் நாகப்பட்டினத்திலிருந்தும் ஏற்றுக் கொள்ளப்படும்.

பிரயாணிகள் மற்றும் சாமான்கள் ஏற்றும் விவரங்களுக்குத் தயவுசெய்து எழுதவும்:

பின்னி & கம்பெனி லிமிடெட்
7, அரமனைக்காரத் தெரு, சென்னை - 1

மதுரா கம்பெனி பிரைவேட் லிட்.
முதல் லேன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

ஏஜெண்டுகள்: பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்

''நான் நடத்தும் கடைசிப் போராக இது இருக்கட்டும். அவனைப் போன்ற வெறி கொண்ட கோழைகளை இந்த மண்ணில் நடமாட விடுவதே தவறு. அவனுடைய உயிரையே நான் கயல் விழிக்கு என் காணிக்கையாக்குகிறேன்!''

சுந்தரபாண்டியனின் குமுறலைத் தணிப்பதற்கு எவ்வளவோ முயற்சிகள் செய்தார் விழுப்பரையர். அவனுடைய துயரம் அவரையும் ஒன்றாகச் சேர்த்து உருக்கி விட்டது. நெடுநேரம் அவனிடம் மன்றாடினார்.

''கயல்விழிக்கு மெய்யாகவே தாங்கள் காணிக்கை செலுத்த விரும்பினால், அதைத் தங்களது போர்க் குணத்தை அடக்கி ஆள்வதன் வாயிலாகவே செலுத்த முடியும். வன்முறைப் போருக்கு ஒரு முடிவே இருக்காது. தமிழ் இனம் ஒற்றுமை இழந்து காலம் காலமாகவே கொலை, கொள்ளை, தீ இவற்றால் தன்னைத் தானே அழித்துக் கொண்டு வந்திருக்கிறது. கயல்விழியின் பெயரால் தங்களை வேண்டிக் கொள்கிறேன். விலங்குணர்ச்சிப் போராட்டம் இனி நமக்கு வேண்டாம். சிந்தனை சக்தியே எல்லா ஆயுதங்களையும் விட வலிமையானது. நாம் இனி அதைக் கொண்டு போராடுவோம். அதனால் வெல்ல வேண்டியவர்களை வெல்லுவோம். உறவு கொள்ளவேண்டியவர்களை உறவு கொள்ளுவோம்.''

''பரணி பாட வேண்டிய புலவர் அவர்களே இப்படிக் கூறுகிறீர்களே!'' என்று துடித்தான் இளைய பாண்டியன்.

''கயல்விழியே என்னிடம் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறாள். வீரரான தங்களிடமுள்ள போர்க் குணமாகிய ஆயிரம் யானைகளைத் தாங்கள் என்றைக்குச் சிந்தனைக் கூர்வேலால் சிதைக்கிறீர்களோ, அன்றைக்கே தங்கள் மீது பரணி பாடச் சொல்லியிருக்கிறாள். தற்காப்புக்காக மட்டிலும் போரிட்டால் போதும். பகைவரும் அஞ்சக்கூடிய ஆற்றலை வளர்க்க வேண்டுமே தவிர, அதனால் அழிவுப் போர் நடத்தக் கூடாது.''

சுந்தரபாண்டியன் திடுக்கிட்டான். குடிமக்களின் தாயாக வளர்ந்துவிட்டவளின் வேண்டுகோள் அது. என்றாலும் அவனுக்கு இராஜராஜன் மீது வெஞ்சினம் தீரவில்லை.

''இளவரசே! இதைமட்டும் சிந்தித்துப் பாருங்கள்: மற்ற அரசர்கள் யாவருமே ஒற்றுமையோடு வாழ்வதென ஒரே மனத்தோடு இப்போது உறுதி பூண்டிருக்கிறார்கள். இந்தச் சமயத்தில் போர் தொடுத்தால் அவர்களிடம் தாங்கள் காரணம் கூற வேண்டாமா? உத்தமியான கயல்விழிக்கு அந்தப் பதர் தீங்கிழைத்து விட்டான் என்றுதானே கூறவேண்டும்? தீயாலும் எரிக்க முடியாத அந்தப் பெண் தெய்வத்தின் பண்பை அறியாதவர்கள் என்ன நினைப்பார்கள்?''

இதைக் கேட்டவுடன் உடைவாளை ஒருபுறம் வீசினான் சுந்தர பாண்டியன். ''என்னை மன்னித்துவிடுங்கள்'' என்றான்.

''கயல்விழி தங்களுக்காக மற்றொரு செய்தியும் என்னிடம் கூறியிருக்கிறாள். தங்களை விட்டுக் கணப் பொழுதும் அவளால் பிரிந்திருக்க முடியாதாம். கோசல நாட்டு இளவரசியின் உடல், உள்ளம், ஆவி அனைத்திலும் கலந்து தங்களை மகிழ்விக்கப் போவதாக முன்பே என்னிடம் கூறினாள். அதன் பொருளை இப்போதுதான் நான் உணர்ந்தேன். — இளவரசே! இனி தாங்கள் கயல்விழியைக் கோசல நாட்டு இளவரசியாரின் உருவத்தில் காணப் பழகிக் கொள்ள வேண்டும்.''

நேரம் சென்றது. அழுத கண்ணீரும் கையில் கயல்விழிக்கு ஒரு மலர் மாலையுமாக வந்து அவனருகில் நின்றாள் பாமினி. சுந்தரபாண்டியன் மௌனமாக அந்த மாலையைச் சுமந்து கயல்விழியை நாடிச் சென்றான்.

''என் தெய்வமே! தீயாலும் தீயவர்களாலும் அழிக்க முடியாத திருமகளே! என்னையும் நாட்டையும் வாழ வைக்க வந்த அருஞ் செல்வமே! நீ என்றென்றும் எங்களுடன் வாழ்ந்து உன் குடிமக்களுக்கு வழி காட்ட வேண்டும்!'' என்று நாத் தழுதழுக்கக் கூறிக் கொண்டே அவளுக்கு மாலை சூட்டினான்.

புதுமண மங்கையின் முகத்தில் படரும் நாணமும் புன்னகையும் அப்போது கயல்விழியின் முகத்தில் படர்வது போல் சுந்தர பாண்டியனுக்குத் தோன்றியது.

பொழுதும் புலர்ந்தது. தாமரை மலர் போன்ற தெருக்களின் அமைப்பைக் கொண்ட மதுரைமாநகரத்துக் கோயிலின் கிழக்குக் கோபுரம் விண்ணை நோக்கி நெடிதுயர்ந்து நின்றது.





அ'ன்னிக்கே உங்கப்பன் சொன்னாரு. அவங்கவங்களுக்குப் பொசிப்புள்ளதுதான் நக்கும். சும்மா மனசுலே கோட்டை கட்டலாம்; ஆனால் அதுலே இருந்து வாழ்ந்துட முடியாது. நமக்கு எதுக்கு அதெல்லாம்னாரு. அப்போ அது உங்க ஆத்தா காதுலேயும், என் காதுலேயும் ஏறல்லே. கோட்டையைப் பிடிச்சு அதுலே வாழ்ந்துடலாம் வா அக்கான்னு கூப்பிட்டேன். அவ உன்னைக் கூட்டிக்கிட்டுப் புறப்பட்டா. அவரு சொன்னதுதான் பலிச்சுப் போச்சு. இத்தினி வருசத்துக்குப் பிறகு நீ இப்போ போயி என்ன செஞ்சுடப் போறே முத்து ?'' என்று கேட்டார் பொன்னையா.

முத்துலட்சுமி படபடக்கும் குரலில், ''என்னாலே என்ன செய்ய முடியுமோ என்னமோ, எனக்குத் தெரியாது. அவருகிட்ட 'உங்க அப்பா என் மடியிலே கட்டிவிட்ட ஒரு லட்ச ரூபாயே எனக்கு எல்லாம் ஆயிடுமோ? நானும் மனுஷப் பொறப்புத்தானேங்கறது உங்க மனசுலே உறைக்கவே யில்லையான்னு கேப்பேன். நல்ல பெண் பிறவி எடுத்துட்டுப் பதினஞ்சு வருஷமா நான் இப்படிச் சருகாக் காயறதுக்கு அப்படி என்ன கொலைக் குத்தம் செய்துட்டேன்னு கேட்பேன். உங்களைக் கலியாணம் கட்டிக்க இஷ்டந்தான்னு சொன்னதுதானு நான் செஞ்ச பாவம்னு கேக்கப் போறேன்'' என்றாள். அவள் உள்ளே எழுந்த உணர்ச்சி வேகம் அவள் கண்களில் ஒளி வெட்டியது.

பொன்னையா பலமாகத் தலையை ஆட்டி, ''அந்தக் கேள்வியைப் பதினஞ்சு வருசத்துக்கு முன்னே கேட்டிருக்கணும்'' என்றார்.

முத்துலட்சுமி ''அப்போ நான் பெத்தவனுக்கும் தாய் மாமனுக்கும் கட்டுப்பட்டு உலகம் தெரியாத பெண்ணாக இருந்தேன். அந்த ஆத்தாளும் அந்த மாமனும் அப்போ அதைக் கேக்கல்லே. ஒரு லட்சம் ரூபான்னவொடனே ஈன்னு பல்லைக் காட்டிட்டு என் பெறப்பைப் பாழடைஞ்சு விடாக்கறதுக்குச் சம்மதிச்சு என்னைக் கூட்டிக்கிட்டு வந்துட்டாங்க'' என்று மிகுந்த ஆத்திரத்துடன் பேசினாள்.

பொன்னையா குனிந்த தலை நிமிராமல், ''மெய்தான் முத்து. நானும்தான் கேட்கல்லே. ஆனால் நான் அவ்வளவு பணத்தைக் கண்டு பல்லை இளிச்சு அதுக்குச் சம்மதிச்சுடல்லே. உங்க ஆத்தா வாய்க்குப் பயந்து அவ்வளவு தொகை கெடைக்குதேங்கிற தெகைப்புலேதான் நான் உன்னைப் பத்தி யோசிக்கவேயில்லே. உங்க ஆத்தாளும் 'இவளுக்கு நான் என்ன கொறைவு வைச்சுட்டேன். நீ கெட்டே போன்னு அவனை மறந்துட்டு இவபாட்டுலே தொழிலைச் செஞ்சுக்கிட்டுப் போக வேண்டியதுதானே? இன்னிக்குத் தேதியிலே இவ மாவு பூசி மேடை ஏறினால் இன்னொருத்தி இருக்காளா இவளுக்கு ஈடு கொடுக்கிறதுக்கு? கழுத்திலே அவன் கட்டிவிட்ட கயித்தைத் தொட்டுத் தொட்டுக் காட்டிக்கிட்டு, 'நான் நாடகத்துலே நடிச்சு யாரும் என்னைப் புகழ்ந்து எனக்கு ஒண்ணும் ஆகவேண்டாம். நான் ஏற மாட்டேன்'னு இப்படி வீம்பு புடிச்சு மொடங்கிக் கிடக்கிறதைப் பாத்தா என் பெத்த வயிறு பத்திக்கிதே'ன்னு புலம்பிக்கிட்டே இருந்துட்டுப் போய்ச் சேர்ந்துட்டா. ஆனா, ஒண்ணு மட்டும் சொல்லுவேன். உன் மனசு இப்படி அவன் காலடியையே சுத்திக்கிட்டுக் கெடக்கப் போகுதுன்னு ரத்தினம் நெனைக்கவேயில்லே. 'நீ பார்த்துக்கிட்டே யிரு பொன்னையா. இன்னும் ரெண்டு மாசத்திலே இவ அவனை மறந்துட்டு ராசாத்தி மாதிரி இருக்கப்போறா'ன்னுதான் சொல்லி என்னையும் அந்த ராஜிக்கு இசைய வைச்சா. ஊம்... எப்படி எப்படியோ நெனைச்சு எப்படி எப்படியோ மாறிடிச்சு'' என்று சொல்லிப் பெருமூச்சு விட்டார்.

முத்துலட்சுமி நாலைந்து விநாடிகள் மாமனையே பார்த்துக் கொண்டு நின்றாள். திடீரென்று அவள் கண்களிலிருந்து கண்ணீர் பொங்கிப் பெருகத் தொடங்கியது. வாய் விட்டு விம்மிக் கொண்டு எதிர்ப் பக்கத்து அறையை நோக்கி விரைந்தாள்.

அறைக்குள் சென்ற முத்துலட்சுமி ஒரு பக்கம் இருந்த பிரம்பு மோடாவை இழுத்துப் போட்டு அதன் மேல் உட்கார்ந்தாள். வலுக்கட்டாயமாக மனத்தைக் கெட்டிப் படுத்திப் பெருகி வந்த கண்ணீருக்கு அணை போட்டுத் தலையை நிமிர்த்தினாள். எதிரிலிருந்த மர அலமாரிக் கதவில் பொருத்தப் பட்டிருந்த பெரிய கண்ணாடியில் தெரிந்த தன் முகத்தைப் பார்த்தாள். இன்னும் முப்பத்தைந்து வயது நிறையவில்லை. இருந்தும் அவள் முகம் கவர்ச்சி இழந்து வதங்கிக் காட்சி அளித்தது. நெற்றிக்கு மேலே நரை தோன்றி விட்டது. பெண்ணாகப் பிறந்து கண்டவர் வியந்து நிற்கும் கட்டழகியாகக் கவர்ச்சிச் சிலையாக வளர்ந்தும் வாழ்க்கையில் எவ்வித இன்பத்தையும் காணாமலே அவள் முப்பத்தைந்து வயதுக்குள் கிழவியாகி விட்டாள்! அந்தப் பேறு அவளைப் பெற்றவளே அவளுக்குத் தேடிக் கொடுத்தது.

அப்போது அவளுக்குப் பதினேழு வயது நிறைந்து கொண்டிருந்தது. தாய் ரத்தினம் தகப்பன் கன்னையாவுடன் அவள் கிராமத்தில் பிறந்து வளர்ந்த காட்டுச் செடியாக இருந்தாள். அப்போது அவளுக்கு முத்துக் கண்ணு என்று பெயர்.

கன்னையா ஓர் அப்பாவி. அவருடைய தந்தை அவருக்கு விட்டுச் சென்றிருந்த இரண்டே கால் ஏக்கர் புஞ்சை மண்ணை


"பொசிப்பு"
பி.எஸ்.ராமையா

ஆள் வைத்துப் பிராண்டிக் கிடைத்ததைக் கொண்டு பிழைத்துக் கொண்டிருந்தார். ஊர் முழுவதுமே ரத்தினத்தின் வாய்க்கு அஞ்சும் என்றால் கன்னையா எம்மட்டும்!

ஒரு நாள் திடீரென்று முத்துக்கண்ணின் தாய் மாமன் பொன்னையா கிராமத்துக்கு வந்தார். மாமனைப் பற்றி அவள் தாய் சொல்லிக் கேட்டிருந்தாள். சின்ன வயதிலேயே பொன்னையா வீட்டை விட்டு ஓடி ஒரு நாடகக் குழுவில் போய்ச் சேர்ந்தார். ''ராஜபார்ட்டு பொன்னையான்னு ஒலகம் முழுதுக்கும் தெரியுமாம்'' என்று சொல்லியிருந்தாள் ரத்தினம். அந்த மாமனை எப்போது பார்க்கப் போகிறோம் என்று ஆவலுடன் துடித்துக் கொண்டிருந்த முத்துக்கண்ணு அவரைக் கண்டு 'இவர் தரிக்கும் ராஜா வேஷம் எப்படி இருக்கும்?' என்று ஒரு தடவை கற்பனை செய்து பார்த்தாள்.

பொன்னையாவுக்கு அப்போது முப்பத்திரண்டு வயதுதான் ஆகியிருந்தது. ஆயினும் பதினேழு, பதினெட்டு ஆண்டுகள் அஸ்திவாரமும், ஆதாரமும் இல்லாத வாழ்வு நடத்தியதன் விளைவாக அந்தப் பருவத்திலேயே அவருடைய முகம் முற்றி இறுகிக் காட்சியளித்தது. முதுமைக் குறிகள் மெள்ள மெள்ள எட்டிப் பார்த்தன.

அவர் நாடகங்களில் 'சகெண்ட் ராஜபார்ட்டு' செய்வதாகச் சொன்னார். அதாவது வள்ளி திருமணத்தில் நம்பிராஜன், கோவலனில் பாண்டிய மன்னன் போன்ற வேடங்கள். அந்த நாடகங்கள் வேடங்களைப் பற்றி எதுமே அறியாத முத்துக்கண்ணு அவர் நாடக வரிசையில் தலைமை வரிசையில் இருப்பதாகத்தான் நம்பினாள். பின்னால் அவளே நாடகத் தொழிலில் சேர்ந்து, 'சகெண்ட் ராஜபார்ட்டு' என்றால் என்ன என்பதை நேரில் கண்டு விளங்கிக்கொண்ட பிறகுதான் அவளுக்கு மாமனின் வாழ்க்கை நிலை புரிந்தது.

கிராமத்துக்கு வந்த பொன்னையா மொட்டுப் பருவத்தைத் தாண்டிக் கொண்டிருந்த முத்துக்கண்ணுவைப் பார்த்தார். அவள் குரலைக் கேட்டார். தங்கை ரத்தினத்திடம், ''ஒரே வருசம், ரெண்டு மூணு நாடகம் பாடம் பண்ணி வைச்சு இவளை மேடை மேலே ஏத்தினேன்னு ஆறே மாசத்துலே ஊரையெல்லாம் ஆடவைச்சுக் காட்டுவேன்'' என்றார். 'பணம் எப்படி வெள்ள ஓட்டமாக வந்து கொட்டும், அதைத் திரட்டி வைக்க எத்தனை இரும்புப் பெட்டிகள் வாங்க வேண்டும் என்பதை அவளுக்குக் கணக்குப் போட்டுக் காட்டினார்.

எத்தனை இரும்புப் பெட்டிகள் தேவையானாலும் அத்தனையையும் வாங்கி விடுவதென்று உறுதி செய்துவிட்டாள் ரத்தினம். கன்னையா தயங்கித் தயங்கி, 'நமக்கு எதுக்கு அதெல்லாம் ரத்தினம்?'' என்று தொடங்கினார். ஆனால் அந்த நாலைந்து சொற்களுக்கு மேல் ஒரு முனகல் ஒலிகூட அவர் தொண்டையிலிருந்து எழவில்லை. ரத்தினம் அவர் குரலை அப்படி அடக்கினாள்.

ஆனால் கன்னையா மைத்துனனைத் தனியாக அழைத்து, ''ஆறு நெறையத் தண்ணி போனாலும் நாய் நாக்காலேதான் நக்கிக் குடிக்கணும்பாங்க. உழக்கைக் கடலிலே அமுக்கி அமுக்கி மொண்டாலும் ஒரு படித் தண்ணி மொண்டுடாது. உயர உயரப் பறந்தாலும் ஊர்க் குருவி பருந்தாயிடுமா?'', என்று பழமொழிகளை அடுக்கி, ''உன் தங்கச்சி மனசை வீணுக்குக் கலைச்சுட்டியே. நீங்க ரெண்டு பேருமாக் கூடி அந்தப் பொண்ணை என்ன கோலமாக்கப் போறீங்களோ? நமக்கு வேண்டாம் அதெல்லாம்'' என்று சொல்லி முறையிட்டார். ஆனால் பொன்னையா காதிலே அது ஏறவேயில்லை.

பொன்னையா ஊருக்கு வந்த பதினைந்தாம் நாள் ரத்தினம் மூட்டை முடிச்சுக்களைக் கட்டி மகளையும் உடனழைத்துக் கொண்டு தம்பியுடன் புறப்பட்டுவிட்டாள். முத்துக்கண்ணுக்கு நாடகம் பாடம் பண்ணி வைக்க வேண்டிய லட்சுமண வாத்தியார் அப்போது சேலத்தில் ஆடிக் கொண்டிருந்த ஒரு நாடகக் குழுவில் இருந்தார். பெண்ணின் வடிவத்தைக் கண்டு குரலையும் கேட்ட நாடகக் குழுவின் தலைவர் ராசப்பா அவளைப் பயிற்சி செய்வித்துத் தமது குழுவிலேயே மேடை ஏற்ற முன்வந்தார். பொன்னையாவையும் தமது குழுவிலேயே சேர்த்துக் கொண்டார்.

முத்துக்கண்ணு ஆறே மாதங்களில் இரண்டு நாடகங்களைப் பாடம் செய்து முழுத் தேர்ச்சி பெற்றுவிட்டாள். ராசப்பா நாடகக் குழுவினர் நடித்த நாடகங்களில் இன்னாரென்று கட்டிக் காட்டப்படாமலே பங்கு எடுத்துக் கொண்டு சில்லறை வேடங்களில் தோன்றி அடைந்த அனுபவம் முத்துக்கண்ணுக்குப் பெரிய உதவியாக அமைந்தது. மிக மிக விரைவில் அவளுடைய மேடைக் கூச்சம் தெளிந்து விட்டது. சில்லறை வேடங்களிலேயே அவள் நாடக ரசிக மக்களின் கவனத்தைக் கவர்ந்து விட்டாள்.

வள்ளி திருமணத்தில் அவளைக் கும்பகோணத்தில் அரங்கேற்றுவதென்று திட்டமிட்டார் ராசப்பா. அந்தத் திட்டத்துக்கு எல்லாமே கூடி அமைந்தன. உதிரியாக 'ஸ்பெஷல்' நாடகங்களில் நடித்து முன்னணிக்கு வந்து கொண்டிருந்த வேலூர் கங்காதரன் தானாக வந்து ராசப்பா குழுவில் சேர்ந்தான். கங்காதரனுக்கும் முத்துக்கண்ணுக்கும் உருவம், வேடம், குரல் எல்லா வகைகளிலும் பொருத்தம் அமைந்திருந்தது. முத்துக்கண்ணு என்ற பெயர் முத்துலட்சுமியாக மாறியது.

முதல் நாடகத்திலேயே முத்துலட்சுமி 'ஹோஹோஹோ' என்று பெயர் வாங்கிவிட்டாள். பொன்னையா ரத்தினத்திடம் ''நான் சொல்லல்லே? நான் சொன்னேனா இல்லையா? நான் என்ன சொன்னேன்?'' என்று மாற்றி மாற்றிக் கேட்டார். ரத்தினத்துக்குத் தலை கால் புரியவில்லை.

கும்பகோணத்திலிருந்து புதுச்சேரிக்குப் போய் ஆடி விட்டு ராசப்பாவின் குழு சென்னைக்குப் புறப்பட்டது. அதிர்ஷ்டவசமாக அப்போது சென்னையில் நாடகம் ஆடுவதற்கு ஒரே ஒரு கொட்டகைதான்



சினிமாவுக்குத் தப்பி மிஞ்சி யிருந்தது. அதைப் பிடித்துக் கொள்ள ஒருவருக்கொருவர் தெரியாமல் பந்தயம் ஓடி வந்த மூவரில் ராசப்பாவின் மானேஜர் ஒரு மணி நேரம் முந்திக்கொண்டார்.

ஒரே வாரத்தில் முத்துலட்சுமி சென்னை நாடக ரசிக மக்களை ஆட வைத்து விட்டாள். கடைத் தெருவில், காப்பி ஹோட்டல்களில், டீக்கடைகளில் எல்லாம்— முத்துலட்சுமியைப் பற்றித்தான் பேச்சு. அவளை மேடைமேல் 'கண்டு களிக்காத கண்ணு நண்டு வளைக்கான மண்ணு' என்று ஒரு நாடோடிப் பாடல்கூடப் பரவி விட்டது.

சென்னையில் நாடகம் ஆரம்பித்து இரண்டு மாதங்கள் ஆவதற்குள் முத்துலட்சுமியை உடைமையாக்கிக் கொள்ளப் போட்டி போட்டவர்களின் நெரிசலும் விரட்டலும் ரத்தினத்தை மூச்சுத் திணற அடித்தன. மகளை நாடகக் குழுவில் கொண்டு வந்து சேர்த்து அந்த ஒன்றரை ஆண்டு காலத்துக்குள் ரத்தினம் உலகத்தைப் பற்றியும் அதிலும் ஆண் மக்களைப் பற்றியும் நிறையத் தெரிந்துகொண்டிருந்தாள். தன் முதுகின் பின்னாலேயே நிறுத்திக் காட்டி அன்பளிப்பு, காணிக்கை, வெகுமதி என்ற பெயர்களில் பொருளாகவும், பொருள்களாகவும் வாங்கி வாங்கிக் குவித்துக் கொண்டே இருந்தாள். அவ்வளவையும் கொண்டு வந்து கொட்டியவர்கள் ரத்தினத்தின் முதுகுக்குப் பின்னாலிருந்து எழும் களுக்குச் சிரிப்பைக் கேட்டு அல்லது பாதியளவு தெரியும் முகத்தின் மைதீட்டிய கண்களின் இமைத் திரைகள் ஒருமுறை திறந்து மூடும் அழகைக் கண்டு சிலிர்த்துத் திருப்தி அடைந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

மூன்றாவது மாதத்தில் முத்துலட்சுமியை சினிமா நடிப்புக்கு அழைத்துக் கொள்ள விரும்பிச் சிலர் வந்தார்கள். அந்த வழியில் இறங்கிவிட்டால் முத்துலட்சுமி இரண்டே ஆண்டுகளுக்குள் குபேரச் செல்வத்தில் திளைப்பாள் என்பதை ரத்தினத்துக்கு விளக்கிக் காட்டினார்கள். அந்த நேரத்தில்தான் சிவசுந்தரம் வந்து சேர்ந்தான். அவன் வரும்போதே, முத்துலட்சுமி நாடகத்திலோ சினிமாவிலோ நடிக்காமலே குபேர செல்வத்தில் புரளலாம் என்பதை ரத்தினத்துக்கு வெட்ட வெளிச்சமாகக் காட்டிவிட்டான். ரத்தினத்தின் மனம் அவன் பங்கில் சாய்ந்தது.

சிவசுந்தரத்தின் தந்தை ஜமீன்தார் என்ற பட்டம்இல்லாமலே ஜமீன் அளவுச் சொத்தை ஆண்டனுபவிப்பவர்; அதைத் தவிர தொழில் துறையிலும் இறங்கி வருஷா வருஷம் லட்சக் கணக்கில் பொருள் குவித்துக்கொண்டிருப்பவர். அவருக்கு அவன் ஒரே மகன். பெண்கள் மூவரையும் கட்டிக் கொடுத்து விட்டார். அவர்களுக்காக இனிமேல் செலவு செய்ய வேண்டியது அதிகமாகாது என்ற விவரங்களை அறிந்த ரத்தினம் முதுகுக்குப் பின்னால் இருந்த மகளை முன்னால் கொண்டு வந்து நிறுத்தினாள்.

சிவசுந்தரம் முத்துலட்சுமியின் உடலை வைரத்தால் இழைத்தான். அப்போது அவளுக்குஇருபத்துநாலு வயது அடைந்துகொண்டிருந்தது. அவளைச் சூழ்ந்திருந்த செல்வத்தின் ஒளி வட்டத்தை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால் அவள் தோற்றத்தில் 'பார்ப்பதற்கு' ஒன்றுமே இல்லை. ஆனால் அந்த ஒளி வட்டம் அவளுடைய சிறு அசைவிலும் முனகல் முணுமுணுப்பிலும் கூட ஏதோ கவர்ச்சி இருப்பதாகக் காட்டியது.

கிராமத்திலிருந்து பரந்த உலகத்துக்குள் நுழைந்த முத்துலட்சுமி மேடைக் கூச்சம் போன்ற பல கூச்சங்களை எளிதில் வென்று வெளிப்பட்டு விட்டாள். ஆனாலும் தன் வாழ்க்கையில் என்ன நிகழ்கிறது, அதன் விளைவு என்னாகும் என்ற சிந்தனைகளே எழாத ஒரு போதை நிலையில்தான் தன் தாயின் கைப்பிடியில் மிதந்து கொண்டிருந்தாள். அவளைத் தேடி வந்து அவள் காலடியில் அன்பளிப்புக் காணிக்கைகளைக் கொட்டியவர்களைக் கூட அவள் அந்தப் புரியாத போதைப் பார்வைதான் பார்த்தாள். அந்தப் பார்வையை மற்றவர்கள் தவறாகப் பொருள் செய்து கொண்டார்கள். ''பெண் என்றால் இவளல்லவா பெண்! துளியாவது கர்வமுண்டா! என்ன அடக்கம்! மட்டு மரியாதை! ஒருத்தியாக இருந்தால் இந்த வெற்றி நிலையில் தலை கால் புரியாமல் ஆடத் தொடங்கி விருப்பாள்'' என்று அவளை அவர்கள் வியந்து பேசினார்கள்.

சித்திரை வந்தனள்!

திருச்சி வாசுதேவன்

வந்தனள் பாரடி, சித்திரையாள் - இன்பம்
வழங்கிடும் வசந்த முத்திரையாள் - இன்று
வந்தனள் பாரடி....

சுந்தரத் தன்மைகள் கூடிடவும் - குளிர்
சோலையில் குயிலினம் கூவிடவும் - நறுஞ்
சந்தனத்தின் மணம் மேவிடவும் - மலர்த்
தாதினைத் தென்றலாள் தூவிடவும்
வந்தனள் பாரடி....

தொல்புகழ் வேப்பம் பூ குலுங்கிடவும் - தேன்
சொட்டிடும் முக்கனி மலிந்திடவும் - வளர்
நல்விதப் புதுமைகள் சிறந்திடவும் - வளம்
நல்கிடும் புத்தாண்டு பிறந்திடவும்
வந்தனள் பாரடி....

சிவசுந்தரம் முத்துலட்சுமியை முறையாக மணந்து மனைவியாக ஏற்றுக் கொள்ள விரும்புவதாகச் சொன்னான். ஆனால் அதற்குத் தன் தந்தையின் இசைவைப் பெறுவது என்பது இயலாதது. ஆகையால் முன்னே கலியாணத்தை முடித்துக் கொண்டு அதை வெளியிட்டால் அவரால் ஏற்றுக்கொள்ளாமல் இராது என்றும் சொன்னான். கலியாணத்துக்குப் பிறகு முத்துலட்சுமி நடிக்கவே வேண்டாம். ஆனால் அவள் விரும்பினால் அதற்கும் அவன் தடுப்புப் போடமாட்டான் என்பதையும் சொன்னான்.

ரத்தினம் மகளை இசைய வைத்தாள்; இசையும்படி கட்டளையிட்டாள். காதும் காதும் வைத்தாற்போல் திருத்தணியில் முருகன் முன்னிலையில் திருமணம் நடந்தேறியது: ரத்தினம், பொன்னையாவைத் தவிர ராசப்பாவும், நாடகக் குழுவைச் சேர்ந்த வேறு இருவரும் வந்திருந்தார்கள்.

சிவசுந்தரத்தின் தந்தைக்குச் சென்னையில் நான்கு பங்களாக்கள் இருந்தன. இருந்தும் அவன் ஒரு தனி வீடு பிடித்து அதில் முத்துலட்சுமியுடன் மண வாழ்க்கையைத் தொடங்கினான். ஒரு வாரம் வரை முத்துலட்சுமி தொடர்ந்து நாடகங்களில் நடித்தாள். அதன் பின்னர், ''என்னால் இனிமேல் நடிக்க முடியாது'' என்று சொல்லி விட்டாள். அந்த ஒரு வாரத்துக்குள்ளேயே நாடக ரசிக மக்களும் அவளிடம் ஏதோ மாறுதல் நேர்ந்து, நடிப்பு மாற்றுக் குறைந்து வருவதைக் கண்டுவிட்டார்கள். முத்துலட்சுமிக்குக் கலியாணம் ஆகிவிட்டது என்ற உண்மை வதந்தியாகப் பிறந்து செய்தியாகப் பரவியது.

முத்துலட்சுமி இல்லாத நாடகம் முதல் நாளே புஸ்வாணமாகிவிட்டது. ரத்தினம், பொன்னையா இருவருடனும் இரண்டு நாட்கள் இரவும் பகலும் மன்றாடித் தோல்வி அடைந்து ராசப்பா சென்னை 'காம்ப்'பை முடித்து மூட்டை கட்டினார்.

ஊரெல்லாம் பார்த்து வியந்து சொக்கிய வடிவழகு தன் உடைமைப் பொருளாகி விட்டது என்பதை ஊராரெல்லாம் காணப் பக்கத்தில் வைத்துக் கொண்டு காரில் பவனி வரவேண்டும் என்று சிவசுந்தரத்துக்கு ஆசைதான். ஆனால் தன் தந்தையைப் பற்றிய அச்சமும், அவர் என்ன சொல்லப் போகிறாரோ என்ற பதை பதைப்பும் அந்த ஆசையை அமுக்கிவிட்டன.

அந்த நேரத்தில் அவனுடைய தந்தை டெல்லிக்குப் போயிருந்தார். அவருடைய தொழில் வளர்ச்சியில் ஏதோ சிக்கல். அதை அறுத்து நேராக்கிக் கொண்டு வர அவர் எதிர்பார்த்ததற்கு மேல் நாளாகி விட்டது. அதோடு அவருடைய தொழிற்சாலைக்குத் தேவையான சில இயந்திர சாதனங்கள் கிடைக்க ஒரு வழி இருக்கிறது என்பதையும் அங்கே போன பிறகு அறிந்தார்: அந்த வழியில் போய் அவற்றை வாங்க வழி செய்வதற்காகவும் சில நாட்கள் தங்க நேர்ந்தது. அவர் டெல்லியிலிருந்தபோது சிவசுந்தரத்தின் புதிய போக்கைப் பற்றி அவருக்கு ஜாடை மாடையாகச் செய்திகள் எட்டின.

ஆனால் அவருக்கு மகனைப் பற்றி ஓர் அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது: அவன் இளமைத் துடிப்பிலும் விளையாட்டு மனப் போக்கிலும் தவறுகள் செய்வான். ஆனால் பெண் விஷயத்தில் ஒரு நாளும் தவறான வழியில் இறங்கிவிட மாட்டான் என்ற அந்த நம்பிக்கையை அதங்கவும் விடாமல் பற்றிக் கொண்டு டெல்லி வேலைகளை முடித்துக் கொண்டு சென்னைக்குத் திரும்பினார். இங்கே வந்து மகனைப் பற்றிய உண்மையை அறிந்தபோது வந்த கோபத்தில் அவருக்கு மூச்சே முட்டியது. கோபத்தில் ஏதாவது செய்தால் அது ஒன்று நினைக்க வேறொன்றாகிப் பண நஷ்டத்தில் முடிந்து விடும் என்பது அவருக்குத் தெரியும். ஆனால் கோபம் அடங்கி வர நேரம் கொடுத்து விட்டுச் செயலில் இறங்கினார். முதலில் தம்முடைய மகனை முத்துலட்சுமியிடமிருந்து பிரித்துக்கொண்டு வந்து வீட்டில் அடைத்து வைத்தார்.

அந்தக் கடைசி நாள் நிகழ்ச்சி முத்துலட்சுமியின் மனக் கண்ணில் இன்னும் பசுமையாக இருந்தது.


அவளும் அவள் தாயும் மாமனும் ஒரு புறம் நின்று கொண்டிருந்தார்கள். எதிர்ப் பக்கத்தில் ஒரு மேஜையடியில் சிவசுந்தரத்தின் வக்கீல் உட்கார்ந்திருந்தார். சற்றுத் தள்ளி ஒரு நாற்காலியில் சிவசுந்தரத்தின் தந்தை அமர்ந்திருந்தார். அவன் அவருக்குப் பின்னால் குனிந்த தலை நிமிராமல் நின்றான். அந்த ஒன்றரை மணி நேர நிகழ்ச்சியில் அவன் ஒரு தடவை கூடத் தலையை நிமிர்த்தி அவளைப் பார்க்கவில்லை.


மேஜையின் மறு பக்கத்தில் போலீஸ் டிபுடி கமிஷனர் ஒருவர் உட்கார்ந்திருந்தார்: அந்த ராஜி உடன்படிக்கை கையெழுத்து ஆனதற்கே அவர்தான் முக்கிய காரணம். ரத்தினத்தையும் பொன்னையாவையும் அழைத்து வரச் சொல்லி அவர், ''நீங்கள் இருவரும் விவரம் தெரியாத ஒரு பையனை மயக்கி அவன் மனத்தைக் கலைத்துக் கெட்ட நோக்கத்துடன் உங்கள் பெண் கழுத்தில் தாலி கட்டச் சொன்னதாகவும், அவன் தாலி கட்ட மறுத்தால் அவன் பெண்ணிடம் தவறாக நடந்து கொண்டதாக வழக்குத் தொடருவோம் என்று பயமுறுத்தியதாகவும் சிவசுந்தரத்தின் தந்தை முறையீடு அனுப்பியிருக்கிறார். அதன் மேல் நாங்கள் நடவடிக்கை எடுத்தாக வேண்டும்'' என்றார்.

ரத்தினமும் பொன்னையாவும் ஒரே குரலாக ''ஐயையோ! அவ்வளவும் பொய். அபாண்டம். அந்தப் பிள்ளையாகத்தான் வந்து எங்க பொண்ணைத் தனக்குக் கட்டி வைக்கணும்னு வம்பு செஞ்சு வற்புறுத்தினாரு. வேணும்னா அவரையே கூப்பிட்டுக் கேளுங்க'' என்று சொல்லி அலறினார்கள்.

டிபுடி கமிஷனர், ''பயமுறுத்தினது மெய்தான். என் புத்தியைத்தான் கெடுத்து விட்டார்கள் என்று அந்தப் பையனே வாக்கு மூலம் கொடுத்திருக்கிறானே. அவனை வேறு என்ன கேட்க இருக்கிறது?'' என்றார்.

(அடுத்த இதழில் முடியும்)


STEPPED
STEEL
TUBULAR
POLES
KALINGA TUBES LTD.
33, CHITTARANJAN AVENUE,
CALCUTTA—12.
KALPANA.K.T.S.P.2



கனவான்கள் தேர்ந்தெடுப்பது

மபத்லால் க்ரூப்

பாப்லின்கள் மற்றும் ஷர்ட்டிங்குகள்

மேலும் 'டெரிலேஸ்ட்' மற்றும் 'மஃபிலேஸ்ட்' ரகங்களில் கிடைக்கிறது.

நியு ஷொராக் (ஷொராக்) அஹமதாபாத் . நியு ஷொராக், நடியாத் . ஸ்டேன்டர்ட், பம்பாய் ஸ்டேன்டர்ட். (நியு சைனா) பம்பாய் . ஸ்டேன்டர்ட், தேவாஸ். ஸஸ்ஸூன் பம்பாய் ஸஸ்ஸூன் (நியு யூனியன்) பம்பாய் . ஸூரத் காட்டன், ஸூரத் . மபத்லால் பைன், நவ்ஸாரி

Aiyars MGSP 1838 TM 8


ராஜயோகம் 30
கதை: தம்பு
நான் மன வியாதிகளையும், மூளைக் கோளாறு வியாதிகளையும், மருந்துகளாலும், மனோவசிய முறைகளாலும் குணப்படுத்துவதற்காக இந்த வைத்திய சாலையை ஆரம்பித்தேன். வக்கீல் வீராசாமி பண உதவி செய்தார். ஆனால் என்னை ஏமாற்றிவிட்டார்.
ஐயோ! பாவம்!
நீங்கள் நம்பவில்லை போலிருக்கிறது. வக்கீல் எழுதிய கடிதம் இதோ! படித்துப்பாருங்கள்.
இன்ஸ்பெக்டர் கடிதத்தைப் படிக்கிறார்.
...கந்தசாமிராஜாவின் பிள்ளை ராஜாவுக்கு அவன் பாட்டனார் ஏராளமான சொத்து வைத்திருக்கிறார். நான்தான் அவனுக்குக் கார்டியன். அவனுக்கு இருபத்தோராவது வயது ஆகும்போது சொத்துக்களை அவனிடம் ஒப்படைத்துவிட வேண்டும். கண்ணப்பன் என்ற பையன் மீது திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. அது சம்பந்தமாக அவன் தாயார் அவனை அழைத்துக்கொண்டு வந்திருந்தாள். அவன் பார்ப்பதற்கு ராஜாவைப் போன்றே இருப்பான்...
...அவன்தான் ராஜா என்று நடிக்க ஏற்பாடு செய்தேன். உண்மையான ராஜாவுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதென்று கூறி டாக்டர் பாலாஜியின் வைத்தியசாலையில் சேர்த்தேன். போலிராஜவான கண்ணப்பன் கழுத்தில் ஒரு மச்சமிருக்கிறது. உண்மையான ராஜாவின் கழுத்தில் செயற்கையாக மச்சம் தோன்றச் செய்தேன். வெளியூர் டாக்டர் ஒருவர் அதற்கான ஆபரேஷன் செய்தார்....


என்ன?
வைத்தியசாலை முழுவதையும் சோதனை செய்து பார்த்தோம். வக்கீல் வீராசாமியும், துரைசாமி என்பவனும் கட்டிலில் காயத்துடன் படுத்திருக்கிறார்கள். அவர்களைக் கட்டிலுடன் கட்டியும் போட்டிருக்கிறது. ஒரு அறையில் ஒரு வயோதிக அம்மாள் அடைக்கப்பட்டிருக்கிறாள்! அவள் தான்தான் ராஜாவின் நிஜமான அத்தை என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறாள்!....
...சீதாமணி என்பவள் சந்திரகுமாரி அணைத்துக்கொண்டு கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கிறாள். தோட்டத்தில் இரண்டு பேர் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். ஒரு பெண் அவர்களுள் ஒருவனைக் குறிபார்த்து மண்டையில் கழியால் அடித்துக்கொண்டிருந்தாள்...
இந்த இரண்டு ராஜாக்களும் சண்டை போட்டார்கள். கையில் கைக்குட்டை கட்டியிருக்கிறேனே, அவர்தான் உண்மையான ராஜா. ரத்தம் கசிய நிற்கிறானே அவன்தான் கண்ணப்பன்...
...நகைக்கடையை ஏமாற்றியவள். இதெல்லாம் உங்களுக்குத் தெரிந்து போயிருக்கும். நான் அவர் கையில் கைக்குட்டை ஏன் கட்டினேன் தெரியுமா? இரண்டு பேரும் ஒரே மாதிரியாயிருந்தார்கள். ஆகையால் சண்டை போடும்போது அவரை அடிக்காமல் மற்றவனை அடிப்பதற்காக. ராமர் வாலியைத் தாக்கியபோது சுக்ரீவனைக் கழுத்தில் மாலை போட்டுக்கொள்ளச் செய்திருந்தாரே!


நீங்களும், பிரமாபாயும் முயற்சி செய்திரா விட்டால் இந்த மோசடி வைத்தியசாலை இருப்பது அம்பலமாகாது. அயோக்கியர்கள், பணம் பறிக்கவும், தங்களுக்கு வேண்டாதவர்களைத் தொலைக்கவும் இங்கே கொண்டுவந்து சேர்த்துப் பைத்தியமாக்கிவிடுவார்கள். நீங்கள் இரண்டுபேரும் பெண்கள் போலீஸ் படையில் சேரவேண்டியவர்கள்....
இந்த டாக்டர் பாலாஜி அம்மாள் நல்ல பலசாலி!
அம்மாளா, அவன். ஏபாலய்யா! கேடிப் பயலே! தலைடோப்பாவை நம்! பெண் வேஷம் நன்றாய்ப் போட்டிருக்கிறயடா! எல்லோரும் ஸ்டேஷனுக்கு வாருங்கள். உண்மையைக் கக்கச் சொல்கிறேன். வைத்தியசாலையைப் பூட்டி சீல் வைக்க வேண்டும்.
ராஜா! இங்கேதான் நமக்குள் காதல் அரும்பிற்று. மோதல் இல்லையேல் காதல் இல்லை. ஆகையால் எல்லாம் நல்லபடியாக முடிந்ததைக் கொண்டாடுவதற்காக நாம் ஆரம்பத்தில் சந்தித்தது போல் மோதிக்கொள்வோம்.
அப்படியே செய்வோம், என் பிராணநாயகி! ஆனால், மெதுவாக என் மண்டை வலிக்காமல் மோது. பாதசாரிகள் தெருவைக் கடக்குமிடம் வாழ்க! மோதல் வாழ்க!! மெதுவான மோதல் வாழ்க!!!
முற்றும்





யோஷிகி

தி. ஜானகிராமன்



கியோத்தோ ஸ்டேஷனில் இறங்கியதும் ஒரு டாக்ஸியைப் பிடித்து, கொக்குஸாய் ஹோட்டலுக்கு விடச் சொன்னேன். ஐந்தே நிமிஷங்களில் ஹோட்டல் வந்துவிட்டது. வரவேற்பு மேஜையண்டை போனேன்.

என் பெயரைச் சொல்லி, "இந்தியாவி லிருந்து வந்திருக்கிறேன்" என்று ஆரம்பிப் பதற்குள் ஹோட்டல் சிப்பந்தியே மீதியைப் பேசி விட்டான்.

"தெரியுமே. டோக்கியோவிலிருந்து நீங்கள் எழுதிய கடிதம் வந்தது. உங்கள் அறை தயாராயிருக்கிறது. மூன்றாவது மாடி யில். இந்த ஆள் உங்களை அழைத்துக் கொண்டு போவான். யோஷிகி என்பவர் உங்களை இன்று மாலை நாலு மணிக்கு வந்து சந்திப்பதாக எழுதியிருந்தாராமே?"

"ஆமாம்."

"அவருக்கு இன்று வர முடியவில்லையாம். போனில் கூப்பிட்டுச் சொன்னார். நாளை வருகிறாராம். மன்னித்துக் கொள்ளுமாறு உங்களிடம் கேட்டுக்கொள்ளச் சொன்னார். ஏதோ அவசர வேலையாம். உங்களை இன்று சந்திக்க முடியவில்லையாம்."

"பரவாயில்லை. நாளைக்கே வரட்டுமே."

"நாளைக் காலை பத்து மணிக்கு உங்களைச் சந்திப்பதாகச் சொன்னார்."

சென்னையிலிருந்து புறப்படும் போது குரு மூர்த்தி டோக்கியோ, ஓஸகா, கியோத்தோ

நகரங்களில் உள்ள சில ஜப்பானிய நண்பர்களின் விலாசங்களைக் கொடுத்திருந்தான்.

டோக்கியோவிலிருந்து கியோத்தோ போகு முன் யோஷிகிக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தேன். கியோத்தோவுக்கு வரும் தேதியைக் குறிப்பிட்டு கொக்குஸாய் ஹோட்டலில் தங்கப்போவதாக அவருக்கு எழுதியிருந்தேன். வந்த அன்று மாலை சந்திப்பதாக யோஷிகியிடமிருந்து உடனே பதில் வந்துவிட்டது. என்ன அசௌகரியமோ! யோஷிகி மின்சாரச் சாமான் வியாபாரியாம். பி. ஏ. படித்திருக்கிறாராம். இங்கிலீஷ் பேசுவாராம். மூன்றும் வருடம் இந்தியாவுக்கு வந்திருந்தாராம். சென்னைக்கு வந்து ஒரு வாரம் இருந்தாராம். மூன்று நாட்கள் குருமூர்த்தியோடேயே அவன் வீட்டில் தங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாராம். ''கியோத்தோவில் அவரைப் பிடித்துக்கொள். ஓர் இடம் மீதி இல்லாமல் சுற்றிக் காண்பிப்பார்'' என்று சொல்லியிருந்தான் குருமூர்த்தி.

யோஷிகி நாளைக் காலையில்தான் வரப் போகிறார். அதுவரையில் எப்படிப் பொழுதைப் போக்குகிறது?

பொழுது போக்குவது அப்படி ஒன்றும் சிரமமாக இல்லை. மூன்றாவது மாடியில் தங்குபவர்களைக் கவனிப்பதற்காக இரண்டு மூன்று பெண் சிப்பந்திகள் இருந்தார்கள்.

அறைக்குள் நுழைந்து முகத்தைக் கழுவித் துடைத்துக் கொண்டு படுத்தேன். அப்படி ஒன்றும் களைப்பாகவும் இல்லை. சும்மா கண்ணை மூடிக் கொண்டேன்.

''டொட், டொட்...''

''யார்?''

''உள்ளே வரலாமா?''—பெண் குரல்.

''வரலாம்.''

ஒரு பெண் வந்தாள். ஹோட்டல் சிப்பந்தி.

''ஏதாவது சாப்பிடுகிறீர்களா?''

''என்ன இருக்கிறது?''

என் தலைமாட்டில் வந்து சுவரில் தொங்கிய உணவுப் பட்டியலை எடுத்துக் கொடுத்தாள். பார்த்தேன்.



''எனக்குப்பிடித்தது ஒன்றுமே இல்லையே!''

''ஏன்?''

''நான் சாகபட்சிணி. இதில் பன்றி, மாடு, கோழிக் குஞ்சு — இப்படியே இருக்கின்றனவே!''

''ஏன், மீன் சாப்பிடலாமே?''

''மீன் தாவரமா?''

''மீன்கூடவா சாப்பிட மாட்டீர்கள்?''

''ம்ஹூம்!''

''சரி. ஆம்லெட் இருக்கிறதே.''

''அது முட்டையிலிருந்து செய்கிறதல்லவா...?''

''முட்டை கூடவா சாப்பிடமாட்டீர்கள்?''

''ம்ஹூம்.''

''முழு சைவமா நீங்கள்?''

''ஆமாம்.''

''எனக்கு ரொம்பவும் வருத்தமாக இருக்கிறதே!''

''எதற்கு?''

''நீங்கள் சாப்பிடும்படியாக இங்கு ஒன்றும் இல்லையே என்று.''

''பிஸ்கட் இருக்கிறதா?''

''இருக்கிறது. பிஸ்கத்து; சுருள் ரொட்டி எல்லாம் இருக்கிறது.''

''பிஸ்கத்தும் காப்பியும் கொண்டா.''

''போதுமா?''

''போதும்.''

''நிஜமாகவா?...எப்படிப் பசி அடங்கும்?''

''என்ன செய்கிறது?''

''எனக்கு ரொம்ப வருத்தமாக இருக்கிறதே.''

''வருத்தப்படாதே. பிஸ்கத்தும் இரண்டு காப்பியும் கொண்டா.''

''சரி. இதோ வந்து விடுகிறேன்.''

''காப்பிக்குப் பால் வேண்டும். கருப்புக் காப்பி வேண்டாம்.''

''பாலா?''

''ஏன்?''

''பால் சாப்பிடுவீர்களா?''

''ஏன்?''

''முழு சைவம் என்று சொன்னாற்போல் இருக்கிறதே!''

''பரவாயில்லை. நீ ரொம்ப வருத்தப்படுகிறாயே. அதற்காகப் பாலாவது போட்டுக் காப்பியைக் குடித்து வைக்கிறேனே.''

''வேண்டாம். எனக்காகப் பிடிக்காததையெல்லாம் சாப்பிடாதீர்கள். என்னை மன்னிக்க வேண்டும்.''

''பரவாயில்லை. பாலும் கொண்டு வா!'' என்று கதறினேன்.

''நிச்சயமாகவா?''

''நிச்சயமாக.''

இந்தப் பேச்சு எனக்கு ஜப்பானில் புதிய அனுபவமில்லை. இரண்டு மாதமாகப் பழகிப் போனது. சாப்பாட்டைப் பற்றியே பல இடங்களில் பேசிப் பொழுதைக் கழித்திருக்கிறேன். மீனும் முட்டையும் சைவ உணவு என்று பலர் சாதிப்பதும் பால் சைவ உணவு என்று நான் சாதிப்பதும் தினம் நடக்கிற தத்துவ சர்ச்சை. காப்பியைக் கொண்டு வந்தவன் நான் வற்புறுத்தியதற்காக ஒரு காப்பியைக் கறுப்பாகக் குடித்தான். சைவ அசைவச் சர்ச்சை மீண்டும் தொடர்ந்து பொழுதைத் தள்ளிற்று.

மூன்று மணி அடித்தது. என் ஜப்பானிய நண்பர் வராததைச் சொன்னேன். ''இங்கு வழிகாட்டிகள் இருக்கிறார்கள். உங்களை அழைத்துப் போவார்கள். நான் வரச் சொல்லட்டுமா ஒருவரை?''

''இங்கிலீஷ் பேசுவாரா?''

''உங்களுக்குத் தேவையானது பேசுவார்.''

அவன் போனான். அவன் வந்தான். குளிருக்காக மேல் கோட்டை மாட்டிக் கொண்டு கிளம்பினேன். நாடகக் கொட்டகை, ஒரு ஷோ நடனம் — என்று வகைக்கு ஒன்றாகப் பார்த்துவிட்டு இரவு பதினொரு மணிக்கு வந்து சேர்ந்தோம்.

''எனக்கு ஒன்பது மணிக்கே ட்யூட்டி முடிந்து விட்டது. ஆனால் உங்களிடம் விடை பெற்றுக் கொள்ளவில்லையே என்று தங்கியிருந்தேன். காலையில் வருகிறேன். குழந்தை மாதிரி தூங்குங்கள்'' என்று விடை பெற நின்றான் அவன்.

''நான் இரண்டு மணிக்குத்தான் தூங்குகிற பழக்கம்.''

''எனக்கு வருத்தமாக இருக்கிறதே.''

''ஏன்?''

''உங்களுக்குப் பேசக்கூட ஆள் இருக்காதே. நான் வேண்டுமானால் இரண்டு புத்தகங்கள் தரட்டுமா?''

''கொண்டா.''

போகும்போது இரண்டு புத்தகங்களைக் கொடுத்துவிட்டுப் போனான் அவன்.

ஒன்று கதைப் புத்தகம்; இன்னொன்று கட்டுரைத் தொகுப்பு. கதைப் புத்தகம் ஜப்பான்காரர்கள் எழுதின கதைகள், ஆங்கில மொழிபெயர்ப்பு. இன்னொன்று ஜப்பானியர்களின் பழக்க வழக்கங்களைப் பற்றி ஆங்கிலத்தில் யாரோ மேல் நாட்டவர் எழுதியது. வகைக்குக் கொஞ்சமாகப் படித்தேன். தூங்கினேன். காலையில் எழும்போது எட்டு மணி. ''குட்மார்னிங்!''

''ஒஹாயோ கொஸாய்மஸ்'' என்று நான் பதில் கொடுத்தபோது அவனுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை.

''உங்களுக்கு ஜப்பான் மொழி தெரியுமா?'' என்று கேட்டான்.

''அதுதான் பேசினேனே!''

''ஜப்பான் மொழி உங்கள் காதுக்கு எப்படி இருக்கிறது?''

''ரொம்ப இனிமை.''

''ரொம்ப நன்றி. ஜப்பான் மொழி பேசுவீர்களா?''

''நன்றாகப் பேசுவேன். 'குட்மார்னிங்', 'குட்ஈவினிங்', 'குட்நைட்' முட்டை சாப்பிட மாட்டேன். மரக்கறிதான் சாப்பிடுவேன்— இந்தும் தலைகீழ்ப் பாடம்.''

''போதுமே. உணவுப் பிரச்னை தீர்ந்து விட்டது'' என்று சிரித்தான் அவன். ''நன்றாகத் தூங்கினீர்களா?''

''குழந்தை மாதிரி தூங்கினேன்.''



ASP/GM-23 TM
தொல்லை
பல் முளைக்கும்போதா?
காற்று பிரியும்போதா?
வயிற்றுவலியாலா?
மானேர்ஸ்
கிரைப் மிக்ஸ்சர்
கொடுத்து மீண்டும் புன்னகை தோன்றக் காணுங்கள்
இக்காலத் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு மானேர்ஸ் கிரைப் மிக்ஸ்சர் தருகின்றனர். அது இனிய சுவையுள்ளது; சுகாதார முறைப்படி 'பேக்' செய்யப்பட்டுள்ளது.
அதிர்ஷ்டக் குழந்தைகளுக்கு மானேர்ஸ் கிரைப மிக்ஸ்சர் கிடைக்கிறது
இப்பொழுது
அழகான, புதிய சிவப்பு நீல நிறங்களில் 'பேக்' செய்யப்பட்டு கிடைக்கிறது

மறுபடியும் சிரித்தாள் அவள். இந்த முக மலர்ச்சி ஜப்பானில் தண்ணீர் பட்டபாடு. கோடி ரூபாய் கொடுத்தாலும் சிடுசிடுப்புக் கிடைக்காது. இந்த மாதிரி மனுஷர்களோடு பேசுவதற்கு என்ன தயக்கம்? ஹோட்டலில் தங்குபவர்களுக்குப் பொழுது போக என்ன என்ன பேசலாம் என்று அவளுக்கு அத்துபடியாக இருந்திருக்க வேண்டும். போன் மணியைக் கேட்டுத் தூக்கினபோது 'யோஷிகி வந்திருக்கிறார். வரச் சொல்லலாமா?' என்று செய்தி வந்தது. மணி பத்து. ஒன்றரை மணி நேரம் பொழுது போனது தெரியாமல் பேசியிருக்கிறாள் இவள்! ''நண்பர் யோஷிகி வருகிறார்'' என்றேன்.

''நல்லது. அப்படியானால் இன்று ஊர் காட்டி தேவையில்லை.''

''வேண்டாம்.''

யோஷிகி வந்தேவிட்டார். நல்ல வெள்ளை நிறம். மூக்குக் கண்ணாடி.

''நீங்கள்....?''

''ஆமாம்'' என்று பெயரைச் சொன்னேன்.

''நான் யோஷிகி. நேற்று வரமுடியவில்லை. திடீர் என்று அவசர வேலை.''

''பரவாயில்லை.''

''அறை வசதியாக இருக்கிறதா?''

''ரொம்ப.''

''நேற்று என்ன செய்தீர்கள்?''

''ஒரு வழிகாட்டியுடன் சில இடங்களைப் பார்த்தேன்'' என்று பார்த்த இடங்களைச் சொன்னேன்.

''நல்லது. இன்று முழுவதும் நான் சும்மாத் தான் இருக்கிறேன். நீங்கள் எத்தனை நாட்கள் தங்கப் போகிறீர்கள்?''

''இன்னும் இரண்டு நாட்கள்.''

''அப்படியா? நீங்கள் ஊருக்குப் போகிற வரையில் உங்களோடு கூடவே நான் இருந்திருக்க முடியும். இந்தத் தடவை முடியவில்லை. இன்று முழுவதும் இருந்து முக்கியமான இடங்களுக்கு அழைத்துப் போகிறேன். அதற்குப் பிறகு தங்க முடியாது என்று நினைக்கிறேன். பொருட்படுத்த மாட்டீர்களே?''

''ஐயோ! என்ன இது? நான் பார்த்துக் கொள்கிறேன்.''

யோஷிகி நல்ல உயரம் என்றுநான் சொல்ல வேண்டும். அதாவது ஐந்தரை அடி உயரம். குளிரைத் தடுக்க ஜப்பான் முழுவதும் கம்பளிக் கோட்டு, கால் சட்டை, கழுத்துப் பட்டி எல்லாம் அணிகிற பருவம் அது. அவருக்கும் அந்த உடை கன எடுப்பாக இருந்தது. உட்கார்ந்து கொண்டு பேச ஆரம்பித்தார் அவர்.

''ஜப்பானுக்கு எப்போது வந்தீர்கள்?''

''இரண்டு மாதமாயிற்று.''

''ஜப்பான் பிடித்திருக்கிறதா?''

''ஜப்பான் பிடிக்கவில்லை என்று எவனாவது சொன்னால் அவன் பரம அரசிகனாக இருக்க வேண்டும்.''

''ஓ! ரொம்ப நன்றி'' என்று சிரித்தார் அவர்.

''அழகான ஆரோக்கியமான ஜனங்கள் நீங்கள். நான் ஜப்பானில் காலடி வைத்து இரண்டு மாதமாயிற்று. இன்னும் ஒரு நரை மயிரைப் பார்க்கவில்லை. ஒரு சிடுமூஞ்சியைப் பார்க்கவில்லை. எந்த பஸ் ஸ்டாப்பிலும் ஒரு நிமிஷத்துக்கு மேல் காத்திருக்கவில்லை. ஏறின பஸ்ஸிலும் 'சில்லறை இல்லேன்னு இறங்கு சார்'' என்று எந்தக் கண்டக்டரும் கத்தவில்லை. சில்லறை கொடுக்க மறந்து போகவுமில்லை. தெருவிலோ தியேட்டரிலோ யாரும் இரைந்து பேசவில்லை. பத்துக் கல்லூரி மாணவர்கள் சேர்ந்து உல்லாசமாகப் போகும்போதுகூடக் காச்சு மூச்சு என்று தலை கால் தெரியாமல் கத்தவில்லை. மாணவிகளைப் பார்த்துச் சீட்டியடிக்கவில்லை. எந்தச் சாமானும் கெட்டுப் போகவுமில்லை. ஹிபியா பார்க்கில் மத்தியானம் ஆபீஸ் இடைவேளையில் பதினாயிரம் ஜனங்கள் வந்து கையில் கொண்டு வந்த டிபனைச் சாப்பிட்டுவிட்டு அரை மணி இளைப்பாறிவிட்டுப் போகிறார்கள். நானும் போய் உட்கார்ந்தவன் ஒரு பெஞ்சில் எண்ணூற்றுச் சொச்ச ரூபாய் இருந்த பர்ஸ், டயரி எல்லாவற்றையும் மறந்துவிட்டுப்



குட்டிக் கதை



பார்த்த லட்சணம்



விந்தன்

''நீல வானம், நெடுங் கடல், பனி மூடிய மலைச் சிகரங்கள், பழம் உதிரும் சோலைகள், பசுமை நிறைந்த நெல் வயல்கள், பூத்துக் குலுங்கும் செடிகள், கொடிகள், கொட்டும் அருவி, குளிர் தருக்கள்..... ஆஹா! இந்த உலகமே ஓர் அற்புதம், அற்புதம்!'' என்று அந்த வானம்பாடியுடன் சேர்ந்து, அதன் பாட்டுக்கேற்பத் தன் தோகையை விரித்து ஆடிற்று மயில்.

அப்போது, ''அட, குருடர்களே! நீங்கள் உலகத்தைப் பார்த்த லட்சணம் இதுதானா? சரியாய்ப் பாருங்கள், நீங்கள் அளப்பவை யனைத்தும் அதில் தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருப்பது உங்களுக்குத் தெரியும்!'' என்றது ஒரு குரல்.

''யார் அது?'' என்று கேட்டுக் கொண்டே வானம்பாடியும் மயிலும் அந்தக் குரல் வந்த திசையை நோக்கித் திரும்பின.

ஆலமரத்தின் கிளையொன்றில் அதைச் சொன்ன வௌவால் தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருந்தது!

போய்விட்டேன்; மூன்றரை மணிக்கு மேல் ஞாபகம் வந்தது. திரும்பி ஓடி வந்தேன். மூன்று மணிக்குப் பிறகும் அது வைத்த இடத்திலேயே இருந்தது. ரயிலில் போகும் போது யாரும் இங்கு கத்துவதில்லை. சிகரெட் பிடிப்பதில்லை. படிக்கிறார்கள். இல்லாவிட்டால் அவர்கள் கண்ணை மூடிக் கொண்டு விடுகிறார்கள்.''

''போதும்; போதும்'' என்று சிரிக்க ஆரம்பித்தார் யோஷிகி. நான் நெட்டுருப் போட்டு ஒப்பிப்பது மாதிரி சொன்னதுதான் அவருக்குக் கிச்சுக் கிச்சு மூட்டியிருக்க வேண்டும்.

''ஏன் நான் சொல்வது சரியில்லையா? கண்ணால் பார்த்து அநுபவித்ததைச் சொல்கிறேன். உங்கள் மக்களுக்குத்தான் என்ன சுத்தம், என்ன கட்டுப்பாடு, என்ன கலை உணர்ச்சி! காரியங்கள் செய்வதில்தான் எவ்வளவு சுருக்கு! எவ்வளவு நறுவிசு! மேம்புல் மேயாமல் ஆழ்ந்து செயலாற்றக்கூடிய ஒரு பண்பு! என்ன ஓயாத உழைப்பு!''

''ரொம்ப நன்றி. பஸ்ஸுக்காகக் காத்திராதது, கண்டக்டர்கள் இனிமையாகப் பேசுவது எல்லாம் சரிதான். பெண் கண்டக்டர்கள் பேசுவது வேறு எப்படி இருக்க முடியும்? ஆனால் ஒரு பெண் வந்து பஸ்ஸில் ஏறினால் ஓர் ஆணும் எழுந்து இடம் தரமாட்டான் இங்கே! நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?''

''உங்கள் பெண்கள் மிக்க பலசாலிகள்!''

''இல்லை. எங்கள் ஆண்கள் அவ்வளவு எடுத்துக்காட்டாக நடந்து கொள்ளவில்லை என்று அர்த்தம்.''

இப்படிப் பல விஷயங்களுக்கு மாற்றுச் சொல்லிக்கொண்டே வந்தார் யோஷிகி. ஆனால் உள்ளுக்குள் அவருக்குப் பூரிப்பு. 'மிளகுத் தண்ணி' இங்கிலீஷ் அகராதிக்குப் போய்விட்டது என்று நாம் ஆனந்தத்தில் வெடித்துப் போகும்போது ஜப்பான்காரன் தன் சாதனைகளை உலகம் வியப்பதைக் கண்டு பூரிக்க மாட்டானா என்ன? ஆனால் 'நீங்கள் ரொம்பவும் மிகையாகப் புகழ்கிறீர்கள்' என்று யோஷிகி அடிக்கடி வெட்கப்பட்டுக் கொண்டிருந்தார். ஜப்பானே வெட்கப்படுவது போலிருந்தது எனக்கு.

அன்று முழுவதும் கியோத்தோவைச் சுற்றினோம். நாராவுக்குப் போனோம். பௌத்தக் கோயில்கள், ஷிண்டோ ஆலயங்கள், எல்லாவற்றையும் சுற்றினோம். ஓர் இடம் பாக்கி வைக்கவில்லை என்றுதான் தோன்றிற்று. எதைப் பார்த்தாலும் 'எப்படி, பிடிக்கிறதா?' என்று கேட்பார் யோஷிகி.

''ரொம்ப நன்றாக இருக்கிறது.''

''ரொம்ப நன்றி.''

யோஷிகிக்குச் சிரிக்கச் சிரிக்கப் பேசவும் தெரியும். சிற்றுண்டிக் கடைக்குப் போனால் ''அனோ....ஒ....ஒ...'' என்று ஆரம்பித்து ஏதேதோ சொல்லுவார். பரிமாறுகிற பெண் குப்பென்று சிரிப்பாள். கடைக்காரர் சிரிப்பார். இவரும் சிரிப்பார். அப்புறம் மொழி பெயர்த்து எனக்குச் சொல்லுவார். அவருடைய நகைச்சுவை அசட்டுப் பிசட்டு ரகமல்ல. குப்புறத் தள்ளி வயிற்றைக் கிழிக்காது. சிரித்தவுடனேயே அடங்கிவிடுகிற ஹாஸ்யம்தான்!

யோஷிகி கார் கொண்டு வந்திருந்ததால் வேகமாக எல்லா இடங்களையும் பார்க்க முடிந்தது. தொழிற்சாலைகள், கோவில்கள், நாடக அரங்கு, நடன அரங்குகள், மாளிகைகள், கடைகள், மல் யுத்தம் — இப்படி ஒரு பட்டியலாகப் பார்த்து முடித்தோம். நடு நடுவே ஒரு கடையில் நின்று போன் செய்வார் யோஷிகி. வியாபாரி. என்னென்ன காரியங்கள் எனக்காக விட்டு வந்திருக்கிறாரோ! ஒரு மணிக்கு ஒரு முறை கூப்பிட்டு விசாரிப்பார். சிலசமயம் ஐந்து நிமிஷங்கள் தாமதமாகும் ஆள் கிடைக்க. பேச்சு முடிந்ததும் என்னைப் பார்த்து ''ஸாரி, மன்னிக்க வேண்டும்'' என்று சிரிப்பார்.

''பரவாயில்லை. நான் உல்லாச யாத்திரைக்கு வந்தவன். ஒன்றும் குடி முழுகிப் போகவில்லை. எனக்காகக் கவலைப்படாதீர்கள்'' என்று நானும் சொல்லிக் கொண்டே வந்தேன்.

ஹோட்டலுக்குத் திரும்புகிறபோது இரவு மணி ஒன்பதரை.

''எங்கெல்லாமோ உங்களை இழுத்து அலைக்கழித்திருக்கிறேன். ரொம்பவும் களைத்துப் போயிருப்பீர்கள்'' என்று ஆறுதல் கூறினார் யோஷிகி.

''ஒரு களைப்புமில்லை. உட்காருங்கள்'' என்றேன். உட்கார்ந்தார்.

''குருமூர்த்தியிடம் சொல்லுங்கள், இந்தியாவுக்குப் போனதும், நான் ரொம்பவும் விசாரித்தேன் என்று. நான் ஒரு நாள்தான் உங்களோடு கழிக்க முடிந்தது. அதற்காகவும் அவரிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.... நான் மதராஸ் வந்தபோது ரொம்பவும் உதவியாக இருந்தார் அவர். சினிமா ஸ்டுடியோக்கள், மகாபலிபுரம், காஞ்சீபுரம் என்று பல இடங்களுக்கு அழைத்துப் போனார்...ஓகோ! ஜப்பானியக் கதைகள் கூடப் படிக்கிறீர்களா?'' என்று கட்டிலில் கிடந்த புத்தகங்களை எடுத்தார் யோஷிகி.

''ஆமாம். ஹிரோமி கொடுத்தான்.''

''ஹிரோமி?''

''ஆமாம். இங்கே காலையில் இருந்தானே ஹோட்டல் சிப்பந்தி.''

''ஓ! அவனா?... ம்... படித்தீர்களா?''

''பாதி படித்தேன். உங்கள் சித்திரம், பேச்சு இவற்றைப் போலவே இந்தக் கதைகளும் நளினமாக இருக்கின்றன. மூங்கில் இலை மாதிரி ஓர் எளிமை. ஒரு சுருக்கு. 'ஓர் ஆடம்பரமில்லாத அழகு.''

புத்தகங்களைப் பிரித்துப் பார்த்தார் அவர். ''முன்பெல்லாம் படிப்பதுண்டு. இப்போது வியாபாரத்தைக் கவனிப்பதற்கே பொழுது சரியாக இருக்கிறது... இது எப்படி இருக்கிறது?''

''அதுதான் சொன்னேனே. ரொம்ப நன்றாக இருக்கிறது. இந்தக் கட்டுரை மிக மிகப் பிடித்திருக்கிறது எனக்கு. ஜப்பானியர்களுக்குக் கோபமே வராதாம். வந்தாலும் தாறுமாறாகக் கத்த மாட்டார்களாம்.''

யோஷிகி சிரித்தார். ''ஜப்பானிய மக்கள் பொறுமைசாலிகள்'' என்றார். பிறகு தொடர்ந்து பேசினார்:

"உங்கள் நாட்டு யோகம்பற்றிக் கொஞ்சம் படித்திருக்கிறேன். யோகம் என்றால் எது வந்தாலும் ஒரே நிலையில் மனத்தை வைத்திருப்பது இல்லையா? துன்பம் வந்தாலும் இன்பம் வந்தாலும் மனம் ஆடக்கூடாது. பொங்கி வழியவும் வேண்டாம்; சோர்ந்து மடியவும் வேண்டாம்.''

''அதற்காகச் செத்தால் கூடச் சிரிக்க முடியுமா?''

''அழுது மட்டும் என்ன ஆகிவிடப் போகிறது?''

''இப்படி இருந்தால் பைத்திய மல்லவா பிடித்துவிடும்?''

''அழுகிற பைத்தியத்தை விடச் சிரிக்கிற பைத்தியம் பார்க்க அழகாகத்தானே இருக்கும்?'' என்று யோஷிகி சிரித்தார்.

ஹிரோமி வந்தாள். ''ஏதாவது சாப்பிடுகிறீர்களா?'' என்று கேட்டாள்.

நான் பால் கேட்டேன். யோஷிகி பீர் கேட்டார். ''வேறு ஏதாவது வேண்டுமா?''

பதில் சொல்வதற்குள் போன் மணி அடித்தது. ஹிரோமி எழுந்தாள். ''ஹை ஹை... தோஷோ... உங்களுக்குத்தான்'' என்று யோஷிகியிடம் 'வாங்கி'யை நீட்டினாள்.

''வேறு ஒன்றும் வேண்டாம்'' என்றேன் நான்.

ஹிரோமி வெளியே போனாள்.

யோஷிகி போனில் பேசினார். பேச்சு முடிந்ததும் வாங்கியை வைத்துவிட்டு ஐந்தாறு விநாடிகள் சும்மா இருந்தார். கைக் கடிகாரத்தைப் பார்த்தார்.

''என்ன மணியைப் பார்க்கிறீர்கள்?''

''மணி பத்தாகி விட்டது. புறப்பட வேண்டும்.''

''பீரைச் சாப்பிட்டுப் போகலாம்.''

உட்கார்ந்து நிதானமாகப் பீரைச் சுவைக்கிறவர் நிமிஷத்தில் முடித்துவிட்டார்.

ஹிரோமியிடம் பாதிப் பாட்டிலைக் காட்டி, ''சாப்பிடுகிறாயா?'' என்று கேட்டார்.

நன்றி கூறிவிட்டு அவளும் சாப்பிடத் தொடங்கினாள். ஜப்பானிய மொழியில் ஒரு ஐந்து நிமிஷம் அவளோடு பேசினார்.

''ஸோ தெஸ்னே!'' என்று அவள் நடு நடுவே கூறிக் கொண்டிருந்தாள். அதற்கு ''ஓகோ! அப்படியா?'' என்று அர்த்தம் போலிருக்கிறது.

அவள் குடித்து முடிக்கிற வரையில் காத்திருந்து, ''அப்பா?'' என்று புன்முறுவல் செய்தார் யோஷிகி. ''நான் விடைபெறலாமா?''

''ரொம்ப நன்றி..... உங்களோடு மிகவும் உபயோகமாகப் பொழுது போயிற்று. உங்கள் உதவியை மறக்கவே முடியாது.''


''குருமூர்த்தியிடம் சொல்லுங்கள்''என்று எழுந்தார் அவர்.

''இந்தியாவுக்கு எப்பொழுது மறுபடியும் வருவீர்கள்?'' என்று கேட்டேன்.

''வரவேண்டும்'' என்றார்.

புறப்படுமுன் கோட் பையில் கையை விட்டு ஒரு முத்துப் பதித்த தங்கக் கழுத்துப் பட்டி கிளிப் ஒன்றை என் கழுத்துப் பட்டியில் மாட்டினார்.

''அடேடே, என்ன இது?''



''இருக்கட்டும், என் ஞாபகம்'' என்று எழுந்தார். ஹிரோமியிடம் நின்று சொல்லிக் கொண்டார். அவர்கள் பாணியில் குனிந்து வணங்கினார். ஹிரோமி அவருக்குக் கதவைத் திறந்து விட்டு, லிப்டில் அவரோடு இறங்கிப் போய் வாசல் வரை கொண்டு விட்டு வந்தாள். வந்ததும் சொன்னாள். ''அவருக்கு ரொம்ப வருத்தம், உங்களோடு நாளைக்கும் இருக்க முடியவில்லையே என்று. மறுபடியும் மன்னிக்குமாறு என்னைக் கேட்டுக் கொள்ளச் சொன்னார். நீயாவது ஒரு நாள் லீவு எடுத்துக் கொண்டு அவரை இன்னும் பார்க்காத இடங்களுக்கு அழைத்துப் போயேன் என்றார்'' என்றாள்.

''நீ என்ன சொன்னாய்?''

''நாளைக்கு லீவு எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. எனக்கு நாளைக்கு விடுமுறை நாள்தான் என்றேன்.''

''ரொம்ப நல்லதாயிற்று.''

மறு நாள் ஹிரோமியோடு பட்டு நெசவு, பட்டுக் கண்காட்சிகளை யெல்லாம் சுற்ற முடிந்தது.

ஊருக்குக் கிளம்பியபோது, "நான் ஸ்டேஷன் வரையில் வரலாமா?" என்று கேட்டாள் ஹிரோமி.

"நிச்சயமாக."

ஸ்டேஷன் போன பிறகுதான் ஞாபகம் வந்தது. தோல் பையைப் பிரித்து ஹிரோமியின் புத்தகங்கள் இரண்டையும் எடுத்துக் கொடுத்தேன்.

"அது உங்களுக்குத்தான்" என்றாள் ஹிரோமி.

"அப்படியா? ரொம்ப நன்றி. உன் ஞாபகமாக இருக்கட்டும்."

"அது மட்டுமில்லை. இந்த உலகத்தில் எல்லாம் தற்செயலாகத்தான் நடக்கிறது. காரண காரியமே கிடையாது என்று என் சிநேகிதன் சொல்லுகிற வழக்கம். அது எவ்வளவு தூரம் உண்மையோ தெரியாது. நான் அதை நம்புகிறதே இல்லை. ஏனென்றால் கடவுளைக்கூட நம்ப முடியாது போய் விடும், அவன் சொல்வதை நம்பத் தொடங்கினால். ஆனால் இந்த ஒரு சம்பவம் மட்டும் அவன் சொன்னதைச் சரி என்று நிரூபித்து விட்டது" என்றாள் ஹிரோமி.

"எந்தச் சம்பவம்?"

"நீங்கள் வந்தது. நான் இந்தப் புத்தகம் கொடுத்தது. யோஷிகி வந்தது. எல்லாம் தான்" என்றாள் அவள்.

"எனக்குப் புரியவில்லையே?"

"யோஷிகி பழைய பாணி. இல்லாவிட்டால் மனிதன் மாதிரி நடந்து கொண்டிருப்பார். இப்படி ஜப்பான்காரராக நடந்து கொண்டிருக்க மாட்டார்" என்றாள் அவள்.

"அப்படியென்றால்?"

"நீங்கள் வந்த அன்று நாலு மணிக்கு ஹோட்டலுக்கு வந்து உங்களைச் சந்திப்பதாகச் சொல்லியிருந்தாராமே."

"ஆமாம். வர முடியவில்லையாம் !"

"எப்படி வர முடியும்? முதல் நாள் கோபேயில் உள்ள அவருடைய கடை எரிந்து சாம்பலாகி விட்டது."

"என்னது!"

"ஆமாம். கோபே நகரில் அவருக்குக் கிளைக்கடை ஒன்று உண்டு. மின்சாரக் கோளாறினால் தீப்பற்றி, கடையே எரிந்து கருகி விட்டது. கிட்டத்தட்ட இருபதாயிரம் டாலருக்கு மேல் நஷ்டம். அவருடைய தம்பிக்குத் தீப்பட்டு மேலெல்லாம் காயமாம். ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டியதாகி விட்டது."

"என்னது ! ஒன்றுமே சொல்லவில்லையே அவர். என்னோடு சிரித்துச் சிரித்துப் பேசிக் கொண்டு ஊரெல்லாம் சுற்றினாரே!"

"எத்தனையோ தூரத்திலிருந்து நீங்கள் வந்திருக்கிறீர்கள். இந்தச் சேதியைச் சொல்லி உங்களை நோகச் செய்வானேன் என்று இருந்து விட்டார். அதனால்தான் சொன்னேன், அவர் பழைய காலத்து ஜப்பானியராக நடந்து கொண்டு விட்டார் என்று. இப்போதெல்லாம் அப்படித் துக்கத்தை மென்று விழுங்கும் வழக்கம் போய் விட்டது: துக்கமாயிருந்தால் கொஞ்சமாவது அழுது தீர்த்துவிடக் கற்றுக் கொண்டு விட்டார்கள். சந்தோஷம் வந்தாலும் சிரித்துத் தீர்த்து விடுகிறார்கள்."

"சரி, யோஷிகி கடைத் தீயைப் பற்றி உனக்கு எப்படித் தெரியும்?"

"அவர்தான் சொன்னார். அவர் உங்களிடம் விடைபெற்றுப் போகுமுன் போன் வந்ததில்லையா? அப்போது அவர் தம்பிக்கு உடம்பு அதிகமாக இருப்பதாகச் செய்தி வந்தது. இன்னும் இரண்டு, மூன்று மணி நேரம்கூடத் தங்காது என்று அவர் மனைவி அவசரமாக அவரைக் கூப்பிட்டனுப்பினாள். பிரக்ஞை தப்பி விட்டதாம். எத்தனையோ வைத்தியம் செய்தும் பயனில்லையாம். ஏகச் செலவு செய்து பெரிய டாக்டர்கள்கூடப் பார்த்தார்களாம்."

"ஆ!" — எனக்கு மூளை நின்று விட்டது போலிருந்தது: ஆ! ஆ! இதைத் தவிர வேறு பேச நாக்குப் பயன்படவில்லை.

"பிரக்ஞை தப்பி விட்டது என்று தெரிந்த பிறகுதான் இவருக்குத் துக்கம் தாங்கவில்லை. அது வரை எப்படியோ தாங்கிக் கொண்டு விட்டார். இனி மேல் ஒரு வார்த்தைகூட அவன் பேச மாட்டான் என்றார் என்னிடம். அதைச் சொல்லும் போது அவர் நெஞ்சு தழுதழுத்து விட்டது. கடையில் இதைப் பற்றியெல்லாம் உங்களிடம் பிரஸ்தாபிக்கவே கூடாது என்று வேறு என்னை எச்சரித்து விட்டுப் போனார். ஆனால் எனக்கு எப்படிச் சொல்லாமல் இருக்க முடியும் ? இவ்வளவு தூரத்திலிருந்து வந்த ஒரு நல்ல நண்பரிடம்கூடத் தம் துக்கத்தைப் பகிர்ந்து கொள்ளத் தவறி விட்டாரே, பாவி மனுஷன். இவர்களெல்லாம் மனுஷனாக இருக்கக் கூடாதோ?" என்று தூரத்துக் குன்றுகளைப் பார்த்தாள் அவள்.

என்னால் தாங்க முடியவில்லை. தீக்கட்ட புண்ணோடு, நினைவிழந்த இளம் உடல் என் கண்ணை மறைத்தது.

வண்டி வர இருபது நிமிஷம் இருந்தது. நான் பேசவில்லை. ஹிரோமியும் பேசவில்லை.

வண்டி வந்து ஏறும் போது, "கடைசி நேரத்தில் நானும் உங்களைக் கஷ்டப்படுத்தி விட்டேன்" என்று ஓர் இரக்கப் புன்னகையுடன் ஹிரோமியின் குரல் தணிந்து ஒலித்தது.

"நீயும் ஜப்பான்காரியாகத்தான் இருக்கிறாய்" என்று என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

வண்டி இரண்டு நிமிஷம்தான் நின்றது. புறப்பட்டது. நூறு மைல் போய்த்தான் அடுத்த ஸ்டேஷன். வேகமும் மணிக்கு நூற்று நாற்பது மைல். இந்த ஹிக்காரி எக்ஸ்பிரஸ் உலகமே இதுவரை சாதிக்காத சாதனை. ஆடாமல் அசங்காமல் பைன் மரங்களுக்கிடையே கனவு போல் விரைந்தது.

ஜப்பானியர்களின் எத்தனையோ சாதனைகளில் இந்த ரயிலும் ஒன்று. அவர்களுடைய புன்சிரிப்பைப் போல ஆடாமல் அசங்காமல் சீறிச் செல்கிறது. யோஷிகியின் புன்னகை போல் ஒலிக்கிறது அந்த வேகத்தின் அடங்கிய ஒலி.

அத்தியாயம் பதினைந்து

'ஒரு வீர சாகஸக் கதை'

நச்சியும் சபேசனும் மவுண்ட் ரோடு ஹோட்டல் ஒன்றில் வயிறார உண்டு விட்டு வெளியே வந்தனர்.

பக்கத்திலிருந்த ஒரு சினிமா தியேட்டர் வாசலில் அலங்காரமாகக் கட்டியிருந்த பெரிய பெரிய 'பானர்'களை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றான் நச்சி. சபேசனுக்கோ பழைய கவலை மீண்டும் தோன்றி விட்டது. 'இவன் இங்கேயே என்னை விட்டு விட்டுப் போய் விட்டால் இன்றிரவு நான் எங்கே படுப்பது?'

''இப்ப இன்னு பண்ணப் போறே, தம்பி?'' என்று கேட்டு அருகில் வந்தான் நச்சி.

''அதைப் பற்றித் தான்யோசித்துக்கொண்டிருக்கிறேன்...'' என்று கம்மிய குரலில் இழுத்தான் சபேசன்.

''வர்றியா, சினிமாப் பார்க்கலாம்?'' என்றான் நச்சி.

''வேண்டாம், அண்ணே! எனக்கு அதெல்லாம்.....''

''சரி; நான் போவட்டுமா?''

சபேசன் அவனைப் பரிதாபமாகப் பார்த்தான்.

நச்சிக்குச் சிரிப்பு வந்து விட்டது. ''பயப்படாதே, தம்பி! உன்னை விட்டுப்பிட்டு நான் போவ மாட்டேன். வா, போவோம்.''

''எங்கே, அண்ணே?''

ஜீவகீதம்



ஜெகசிற்பியன்

''நம்ப ஊட்டுக்கு!''

''உன் வீட்டுக்கா?''

''ஆமாம்; இனிமேல் நீ படுத்துக்கிறதுக்கு அங்கேதான் ஏற்பாடு பண்ணிடறதுன்னு தீர்மானிச்சிருக்கிறேன்.''

நன்றிப் பெருக்கால் சபேசனின் கண்கள் கலங்கின. மௌனமாக அவனைப் பின்தொடர்ந்தான்.

இரவு மணி ஒன்பதுக்கு மேல் இருக்கும். அவர்கள் நடந்து சென்ற சாலையில் ஜனநடமாட்டம் மட்டுப்பட்டு விட்டது. ஏதோ ஆழ்ந்த சிந்தனையில்லயித்தவன்போல் இடது கையை ஜேபியில் விட்டவாறு வலது கையை வீசிக்கொண்டு நடந்த நச்சி சட்டென்று நின்று, ''தம்பி! இண்ணைக்கு நான் உனக்காக சினிமாப்



பார்க்காமல் வந்துட்டேன். சினிமாப் பார்க்கலேன்னு எனக்குச் சரியாத் தூக்கம் வராது. அதுமாதிரி ஒரு பழக்கம் ஏற்பட்டுப் போச்சு. அதனுலே நான் ரொம்பக் காலத்துக்கு முன்னுடி பார்த்த ஒரு இங்கிலீஷ் சினிமாக் கதையையாவது சொல்றேன், கேட்கிறயா?'' என்ருன்.

சபேசனுக்குச் சிரிப்பதா, அழுவதா என்று தெரியவில்லே. 'ஊம்' என்று தலையாட்டினுன்.

''அப்ப எனக்கு ஏழு அல்லது எட்டு வயசுதான் இருக்கும். அந்த வயசிலே பார்த்த சினிமாக் கதையை இன்னுங்கூட என்னல் மறக்க முடியலே. அது எப்படி மறந்து போவும்?'' என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்ட நச்சி, சபேசனின் பக்கவாட்டில் நடந்தவாறே வெகு உற்சாகமாகச் சொல்ல ஆரம்பித்தான்:

''ஒரு ரயில்வே ஸ்டேஷன். நம்ம சென்ட்ரல் ஸ்டேஷன்னு வைச்சுக்கோயேன். ராத்திரி நேரம். மெயில் வண்டி புறப்படப் போவுது. பெங்களூர் மெயிலுன்னு நினேச்சுக்க. அங்கே ஒரு சின்னப் பையன் சுத்திக்கிட்டு இருக்கிருன். ஊட்டுக்கு அடங்காமல் ஊரைச் சுத்தற பையன் அவன். என்னேப் போலேன்னு வைச்சுக்கோயேன். பில்லே வாங்கின போர்ட்டருங்க அவனே விரட்டியடிக்கிருங்க. ஆனுலும் அவன் அவங்களுக்கெல்லாம் கடுக்காக் கொடுத்துப்பிட்டு அங்கேயே வட்டமிட்டுக்கிட்டு இருக்கிருன். எதுக்கு? பொட்டி படுக்கை தூக்கற கூலி கிடைக்காதான்னுதான். இந்தச் சமயத்திலே ஒரு பொண்ணு வருது. வயசு இருபது இருக்கும். அழகான பொண்ணு. ஆனல் பார்க்க ரொம்பப் பரிதாபமாயிருக்குது. அந்தப் பொண்ணு கையிலே ஒரு பிரம்புப் பொட்டி. வேறே ஒண்ணும் இல்லே!..... இன்னு, கேட்கறயா தம்பி?''

சாலே விளக்கின் வெளிச்சத்தில் சபேசனின் முகத்தைக் கூர்ந்து பார்த்தான் நச்சி. அவன் கதை கேட்டு வருவதாகத் தோன்றியது. ''சரி; கேளு!'' என்றவாறு மீண்டும் தொடர்ந்தான்.

''அந்தப் பொண்ணு டிக்கட் வாங்கிட்டு வர்ருள். பையன் அவளிடம் ஓடருன். அவளும் பொட்டியை அவன் தலே மேலே வைச்சுட்டுப் பின்னுடி வர்ருள். பையன் முன்னுலே போருன். ஒரு ரயில் பொட்டிக்கிட்ட போய் நின்னு திரும்பிப் பார்க்கிருன். பொண்ணேக் காணும். அங்கேயும் இங்கேயும் தேடிப் பார்க்கிருன். அவளேக் காணவே காணும்! அதுக்குள்ளாற வண்டியும் கிளம்பிடுது. பையனுக்கு ஒரே கிலி. இன்னுடா பண்றதுன்னு யோசிக்கிருன். பொட்டி கனமாக இருக்குது. உள்ளே துணிமணி பணம் எதனுச்சும் இருக்குமோன்னு நினேக்கிருன். ஆசை வந்துடறது. சின்னப் பையன்தானே? அதிலும், தானே சம்பாரிச்சுத் தானே துன்னுகிற ஊர் சுத்திப் பையன்; கேக்கணுமா? பொட்டியைத் தூக்கிக்கிட்டு ஓடிப்பிடறதுன்னு தீர்மானிக்கிருன். அப்படியே யார் கண்ணிலும் படாமல் டபாய்ச்சு ஸ்டேஷனேவிட்டு வெளியே வந்துடருன். ரோடு ஜிலோன்னு கிடக்குது. பொட்டியைச் சுமந்துக்கிட்டு வேகமா நடக்கிருன். களேப்பாயிடுது. ஓரிடத்திலே நின்னு தலே மேலிருக்கிற பொட்டியை இறக்கிக் கையிலே புடிச்சுக்கிட்டு ஓரடி எடுத்து வைக்கிருன். திடீர்னு குழந்தை கத்தற சத்தம் கேட்குது. பையன் பயந்து நடுங்கிப் பொட்டியைக் கீழே வைச்சுடருன். அப்பவும் அதே அழற சத்தம்!....; இன்னு தம்பி, கேட்கறயா?''

சபேசனுக்குக் கதை கேட்பதில் சுவாரசியம் ஏறி விட்டது. அவன் ஆவலோடு நச்சியைப் பார்த்தான். ''கேட்டுக்கிட்டுத்தான் இருக்கிறயா? சரி, கேளு!'' என்ற நச்சி கதையைத் தொடர்ந்தான் :

''இன்னுடாது, மாஜிக் பொட்டியாயிருக்குதேன்னு டிகாஞ்சுப் போன பையன் சுத்துமுத்தும் பார்த்துப்பிட்டு மொள்ளப் பொட்டியைத் தொறக்கிருன். பூட்டு ஒண்ணுமில்லே. கவுறு போட்டுக் கட்டியிருக்குது. தொறந்து பார்த்தா.... ஆங், உள்ளே ஒரு பெண் குழந்தை கெடந்து 'கியாங், கியாங்'னு கத்துது! மூணு மாசத்துப் பச்சைக் குழந்தை. அதுக்குப் பக்கத்திலே ஒரு ஃபீடிங் — பாட்டிலில் பால் இருக்குது. வேறே ஒண்ணுமில்லே. இன்னு பண்ணுவான் பையன்? அங்கேயே விட்டுட்டு ஓடிடலாமான்னு நினேக்கிருன். குழந்தை 'வீர், வீர்'னு கத்துது. பையனுக்கு நிக்கவும் முடியலே; ஓடவும் கால் வரலே. பொட்டியைக் கட்டித் தலே மேலே வைச்சுக்கிட்டு வேகமா நடக்கிருன். குழந்தை அழறதை நிறுத்திப்பிட்டுத் தூங்குது. நேரே ஊட்டுக்கு ஓடித் தன்னேடை அம்மாகிட்டே பொட்டியைக் கொடுக்கிருன். நடந்த விஷயத்தையும் சொல்ருன். அவளுக்கு ஒரே எரிச்சல். இருக்கிற தொல்லேயோட இது வேறயான்னு சலிச்சுக்கிருள். ஆனுலும் பச்சைப் பொண்





நல்ல காபி தயாரிக்க புத்தம்புதிய பொடியே ஆதாரம்.

ப்ரூக் பாண்ட் காபி

எப்பொழுதும் புதியது.

மற்ற காபி பொடிகளுக்கும் ப்ரூக் பாண்ட் காபிக்கும் என்ன வித்தியாசம். ப்ரூக் பாண்ட் காபி உள்ள ஒரு பையை திறந்து பாருங்கள் — விஷயம் புரியும். அது அப்போதே அரைத்த காபிக்கொட்டையின் உண்மையான புது மணம் கமழும்.

பொறுக்கி எடுத்த காபிக்கொட்டைகளை பதமாய் வறுத்து, அரைத்து அவைகள் வீசும் இயற்கையான மணத்தை காற்றுபுகாத அழகான ஸெலோபேன் பைகளில் அடைப்பதே ப்ரூக் பாண்டின் தனிச் சிறப்பு வாய்ந்தமுறை. இப்பொழுதே ப்ரூக் பாண்ட் காபி அருந்தி அதன் புத்தம் புதிய பூரணமான மணத்தை அனுபவியுங்கள்.

நீங்களும் ப்ரூக் பாண்டும் சேர்ந்து ஒரு கோப்பை அருமையான காபி தயாரிக்க முடியும். அதன் புதுமையையும் நறுமணத்தையும் ருசித்து அனுபவியுங்கள்.

82/BBC-7A TAM

குழந்தையாச்சே? அவன் மனம் இளகிக் கரையுது. அந்தக் குழந்தையைத் தன் பிள்ளை மாதிரி வளர்க்க ஆரம்பிக்கிறான். அவளுக்கு ஏற்கனவே ஊரில் ரொம்பக் கெட்ட பேரு. அது இன்னும் அதிகமாவுது. எவனோ கள்ளப் புருசனுக்குப் புள்ளையைப் பெத்துக் கிட்டான்னு ஊர் சனங்கள் ஏசிப் பேசறாங்க. அந்தக் கோவத்தை யெல்லாம் அவள் குழந்தைகிட்டே காட்ட, அது படாதபாடு படுது. அவள் வீட்டுக்குப் பக்கத்து வீட்டுலே ஒரு பயில்வான் இருக்கிறான். அவன் ஊருக்குப் பொல்லாதவன். அவளுக்கு நல்லவன். அந்தக் குழந்தை மேலே அவனுக்குப் பிரியம் ஏற்படுது. அதை வளர்க்க அவன் உதவி செய்யறான். அவனுக்குப் பயந்து அவளும் குழந்தையைக் கொடுமைப்படுத்தாமல் வளர்க்கிறாள். புள்ளையைத் தூக்கியாந்தானே, பையன், அவனுக்கும் அதுமேல் உசிரான அன்பு. அதைத் தன் சொந்தத் தங்கச்சி மாதிரியேநேசிக்கிறான். அதுக்காக அவன் எதையும் செய்யத் தயாராயிருக்கிறான்...''

கதை சொல்வதை நிறுத்தி விட்டு வேகமாக நடந்தாள் நச்சி. சுவையாகக் கதை கேட்டுக் கொண்டு வந்த சபேசனுக்கு அதைப் பாதியில் நிறுத்தி விட்டதைப் பொறுக்க முடியவில்லை. ''அப்புறம்? அப்புறம்?'' என்று கேட்டவாறு அவள் பின்னால் சென்றான்.

நுங்கம்பாக்கம் ஏரிப் பகுதி சமீபித்தது. இந்நேரம் வரை வாயே திறக்காமல் மௌனமாக நடந்து கொண்டிருந்த நச்சி, அவனுடைய வீட்டின் அருகில் சென்றதும் சட்டென்றுநின்று, ''இன்னா, பிரதர்! நான் சொன்ன அந்தக் கதை சினிமாக் கதைன்னு நினைக்கிறயா? இல்லே, நிஜமா நடந்ததுன்னு நினைக்கிறயா?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டாள்.

அவன் சொன்ன கதையை விட இப்போது கேட்ட இந்தக் கேள்வியே சபேசனுக்குப் பெரு வியப்பையளித்தது.

ஏதோ சினிமாக் கதை சொல்வதாக ஆரம்பித்துக் கடைசியில் அது கதைதானு அல்லது உண்மைச் சம்பவமா என்ற சந்தேகத்தைக் கிளப்பிச் சபேசனின் மனத்தை ஒரேயடியாகக் கலக்கிக் குழப்பிவிட்டு அமைதியாக முன்னால் நடந்த நச்சி, தன் வீட்டுக் கதவைத் தட்டுவதற்கும் வேதா ஓடி வந்து திறப்பதற்கும் சரியாக இருந்தது.

இவ்வளவு நேரம் கதைப் புதிரில் சிக்கித் தவித்துக்கொண்டு வந்த சபேசன் இந்தக் காட்சியைக் கண்டு அப்படியே திகைத்துத் தடுமாறி நின்று விட்டான்.

'சந்தேகமில்லை; அவள்தான். சில தினங்களுக்குமுன் நகரமன்ற அலுவலகத்தில் பார்த்த அதே பெண்தான். அன்றைய தினம் இவளைப் பற்றி என்ன நினைத்தேனோ — நச்சிக்கும் இவளுக்கும் ஏதோ உறவு இருக்கிறது என்று — அது சரியாகவே ஆகி விட்டது.'

முன்னால் வைத்த காலைப் பின்னுக்கு இழுத்துக்கொண்டான் சபேசன்.

'இந்த நச்சி எப்பேர்ப்பட்டவன்? நிஜமாகவே இவன் நல்ல எண்ணத்தோடு எனக்குப் படுக்க இடம் கொடுக்கத்தான் இங்கு அழைத்து வந்திருக்கிறானா? அல்லது இந்தப் பெண்ணுக்கு நான் அன்று ஒரு ரூபாய் கடன் கொடுத்து உதவியதை எப்படியோ அறிந்து அதைத் தவறாக எடுத்துக் கொண்டு அவளுக்கெதிரிலேயே என்னை அவமானப்படுத்திப் பழிவாங்கத் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறானா?...

அதற்காகத்தான் அன்றைய மறுதினம் இவள் என்னை அவனிடம் காட்டிக் கொடுப்பதற்காக அந்த நகரமன்ற அலுவலகத்துக்கு வந்து காத்திருந்தாளோ? வாங்கிய கடனைத் திருப்பித் தர வந்திருப்பாள் என்றல்லவா பைத்தியக்காரத்தனமாக நினைத்து விட்டேன்!'

பீதியால் சபேசனின் உடல் உதறலெடுத்தது. அங்கிருந்து ஓடி விடலாமா என எண்ணி, ஓடவும் காலெடுத்தான்.

''பார்த்தியா, பிரதர்! இதுதான் நம்ம பங்களா! எப்படி இருக்குது? சும்மா வாயாலே ஊதினால்கூடசெவுரெல்லாம் குப்புற விழுந்து

30ம் பக்கத்தில் உள்ள புதிருக்கு விடை :



அமெரிக்காவில் கர்ஸ் ஜோரா பாட்டர்ஸன் கண்டு பிடித்துள்ள புதுவகை தேகப் பயிற்சி களில் சிலதான் இவை. அழகாகவும் இளமை குன்றாமலும் முகத்தை வைத்திருக்க இந்தப் பயிற்சிகள் உதவுமாம்.

ஆதாரம்: ''டைம்''

படுத்துக்கும் போல இருக்குது இல்லையா? அது மெய்தான்! செவுரு, கதவுமேலெல்லாம் கையைக் காலை வைக்காமல் பார்த்துச் சாக்கிரதையா உள்ளே வா!'' என்று குறும்பாகக் கூறிக்கொண்டே அவனைத் திரும்பிப் பார்த்துச் சிரித்த நச்சிஅமர்த்தலாக வீட்டினுள்சென்றான்.

கதவைத் திறந்ததும் அங்கு சபேசனைக் கண்ட வேதாவுக்கு ஒரே வியப்பு, மகிழ்ச்சி, பரபரப்பு! அந்த ஒரு விநாடி நேரத்தில் உலகத்துப் பெண்களின் அழகெல்லாம் உருண்டு திரண்டு ஓடி வந்து அவள் முகத்தில் குடியேறினாற்போல் அத்தனை பவித்திரமான அழகொளி வீசி நின்றவள், மறு கணமே ஏதோ பயப் பிராந்தியால் உலுக்கப்பட்டவள் போல் முகம் வெளுத்துச் சிறுக்கக் கதவுக்குப் பின்னால் ஒளிந்து மறைந்துகொண்டாள்.

'அன்றைக்கு இவனிடம் ஒரு ரூபாய் கடன் வாங்கியதை இது வரையில் நான் திருப்பிக் கொடுக்காததால் அவ்விஷயத்தை இன்று என் அண்ணா நச்சியிடம் சொல்லி விட்டிருப்பானோ? அதனை நேரில் விசாரித்து என்னைத் திட்டிக் கண்டிக்கத்தான் இவனையும் கூடவே அழைத்து வந்திருக்கிறானோ?'

நடுங்கி ஒடுங்கி நின்ற வேதா சடாரெனப் பாய்ந்தோடி அடுப்புக் கட்டைச் சுவருக்குப் பின்னால் முடங்கி உட்கார்ந்து கொண்டாள்.

''இன்னா தம்பி, வாசலிலேயே நின்னுப்பிட்டே? சும்மா வா, இது நம்ப ஊடுதான்!'' என்று வெளியே எட்டிப் பார்த்துச் சொன்ன நச்சி, ''அம்மோவ்! எங்கே இருக்கிறே?'' என்றவாறு சுற்றுமுற்றும் பார்த்தான்.

புறக்கடைக் கொட்டகையில் மாட்டுக்கு வைக்கோல் பிரித்துப் போட்டு விட்டு அப்போதுதான் உள்ளே வந்த கன்னியம்மாள் தன் மகனை ஆவலோடு ஒரு கணம் ஏறிட்டுப் பார்த்து உடனே முகத்தைக் கடுகடுப்புடன் வைத்துக் கொண்டு அடுப்படியை நோக்கி நடந்தாள்.

''இன்னா, யம்மா! தலையைக் கிலையை நோவுதா?'' என்று மிகவும் அக்கறையாக விசாரிப்பவன்போல் கேட்டுக் கொண்டே ஒரு கோணல் புன்னகை பூத்தான் நச்சி. ''ஓ,... அண்ணைக்கு மாடத்திலே வைச்சிருந்த எட்டணாவை அபேஸ் பண்ணிக்கிட்டுப் போயிட்டேனென்னு அம்மாவுக்கு என்மேல் ரொம்பக் கோவம்போல இருக்குது!'' என்று நகைத்தான்.

சட்டென்று திரும்பி அவனை எரித்து விடுபவள்போல் வெறித்துப் பார்த்த கன்னியம்மாள், ''சும்மா கெடடா, கஸ்மாலம்! வாயைக் கிண்டினே, கெட்ட ஈசாமை வந்துடும், ஆமாம்!'' என்று குமுறிக் கூவினாள். ''வந்தியா, துன்னியா, படுத்தியா — அத்தோடு எய்ந்திருச்சுப் போயிடு! அதுக்கு மேலே, 'யம்மா, கிம்மா'ன்னு என்னைக் கூப்பிடாதே!''

நச்சி அவளை 'உர்'ரென்று முறைத்துப் பார்த்து, ''இன்னா, அந்த எட்டணா பிசாத்துக் காசுக்கு என்னமோ ஒரேயடியாச் சிடாய்க்கிறியே? இந்தா, பத்து ரூபா!'' என்று அலட்சியமாகக் கூறிக்கொண்டே ஜேபியிலிருந்து ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து அவளிடம் நீட்டினான்.

கன்னியம்மாளின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. ஆனாலும் அதை வார்த்தையிலே காட்டிக் கொள்ளாமல், சலிப்புடன் அந்த ரூபாயை வாங்குவது போல் வாங்கிக்கொண்டு திரும்பி, ''ஏண்டி, வேதா! அண்ணாத்தை வந்திருக்கிறானே, அடுப்பைப் பத்த வைச்சு உலை போடறதுதானே? சீக்கிரமாப் போட்டுச் சோத்தை வடி; அதுக்குள்ளாற நான் கடைத் தெருவுக்கு ஓடிக் குழம்புச்சாறுக்கு எதனாச்சும் பார்த்து வாங்கியாறேன்'' என்று சுறுசுறுப்புடன் கூறியவாறு போய், சிட்டம் கட்டி மங்கலாக எரிந்து கொண்டிருந்த சிறிய விளக்கின் திரியை ஏற்றிவிட்டாள். அந்த வீடு இப்போது ஒளி மிகுந்து கலகலப்பாகியது.

''அம்மாவ்! எனக்குச் சோறு ஆக்கப் போறே? சரிதான் போ! இப்ப மணி இன்னா தெரியுமா? பதினொண்ணு. கடை கண்ணியெல்லாம் சாத்தியாச்சு. நான் ஓட்டல்லே சாப்பிட்டுட்டு வந்துட்டேன்'' என்றபடி தன் சட்டையைக் கழற்றி ஆணியில் மாட்டி விட்டுத் திரும்பிய நச்சி, ''பிரதர்! இன்னுமா நீ வெளியே நிக்கறே?'' என்று கேட்ட அதே சமயம், தன்னை மீறிய அச்சத்துடன் தயங்கித் தயங்கி உள்ளே வந்தான் சபேசன்.

''அம்மா, இவனைப் பாத்தியா? இவன் என்னோட பெஸ்ட் ஃபிரண்ட்! நேம், நடன சபேசன்....'' என்று நச்சி சொல்லிக் கொண்டிருக்கும்போதே ''ஓ..... ஐ ஸீ!'' என்றாள் கன்னியம்மாள்.

''இன்னா, யம்மா! பரங்கிக்காரி ஊட்லே வேலை செஞ்ச ஞாபகம் வந்துடுச்சா?'' என்று கேட்டுத் தன் தாயைச் சிரிப்பிலாழ்த்திய நச்சி, தொடர்ந்து சொன்னான்: ''பர்மாவிலே என்னமோ சக்கிமுக்கியாகி

நம்ம சனங்களெல்லாம் ஓடியாறாங்க இல்லையா? அப்படி ஓடியாந்தவங்களிலே இவனும் ஒருத்தன். தனியா வந்துட்டான். இந்த ஊர்லே அவனுக்கு மக்கள் மனுசான் யாருமில்லே. போக்கிடம் தெரியாமல் தவிச்சான்..... பொழைக்க ஒரு வழியைக் காட்டி விட்டேன். இப்ப வயித்துப்பாட்டுக்குக் கவலை இல்லே. ஆனால் படுப்பதற்குத்தான் இடம் கிடைக்காமல் திண்டாடுறான். கோட்டைக்குப் போற ரோட்டிலே நம்ம மாதவன் நாயர் டீக் கடை இல்லே, அங்கே கொஞ்ச நாள் படுத்துக்கிட்டு இருந்தான். அந்தப் பாவி மகன் நாயர், 'கலக்கல்' வித்துக் காப்பு மாட்டிக்கிட்டு 'உள்ளே' போயிட்டான். அதனாலே நேத்து ராத்திரி பூராவும் ஊரைச் சுத்திச் சுத்தியே நேரத்தைப் போக்கினானாம், பாவம்! அதான் நம்ம ஊட்டுக்குக் கூட்டியாந்துட்டேன். அவனோட நிலைமை சரிப்பட்டு எங்கனாச்சும் அறைகிறை எடுத்துக்கிற வரையில் இங்கேயே படுத்துக் கிடட்டும். எல்லாம் கொஞ்ச நாளுக்குத்தான். புள்ளாண்டான் ரொம்பக் கெட்டிக்காரன். சீக்கிரமா தேறிப்பிடுவான்.'' — தன் தாயின் முகட்டுக் குணத்தை நன்கு அறிந்திருந்த அவன், அவளிடம் ஏதாவது காரியம் சாதிக்க வேண்டுமென்றால் இப்படித்தான் விஷயத்தை வெகு நைச்சியமாக விளக்கிச் சொல்வது வழக்கம்.

''ஐயோ, பாவம்! வா நைனா, உக்காரு!'' என்று மிகவும் அன்போடு சபேசனை வரவேற்ற கன்னியம்மாள் ஒரு கந்தல் பாயை எடுத்துப் பிரித்துப் போட்டாள். தன் மகன் கொடுத்த பத்து ரூபாய் அவளது புற மனத்தின் முட்களை நீக்கி, அடி மனத்தின் மென்மையான இதழ்களை அப்போது மலர்த்தி விட்டிருந்தது.

கூச்சமும் தயக்கமுமாக உள்ளே வந்த சபேசன் சுவரோரம் தயங்கிய படியே நின்றான்.

அவன் முகத்தை விளக்கொளியில் கூர்ந்து கவனித்த கன்னியம்மாள்,



''அப்பா! உங்க மாப்பிள்ளைக்கு 'இண்டர்வியூ' கார்டு வந்திருக்காம்; ஆபீசு போக ஒரு ஸ்கூட்டர் வாங்கித் தரச் சொன்னாரப்பா!''

''ஏதனாச்சும் துன்றியா, நைனா?'' என்று பரிவுடன் வினவினாள்.

''வேண்டாம்மா! நான் வரும்போதே ஹோட்டலில் சாப்பிட்டு விட்டேன்'' என்றான் சபேசன் மெல்லிய குரலில். அந்த விநாடி அவன் வாயெல்லாம் ஏதோ இனிப்பதுபோல் அவனுக்குத் தோன்றியது. நீண்ட நெடுங் காலத்துக்குப் பின் 'அம்மா' என்ற சொல் தன் வாயிலிருந்து வெளிப்பட்டதாலேயே அத்தகைய இனிமை அங்கு சுரக்கிறது என்பதை உணர்ந்து கொண்ட அவன், அந்தச் சொல்லை மீண்டும் ஒரு முறை ஓசையின்றித் தனது நாவிலே புரள விட்டு அதன் இனிமையை ரசித்துச் சுவைத்தான். அவனது கண்கள் இலேசாகக் கலங்கிப் பனித்தன.

அடுப்படிக் கட்டைச் சுவருக்குப் பின்னால் ஒடுங்கி உட்கார்ந்திருந்த வேதா மெல்லத் தலைதூக்கி அவனைப் பார்த்தாள். கருமேகப் படலத்துக்குக் கீழே முளைத்திருந்த பிறை நிலவின் அடியில் இரு நீலோற்பல மலர்கள் அசைந்தாடுவதுபோல் விளங்கிய அவளது அழகிய கண்களை அவன் வியப்புடன் சந்தித்தான்.

''ஏண்டா, பையா! அடுப்பிலே வெந்நீர் கிடக்குது; உடம்புக்கு ஊத்திக்கிறயா?'' என்று தன் மகனை நோக்கிக் கரிசனமாகக் கேட்டாள் கன்னியம்மாள்.

''ஊத்திக்கிட்டாப் போச்சு!'' என்றவாறு புறக்கடைக்குப் போனான் நச்சி. தேங்காய் நார், அரைப்புப் பொடி சகிதம் வெந்நீர்ப் பானையைத் தூக்கிக் கொண்டு அவனைப் பின்தொடர்ந்தாள் தாயார்க்காரி.

தனியே சுவரில் சாய்ந்து நின்றவாறு அங்குமிங்குமாகத் திருதிருவென விழித்துப் பார்த்துக் கொண்டிருந்த சபேசன், ''ஏன் நிற்கிறீர்கள்? உட்காருங்களேன்!'' என்ற இனிய மென் குரலைக் கேட்டுச் சட்டென்று நிமிர்ந்தான். இவ்வளவு நேரம் கட்டைச் சுவருக்குப் பின்னால் உட்கார்ந்திருந்த வேதாதான் இவ்வாறு கூறி நாணப் புன்முறுவலுடன் எழுந்தாள். **(தொடரும்)**

அன்னை

கோமதி சுப்பிரமணியம்

மணி மூன்றடிக்கப் போகிறது!

ஜூன் மாதத்துக் கடும் கோடை எங்கும் எதிலும் பூரணமாய் ஆட்சி செலுத்திக் கொண்டிருக்கும் வேளை.

தன்னையே நான் காத்துக் கொள்ளக் கருதியது போல், நித்தியானந்தா ஆஸ்பத்திரிக் கட்டடம் குளிர் தரும் நிழல் மரங்களைத் தன்னுள் அடக்கி, தனக்குள் குளுமையை ஏற்றிக் கொண்டிருந்தது. அவற்றின் கற்காப்புக்கும் அப்பால் புகுந்து தன் ஆதிக்கத்தை நிலைநாட்டக் கருதுபவை போல் சூரியனின் ஒளிக் கதிர்கள், மரங்களின் இடைவெளி வழியே பாய்ந்து தன் உஷ்ணத்தைக் கட்டடச் சுவர்களின்மீது பாயவிட்டு உள்ளே படுத்துப் புழுங்கும் வியாதியஸ்தர்கள் மேனியிலும் உறவாடத் தொடங்கியது.

ஜன்னல் ஓரமாக அகப்பட்டுக் கொண்டவர்களுக்கு வெயில் வாதனை அதிகம். ஆனால் மாலைப் போதிலோ, மற்றப் பொழுதிலோ சாய்ந்த நிலையிலே படுக்கையில் அமர்ந்து விழியோடு பார்வையை ஓட விட்டால் எத்தனை யெத்தனையோ வெளியுலகக் காட்சிகளெல்லாம் கண்ணுக்கு விருந்தாய்க் கிடைக்குமே.

சரியாக மணி மூன்று.

பணிப் பெண்களின் பூட்சொலி நடமாடத் தொடங்கி விட்டது. வெந்நீர் பேஸினும் டவலுமாக அவரவர் படுக்கையண்டை கொண்டு போய் வைத்தார்கள்.

எழுந்திருக்கச் சக்தியுள்ளவர்கள் தாங்களே எழுந்து சுத்தம் செய்து கொள்ளத் தொடங்கி விட்டார்கள். இயலாதவர்களுக்கு நர்சுகள் சுத்தம் செய்து விட்டார்கள். ஆறிய வெந்நீரிலே சோப்பைக் குழைத்து உடம்பிலே துடைத்துக் கொள்ளும் போது அதுவரை புழுங்கிய வெப்பத்தை அடக்கும் ஆசுவாசத் தன்மை உண்டாகிறது. தலையை வாரி முடித்து இரட்டையாகப் பின்னை விட்டு, பவுடர் பூசி, படுக்க வைத்து விடுகிறார்கள். படுக்கைகள் சுருக்கமில்லாமல் இழுத்து விரிக்கப்பட்டு வெள்ளை வெளேரென்ற போர்வைக்குள் நோயாளிகளின் உடம்பைப மறைத்து, முகத்தை மட்டும் பார்க்கும் நிலையிலே படுக்க வைத்து முடித்ததும் தங்கள் வேலைகள் பூரணமாய்



முடிந்திருக்கின்றனவா என்பதை ஹாலுக்கு வரக்கூடிய வாசலில் நின்று ஒரு முறை படுக்கை முழுவதையும் சுற்றிப் பார்த்து விட்டுப் போய் விடுகிறார்கள் பணிப்பெண்கள்.

அயல்நாட்டிலிருந்து வந்து தொடங்கி நல்ல முறையிலே நற்பணியாற்றி வரும் ஒரு பெண்ணின் நிர்வாகத் திறமையினால் அந்த மருத்துவமனை இயங்கிக் கொண்டிருக்கிறது. அங்கு வரும் பெண் நோயாளிகள் நித்ய ஆனந்தமான நிறைவோடு கூடிய சிகிச்சைகள் பெற்றுச் செல்கிறார்கள். அழுகையோடும், புலம்பலோடும் ஆஸ்பத்திரிக்குள் நுழைபவர்கள் தொழுகையோடும் துதி பாடியும் அங்கிருந்து விடைபெற்றுச் செல்வார்கள்.

மணி நான்கு!

ஆஸ்பத்திரி வெளி கேட் முழுவதுமாகத் திறந்துகொண்டு, வெளியே யிருந்த ஆவலுடன் காத்து நிற்கும் ஆசை முகங்களுக்கு,

மூவர்







அன்பு மனங்களுக்கு வழி விட்டு விலகிக் கொள்கிறது.

கைகளிலே, பார்க்கப் போகும் நோயாளிகளுக்கான உணவுகளைச் சுமந்து கொண்டும், அவர்களோடு பேச வேண்டிய நினைவுகளை நெஞ்சிலே நிறைத்துக் கொண்டும் ஒருவரை யொருவர் முந்தியும் பிந்தியுமாக உள்ளே நுழைகிறார்கள்.

வார்டு நம்பர் நாலு —

ஏழாம் நம்பர் படுக்கைக்கு உரிமையானவள் சாவித்திரி. வயது இருபத்தி ஐந்து இருக்கலாம். முகத்திலே வியாதியின் வேதனை; இதயத்திலே வீட்டின் நினைவுகளால் எழுகின்ற ஏக்கம்.....

இரண்டும் பின்னிப் பிணைந்து, வாலிபத்தின் துடிப்பை மடக்கி விட்டிருந்தன.

படுக்கையில் முழுமையாய்ப் படுக்க முடியாத நிலையிலே, முதுகுக்குப் பின்னால் முட்டுக் கொடுத்திருந்த ஸ்பிரிங் மரப் பலகையின் மீது சாய்ந்தவாறு இருக்கிறாள். அவளது பார்வை அடிக்கடி கண்ணாடி ஜன்னல் வழியாக வீதிப் பக்கத்தைத் துழாவுகிறது.

வண்டிகளிலும், ரிக்ஷாவிலும், நடந்தும் வருபவர்கள் வந்துகொண்டேயிருந்தார்கள்.

நேரம் சிறிது சிறிதாக நகர்கிறது.

சாவித்திரியின் மனத்திலே சோகம், இலேசான நிழல்போல் படருகிறது.

ஒரு வேளை இன்று வராமலே இருந்து விடுவாரோ.....ஒரு நாளா, இரண்டு நாட்களா, இருபத்திரண்டு நாட்களாக இப்படிச் சோற்

காவடி தூக்கி அலைய விட்டிருக்கும் சாதனை.....

சே.... என்ன வாழ்க்கை....

மனத்தின் புழுக்கம் முகத்தில் முத்து முத்தாய் வியர்வைத் துளிகளை உதிர்க்கிறது. பக்கத்தில் வைத்திருந்த டவலால் முகத்தை அழுத்தத் துடைத்துக் கொண்டாள் சாவித்திரி.

மீண்டும் அவள் பார்வை வீதிப் பக்கம் திரும்புகிறது.

திரும்பிய கண்களில் தேன் சிந்தும் கனிவு.

அதோ அவர் வந்து விட்டார்.

வேகமாய் வெளி கேட்டைத் தாண்டி உள்ளே புகுந்த சைக்கிள் அவருடையதுதான்.

சாவித்திரியின் பார்வை வீதி முனையினின்றும் பிரிந்து பார்வையாளர்கள் வரவேண்டிய பாதையிலே பாய்ந்தது.

இரவு உணவும், பழங்களும் அடங்கிய பையைத் தோளில் தொங்க விட்டு, காப்பி பிளாஸ்கை ஒரு கையில் பிடித்தபடியே வேகமாய் விரைந்து வருகிறான் பார்த்திபன்.

சற்று நேரமாகி விட்டதை ஈடு கட்டச் சைக்கிளை வேகத்துடன் அழுத்தி வந்த முகமுகப்பு இன்னும் அடங்கவில்லை.

கணவரின் உருவத்தைக் கண்களுக்குள் தேக்கிக் கொண்டு, படுக்கையிலிருந்தபடியே, பக்கத்திலே உள்ள முக்காலியை இழுத்து ஆசனம் அமைத்துக் கொடுக்க முற்படுகிறாள்.

''நீ செய்யத் துடிக்கும் பணிவிடையெல்லாம் வீட்டுக்கு வந்தப்புறம் செய்துகொள்ளலாம் சாவித்திரி. இப்பொழுது நானே எடுத்துப் போட்டுக்கொள்ளுகிறேன். ஆமாம், உன் உடம்பு எப்படியிருக்கிறது......?''

''எப்படி யிருக்கிறது என்று கேட்காதீர்கள், ஏன் இருக்கிறாய் என்று கேளுங்கள்.''

தான் இப்படியோர் அவலநிலைக்கு ஆளாகி விட்டோமே என்ற துடிப்பு.

கண்களிலே நீர் முட்டி மோதி நிற்கிறது.

''சே.... கண்களைத் துடைத்துக் கொள், சாவித்திரி. பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள்..... பாபு உன்னைவிடச் சமர்த்தாக இருப்பான் போல் இருக்கிறதே....''

பாபு என்ற சொல் அவள் நெஞ்சிலே பாய்ந்து நினைவிலே துடிப்பைத் தருகிறது.

''பாபு.... எப்படி இருக்கிறான்?''

''உன்னைவிடக் கோடி மடங்கு சமர்த்தாக இருக்கிறான். இப்பொழுதெல்லாம் அவன் உன்னைப் பற்றி நினைப்பதேயில்லை....''

பிளாஸ்கிலிருந்த காப்பியை ஊற்றி அவளிடம் நீட்டினான். ''சாப்பிட்டு விடு சாவித்திரி! சூடு ஆறிப் போகுமுன் சாப்பிடு. அம்மாவுக்குத்தான் மிகவும் குறை, உன்னைப் பார்க்க வர முடியவில்லையே என்று, அவள் வந்தால்.''

''வந்தால்.....?''

''பாபுவும் அவளைத் தொடருவானல்லவா ? அவனை ஏமாற்றிவிட்டு வர அம்மா விரும்பவில்லை.''

''ஏன் ஏமாற்ற வேண்டும் ? அவனையும் அழைத்து வருவதுதானே......?''

''என்ன சாவித்திரி......''

சிரிக்கிறான்.

''சரி, சரி..... சூடு ஆறிப் போகுமுன் காப்பியைக் குடி. பத்து நிமிஷங்கள் தாமதமாகிவிட்டதேயென்று எப்படிப் பறந்து வந்தேன் தெரியுமா.....?''

''எதற்காக? என்னை அழ விடுவதற்காகத் தானே.....?''

''நீயாக அழுகையை வருத்திக் கொண்டால் நானென்ன செய்ய முடியும் சாவித்திரி? அம்மா என்ன சொல்லி அனுப்பினாள், தெரியுமா? 'அவளால் பசி தாங்கவே முடியாதடா. போனதும் கடக்கடக் காப்பியைக் குடிக்கச் சொல். களைப்பு அடங்கும்' என்று சொன்னாள்.....''

தனது வயிற்றுப் பசியை மட்டும் தாயும் பிள்ளையும் பெரிதாக மதிக்கிறார்கள். ஆனால் தனது மனப் பசியை – பெற்ற பிள்ளையைக் காண வேண்டும் என்ற பாசப் பசியை—உணராது நகைக்கிறார்களே என்று அவள் நெஞ்சு பொருமுகிறது.

கப்பிலிருந்த காப்பியை மடக் மடக்கென வாயில் ஊற்றிக் கொண்டாள்.

காப்பியை விழுங்கியதோடு தனது பேச்சையும் கலகலப்பையும் சேர்த்து விழுங்கிக் கொண்டாள்.

''வேறு என்ன விசேஷம் சாவித்திரி.... ஒன்றுமே பேச மாட்டேனென்கிறாயே...''

சிறிது நேரமாவது வியாதியையும் வியாதிப் படுக்கையையும் ஆஸ்பத்திரிச் சூழ்நிலையையும் மறக்கும்படியாகக் கலகலப்பாகப் பேச வைக்க வேண்டும் என்ற குறிப்போடு தான் வருவான் பார்த்திபன்.

வந்ததும் வராததுமாய்ப் பாபுவைப் பற்றிய பேச்சைத் தொடங்கி அதிலிருந்து தொடர்ந்து மௌனத்தை அனுஷ்டித்து வீட்டுக்குப் புறப்படும் போது, மாளாத சுமையுடன் புறப்பட்டுப் போகச் செய்து விடுகிறாளே, தினமும்.

பார்த்திபனின் பார்வை நாற்புறமும் சுழலுகிறது.

கடிகாரத்தின் முட்கள் ஐந்தரையை நெருங்குகின்றன. ஆரஞ்சு மணமும், காப்பி மணமும், ஒருசிலருக்காகக் கொண்டு வந்திருந்த பகோடா, பஜ்ஜியின் மணமும் நிறைந்திருந்த ஹாலிலே மருந்தின் நெடி வீசத் தொடங்குகிறது.

நர்சுகள் தங்கள் பணிக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதின் முன்னோடி அந்த நெடி. கைக்கடிகாரத்தைத் திருப்பிப் பார்க்கிறான் பார்த்திபன்.

''நான் கிளம்புகிறேன் சாவித்திரி.... போகிற வழியில் டாக்டர் அறைக்குப் போய் உன் நிலையைக் கேட்டுச் செல்லுகிறேன். உனக்கு ஏதாவது தேவையிருந்தால் சொல்லியனுப்பு. அம்மா கேட்டுக் கொண்டு வரச் சொன்னாள்.....''

'உங்கள் அம்மா சொல்லாதது என்ன தான் இருக்கப் போகிறது' என்று பட்டெனக் கேட்கத் துடித்தது.

நாவை அடக்கிக் கொண்டாள்.

''எனக்கு எதுவுமே தேவையில்லை.''

எத்தனை நிஷ்டூரத்தைக் கொட்டிக் கவிழ்க்க முடியுமோ அத்தனையும் கொட்டித் தீர்த்தான் அந்த ஒரு சொல்லாலே.

அவன் மனத்திலே ஏதோ ஓர் உறைப்பு.

''சாவித்திரி! இதோ பாரம்மா. வியாதியஸ்தர்கள் தைரியமாக இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். மனத்திலே தெம்பிருந்தால்தான் உடம்பிலே தெம்பு பிடிக்கும்; உடம்பிலே தெம்பு பிடித்தால்தான் உன் கால்கள் முன்போல் பலம் பெற்று எழுந்து நடமாட முடியும்.....''

''என்றால் முன்போல் எழுந்து நடமாட முடியுமா அத்தான்.....'' கண்களிலே நீர் கோத்துக் குமுறிக் குமுறி அழுதாள்.

''தனிமை உன்னை மிகவும் கோழையாக்கி விட்டது சாவித்திரி. இதோ சுற்றியிருப்பவர்களைப் பார். உன்னைப் போல் எத்தனை சகோதரிகள் வீட்டைத் துறந்து.... புருஷன் பிள்ளைகளைத் துறந்து.....''

''போதும், போதும். 'உற்றார் உறவைத் துறந்து....' என்று ஒரேயடியாய் அடுக்கப் போகிறீர்கள். சரி நீங்கள் போகலாம்.....''

சற்று முன் குழந்தை போல் குலுங்கியழுத சாவித்திரியா இத்தனை தீர்க்கமாகப் போக விடை கொடுக்கிறாள் என்று ஆச்சரியமாக இருந்தது. சற்றே அவன் திரும்பிப் பார்த்தானானால், அவன் ஆச்சரியப்பட அவசியமே இருக்காது.

நர்ஸ் ராஜகாந்தம் தர்மாமீட்டருடன் வந்து சேர்ந்தாள் டெம்ப்ரேச்சர் குறிக்க.

பேச முடியாதபடி தர்மாமீட்டர் வாயிலே பொருத்தப்படுகிறது. 'சைட்' பாக்கெட்டுக்குள்ளிருந்த கடிகாரத்தை இழுத்து இடது கையில் ஏந்தியவாறு வலது கையால் நாடித் துடிப்பை அளந்து முடித்தாள்.

''இம்ப்ரூவ்மெண்ட் இருக்கிறது சார், சாவித்திரியின் நிலையிலே. ஆனால் நீங்கள் கொஞ்சம் தைரியம் சொல்லி விட்டுப் போங்கள் உங்கள் மனைவிக்கு. இருந்தாற்போலிருந்து அழ ஆரம்பித்து விடுகிறாள் குழந்தை போல.''

பார்த்திபன் சிரித்துக் கொண்டான்.

''உங்களுக்கு நான் சொல்லி விட்டுப் போக நினைத்தேன், ஸிஸ்டர்! நான் வந்த நேரம் முதல் இதுவரை அழுது கொண்டுதான் இருந்தாள். இதோ பாருங்கள், என் கைக்குட்டை நனைந்து விட்டது.''

''போதும்.... எல்லோருமாகச் சேர்ந்து என்னைக் குழந்தையாக்கி விடாதீர்கள். நான் ஒரு தாய். மனிதர்கள் நிறைந்த பெரிய குடும்பத்தை நிர்வகிக்கக் கூடிய — நிர்வகித்து வந்த பொறுப்புள்ள பெண் என்பதையே மறந்து பேசாதீர்கள்.....''

திடீர் திடீரென்று சாவித்திரியின் மாறும் குணப் போக்கின் காரணம் பார்த்திபன் அறிவான்; நர்சும் அறிவாள். அவளுக்கு வந்த வியாதி நரம்பைப் பற்றியது. அதை அறிந்த நர்ஸ் மெல்ல அடுத்த படுக்கைக்கு நழுவி விட்டாள்.

''பொறுப்பான கண்ணல்லவா சாவித்திரி.. அதனால் சற்றுப் பொறுமையோடேயிரு. சீக்கிரமே உன்னை வீட்டுக்கு அழைத்துப் போய் விடுகிறேன். சரிதானே....?''

பார்த்திபன் எழுந்து விட்டான்.

கடிகாரத்தில் மணி ஆறு முறை அடித்ததைத் தொடர்ந்து, 'கணீர் கணீ'ரெனப் பார்வையாளர்களை வெளியேற்ற அறிவிப்பு மணியும் பிறக்கிறது.

சற்று முன்பு ஜன சமுத்திரத்தின் ஆரவாரப் பேரொலியில் ஆர்ப்பரித்த ஆஸ்பத்திரிக் கட்டடம் ஆழ்ந்த அமைதியைத் தனதாக்கிக் கொள்கிறது.

வார்டின் கோடியிலே மாட்டியிருக்கும் சுவர்க் கடிகாரத்தின் டிக் டிக் ஒலியும், வார்டு நர்சுகளின் பூட்சொலியும் தவிர வேறு எந்தச் சத்தமும் இல்லை. நோயாளிகள் ஒவ்வொருவரின் நினைவும் அவரவர்கள் படுக்கையில் இல்லை. அவர்கள் நெஞ்சிலேயே இல்லை. சற்று முன்பு பிரிந்துவிட்ட உறவைப் பின்தொடர்ந்து சென்றுவிட்ட மனத்தைப் பிடித்திழுத்து அந்தப் படுக்கையில் கொண்டு தள்ள அவர்கள் வெகு பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

நர்ஸ் நீலமணி கைமடக்குக்குள் வெள்ளை நிற மாத்திரைகளை அடக்கிக் கொண்டு, ஒரு கையிலே சூடேறிக் குளிர்ந்து போன தண்



ணீர்க் கோப்பையும், மற்றொரு கையிலே அவுன்ஸ் கிளாஸில் மருந்தையும் ஏந்தி வருகிறாள். விருந்திலே பாதாம்கீரைப் பரிந்து பரிந்து உபசரிக்கும் பக்குவத்துடனே மலர்ந்த புன்னகையைப் பரிமாறி, கசப்பைத் தன் இன்சிரிப்பால் இனிமையாக்கி நோயாளிகள் ஒவ்வொருவர் வாயிலும் ஊற்றிச் செல்கிறாள்.

உள்ளம் சோம்பி, உடல் சோர்ந்து சாய்ந்திருந்த சாவித்திரியின் அருகில் வந்து இலேசாக அவளது தோளைத் தொட்டாள் நீலமணி.

சாவித்திரியின் மனம் கசந்து போய் வழிந்தாலும், நர்ஸ் தரும் மருந்து கசப்பாகத் தோன்றவில்லை.

எட்டிக் காயினும் கொடிய கசப்பான மருந்தானாலும் சரி; காத தூரம் ஓடக்கூடிய நெடி வீசும் மாத்திரையாக இருந்தாலும் சரி, எதையும் வாங்கி விழுங்கத் தயாராக இருந்தாள் சாவித்திரி.

அவளது நினைவு முழுமையும் நிறைந்து மூடியிருந்ததாய்மைப் பாசம். சீக்கிரமே அந்த இடத்தை விட்டு, விடுதலை பெற்றுச் செல்ல வேண்டும் என்ற துடிப்பு அவளை அந்த முடிவுக்குத் துரத்தியிருந்தது.

அவுன்ஸ் கிளாஸை நர்ஸின் கைகளிலே கொடுத்த சாவித்திரி அவளது கரத்தைப் பற்றிக் கொண்டு குழந்தையைப்போல் கேள்வி கேட்டாள்.

"சிஸ்டர்... எனக்கு இதிலிருந்து விடுதலை எப்போது சிஸ்டர்....?"

தெய்வத்தைத் தொழுவதற்குப் பதிலாக அவளைக் கரம் கூப்பித் தொழுதாள்.



"வனஜா! ஆபீஸிலிருந்து ஒரு நண்பர் வீட்டுக்குப் போகிறேன். இரவு, நான் வீடு திரும்பக் கொஞ்சம் நேரமாகும்."

"அந்த நண்பர் சாந்தியில் இருக்கிறாரா? இல்லே; மிட்லண்டில் இருக்கிறாரா?"

தொழுத கரத்தைப் பரிவோடு பற்றி, அவள் முதுகிலே தட்டிக் கொடுத்து, "சீக்கிரம் குணமாகி விடும். இப்பொழுதே பார், நாளுக்கு நாள் உன் உடம்பிலே வலுவேறி வருகிறதல்லவா, பின்னே ஏன் உனக்கு நம்பிக்கையில்லை.....?" என்றாள்.

"இருக்கிறது....... நிறைய நம்பிக்கை இருக்கிறது. சிஸ்டர்..... ஆனாலும் ஒவ்வொரு இரவும் நான் படுகிற வேதனை அப்பப்பா..... என்னால் தாங்கவே முடியவில்லையே அம்மா. இரவு சூழுமுன்னே என் மனத்திலேயும் இருள் சூழ்ந்து விடுகிறதேயம்மா..... அந்தப் பயங்கர வேதனையை என்னால் தாளவே முடியவில்லையே சிஸ்டர்."

வியாதியஸ்தர்களுக்கும் அவர்களுக்குச் சேவை செய்ய முன்வந்த பணிப்பெண்களுக்கும் பொறுமை தேவை என்பதைச் சொல்லால் சொல்ல வில்லை. செயலில் காட்டிக் கொண்டிருந்தாள் நர்ஸ் நீலமணி.

பக்கத்து கப் — போர்டில் வைத்திருந்த ஆயின்மெண்டை எடுத்துச் சாவித்திரியின் இடுப்பிலிருந்து இடது கால் பாதம் வரை வழித்து வழித்துத் தேய்த்துச் சூடேற்றினாள்.

நர்ஸ் நீலமணியின் செக்கச் சிவந்த செந்தாமரைக் கரம் மருந்துச் சூட்டினால் கருகுவதைக் காணப் பொறுக்காத சாவித்திரி, "நானே தேய்த்துக் கொள்ளுகிறேன், சிஸ்டர்....." என்று கரம் நீட்டினாள்.

"இல்லை..... அது எங்கள் கடமை" என்று கூறி அனல் பறக்கத் தேய்த்து விட்டாள். மருந்து உடம்பிலே பிடித்து இதுவரையில் கண்டிச் சுண்டி இழுத்துக் கொண்டிருந்த வலி சற்று அடங்கி இதமாக இருந்தது.

'போதும்' என்றதும் போர்வையை இழுத்துப் போர்த்தி விட்டாள். "ஏதாவது சாப்பிட்டியா இல்லையா? நீ எங்கே சாப்பிட்டிருக்கப் போறே..... உன் வீட்டுக்காரரிடம் அழுது கொண்டிருக்கவே உனக்கு நேரம் போதாதே...... சாப்பிடவா தோன்றியிருக்கும்.... என்ன கொண்டு வந்தார்... இட்டிலியா.. காப்பியா.....பூரியா.... கிழங்கா.... நான் எடுத்துத் தரட்டுமா?"

பரிவோடு பாசத்தையும் கலந்து பேசி அவளுக்காக உணவெடுக்கத் தடுமாறினாள்.

"வேண்டாம், சிஸ்டர்..... காப்பி சாப்பிட்டு விட்டேன். இனி இரவு சாப்பிட்டுக் கொள்ளுகிறேன். அப்பொழுதும் நீதானே எடுத்துத் தரப் போகிறாய்!"

அவள் வார்த்தைகளிலே வேதனை பொங்கி வழிகிறது.

பெரிய குடும்பத்திலே வாழ்க்கைப் பட்டவள்; அவர்கள் உழைப்பிலே பங்கு கொள்ள வேண்டியவள்; பங்கு பெற்று அவர்கள் அன்பைப் பெரிதும் பகிர்ந்து பெற்றிருந்தவள்; இன்று கையாலாகாதவளாய்ப் படுக்கையில் விழுந்து கிடக்கிறாள். தன்னால் யாருக்கு எந்த உதவியும் இல்லாவிட்டாலும் பிறருக்குத் தொல்லையாவது தராமல் இருக்க முடிகிறதா என்று நெஞ்சு பொருமுகிறது.

"சாவித்திரி...... என்ன இது அழுது கொண்டு....." என்று செல்லமாகக் கடிந்து, வெள்ளை அங்கியிலே செருகி வைத்திருந்த கைக்குட்டையை எடுத்துச் சாவித்திரியின் கண்களைத் துடைத்து விட்டாள் நர்ஸ்.

அவளது அந்தச் செயல்கூடப் பாபுவின் நினைவை அதிகம் தூண்டி விடுவதாக இருந்தது சாவித்திரிக்கு. கண்களை மூடிக் கொண்டு அந்நினைவை அசைபோடத் துடிக்கிறது மனம்.

ஒரு மாதத்துக்கு முன்னால் ஒருநாள்....

நன்றாக இருந்த கால் திடீரென்று இழுத்துக் கொண்டது. மத்தியானமாகச் சாப்பிட்டு விட்டு உடம்பை வலிக்கிறதெனப் படுக்கையில் படுத்தவள் எழுந்திருக்க முடியாது தவித்தாள். எழுந்திருக்க வேண்டாம்; படுத்துக் கொண்டே யிருக்கலாம் என்றால் அதுவும் முடியவில்லை. முதுகுத் தண்டிலிருந்து இடது பக்கம் இடுப்பு வழி ஓடிப் பாதத்தில் முடிவடைகிற நரம்பு ஒரேயடியாய்ச் சுண்டிச் சுண்டி இழுக்கிறது. பிறர் கைத் தாங்கலில் எழுந்திருக்கலாமென்றாலும் அதுவும் முடியாது.

அப்படியும் இப்படியும் புரண்டு வலியோடும் வேதனையோடும் முழங்கை இரண்டையும் ஊன்றி மெதுவாய் முதுகை நிமிர்த்திக் கொண்டு வந்து சுவரோடு சாய வேண்டும். அவள் அப்படி நிமிர்ந்து எழுவதற்குள் அரை மணி நேரம் ஓடி விடும். உயிரும் அரைகுறை நிலையில் ஊசலாடும்.



வியர்த்து விறுவிறுத்த மயக்க நிலை அடைந்துவிட்ட மருமகளுக்காகக் காப்பி கொண்டு வரச் சென்றிருந்தாள் மாமியார்.

களைத்துச் சோர்ந்த முகத்தின் மீது பிஞ்சுக் கரமொன்று பூவாகப் படருவதைக் கண்டு விழித்துப் பார்க்கிறாள் சாவித்திரி. மூன்று வயதுக் குழந்தை பாபு தன் டவலால் தாயின் முகத்தை ஒற்றியெடுத்துக்கொண்டிருக்கிறான்.

அப்படியே அவனை வாரியெடுத்து, முகத்தோடு முகம் சேர்த்துக்கொண்ட நினைவும் அதைத் தொடர்ந்து காப்பியும் கையுமாய் வந்த மாமியார், பேரனின் செயலைக் கண்டு பூரித்துப் போய், ''படவாப் பயலே.... நாங்கள்ளாம் உங்கம்மாவைக் கவனிக்க மாட்டோமாக்கும். இந்தப் பிஞ்சுப் பயலுக்குள்ள அக்கறையைப் பாரேன்.....'' என்று செல்லமாகக் கடிந்துகொண்ட நினைவும் சாவித்திரியை அவள் வீட்டு நடு ஹாலுக்குள் தள்ளி விட்டது.

சிரமப்பட்டுத் தன் நினைவை நித்தியானந்தா ஆஸ்பத்திரிக்குள் இழுத்து வருகிறாள்.



வெந்நீர்ப் பை இதமாகக் கால்களிலே படிகிறது.

''தாங்க்ஸ் நர்ஸ்... நானே ஒற்றிக்கொள்கிறேன்.....'' என்று நர்ஸ் நீலமணியிடமிருந்து பையை வாங்கிக் கொண்டாள் சாவித்திரி.

நீலமணியின் பணி அடுத்த படுக்கையை நோக்கிச் செல்கிறது.

வெந்நீர்ப் பையின் இதமான சூடு நரம்புகளிலே படியும்போது வலி சற்றுக் குறைந்து இதம் காணுகிறது. கண்ணை மூடியபடி சாய்ந்திருக்கிறாள்.

மூடிய கண்களுக்குள்ளே முகிழ் விரித்துச் சிரிப்பது போன்று, 'குவா, குவா!' என்று குழந்தைக் குரலொலிகள் சேர்ந்து வந்து மோதுகின்றன.

அந்தப் பிஞ்சுக் குரலொலி சாவித்திரியின் நினைவிலே மோதி நெஞ்சிலே தேன் சுரக்கிறது.

கண்ணைப் பிரித்துப் பார்க்கிறாள். சற்றே இதழ் பிரிந்த தாமரை மொட்டன்ன பிஞ்சுப் பாதங்கள் மட்டும் வெளியே தெரிய, கம்பளித் துணி போர்த்த பச்சிளம் பதுமைகளை மார்போடு அணைத்துக் கொண்டவாறு நர்சுகள் அதனதன் தாய்மார்களிடம் எடுத்துச் செல்கிறார்கள்.

பேபிகளின் உணவு நேரம்.

மணி ஒன்பது எனக் கணக்கெடுத்துக் கொள்கிறாள்.

அந்தப் பக்கமாக வந்த நர்ஸிடம் தன் உணவை எடுத்துத் தரச் சொல்லிச் சாப்பாட்டையும் முடித்துக் கொண்டு விட்டாள்.

அதே நர்ஸ் கொடுத்த மாத்திரையையும் வாங்கி விழுங்கிக் கொள்கிறாள்.

பின்னும் சற்று நேரத்தில் மாத்திரை வேலை செய்யத் தொடங்குகிறது.

கண்களிலே உறக்கம். பின்னிப் பிணையும் நினைவுகள் முழுதுமே பாபுவின் பொன்னுடலும் பூமணமுமாகவே மலர்ந்து சிரிக்கின்றன.

''பாபு.....பாபு.....''

கண் இமைகள் இறுகிக் கொள்கின்றன.

சாவித்திரி திடுக்கிட்டுக் கண் விழித்த போது வார்டிலே விளக்குகள் பளிச்சிட்டுக் கொண்டிருந்தன.

பக்கத்துப் படுக்கை ஆறும் நம்பர் கட்டிலிலிருந்து, 'எப்பா...எப்ப எப்ப....எப்ப...எம்ம... எம்ம.... எம்மா... அட கடவுளே.....'' என்று எங்கும் நிறைந்து நிற்கும் ஈசனைக் கூவி அழைத்து ஓலமிட்டுக் கொண்டிருக்கிறாள், மூந்தாநாள் மாலையில் வந்து சேர்ந்த அந்தக் கிராமத்துப் பெண்.

படுக்கை கொள்ளாமல் தவித்து அலறுகிற கோலம் சாவித்திரியின் மனத்தைப் பிசைகிறது.

இரண்டு நர்சுகள் பரபரப்பாக ஓடி வந்து படுக்கையிலே துள்ளித் துடிக்கும் பாப்பாத்தியைக் கைத் தாங்கலாக அணைத்துப் பக்கத்திலேயுள்ள அறைக்கு அழைத்துப் போய்விடுகின்றனர்.

பிரசவ அறை சாவித்திரியின் படுக்கைக்குப் பின்புறத்தே அமைந்துள்ள கட்டடம்.

அங்கே ஒலிக்கும் வாதனைக் குரல்கள் சாவித்திரியின் பெண் மனத்துள்ளே மோதி எத்தனை எத்தனையோ சிந்தனைக் கனவுகளை நிகழ்த்தி விடுகின்றன.

மூன்று வருஷங்களுக்கு முன்னால் இதே ஆஸ்பத்திரியில் தன் செல்லக் குழந்தை பாபுவுக்காக அவள் துள்ளித் துடித்த நினைவுகளும் நிழலாகப் படருகின்றன.

பாபு இத்தனை நேரம் பாட்டியின் அணைப்பிலே படுத்துத் தூங்கிக்கொண்டிருப்பானு? அல்லது 'அப்பாவோடுதான் படுப்பேன்' என்று அடம் பிடித்து அவரைத் தொந்தரவுக்குள்ளாக்கி விருப்பானு?

ஒரு வேளை..... 'என் அம்மா எங்கே?' என்று கேட்டு வீட்டில் இருப்பவர்களை அவதிக்குள் தள்ளியிருப்பானே...?

உம்...... அவர்தான் சொன்னரே, 'பாபுவுக்கு உன் நினைவே யில்லே' என்று....?

பக்கத்து அறையிலிருந்து எழுந்த பாப்பாத்தியின் தீனக் குரல் நெஞ்சை வெடித்துவிடும் போல் வேதனையாய் மோதுகிறது.



"ஐயையோ! நாயா கையைக் கடிச்சுது?"

"நாய்மாத்திரமா கையைக் கடிக்குது: நாய்க்குப் பண்ணற செலவும் என் கையைக் கடிக்குது!"

'பாபு.... இப்படியெல்லாம் அவதிப்பட்டு அவஸ்தைப்பட்டுத் தடுமாறித் தள்ளாடித்தானேடா உன்னையும் நான் பெற்றெடுத்தேன்?

இப்பொழுது உனக்கு என் நினைவே இல்லையாமே.....

வேண்டாமடா... உனக்கு என்றென்றும் என் நினைவு தோன்றாமலே யிருக்கட்டும்..... எனக்கு என்னிடம் நம்பிக்கையில்லே.

நாளுக்கு நாள் நான் அந்திமத்தை நெருங்கிவிட்ட உணர்வு என்னுள்ளே வளர்ந்து கொண்டே யிருக்கிறது.

பாபு.... நீ என்னை நினைக்க வேண்டாம்; நேசிக்கவும் வேண்டாம். உன் தந்தையின் அன்பிலே பாட்டியின் பராமரிப்பிலே, அத்தையின் அரவணைப்பிலே, சித்தப்பாக்களின் சீராட்டலிலே வளர்ந்து பெரியவனுனல் போதுமடா..... ஆனல்.... ஆனல்.... நீ வளர்ந்து பெரியவனுனபிறகு என்ருவது ஒரு நாள் என்னை, என் படத்திலே காட்டி 'இது யார்?' என்று யாராவது கேட்கும்போது, 'என் அம்மா' என்று வாய் குளிரச் சொல்லுவாயாடா கண்ணே.....?'

சாவித்திரி குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

பாப்பாத்தியின் படுக்கையை மாற்றி விரிப்புகளை உதறித் தட்டிக் கொண்டிருந்த நீலமணியின் செவிகளிலே சாவித்திரியின் கேவல் ஒலி பாய்ந்திருக்க வேண்டும்.

"சே..... என்ன இது, குழந்தைப் பிள்ளையாட்டம் ராத்திரியிலே அழுதுக்கிட்டு.... ஏன் சாவித்திரியம்மா, வலி ஜாஸ்தியாயிருக்கா? கால் வலி தெரியாமலிருக்கத்தான் தூக்க மாத்திரை கொடுத்திருந்தேனே. நிம்மதியாய்த் தூங்குவதுதானே......"

சாவித்திரி தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

நினைவுகள் நெறிக் கிடக்கும்போது, தூக்கம் நெருங்கவே பயப்படும் என்பதை நர்சுக்கு உணர்த்தவா முடியும்?

படுக்கையைப் போட்டு முடித்த நீலமணி சாவித்திரியை நெருங்கி, அவள் காலடியில் கிடக்கும்வெந்நீர்ப் பையை எடுத்து, ஜில்லிட்டுப் போயிருந்த அதைக் கொட்டி விட்டுப் புதிதாக வெந்நீர் அடைத்துச் சாவித்திரியிடம் கொடுக்கிருள்.

சுண்டியிழுக்கும் முதுகுத் தண்டிலே அதைப் பதித்தவாறு சாய்ந்து கொள்ளுகிருள் சாவித்திரி. விடிவிளக்கைத் தவிர மற்றைய விளக்குகள் அணைக்கப்படுகின்றன.

நெடு நேரம், நீட்டிய நிலையிலேயே நெடுந்தவம் செய்யும் தன் காலைச் சற்றே மடக்க முயன்று முயற்சியிலே எழுந்த தோல்வி வலியாக வாட்டியெடுக்கும் வேதனை தாளாது அழுகிருள் சாவித்திரி.

அவள் அழுகையைத் தவருக எடைபோட்டு அனுதாபம் தெரிவித்தது ஒரு குரல்.

ஆரும் நம்பர் படுக்கைப் பெண் பாப்பாத்திக்குத் துணையாக வந்திருக்கும் அவளுடைய தாயார்தான் கேட்டாள்: "ஏனம்மா.... எப்போதிலிருந்தம்மா உங்களுக்கு நோவு தொடங்கியிருக்கிறது....?"

சாவித்திரிக்கு அந்த வேதனையிலும் சிரிப்பு பிறந்தது. தன் நிலையைப் புரியாது பரிதாபப்படும் கிராமத்துப் பெரியவளுக்கு எப்படிப் பதில் சொல்லுவாள்?

"நான் பிரசவத்துக்காக வரவில்லேயம்மா.... எனக்குக் கால் நோவு. அதற்காகச் சேர்க்கப்பட்டிருக்கிறேன்....." என்று சொல்லிக் கண்ணை மூடிக் கொண்டாள்.

'பகவானே.... என்னை எத்தனை எத்தனை கேள்விகளுக்கெல்லாம் இலக்காக்கி ஆட்டுவிக்கிறாய் அப்பா.....' என்று இறைவனிடம் முறையிட்டு முறையிட்டு ஓய்ந்து கண் மூடிக் கிடக்கிருள்.

விழித்துப் பார்க்கும்போது, வைகறைப் பொழுதின் சுகமான காற்று அகன்ற அந்த ஜன்னல்களின் வழியாகப் பாய்ந்து மெல் லுடலைத் தழுவிப் படருகிறது.

காலை நேரத்துச் சுகத்தோடு அவள் கண் விழிக்கிருள்.

பிங்கான் கோப்பைகளும், பல்பொடி டப்பாக்களும், பிளாஸ்கிலிருந்து புறப்பட்டெழும் காப்பியின் மணமுமாக வார்டு கலகலப்பை மேற்கொள்ளுகிறது.

ஆரும் நம்பர் படுக்கையைத் திரும்பிப் பார்க்கிருள்.

அவளை இன்னும் கொண்டு வரவில்லே.

தும்பைப் பூவென்ன வெள்ளை நிறப் படுக்கை பாப்பாத்திக்கு வரவு கூறிக் காத்துக் கிடக்கிறது.

உட்கார்ந்த நிலையிலேயே பல் தேய்த்து முகம் துடைத்துச் சுத்தம் செய்து கொண்ட சாவித்திரி, அவளுக்கான டிபனும் காப்பியும் தேடிக் கப் — போர்டை நோக்குகிறாள்.

வழக்கமான பிளாஸ்கும் இட்டிலி பொட்டலமும் அங்கே இல்லை.

என்ன இடையூறோ.... வரத் தாமதமாகியிருக்கலாம்.

பழக்கப்பட்ட வயிறு ஆகாரம் கேட்டு எச்சரிக்கை விடுத்தாலும் அடக்கப்பட்ட மனம் அதன் போக்குக்குக் கண்டிப்பு விடுத்தது.

வயிற்றின் ஓலத்தை மறக்க நினைவை வேறு பாதையிலே திருப்ப எண்ணுகிறாள். இலேசாகச் சாய்ந்து பக்கத்து அலமாரியைத் திறந்து 'மலரும் மாலையும்' புஸ்தகத்தை எடுத்து, அதிலே 'குழந்தை' என்ற பகுதியைப் பிரித்து அதன் சுவையிலே ஆழ்ந்து விடுகிறாள். பாபுவைப் பிரிந்து வந்த நாள் முதலாய், அவள் நினைவின் நிறைவைத் தந்து கொண்டிருந்தது அந்தக் கவிதைத் தொகுப்புத்தான்.

'எங்கேயிருந்து வந்தாய்' — என்ற கேள்வியைக் கேட்டுச் சாவித்திரி பாடத் தொடங்கினாளானால் அவள் செல்வ மகன் தேன் சிட்டு, அவன், 'வையம் வந்த' கதையையும்— 'வானம் அவனுக்குத் தந்த நன்கொடையையும்' 'கண்ணிலே ஒளி விளங்கும்' காரணத்தையும் — 'பூவின் அழகு தனது முகத்திலே வந்து படிந்த விதத்தையும், இன்பச் சிறு கரங்கள் அசைய அபிநயித்துக் கவிதையிலே வருகிற பாடலின் மூலமாகவே அவன் கூறும் அழகைக் கண்டு அவளது கண் மலர் விரியும். அத்தனையும் சாவித்திரி, தன் மகனுக்குக் கற்றுக் கொடுத்திருந்த பாடம்.

'கண்ணே பாபு...!. ஒரே ஒரு முறை என் எதிரே வந்து நெஞ்சம் குளிரும் இந்தப் பாடலைப் பாடி உன் பூவண்ணப் பாதம் பதித்து ஆடிச் செல்லடா என் செல்வ மகனே......'

பாபு அவள் எதிரே வர மாட்டான். ஆனால் அவனது மலர் முகம் பாவத்துடன் பாடிய விதம் கண் முன்னே நடமிடுகிறது. அந்த நினைவின் இன்பச் சுவைப்பிலே நெஞ்சம் மலர்ந்து விரிகின்ற வேளை.

''ஸிஸ்டர்..... ஸிஸ்டர்.....'' என்ற மெல்லிய மெலிந்த குரல் அழைத்தது.

இது யார் இது இந்த வார்டுக்குள்ளே புதுக் குரல் !

குரல் வந்த திசையில் பார்வை திரும்பிய போது அவள் கண்கள் கூர்ந்து எதையோ ஆராய்ந்தன.

எட்டாம் நம்பர் படுக்கைக்குப் புது கேஸ். நேற்றிரவு ஒரு மணி வரை காலியாகக் கிடந்த படுக்கையில் விடிவதற்குள் புத்தம் புதிய கேஸ்.

ஆஸ்பத்திரிக்கு யார் யார் எந்நேரம் வருவார்கள் என்பதை நிர்ணயித்துச் சொல்ல முடியுமா என்ன?

தன்னையே வைத்த கண் வாங்காது பார்க்கும் சாவித்திரியின் அதிசயப் பார்வையைப் புரிந்து கொண்ட எட்டாம் நம்பர், ''நான்தான் அழைத்தது உங்களை.... என் பெயர் ராதா.... இன்று காலைப் போது மூன்று மணி அளவில் சேர்க்கப்பட்டேன். இதுதான் என்னைப் பற்றிய விவரம்....''

அவளுக்கு என்ன வியாதியோ என்னவோ? மிகவும் பலஹீனமான நிலையிலே இருந்தாள். முகமெல்லாம் வெளுத்துப் பேசுவதற்குக்கூடச் சேவனற்றுச் செத்த நிலையிலே அவள் பேசுகிறாள்.

''உங்களுக்கு என்ன வேண்டும்.....?''

''ஒன்றுமில்லை. எனக்குத் தேசிகவிநாயகம் பிள்ளை பாடல் என்றால் உயிர். உங்க கையிலே அவர் புஸ்ககத்தைக் கண்டதும் எனக்கு உங்களோடு உறவு கொள்ள ஒரு வகைத் துடிப்பு; உங்களுக்கு ஆட்சேபனை யில்லையானால்.....''

''நர்ஸ்....''

தூரத்தே போய்க் கொண்டிருந்த நீலமணி திரும்பிப் பார்த்தாள்.

''நான்தான் கூப்பிட்டேன் ஸிஸ்டர்....! இந்தப் புத்தகத்தை எட்டாம் நம்பரிடம் கொடுத்து விடுங்கள்.''

களுக் !

களுக் !



நியூயார்க் நகரக் கொட்டகை ஒன்றில் நடன நிகழ்ச்சி ஒன்று நடந்து கொண்டிருந்தது. ஒரு காட்சியில் ஒரு நடன மாதும் இன்னொருத்தியும் அமெரிக்க நடனம் ஆடிக் கொண்டிருந்தனர். கைகளைப் பிடித்துக்கொண்டு தூக்கிச் சுழற்றினாள் ஒருத்தியை மற்றொருத்தி. அடுத்த நிமிஷம் 'களுக்' என்றது. அவ்வளவுதான், சுழற்றப்பட்டவளின் முதுகெலும்பு களுக்கிக் கொண்டுவிட்டது. பிறகு அவள் நடனமாட முடியாமல் விழுந்து விட்டாள். எனினும் நடன நிகழ்ச்சி தொடர்ந்து நடந்தது. அவளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர். சிகிச்சை பெற்று வரும்போதே தன்னைச் சுழற்றியவளின் பேரில் வழக்குத் தொடர்ந்தாள். அவளைக் காயப்படுத்தியதற்காக நியூயார்க் நீதிமன்றம் கிட்டத்தட்ட இரண்டரை லட்ச ரூபாய் நஷ்டஈடு கொடுத்துவிடும்படி தீர்ப்பளித்து விட்டது. தலைவிதியே என்று நஷ்டஈடு செலுத்திய நடன மாது யார் தெரியுமா? உலகப் புகழ் பெற்ற அமெரிக்க நடனக்காரி மார்தா கிரஹாம்தான். —தோ

''ஓ..... வந்து நாலு மணி நேரத்துக்குள் உங்களுக்குள் உறவு இணைத்துக் கொண்டீர்களா.....?'' சிரித்துக் கொண்டே புஸ்தகத்தோடு நடந்தாள் நர்ஸ்.

அங்குமிங்குமாகப் பேச்சின் சிதறல்கள் நிகழ்ந்து கொண்டிருந்த வார்டுக்குள்ளே திடீரென அமைதி பதவியேற்றது.

டாக்டர் வருகிறார் போலும்.....

வாத்தியார் வரும் நேரம் ஒழுங்கான பிள்ளைகள் போல் படிக்கத் தொடங்குவார்களே மாணவர்கள், அதைப் போல் டாக்டரின் வருகையறிந்ததும் நோயாளிகள் கூடிய வரை ஒழுங்காகத் தன் வலியையும் மகிழ்ச்சியையும் வரவழைக்கப் பாடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

நர்ஸ் ராஜகாந்தம் டாக்டரோடுகூட நடந்து ஒவ்வொரு நோயாளியின் அப்போதைய நிலையையும் குறிப்பிட்டுச் சொல்லி வந்தாள்.

டாக்டர் லலிதாவுக்கு வயதும் அநுபவமும் கற்றுக் கொடுத்த பாடத்தைவிட, அவர் நோயாளிகளின் மனத்தைப் புரிந்துகொண்டு அவர்கள் போக்கறிந்து பழக வேண்டிய முறையும், நோய் தீர்க்கும் வழியும் நன்கறிந்தவர்.

ஒவ்வொரு நோயாளியின் அருகேயும் சென்று, அவர்களைத் தட்டிக் கொடுத்து அன்போடு அழைத்து அவர்கள் நோயைப் பற்றியும், குறையைப் பற்றியும் கேட்கும்போது டாக்டர் அம்மாளைத் தெய்வமாகவே பாவிக்கும் நோயாளியின் மனம்.

''இன்றைக்கு உங்களுக்கு எப்படியம்மா இருக்கிறது; இரவிலே நன்றாகத் தூங்கினீர்களா......?'' என்றெல்லாம் அன்பொழுகக் கேட்கும் டாக்டரிடம் தன் வியாதியையே மறந்து, 'நலமாக இருக்கிறேன்' என்ற பதிலைத்தான் சொல்லுவார்கள். டாக்டர் அடுத்த படுக்கைக்குப் போன பின்னர்தான்,—''டாக்டரிடம் கேட்டுத் தெளிய வேண்டிய சந்தேகத்தை யெல்லாம் கேட்க மறந்து விட்டோமே.....'' என்று நினைத்துப் பார்த்துக் கொள்வார்கள்.

இது டாக்டர் லலிதாவின் முகராசி.

''நீ எப்படியம்மா இருக்கே....?'' என்று கேட்ட டாக்டரைப் பார்த்து மௌனமாகச் சிரித்தாள் சாவித்திரி.

அன்று அவளுக்கு அது விரையில் டிபன் வரவில்லை.

வயிற்றுப் பசியைவிட வீட்டிலே யாருக்கு என்ன இடர்ப்பாடோ.... வழக்கமாகக் கண் விழிக்கும் நேரத்துக்கு முன்னதாகவே டிபன் தயாராக வந்து விடுமே..... இன்று தாமதத்தின் காரணம் என்னவோ என்று உள் மனம் ஓலம் எழுப்பிக் கொண்டேயிருக்கிறது.



டாக்டர் சாவித்திரியைச் சுற்றி ஒருமுறை நோட்டம் விடுகிறார்.

''இன்னும் டிபன் முடிக்கவில்லை போலிருக்கிறதே..... ஏன் இன்னும் வரவில்லையா...?''

'இல்லை'யெனத் தலையாட்டுகிறாள்.

டாக்டரம்மா நர்ஸைப் பால் கொண்டு வரச் சொல்லுகிறார்.

''வேண்டாம் டாக்டர்....! என்னிடம் ஹார்லிக்ஸ் இருக்கிறது.. சாப்பிட்டுக் கொள்கிறேன்.....'' என்றதும் நர்ஸ் ராஜகாந்தம் நகர்ந்து அவளுக்காக ஹார்லிக்ஸ் கரைக்கிறாள்.

பாதத்தை மூடியிருக்கும் கம்பளிப் போர்வையை நகர்த்திவிட்டுப் பாதம் முதல் கால் முழுவதுமான நரம்பின் ஓட்டத்தை—அந்த ஓட்டத்திலே ஓடியிருக்கும் சிவப்பை ஆராய்கிறார்.

சிவப்புக்கும் மேலாகத் தளதளவென விங்கியிருக்கும் பாதங்களைத் தொட்டுப் பார்த்து, நேற்றைய நிலைக்கு இன்று அதிக வித்தியாசம் இல்லை என்பதைக் கண்டு கொள்ளுகிறார்.

இருந்தாலும் கேட்கிறார்.

''இரவிலே வலி எப்படி இருந்ததம்மா?''

''என்ன சொல்வது... எப்படிச் சொல்வது..... என்றே தெரியவில்லை டாக்டர்..இந்த உபாதை தொடர்ந்து நீடிக்குமானல் நான் அதிக நாட்கள் உயிரோடு இருக்க மாட்டேன்.''

''படித்தவர்களான நீங்களெல்லாமே இப்படி நம்பிக்கையிழந்தால்படிக்காத பெண்கள், வைத்தியத்துக்காக வருகிறவர்கள் எப்படி எப்படியெல்லாம் அசட்டுத்தனமாய் நடந்து கொள்ளுவார்கள் தெரியுமா....?''

முந்திய இரவிலே பாப்பாத்தி எழுப்பிய அநாகரிகக் கூச்சல் செவிகளை நனைக்கிறது.

''டாக்டர்..... ஆறும் நம்பர் பிரசவமாகி விட்டதா டாக்டர்......''

''உள் அறையிலே நிலவுகின்ற அமைதியே சொல்லியிருக்குமே அவள் கேஸ் நல்லவிதமாக முடிந்து விட்டதென்று.....''

''என்ன குழந்தை டாக்டர்...'' ஆர்வத்தோடு வினவுகிறாள் சாவித்திரி.

''ஆண் குழந்தை... கிராமத்து மண்ணு... 'வெயிட்'டான குழந்தை.... எட்டு பவுண்டு. குழந்தை மொழு மொழு வென்று ரொம்ப அழகா இருக்கு......''

''சந்தோஷம் டாக்டர்..... அவள் இங்கே எப்பொழுது கொண்டு வரப்படுவாள்..?''

''விடிய விடிய அவஸ்தை ஜாஸ்தி.... களைப்பாக இருக்கிறாள். அயர்ந்து தூங்கவிட்டிருக்கிறோம். இன்னும் இரண்டு மூணு மணி நேரத்திலே இங்கே வந்து விடுவாள். மண்

ணின் உழைப்புக்கு உரமான பின்னையைப் பெற்றிருக்கிறுன் இராமத்து மாதா....''

டாக்டரின் மனம் நோயாளிகளோடு மட்டும் ஈடுபட்டிருக்க வில்லை. நாட்டின் தேவை....... சமுதாயப் போக்கு எல்லாம் அறிந்த முன்னேடியாகவும் இருப்பாள் போலிருக்கே என வியந்தாள் சாவித்திரி.

''நர்ஸ்.....'' என்று ராஜகாந்தத்தின் புறம் திரும்பிய டாக்டர், சாவித்திரிக்கு அன்று கொடுக்க வேண்டிய மருந்து இன்ஜெக்ஷன் எல்லாம் சொல்லி முடித்து விட்டுக் கடைசியாகக் கேட்டார் சாவித்திரியிடம்:

''உங்களுக்கு ஏதாவது சொல்லவேண்டுமாம்மா.....?''

''வேண்டாம், டாக்டர்..... என்னை நன்முக வெகு நன்முகக் கவனித்துக் கொள்கிருர்கள் ஸிஸ்டர்ஸ்.... எனக்கு எந்தவிதக் குறையுமில்லை டாக்டர்..... வீட்டில் இருப்பது போல் சொல்லப் போனல் வீட்டிலே கவனிக்க முடியாத வசதிகளையெல்லாம் இந்த ஆஸ்பத்திரியிலே செய்து கொடுக்கிறீர்கள். இதை எங்கள் உயிர் உள்ளளவும் மறக்க மாட்டோம் டாக்டர்......''

கண்களிலே நன்றிக் கண்ணீர் பொங்கி வழிகிறது.

டாக்டரின் மனத்திலும் மகிழ்ச்சி நிறைகிறது. ''இந்த நல்ல பெயர் ஒன்றே எங்கள் பணியின் நோக்கம்....''

பேச்சோடு பேச்சாகச் சாவித்திரியின் காலடியிலிருந்த வெந்நீர்ப் பையைத் தொட்டுப் பார்த்துவிட்டுச் சூடு ஆறிப்போயிருந்ததால் வேறு மாற்றிக் கொடுக்கும்படி நர்ஸிடம் சொல்லிவிட்டு அடுத்த படுக்கைக்கு நகர்ந்தார் டாக்டர்.

காலையிலே வந்து சேர்ந்த எட்டாம் நம்பர் கேஸ் — அவள்தான் சற்று முன்பு சாவித்திரியை உறவு பிடித்துக் கொண்டவள் - டாக்டரின் வருகையைக் கூட உணராது கண் மூடிக் கிடந்தாள்.

தூக்கமா, மயக்கமா என்பது தெரிய நாடியைப் பிடித்துப் பார்த்தாள் லலிதா. யாரோ தன்னைத் தொட்ட உணர்ச்சியின் தூண்டுதலால் இறுகிக் கிடக்கும் விழிகளைச் சிரமத்துடன் பிரித்துப் பார்த்தாள். டாக்டரின் உருவம் அவள் கண்களுக்குப் புரிந்ததோ இல்லையோ, மீண்டும் தன் கண்களை மூடிக்கொண்டாள்.

அந்தக் கேசுக்கு உடனடியாகச் செய்யவேண்டிய சிகிச்சைக்கு உத்தரவு கொடுத்துவிட்டு டாக்டர் அந்த ஹாலைவிட்டுப் புறப்படப் பின்னும் அரை மணி நேரம் பிடித்தது.

சாவித்திரிக்கு அன்று காலை டிபன் வரவேயில்லை: என்றைக்கோ வேண்டாமென்று ஒதுக்கி வைத்திருந்த காய்ந்த ரொட்டித் துண்டுகளும் ஹார்லிக்ஸும் சமயத்தில் கைகொடுத்தன.

வயிற்றுப் பசி அடங்கிவிட்டது. ஆனல் மனப் பசியோ தீராத குழப்பமாகப் புரட்டியெடுத்தது.

யாருக்கு என்ன உடம்போ?

யாருக்கானலும் பரவாயில்லை. பாவம், அந்தத் தள்ளாத வயது ஜீவன் மாமிக்கு உடம்புக்கு வந்துவிடக் கூடாது. அவருக்குத்தான் வந்திருக்கும். இத்தனை வயதை விழுங்கிய பிறகும் எத்தனையெத்தனை கஷ்டங்களைத் தாங்கித் தலை நிமிர வேண்டியிருக்கிறது. கல்லுக்குண்டான என் உடம்பு அசையாது படுத்துக் கிடக்க வேண்டியிருக்கிறது. ஆனல் அந்தத் தளர்ந்த உடல்.... ஐம்பது வருடகாலமாக இன்பத்திலும் துன்பத்திலும் ஊறித் துவண்ட கட்டை இன்னும் உழைத்து ஓடாக வேண்டியிருக்கிறதே......

சாவித்திரி தன் கையாலாகாத நிலையை எண்ணி எண்ணிக் கண்ணீர் பெருக்கினுள்.

வேடிக்கை இல்லை!



அந்த வீட்டில் ஈக்களின் தொந்தரவு ரொம்பவும் அதிகமாகிவிட்டது. உணவுப் பொருள்களின் மீது கூட்டம் கூட்டமாக அமர்ந்து அருவருப்பை உண்டாக்கின. வீட்டில் குழந்தைகள் மீதும் பெரியவர்கள் மீதும் ஓடி ஓடி அமர்ந்து அவர்களை அளவுக்கு மீறி உபத்திரவப்படுத்தின.

வீட்டுக்கு உரிய கணவனும் மனைவியும் அன்று உபத்திரவம் பொறுக்க முடியாமல் மும்முரமாக ஈ வேட்டை ஆடத் தொடங்கினர்கள்.

சிறிது நேரம் சென்றது. மனைவி கணவனிடம் வந்து ''நீங்கள் எத்தனை ஈக்கள் பிடித்தீர்கள்?'' என்று கேட்டாள்.

''மொத்தம் ஆறு ஈக்கள் பிடித்தேன்! மூன்று ஆண் ஈக்கள்; மூன்று பெண் ஈக்கள்!'' என்றுன் கணவன்.

மனைவி 'கலீர்' என்று பலமாகச் சிரித்தாள்.

''இது என்ன வேடிக்கை! ஈக்களில் ஆண் ஈக்கள், பெண் ஈக்கள் என்று எப்படிக் கண்டு பிடித்துச் சொல்ல முடியும்? நான் இதுவரையில் கேள்விப்படாத அதிசயமாயிருக்கிறதே!'' என்று வியந்தாள்.

''இதில் வேடிக்கை என்ன இருக்கிறது? மூன்று ஆண் ஈக்கள் பழப் பச்சடியில் உட்கார்ந்து சுவைத்தன. இன்னும் மூன்று ஈக்கள் கண்ணுடியில் உட்கார்ந்து அழகு பார்த்துக் கொண்டன. இதிலிருந்து ஆண் ஈக்கள் எவை, பெண் ஈக்கள் எவை என்று சுலபமாய்ச் சொல்லிவிடலாமே!'' என்றுன் கணவன்.

மனைவி அதற்கு மேல் ஒன்றும் பேசவில்லை. — விஜயம்



இளமையிற் கல்

சமையல் பயிலும் சிறுமி, அவளே வருங்காலக் குடும்பத் தலைவி. கற்றுக்கொடுங்களேன் ஒரு நாள். எவ்வளவு விரைவில் கற்றுக்கொடுக்கிறீர்களோ அவ்வளவுக்கு அவ்வளவு மேல்.

உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் இப்போதே கற்றுக்கொடுக்க வேண்டிய மற்றொரு பாடம், பற்களையும் ஈறுகளையும் ஒழுங்கு தவறாமல் பராமரிப்பதே. பற்சிதைவும் ஈறு நோய்களும் வராமல் பாதுகாத்த உங்கள் உதவிக்காகப் பிற்காலத்திலே நன்றி செலுத்துவார்கள் அவர்கள்.

போர்ஹான்ஸ் பற்பசைகொண்டு பற்களையும் ஈறுகளையும் பாதுகாத்துக்கொள்ள இன்றே பழக்குங்கள் உங்கள் செல்வங்களை. அது ஒரு பல் வைத்தியரின் தயாரிப்பாகும்; ஈறுகளின் நலனுக்காக டாக்டர் போர்ஹான்ஸ் தயாரித்த விசேஷத் துவர் மருந்துகள் அடங்கிய பற்பசை உலகில் இதுவொன்றே. தவறாமல் உபயோகித்துவந்தால் பளிச்சென்ற வெண் பற்களையும் பாங்கான உறுதிவாய்ந்த ஈறுகளையும் பெற்று விளங்குவது திண்ணம்.

"CARE OF THE TEETH AND GUMS" என்ற சிறிய வண்ணப் புத்தகத்தை இலவசமாகப் பெற, தபால் செலவுக்காக 10 பைசா தபால் வில்லைகளை இணைத்து எழுதவும்: மானேர்ஸ் டென்ட்டல் அட்வைசரி ப்யூரோ, தபால் பை நம்பர் 10031, பம்பாய்.



K.6

COUPON

Please send me a copy of the booklet
"CARE OF THE TEETH AND GUMS"

Name ....

Address ....

....

பத்து மணி அளவிலே சாவித்திரிக்குச் சாப்பாடு வருகிறது.

நர்ஸ் நீலமணி அடுக்குப் பாத்திரத்தை அலமாரியின் மீது வைக்கிறாள்.

நெடுங் கதை

சாவித்திரிக்குச் சந்தேகம்.

''ஸிஸ்டர், இது எனக்காக இருக்க முடியாது ஸிஸ்டர். இது எங்கள் வீட்டைச் சேர்ந்த பாத்திரமில்லே.''

''யார் வீட்டுப் பாத்திரமானால் என்ன? சாப்பாடு உனக்குத்தானே.... நீதானே சாவித்திரி? இதோ பார், இந்தப் பையிலே ஆரஞ்சு, டிபன் பொட்டலம் உனக்கு வேண்டியதெல்லாம் இருக்கின்றனவாம். வெளியே நிற்கும் பையன் சொன்னான்...''

''பையன் இல்லே ஸிஸ்டர், அவர்தான்..''

''உன் வீட்டுக்காரரை எனக்குத் தெரியாதென்று நினைத்துக் கொண்டாய்? வந்திருப்பது அவருடைய தம்பியாக இருப்பான்போல் இருக்கிறது..... பார்வைக்கு உன் அவரையே போலிருக்கிறான். வயதும் வளர்ச்சியும்தான் கம்மி.....''

''ஸிஸ்டர்......''

''பையிலே ஏதோ கடுதாசி இருக்கிறதாம். பார்த்துக் கொள்ளச் சொன்னான்...''

சாவித்திரி பையை வாங்கிப் பிரித்துப் பார்க்கிறாள் :

'அண்ணா இன்று வெளியே ஒரு காரியமாகச் சென்றிருக்கிறார். மாலையில் உங்களைக் காண வருவார். அதற்குமுன் எதுவும் தேவையானால் என்னிடம் சொல்லியனுப்பவும்.' —சங்கர்

''என்ன சாவித்திரி.... ஏதாவது சொல்லியனுப்ப வேண்டுமா......?''

''ஒன்றுமில்லே. நான் அவனைப் பார்க்க முடியாதா ஸிஸ்டர்.....?''

''ஆஸ்பத்திரி விதிகள் உனக்குத் தெரியாதா சாவித்திரி...... நாமே அதை மீறலாமோ? வேண்டுமானால் உன்னைக் கைத் தாங்கலாகக் கண்ணாடி ஜன்னல் அருகே அழைத்துச் செல்லுகிறேன்....''

சாவித்திரி ஒரு கணம் தயங்குகிறாள்.

இத்தனை பேர் முன்னிலையிலும் அவள் தட்டுத்தடுமாறி நடந்து செல்ல வேண்டும்.

''வேண்டாம், ஸிஸ்டர், நீங்களே கேட்டு விடுங்கள்..... அவருக்கு உடல்நலமில்லையா ? அல்லது வீட்டிலே யாருக்கேனும் ஏதாவது அசௌகரியமா என்பதை மட்டும் கேட்டுச் சொல்லுங்கள்.''

நர்ஸ் சென்று திரும்பி வந்தாள். அதே மலர்ந்த முகம் மாறாமல் வந்து சேர்ந்தாள்.

''எல்லோரும் நலம்தானாம் சாவித்திரி.... நீ கவலையே பட வேண்டாமாம். மாலையிலே உன் 'அவர்' வருவாராம். போதுமா....?''

'அப்பாடா' என்று நெஞ்சைப் பிடித்துக் கொண்டாள்.

'கப்போர்ட்' பக்கமாகத் திரும்பித் தனது கேரியரைத் திறந்தாள் சாவித்திரி. அன்றையச் சமையலின் மணமே அவள் மூக்கிலே வேற்றுமையைப் புகுத்தியது.

அது தன் மாமியின் கைச் சமையல் இல்லே.

சாவித்திரி படுக்கையில் விழுந்து இத்தனை நாட்களிலும் ஆஸ்பத்திரி கடிகார முள் மாறினாலும் மாறும்; அவளுக்கு உணவு வரும் நேரம் மாறாது.

இன்று காலே ஏழு மணி டிபன் வரவில்லே. பதினொரு மணி சாப்பாடு பத்து மணிக்கே காலே டிபனையும் சேர்த்துக்கொண்டு வந்திருக்கிறது.

இதற்கெல்லாம் என்ன அர்த்தம் ? ஏன் ஒரேயடியாக எல்லாரும் என்னிடம் பொய் சொல்ல வேண்டும்?

சாவித்திரி சாப்பிட்டதாகப் பெயர் செய்து முடித்து விட்டு மீண்டும் தன் சாய்ந்த நிலையிலேயே படுத்து விட்டாள். படிப்பதற்காகப் புஸ்தகம் தேடியபோது காலையிலே தேசிக விநாயகம்பிள்ளை பாடலே எட்டாம் நம்பருக்குக் கொடுத்தது ஞாபகம் வந்தது.

நர்ஸ் ராஜகாந்தம் அப்பொழுதுதான் ராதைக்கு டெம்ப்ரேச்சர் எடுத்து விட்டுத் திரும்பினாள்.

''ஸிஸ்டர்.... அந்தப் படுக்கையிலே என் புஸ்தகம் இருக்கிறது. தயவுசெய்து எடுத்துத் தருகிறீர்களா.....?''

புஸ்தகத்தோடு வந்த நர்ஸின் முகத்திலே ஏதோ ஒரு வகையான கலக்கத்தைக் காணுகிறாள்.

''ஸிஸ்டர்..... கேட்பதைத் தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள் ஸிஸ்டர். அந்தப் பெண்ணுக்கு என்ன உடம்பு.... காலையில் வந்து சேர்ந்தது முதல் இன்னும் சரியாகக் கண்ணே விழிக்கவில்லேயே.....''

''டைபாயிட். இரண்டு மாதமாகப் பலவீனமான நிலையிலே 'ரிலாப்ஸ்' ஆகிக் கொண்டு வந்திருக்கிறார்கள். நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது.''

தனக்குப் பிடித்தமான 'குழந்தை' என்னும் பகுதியைப் புரட்டிய போது அவள் திடுக்கிட்டாள்.

''பாபு..... பாபு.... கண்ணே பாபு....'' கத்தியே விடுகிறாள். கண்களைக் கூர்மையாக்கிக் கொண்டு அந்தப் புத்தகத்தினுள் வைத்திருந்த குழந்தைப் படமொன்றை உற்று நோக்கினாள்.

பிரமை நீங்குகிறது.

'சே.... என் பாபு கௌன் அணிந்திருக்க மாட்டான். சிங்கக் குட்டி மாதிரி நிமிர்ந்த தோளிலே டிரவுசரோடு இணைந்த வார்ப் பட்டை பதிந்து கிடக்க, மேலே நவநாகரிகத் தையல்கள் இணைந்த புஷ் ஷர்ட்டை மாட்டிக் கொண்டு குறுகுறுத்த நடை போட்டுத் தாவி வரும் அவன் அழகே அழகுதான் !

என் பாபுவுக்குக் கவுன் அணிந்தால் எப்படியிருக்கும்.....?

மனக் கண் மலர்கிறது.

அதன் மலர்ச்சியிலே பிறந்த புதுமை உணர்வை நுகர்ந்தாள்.

எட்டாம் நம்பர் பெண் மிகுந்த புத்திசாலியாக இருக்க வேண்டும். அவளைவிட வயதிலே மூத்தவளாயிருந்து என்ன பயன்?

தனக்கு இத்தகையதோர் அரிய யோசனை தோன்றவில்லையே என்று குறைப்பட்டுக் கொண்டாள்.

சாவித்திரியின் நினைவுகள் கலைவதற்குக் காரணமாயிருந்தது ஸ்ட்ரெச்சரின் கிறீச்சுச் சத்தம்தான்!

புதிய கேஸ்.... இத்தனை ஸீரியஸாக யார் வருகிறார்களோ.....

ஆஸ்பத்திரிக்குள் இருந்து கொண்டு நோயாளியைக் கண்டு அஞ்சலாமா? வருபவர்கள் வரட்டும். அவர்களுக்கு ஆதரவும் பணிவிடையும் கொடுக்க நித்தியானந்தா வைத்திய நிலையம் துடிப்போடு விழித்துக் கொண்டிருக்கிறது.

ஸ்ட்ரெச்சர் ஆறும் நம்பர் படுக்கையண்டை நின்றது.

''ஓ.... நம்ம பாப்பாத்தி.....'' அவளைக் காணும் ஆர்வத்தோடு சற்று நிமிர்ந்தாற்போல் உட்கார்ந்து கொண்டாள்.

கண் விழித்துப் பார்த்தாளானால், 'கங்கிராஜுலேஷன்' தெரிவிக்கக் காத்துக் கொண்டிருக்கிறாள்.

அவளை நர்சுகள் இருவராகப் படுக்கையிலே தூக்கிப் போட்டார்கள்.

''சாவித்திரியம்மா.... இந்தப் பெண்ணோட அம்மா இங்கே குந்தியிருந்தாளே.... எங்கே போச்சு தெரியுமா? 'உன் பொண்ணு மிகவும் களைப்பாக இருக்கா.... ஒரு மடக்கு காப்பி வாங்கி வா'ன்னு சொன்னதுக்கு இனிமே வரப்போறா..... இதெல்லாம் நல்ல ஜென்மங்கள்.... இது மாதிரி ஆட்கள் — துணைக்கு இருந்தால் நோயாளிகள் நிலை என்னாகுமோ..... பழி எங்கள் தலையில் அல்லவா விடியும்......''

''நர்ஸ்..... இப்படிக் கொஞ்சம் வருகிறீர்களா ? கப்—போர்டுக்குள்ளே ஹார்லிக்ஸ் இருக்கிறது. பிளாஸ்கிலே வெந்நீர் இருக்கும். அந்தப் பெண்ணுக்குக் கொஞ்சம் கரைத்துக் கொடுங்கள்...... பாவம், மயக்கம் தெளியட்டும்....''

நர்ஸுகள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''தயக்கம் எதற்கு நர்ஸ்...... ப்ளீஸ்..... சீக்கிரமே எடுத்துக் கொள்ளுங்கள்......''

நர்ஸ் 'கப் — போர்டை'த் திறந்து பாட்டிலை எடுக்கிறாள். இரண்டு மூன்று வேளைக்குத் தகுந்த பவுடரே இருப்பதைக் கண்டு தயங்குகிறாள்.

''தாராளமாக எடுத்துக் கொள்ளுங்கள், நர்ஸ்.... எனக்கு மாலையிலே வரும்போது வாங்கிக் கொண்டு வருவார் நிச்சயமாக.... எடுத்துப் போங்கள்......''

இரண்டு சொட்டு ஹார்லிக்ஸ் நாவிலே நனைந்ததும் பாப்பாத்தியின் கண்கள் இலேசாகத் திறந்தன. சொட்டுச் சொட்டாக நர்ஸ், பாப்பாத்தியின் வாயிலே ஊற்ற ஊற்றச் சாவித்திரியின் மனம் நிறைந்தது.

முழுவதுமாகக் கண் திறந்த பாப்பாத்தி சாவித்திரியை நோக்கிக் கண்களாலேயே நன்றி தெரிவித்தாள்.

''மகன் பிறந்திருக்கிறானுமே.....! ரொம்ப சந்தோஷம் பாப்பாத்திம்மா..... என்று தன் சந்தோஷத்தைத் தெரிவித்தாள் சாவித்திரி.

ஓய்ந்த நிலையிலே கிடந்த பாப்பாத்தியின் கண்களிலே நீர் முட்டியது.

''பெத்த ஆயாளுக்கும் கட்டின புருஷனுக்கும் இருக்கிற அக்கறையைப் பார்த்தீங்களாம்மா. என்னை அனாதைபோல் போட்டுட்டு......''

விம்மி விம்மி அழுதாள் பாப்பாத்தி.

''இந்தக் கட்டடத்துக்குள் வந்துவிட்ட யாருமே அனாதையில்லை பாப்பா.... பார், நம்மைக் கவனித்துக் கொள்ள எத்தனை சகோதரிகள் எவ்வளவு பாடுபடுகிறார்கள். நம்முடைய நலமே அவர்கள் நலமாய், நம்முடைய தேவையே அவர்கள் தேவையாய் எப்படிப் பார்த்துப் பார்த்து நமக்காக உழைக்கிறார்கள்......''

பாப்பாத்தி நர்ஸ் பக்கமாகக் கையெடுத்து வணங்கினாள். ''நீங்க நல்லா இருக்கணும்மா. ராவிலே நான் பட்டபாட்டுக்கு நீங்க என் பக்கத்திலே இல்லேன்னா.......''

''ஆண்டவன் எப்பொழுதும் உன் பக்கத்திலே இருப்பார்...... பாப்பாத்திம்மா இப்பொழுது ஓய்வெடுத்துக் கொள்.....'' என்று கூறி நர்ஸ் அவளுக்குரிய மாத்திரையைக் கொடுத்துவிட்டு அப்பால் நகர்ந்தாள்.

எட்டாம் நம்பர் படுக்கையருகே டாக்டர் லலிதா நின்று கொண்டிருந்தாள். சாந்தமும் புன்னகையும் விளையாடிக் கொண்டிருக்கும் அந்த முகத்திலே இப்பொழுது கவலை கப்பியிருந்தது. இப்பொழுது ராதையின் தலையிலே ஐஸ் பை இல்லை. நர்ஸ் ராஜகாந்தம் நோயாளியின் பாதத்திலே சூடு பறக்கத் தேய்த்துக் கொண்டிருந்தாள். மற்றொரு நர்ஸ் இன்ஜெக்ஷன் டியூபைத் தயார் செய்து டாக்டரிடம் நீட்டினாள்.

இன்ஜெக்ஷன் கொடுத்து முடித்துவிட்டு நாடியைப் பிடித்தவண்ணம் குழம்பிப் போய் நின்றாள் டாக்டர் லலிதா.

சாவித்திரி தன் படுக்கையிலே தட்டுத் தடுமாறி எழுந்து உட்கார்ந்து கொள்ளுகிறாள். கால் இழுப்போ.... இடுப்புநோவோ பெரிதாகத் தோன்றவில்லை.

'அந்தப் பெண் ராதைக்கென்னவோ' என்று மனம் அடித்துக் கொண்டது. தன் கைப் பிடிக்குள் அடக்கிக் கொண்டிருக்கும் குழந்தைப் படத்தை நடுங்கும் கரத்தால் தூக்கிப் பார்த்தாள்.

''குழந்தே! உன் பெயரை நான் அறியேன். பெயர் தெரியாவிட்டால் பாதகமில்லை. உன் அதிர்ஷ்டம் வலுவுள்ளதாயிருக்க ஆண்டவனைப்பிரார்த்திக்கிறேன்......''

அந்தத் தாய் மனம் முன்பின் அறிமுகமில்லாத அந்தக் குழந்தைக்காக — அதன் ஆதரவான ராதை பிழைக்க வேண்டுமென்று கண்ணை மூடி ஆண்டவனைப் பிரார்த்தித்தாள்.

கண் விழித்துப் பார்க்கிறாள். நடுங்கும் உள்ளத்தோடு எட்டாம் நம்பர் பக்கம் பார்வையைத் திருப்பினாள் சாவித்திரி.

டாக்டர் லலிதாவின் வதனத்திலே திருப்தியின் தெளிவு படர்ந்தோடியது. ராஜு காந்தத்தைப் பக்கத்திலேயே இருந்து கவனித்துக் கொள்ளச் சொல்லிவிட்டு டாக்டர் போய் விட்டாள்.

''என்னம்மா வேண்டும்?.....''

''அந்தக் கேஸ் பிழைத்துக் கொள்ளுமா டாக்டர்.....'' நெஞ்சம் கசியக் கசிய மெது வாய்க் கேட்டாள் சாவித்திரி.

''பிழைக்க வேண்டும். ஆண்டவன் துணை வேண்டும். வெந்நீர்ப் பையைத் தூக்கி அப்பால் போட்டு விட்டாயே.... உன் கால்களுக்குப் பலம் வந்து விட்டதா சாவித்திரி?''

டாக்டர் பேச்சை மாற்றுவதைப் புரிந்து கொண்டு விட்டாள்.

மதியத்தின் அமைதியிலே வார்டிலே பெரும்பாலோர் அசந்து தூங்கிக் கொண்டிருந்தனர். சாவித்திரியும் கண்களை நன்றாக மூடிக் கொண்டாள்.

பாப்பாத்தியின் படுக்கைக்கு அருகில் முக்காலியிலே கிராமத்து ஆள் ஒருவன் வந்து உட்கார்ந்திருந்தான். கட்டுக் குடுமியும் உழைத்து உழைத்து உரம் ஏறிப்போன இடமான உடலும், முரட்டுத்தனமான தோற்றமுமாக இருந்தான்.

உருவம்தான் அப்படி; உள்ளம் கட்டி வெண்ணெய்க்கும் மேலாக இளகியல்லவா இருந்தது?

தன் பக்கமே முகம் திருப்பாது முதுகு காட்டிப் படுத்திருக்கும் தன் மனைவியிடம் தான் இருப்பது ஆஸ்பத்திரி என்பதையும் மறந்து தன்னை, தன் செயலைப் பல கண்கள் பார்க்கக் கூடும் என்பதையும் மறந்தல்லவா குழைந்தான் !

''இஞ்சே... இப்படித் திரும்பித்தான் பாருவேன்...... நா என்ன தப்பு செஞ்சுப் புட்டேன்...... ரெண்டு மூணு நாளா உனக்கோசரம் ஆஸ்பத்திரி வாசலிலேயே காத்துக் கிடந்தேனு.... வயல்லாம் தண்ணியில்லாமல் வெடிப்பு விழுந்து போய்க் கிடந்துச்சு.... ராவுலே தண்ணி இறைக்க ஆரம்பிச்சது இன்னும் முடியலே. உன்னை வந்து பார்த்துட்டு அப்பாலே போயிருக்கலாமுன்னு வந்திருக்கேன்....ஆமா, பய பொறந்திட்டானும். நர்ஸம்மா சொன்னுக... பார்த்துட்டுத்தான் வாரேன்.... இஞ்சே. .. இப்படித் திரும்பித்தான் பாருவேன்..... நீ சாப்பிடலாம்ங்கிற நெனப்பிலே அய்யரு கடையிலே சாம்பாரு சாதம், மசால் வடை... பூரி கிழங்கு எல்லாம் வாங்கியாந்திருக்கேன்.''

பாப்பாத்தியின் உருவம் ஒரு வழியாகத் திரும்பியது. முகத்தை மூடியிருந்த போர்வையைச் சற்றே விலக்கி அவனை எரித்திடுறாப்போலப் பார்த்தாள்.

''இத பாரு. .. உனக்கு என்னைவிட உன் வயல்தானே பெரிசு..... எழுந்து போ.... இப்பவும் உன் வயல் எங்கேயும் ஓடிப் போயிடலே...... நீ கொண்டு வந்திருக்கியே. சாம்பாருப் பொட்டலம் அதை நீயே தின்னுட்டுப் பாக்கி வேலையைப் பார்க்கப் போ.... போ......'' என்று கடுமையாக இரைந்து விட்டு முகத்தை வெடுக்கெனத் திருப்பிக் கொண்டு விட்டாள்.

''பாப்பு..... பாப்பு.....'' என்று அவன் எத்தனை கெஞ்சியும் அவள் பார்வை திரும்பவேயில்லை.

கொண்டு வந்த பொட்டலங்களை ஓசைப் படாமல் அலமாரியைத் திறந்து வைத்து விட்டுத் தயங்கித் தயங்கி மனைவியின் முகத்தைப் பார்த்தான் அவன்.

''அப்ப..... பாப்பு..... நான் போகவா... உனக்கு எதுனாச்சும் வேணுமின்னு கேளு..... வாசல்லேயே குந்திரிருக்கேன்.... ''



''உங்க பேரு?''
''சௌரி ராஜன்!''

''நீ ஒண்ணும் குந்தியிருக்க வேணாம்...... .. ஊரைப் பார்த்துப் போ. ஆமா.... ஒன் அருமை மாமியா எங்கே.....?''

''அது அங்க வந்துச்சு. காத்தாலே உனக்காகக் காப்பி வாங்கக் கூசாவும் காசும் யாரோ ஒரு பய கிட்டே கொடுத்து வாங்கியாரச் சொல்லுச்சாம். பய கூசாவோடு எங்கயோ பிரிஞ்சிட்டான். கையிலே வேறே காசுமில்லே....உங்கிட்ட வந்து சொல்லப் பயம். நாலு மைலும் நடந்தே வந்து என்னண்டே சொல்லிச்சு. உடனே தான் நான் ஊட்டுலே குந்த வைச்சுட்டு வந்தேன்... பாப்பு.... இப்ப எதுனாச்சும் சாப்பிடுறயா?'' என்று குழைவுடன் கேட்டான் அவன்.

மனைவி பேச்சுக் கொடுத்ததைச் சாக்காக வைத்து எத்தனை அக்கறையோடு அவளைச் சாப்பிடச் சொல்லுகிறான்.

''இப்ப சோத்தைக் கொட்டிக்க முடியுமா ? காப்பித் தண்ணி வாங்கியாந்திருந்தா ஒரு வாய் ஊத்து....''

கொண்டு வந்திருந்த காப்பிப் பாட்டிலைத் திறந்து பரிவோடு அருகே சென்று மடக்கு மடக்காக அவள் வாயிலே ஊற்றுகிறான்.

''சுவாரசியமான காட்சியிலே லயித்து விட்டே போயிருக்கே.....'' என்ற குரல் கேட்டதும் திடுக்கிட்டுத் திரும்பினாள் சாவித்திரி.

''ஓ.... நீங்களா.... எப்படி வந்தீங்க....? எப்போ வந்தீங்க.....?''

''இப்போத்தான் வந்தேன். உன் கண்ணெதிரேதான் வந்தேன். உன் நினைவுதான் எங்கேயோ.....''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே.... ஆமாம், வீட்டிலே மாமி சௌக்கியமாக இருக்காங்களா......''

''ஓ... நேற்று மாலையிலே அம்மாவுக்கு 'வெயிட்' பார்த்தது.... நாலு பவுண்ட் கூடியிருக்காங்க....''

''நீங்க காலையிலே வரலேன்னதும் பதறிப் போனேன்..... உங்க உடம்புக்கு ஒன்றுமில்லையே.....?''

எதிரே நிற்கும் பார்த்திபனை உச்சி முதல் உள்ளங் கால் வரை ஆராய்ச்சிக் கண்ணோடு உற்று நோக்கினள் சாவித்திரி. மனத்திலே ஒரு வகையான நிறைவு.

''காலையிலே வந்தாலே சங்கர்.. அவனைப் பார்த்துப் பேச வேண்டும் என்று ஒரே துடிப்பு ..... எத்தனை நாட்களாகிறது அவனோடெல்லாம் மனம் விட்டுப் பேசி. 'மதனி', 'மதனி' யென்று, வாஞ்சையோடு அழைக்கும் அவன் குரலை அதன் குழைவைக் கேட்க வேண்டும் என்று ஒரு துடிப்பு.....''

''நாளைக்கு வேண்டுமானாலும் அவனை அனுப்புகிறேனே.....''

''வேண்டாம்..... வேண்டாம்.... எனக்காக நீங்கள் ஒருவர் அலைவதே போதும். குடும்பத்தில் எல்லோர் மீதும் என் துன்ப நிழல்பட வேண்டாம். ஆமாம், பாபு எப்படியிருக்கிறான்......?''

''பாபுவா.... பாபு.... ஓ.... அவன் எப்போதும் போல் இருக்கிறானே.....''

''ஆமா.... அவன் பேச்சை யெடுத்ததும் உங்கள் உடம்பு பதறுவானேன்... பாபுவை நான் பார்க்கத் துடிப்பேன் என்றுதானே.... இனிமேல் அந்த நினைவையே மறக்க ஒரு வழி கண்டு பிடித்து விட்டேன் அத்தான்.....''

சாவித்திரி தன் பக்கமிருந்த புஸ்தகத்தைப் புரட்டி அதனுள்ளிருந்து ஏதோ ஒன்றை எடுத்துப் பார்த்திபனிடம் கொடுக்கிறாள்.

''இது...... இது..... யார் குழந்தை, சாவித்திரி..... குழந்தை ரொம்ப அழகாக இருக்கிறதே!''

''ஆமாம்..... அதிலே ஒரு வேடிக்கையைப் பார்த்தீர்களா.....? கருள் கருளான கருங்கற்றைக் குழலும், குறுகுறுத்த விழிகளும், குறும்புச் சிரிப்பும் நம் பாபுவைப் போல் இல்லையா.....?''

அந்தப் போட்டோவின் விவரத்தையும் அதன் தாயாரின் நிலையையும் சொல்லி முடித்தாள்.

''பாவம், சின்னஞ் சிறிசு..... கணவன் மனைவி இருவருமே ஒருவருக்கொருவர் துணை..... வாழ்க்கையிலே இருவருமே வேறு பற்று பாசம் இழந்தவர்கள். டைபாயிட் வந்த பெண், உடம்பு குணமாகி விட்டதே என்று வீட்டுப் பொறுப்பிலே ஈடுபட்டிருக்கிறாள். இருப்பிக் கொண்டு விட்டது.....''

''த்சொ..... த்சொ.....''

''இன்று காலையிலே என் கையிலே தேசிக விநாயகம்பிள்ளை பாடல் புஸ்தகத்தைக் கண்டதும் என்னோடு பேசக் கொடுத்து இந்தப் புஸ்தகம் தனக்கு வேண்டும் என்றாள். கொடுத்தேன்.....''

''திருப்பித் தரும்போது படத்தையும் சேர்த்துத் தந்து விட்டாளோ....?''

''அவளாகத் திருப்பித் தரவில்லை. தரக் கூடிய நிலையிலும் அவள் இல்லை. அவளுக்குத் தன் நினைவே இல்லை. இப்பொழுதும்கூடத் தன் நினைவற்றுக் கிடக்கிறாள். அதோ அந்த வாலிபனைப் பாருங்களேன்...... அவன் முகம் எப்படி இருள் கப்பிக் கிடக்கிறது...''

'என் மனத்திலே கருமேகமே சூழ்ந்து கிடக்கிறது' என்று சொல்லத் துடித்தான் பார்த்திபன். சொல்ல முடியுமா....?

''நீ சொல்ல வந்ததைச் சொல், சாவித்திரி.......''

''எனது பைத்தியக்காரத்தனமான ஆசையைக் கேட்டுச் சிரிக்க மாட்டீர்களே?''

''பத்தாம் தேதி நம் பாபுவுக்குப் பிறந்த நாளாயிற்றே! டிரஸ் வாங்கி விட்டீர்களா ?''

''வாங்க வேண்டும் சாவித்திரி.........''

நீ இல்லாமல் எனக்கு எல்லாமே குழம்பிப் போகிறது!''

சாவித்திரியின் நெஞ்சு ஏறி இறங்குகிறது.

''எனக்கு ஒரே ஒரு ஆசை..... அவனது பிறந்த நாளன்று......''

''பிறந்த நாளன்று.....?''

''ஏன் திடுக்கிடுகிறீர்கள்.....? அவனை அழைத்து வரச் சொல்வேன் என்றா ? வேண்டாம் அத்தான் வேண்டாம். ஒரு நாளைக்கு அழைத்து வந்து விட்டால் தினமும் பிடிவாதம் பிடித்து ஏங்குவான் என்று தானே இத்தனை நாட்களும் வரவில்லை.... அது போலவே இப்பொழுதும் இருக்கட்டும். ஆனால்..... பிறந்த நாள் உடையோடு கோவிலுக்குப் போய் வந்த நிலையிலே மாலையும் கழுத்துமாகக் குழந்தையைப் படம் எடுத்துக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்து விடுங்கள்....'' உணர்ச்சி பரவசத்தால் கண்களை மூடிக் கொள்ளுகிறாள் சாவித்திரி.

ஆயிரம் பேரிடி ஒரே சமயத்தில் தாக்குவதை உணர்ந்தான் பார்த்திபன். தன் வேதனையை அவளோடு பகிர்ந்து கொள்ளும் நிலையிலா அவள் இருக்கிறாள்...?

''ஆகட்டும்..... சாவித்திரி......''

தேடிய நிதி கிடைத்து விட்டது போன்ற மலர்ச்சி. நோயினால் வாடித் துவண்ட வதனத்திலேகூட இத்தகைய பிரகாசத்தைக் காண முடியுமா.....? அதற்கு எதிர்மாறாகப் பார்த்திபனின் இதயத்தை இருள் கப்பிக் கொண்டது.

''டிபனைச் சாப்பிடுகிறாயா சாவித்திரி ? எனக்கு நேரமாகிறது..... நான் போக வேண்டுமல்லவா ?''

''நானே எடுத்துச் சாப்பிட்டுக் கொள்ளுவேன்...... ஆமாம், என் உடலிலே இப்போது புதிய பலம் பிடித்திருக்கிறதை நீங்கள் உணரவில்லை ? அது சரி.... இன்னும் முதல் மணியே அடிக்கவில்லையே.... அதற்குள் என்ன அவசரம்.....?''

''ஆமாம், சாவித்திரி, இன்று அவசர வேலை இருக்கிறது. நாளை நேரத்தோடு வந்து

எந்த ஸ்டேஷனையும் தெளிவுடன் கேட்டு ரஸிக்க

நேஷனல் எக்கோ


அளிக்கும் கவர்ச்சியான புது மாடல்கள்



இந்தியாவில் ரேடியோ உற்பத்தியில் முன்னோடிகளான நேஷனல்-எக்கோ பெருமிதத்துடன் அளிக்கும் மூன்று புதிய மாடல்கள்: U-819, U/A-806, A-829. நேஷனல்-எக்கோவின் உன்னத தன்மைக்கு உதாரணமான இவை ஒவ்வொன்றும் தர நிர்ணய பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டவை... இவற்றின் இயற்கையான, தெள்ளிய, நாதத்தை நீங்கள் பெரிதும் விரும்புவீர்கள். இன்றே உங்கள் அருகில் உள்ள நேஷனல்-எக்கோ வியாபாரியிடம் சென்று, நீங்கள் விரும்பும் ஸ்டேஷன்களை வைத்துக் கேளுங்கள்!

விலைகள் எக்சைஸ் ட்யூடி உள்பட; வரிகள் தனி.

மாடல் U-819:
ஏஸி/டிஸி செட். 5 வால்வுகள்,
3 வேவ் பாண்டுகள். பேக்லைட் பெட்டி.
ரூ. 298.00





மாடல் 806:
6 வால்வுகள், 3 வேவ் பாண்டுகள்.
நவீன மாதிரி அழகிய மரப்பெட்டி.
மாடல் A-806, ஏஸி செட். மாடல்
U.806, ஏஸி/டிஸி செட். ரூ. 395.00

மாடல் A-829: ஏஸி செட். 6 வால்வுகள்,
4 பாண்டுகள். பர்மனெண்ட் மாக்னெட்
ஸ்பீக்கர்; பேஸ், ட்ரெபில், மற்றும் மீடியம்
நாதத்துக்கான 3 புஷ் பட்டன்
டோன் கண்ட்ரோல்கள். பாண்டுகள்
தேர்வுக்கு பியானோ கீ அமைப்பு. ரூ. 481.00

ஜெனரல் ரேடியோ & அப்ளையன்ஸஸ் லிமிடெட்

பம்பாய் . கல்கத்தா . மதராஸ் . டில்லி . பெங்களூர் . ஸெகந்திராபாத் . பாட்னா

நேஷனல் எக்கோ [illegible] ரேடியோக்கள்

இந்தியாவிலேயே மிகப்பெரிய ரேடியோ ஃபாக்டரியின் தயாரிப்பு

JWT-GRA-3033A



PLATO

REGD.

ட்ரேட் மார்க்

எச்சரிக்கை நோட்டீஸ்

ப்ளேட்டோ என்னும் வியாபாரப் பெயர் என்னுடைய கட்சிக்காரர்களான மாத்ரே பென் & ப்ளாஸ்டிக் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட், துளசி பைப் ரோடு, தாதர், பம்பாய்-28, அவர்களுடைய தயாரிப்புக்களான ஃபௌண்டன் பேனாக்கள், நிப்புகள் (ஃபௌண்டன் பேனா), நிப்புகள் (சாதாரண பேனா), இங்கிகள், பால்-பாயிண்ட பேனாக்கள், ரீஃபில்கள் மற்றும் இதர உறுப்புகள் இவற்றைக் குறிக்கும் ரெஜிஸ்டர்டு ட்ரேட் மார்க் ஆகும் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட இந்தப் பெயர் என்னுடைய கட்சிக்காரர்களால், வெகுகாலமாக நீடித்து இடைவிடாமல் உபயோகப்படுத்தப்பட்டு வருவதால் இது என்னுடைய கட்சிக்காரர்களுடைய பிரத்தியேக சொந்த உரிமைக்குட்பட்டதாகும்.

என்னுடைய கட்சிக்காரர்களால் தயாரிக்கப்படாத மட்டரக போலி ஃபௌண்டன் பேனாக்கள், நிப்புகள் மற்றும் பால் பாயிண்ட பேனாக்கள் முதலியவை மோசடியாக ப்ளேட்டோ என்னும் பெயருடன் விற்கப்பட்டு வருவதை என்னுடைய கட்சிக்காரர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள் இந்த மோசடியில் ஈடுபட்டுள்ள தயாரிப்பாளர்கள், வியாபாரிகள், வீதி விற்பனையாளர்கள் போன்றவர்கள் ஏதுமறியாத பொதுமக்களை ஏமாற்றி இவற்றை வாங்கும்படி தூண்டுகிறார்கள் தயாரிப்பாளர்கள், வியாபாரிகள், வீதி விற்பனையாளர்கள் இதனால் எச்சரிக்கப்படுவது யாதெனில், ப்ளேட்டோ மார்க் கொண்ட போலி சாமான்களை தயாரித்தாலும், விற்பனைக்காக வைத்திருந்தாலும், விற்றாலும் அல்லது வேறு எந்தவிதமாகவும் இவற்றின் வியாபாரத்தில் ஈடுபட்டாலும் இந்தக் குற்றங்களுக்காக என்னுடைய கட்சிக்காரர்கள் அவர்களை பிராசிக்யூட் செய்வதுடன், தகுந்தபடி இதர சட்டரீதியான நடவடிக்கைகளையும் எடுப்பார்கள். நாணயமுள்ள வியாபாரிகளும், வாடிக்கையாளர்களும் இம்மாதிரி போலித் தயாரிப்பாளர்கள், வியாபாரிகள் இவர்களுடைய பெயர், விலாசம் முதலிய விவரங்களை என்னுடைய கட்சிக்காரர்களுக்கு தெரிவித்து ஒத்துழைக்குமாறு வேண்டப்படுகிறார்கள்

சர்வெண்ட்ஸ் ஆஃப் இந்தியா
சொஸைட்டீஸ் பில்டிங்,
எஸ். வி. பி. ரோடு, பம்பாய்-4

மாத்ரே பென் & ப்ளாஸ்டிக் இண்டஸ்ட்ரீஸ்
பிரைவேட் லிமிடெட் சார்பில்
டப்ள்யூ. எஸ். கானே, அட்வகேட்.

Shilpi-MP.261 Tam.

நேரம் கடந்து திரும்பிச் செல்லுகிறேன்.... உனக்கு வேண்டியது எதுவோ அதை யெல்லாம் சொல்.....''

''அதைத்தான் அப்பொழுதே சொல்லி முடித்து விட்டேனே.... இந்த அற்புத யோசனை இத்தனை நாட்களாக எனக்குத் தோன்றாதிருந்து விட்டதே.... தினம் தினம் அவன் நினைவைக் கண்ணுள் பிடித்து நிறுத்திக் கரைந்து கொண்டிருக்கிறேன்.... இனிமேல் கவலையில்லை. கண்ணாடிச் சட்டத்துள் நீங்கள் அடக்கிக் கொண்டு வரும் என் பாபுவை என் கண்ணுள் பதித்து நெஞ்சுள் நிறைந்துக் கொள்வேன். ஆமாம், உங்கள் உடம்பு ஏன் நடுங்குகிறது....? உங்களுக்கு உடம்பு நலமில்லையா....? என்னிடம் ஏன் மறைக்கிறீர்கள்......?''

''ஒன்றுமில்லை சாவித்திரி.... உன்னை நல்ல படியாக வீட்டுக்கு அழைத்துப் போய் உன் குடும்பத்தை உன் கையிலே ஒப்படைத்து விட்டால் எனக்குள்ள பொறுப்பும் வேதனையும் குறைந்து விடுமல்லவா? அதனால்தான் சொல்லுகிறேன்..... குழந்தைத்தனமாய்ப் பிடிவாதம் செய்யாமல் ஒழுங்காய் உடம்பைப் பார்த்துக் கொண்டு சீக்கிரமே எனக்கு விடுதலை கொடு, சாவித்திரி.....''

''இன்றைக்கு ஏன் உங்கள் பேச்சிலே என்றுமில்லாத சோர்வு; ஒவ்வொருநாளும் எனக்குத் தெம்பும் திடமும் அளிக்கும் உங்களுக்கே ஏன் இத்தனை தளர்ச்சி....? இதோ பாருங்கள், வீட்டிலே எது நடந்திருந்தாலும் என்னிடம் மறைக்காமல் சொல்லி விடுங்கள். என்றாவது ஒரு நாள் நானும் வீட்டுக்கு வருவேன். அப்போது எதையும் என்னிடமிருந்து மறைக்க முடியாதல்லவா ?''

''ஒன்றுமில்லை சாவித்திரி..... உன்னிடம் மறைக்கும்படியாக எதுவுமே நடக்கவில்லை. உன்னைப் பற்றிய நினைவும் சோர்வும் தவிர எனக்கு வேறு எதுவுமே இல்லை. அதனால் தான் சொன்னேன், நீ சீக்கிரமே எழுந்து நடந்து வந்து விடு என்றேன்......''

அவன் கண்கள் கலங்கிச் சிவக்கின்றன.

கணவரின் கண்களில் தோன்றிய கலக்கம் சாவித்திரியின் இதயத்தையே கலக்கி விடுகிறது.

''இதோ பாருங்கள்..... என் கால்கள் இப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாக நீட்டவும் மடக்கவும் முடிகிறது அத்தான்.... சீக்கிரமே வீட்டுக்கு வந்து விடுவேன். அப்பொழுது உங்களுக்கு எந்தப் பொறுப்புமே யில்லாது பூரண நிம்மதி தருகிறேன். என் பொருட்டுக் கோழையாகாதீர்கள் அத்தான்! பாபு உங்களைவிடக் கோடிச் சமர்த்தாக இருப்பான் போல் இருக்கே..... அவனுக்கு அம்மாவே வேண்டாமாமே....அவனுடைய திட மனத்தைப் பார்த்தீர்களா.....!''

ஆஸ்பத்திரி மணி கணகணக்கிறது.

பார்த்திபன் புறப்பட்டு விட்டான்.

புருஷன் வரும் போது பாம்பாய்ச் சீறிய பாப்பாத்தி இப்பொழுது அடங்கிய பெட்டிப் பாம்பாய் அவனை வழியனுப்பி வைக்கிறாள்.

''ஆமா.... ராவு நீ இங்கே தங்கியிருக்க வேண்டாம். ஊர்ப் பக்கம் போய் வயலேலை பாக்கி இருக்கிறதைப் பாரு..... மன்னனைக் கவனிச்சால்தான் மாதா நம்மைக் கவனிப்பா..... என்னை நீ கவனிச்சது போதும்.''

''பாப்பம்மா...... நெசமாத்தான் சொல்றியா..... இல்லே கோவிச்சுக்கிறு....''

''நீ என்ன மச்சான், என்னைக் கவனிக்க இங்கே எத்தனையோ பேரு இருக்காங்க...''

''அவுங்க நல்லா இருக்கட்டும். அப்போ நானு கிராமத்துக்குப் போறேன்... முடிஞ்சா நாளைக்கு வாரேன். முடியாட்டி உங்கம்மாளை அனுப்பறேன்.... போவட்டுமா......'' திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே நடந்தான்.

எட்டாம் நம்பர் படுக்கையிலே ஆடாது அசையாது துயில் செய்தாள் ராதை. அவள் தலையிலே ஜில்லென்று ஐஸ் பை.

எதிரே இருக்கும் வாலிபன் கவலையோடு அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

நர்ஸ் ராஜகாந்தம் வந்தாள்.

''மிஸ்டர்.... சற்றுக் கொஞ்சம் வெளியே வருகிறீர்களா.....!''

வாலிபன் தயங்கினான்.

''ராதைக்கு ஒன்றும் பயமில்லை. பொறுப்பை எப்பொழுது எங்களிடம் ஒப்படைத்து விட்டீர்களோ, அப்பொழுதே உங்களுடைய கவலையையும் பொறுப்பையும் குறைத்துக் கொள்ள வேண்டும்.....''

வாலிபன் வாயே திறக்கவில்லை.

மனத்தைச் சூழ்ந்திருந்த பயத்தின் வேகம் அவனை மௌனியாக்கி விட்டிருந்தது.

கால்கள் துவள அவன் எழுந்து வெளியே நடந்தான்.

நர்ஸ்களும் டாக்டர்களும் தமக்குத் தெரிந்த வைத்திய முறைகளை யெல்லாம் கையாண்டு ராதைக்காக விதியுடன் போராடிக் கொண்டிருந்தார்கள்.

சாவித்திரி இப்பொழுது மெதுவாய் நடக்கத் தொடங்கியிருக்கிறாள். மாலைப் பொழுதிலே ராஜகாந்தமாவது நீலமணியாவது வந்து கையைப் பிடித்து ஹாலுக்குள்ளேயே நடை பழக்கி வந்தனர்.

கால் என்னவோ சிறிது சிறிதாகப் பலம் பெற்றுத்தான் வந்தது. ஆனால் மனம்.....?

சாவித்திரி தன் தலையணைக்கடியிலிருந்து, ராதையின் குழந்தையுடைய படத்தை எடுத்து உற்றுப் பார்த்தாள்; முகத்தோடு முகம் பதித்துக் கொண்டாள்.

தொடர்ந்து அந்த வார்டுக்குள்ளே ஒரு பரபரப்பு..... கலகலப்பு......

ஏழெட்டு ஆட்களும் நிர்வாகத் தலைமை அம்மையாரும் வார்டு வார்டாகச் சுற்றிப் பார்த்துச் சென்றார்கள். நோயாளிகள் ஒருவரையொருவர்பார்த்து விழித்துக் கொண்டார்கள்.

நர்ஸ் நீலமணியைக் கேட்டு விவரம் தெரிந்து கொண்டாள் சாவித்திரி.

"நாளை நித்தியானந்தா நர்ஸிங் ஹோமின் வெள்ளி விழா நடக்க விருக்கிறது; அதற்காக ஆஸ்பத்திரியை இந்திர லோகமாக மாற்றத் திட்டமிட்டிருக்கிறார்கள். வெளிவாசலிலெல்லாம் பந்தல் அலங்காரம் தொடங்கி விட்டார்கள். இங்கேயும் வருவார்கள்....."

சொல்லிக் கொண்டிருக்கும் போதே உயர உயரமான ஏணிகளும் அலங்காரப் பேப்பர்களும் வர்ண மாலைகளும் வந்து நிறைந்து கொண்டிருந்தன. பின்னும் சில மணி நேரங்களுக்குள் அது ஆஸ்பத்திரி என்பதையே மறக்கும்படியான நிலையிலே அழகு மயமாக்கிச் சென்றிருந்தார்கள்.

நோயாளிகள் எல்லோருக்குமே அன்று மூன்று மணிக்குள்ளாகவே உடைகள் மாற்றி, படுக்கையைச் சுத்தம் செய்து உட்கார வைத்து விட்டார்கள்.

புதிதாகப் பிறந்திருக்கும் குழந்தைகளுக்கெல்லாம் ஆஸ்பத்திரிச் செலவில் விதம் விதமான பட்டுச் சொக்காய்கள் கிடைத்தன.

தாய்மார்களுக்கு ஆரஞ்சு, மலைப் பழம், கேக், பிஸ்கட்டு அடங்கிய தட்டுக்களை, தலைமை வகிக்க வந்திருந்த கவர்னர் அவர்களே நேரில் வந்து கொடுத்துச் சென்றார்.

வார்டுகளுக்கு வெளிப்புறமான மைதானத்தில் மக்கள் கூடியிருக்கின்றார்கள். நித்தியானந்தாவில் சிகிச்சை பெற்று அதன் மூலம் தங்கள் இன்னல்கள் தீர்ந்து நலம் பெற்ற பெரியோர்கள் பலர் கூடியிருந்தார்கள்.

பிறந்த வீட்டுக்குச் செல்லும் தெம்போடு ஆஸ்பத்திரியில் கால் வைத்து, ஒருயிராய் வந்து, தாயும் சேயும் ஈருயிரும் இன்பமுமாய் விடை பெற்றுச் சென்ற தாய்மார்கள் தங்கள் குழந்தைகளோடு வந்திருந்தார்கள்.

முதன் முதலாய் அந்த ஆஸ்பத்திரியில் பதிவான குழந்தையை அறிமுகத்துக்காக மேடைக்கு அழைக்கிறார்கள்.

இருபத்தைந்து வயதுக் குமரியாக மூன்று குழந்தைகளுக்குத் தாயாக மேடையிலே வந்து நிற்கிறாள் ஒருத்தி.

தலைமையாளர் அவளுக்கு அளித்த தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டு, நன்றியுரையாக நித்தியானந்தாவின் சேவையைப் புகழ்ந்துரைத்து விட்டு, முடிவுரையாகத் தன்னுடைய மூன்று குழந்தைகளுமே நித்தியானந்தாவின் குழந்தைகள் என்பதைச் சொல்லி முடித்ததும் கரகோஷம் வானைப் பிளந்தது:

'என்கிட்டே குடையும் இல்லே: ஒண்ணும் இல்லே! எதற்கு என் பின்னுலேயே 'குடை சிப்பேர்' என்று கத்திக்கொண்டு வருகிறாய்?"

"பின்பக்கம் கோட்டு கொஞ்சம் கிழிசலாயிருக்கே! ஒட்டுப் போட்டுத் தைச்சுடலாமா என்று கேட்கத்தான் இப்படி ஓடி வருகிறேன்!"



வெள்ளி விழா நிகழ்ச்சிகள் முடிந்து கூட்டம் கலைந்தபோது இரவு எட்டு மணி.

மாலைப் போதிருந்த கலகலப்புகள் ஓய்ந்து வழக்கமான அமைதியின் அணைப்பிலே அடங்கி விடுகிறது நித்தியானந்தா.

இரவு ஒன்பது மணிக்குப் பேபிகள் உணவு நேரத்தில் தன்னிடம் வந்த குழந்தையின் பட்டுச் சொக்காயைத் தொட்டுத் தொட்டுப் பார்த்து மகிழ்கிறாள் பாப்பாத்தி.

மறு நாள் வீட்டுக்கு அழைத்துச் செல்லும் போது அந்தச் சொக்காயுடனே எடுத்துப் போக வேண்டும். அக்கம் பக்கம் உள்ளவர்களிடமெல்லாம் தன் மகனுக்குப் பட்டுச் சொக்காய் கிடைத்த பெருமையைப் பேசிப் பேசி மகிழ வேண்டும் என்கிற இனிய நினைவின் சுகத்திலே அமிழ்ந்து போகிறாள்.

நேரம் பத்து, பதினொன்று என மாறிக் கொண்டிருந்தது. இரவின் பூரண அமைதியிலே அநேகர் உறங்கி விட்டனர். சாவித்திரி மட்டும் நித்திரை கொள்ளாது துவண்டு கொண்டிருந்தாள்.

அன்று மாலை அவளைப் பார்க்க யாருமே வரவில்லை;

ஒரு வார காலமாகவே வழக்கமான நிகழ்ச்சிகள் மாறுபட்டு நிகழ்ந்து கொண்டிருந்தன; சரியான நேரத்தில் உணவு வந்ததில்லை; வந்த உணவுகளும் வழக்கமான உணவுகள் இல்லை..... சுவையுமில்லை .....

விடிந்தால் பத்தாம் தேதி. அவளது செல்வ மகன் அவதரித்த திருநாள். புலர்ந்தும் புலராத காலைப் பொழுதின் கலகலப்பான சுவையோடு மலர் விரியும் மதிமுகத்தை வாரி அணைக்க மனம் துடித்தது.

"சாவித்திரியம்மா... நீ இன்னும் தூங்கலையா..... இப்பொழுதுதான் உன் கால்வலி குறைந்து கொண்டு வருகிறதே..... நிம்மதியாய்த் தூங்கி உடம்பைத் தேற்றிக் கொள்."

"ஸிஸ்டர், இன்றைக்கென்னவோ என் மனம் ஏதோ ஓர் வேதனையில் பிழிபடுகிறதே......"

"சாவித்திரி........? பொறுத்த நாளெல்லாம் பொறுமையோடு இருந்து விட்டு, வீட்டுக்குச் செல்ல வேண்டிய நிலைக்கு மாறிக் கொண்டிருக்கும் போது மனம் குழம்பலாமா? படுத்துத் தூங்கு......" என்று கூறி ஏதோ ஓர் மாத்திரையைக் கொடுத்துச் சென்றாள்.

படுக்கப் போகுமுன் மெல்ல எழுந்து 'கப்—போர்டை'த் திறந்து மாலையிலே கவர்னர் கைப்படக் கொடுத்த பிஸ்கட்தட்டை உனக்காகக் கொடுத்தனுப்பி யிருப்பேன்...... உனக்கு உன் அம்மாதான் வேண்

டாம் என்றிருந்து விட்டாய். அவள் கொடுக்கும் இந்தப் பழத்தையும் பிஸ்கட்டையும் வேண்டாமென்று மறுத்துவிட மாட்டாயல்லவா........?''

தாய்மை அன்பிலே துடிக்கின்ற அந்தக் கரங்கள் மகனுக்குத் தன் கைப்படப் பழமும் பிஸ்கட்டும் கொடுக்கும் நினைவிலே துவளுகின்றன.

கையிலிருந்த தட்டு நழுவிப் 'படீ'ரென கீழே விழும் ஓசை கேட்டு நீலமணி ஓடி வருகிறாள். ''என்ன சாவித்திரியம்மா.... உனக்கு ஏதாவது வேண்டுமானால் என்னைக் கூப்பிடக் கூடாதா....? உன் கையும்.காலும் வேலை செய்ய இன்னும் சில நாட்கள் பிடிக்குமே!'' என்கிறாள்.

''ஸிஸ்டர்..... அந்தப் பழத்தையும், பிஸ்கட்டையும் பத்திரமாக எடுத்து வையுங்கள். என் மகனுக்குக் கொடுத்தனுப்ப வேண்டும். அவனுடைய அப்பாவும் பாட்டியும் அவனுக்கு வேண்டியதை வாங்கிக் கொடுப்பார்கள். இருந்தாலும் என் கைப்பட...''

நீர் முட்டும் விழிகளால் தன் கரத்தை உற்று நோக்கினாள் சாவித்திரி.

''இந்தக் கை துரதிர்ஷ்டம் பிடித்த கரம் ஸிஸ்டர்...... என் குழந்தைக்கு உணவூட்டி எத்தனை நாட்களாகின்றன.....''

''என்ன இது சாவித்திரியம்மா...அநுபவிக்கிற நாளெல்லாம் பொறுமையாக அநுபவிச்சிட்டு, விடுதலை பெறப் போகிற நாளிலே கண்ணீர் சிந்தலாமா? உங்களுக்குத் தெரியாததல்ல.... மருந்து பாதி, மனம் பாதி. வியாதியஸ்தர் தெளிவு பெற வேண்டும் என்றால்...?'' என்று கூறிய நர்ஸ் நீலமணி வேறு வேலை வந்துவிட்டதால் அங்கிருந்து நழுவி விட்டாள்.

மூடிய கண்ணுக்குள்ளே விழி செய்த புரட்சியிலே இரவு தூங்காது புரண்டு கொண்டிருந்தாள் சாவித்திரி.

காலைப் பொழுதின் இளங்காற்று முதல் நாள் மாலையிலே அலங்கரித்த பூமணத்தையும் சுமந்து கொண்டு வந்து தழுவியது. ஆஸ்பத்திரிக் கடமைகள் வழக்கம் போல் முறைப்படி நிகழ்ந்து கொண்டிருந்தன.

சாவித்திரி கண் விழித்துப் பார்க்கும்போது எட்டாம் நம்பர் படுக்கையிலே ஓர் அதிசயம் காத்திருந்தது.

படுக்கைக்கு எதிராக உள்ள மூக்காலியில் அமர்ந்திருந்த தன் கணவனிடம் சைகையில் ஏதோ கேட்டாள் ராதை.

'குழந்தை சௌக்கியமாக இருக்கிறான்' என்ற பதிலிலிருந்து ராதை தன் குழந்தையைப் பற்றிய கேள்வியைத்தான் கேட்டிருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டாள்.

மேலே ஏதோ பேசக் கொடுத்தான் வாலிபன்.

நர்ஸ் நீலமணி, ராதையின் பின்புறமாக நின்று கொண்டு அவனுக்கு ஏதோ சாடை கூறினாள். அவள் கூறியதைப் புரிந்து கொண்டதைப் போல் வாலிபனும் பேச்சை நிறுத்திக் கொண்டு விட்டான். ராதையின் கண்கள் சோர்வுற்று மூடிக் கொண்டன.

நர்ஸின் அழைப்பை ஏற்று வாலிபன் வெளியே சென்றான்.

சாவித்திரிக்கு அன்று காலை உணவு வரவில்லை; மதிய உணவும்கூட வரவில்லை.

மாலையில் அவர் வரும்போது மகனது விருந்துச் சாப்பாடும் சேர்ந்து வரும் என்று தள்ளி விட்டாள்.

சாப்பாட்டின் நினைவே தோன்ற முடியாத நிலையிலே பரபரப்பை ஊட்டியிருந்தது எட்டாம் நம்பர் படுக்கை.

நர்ஸ் நீலமணி குளுகோஸ் தண்ணீரைச் சொட்டுச் சொட்டாக ராதையின் வாயிலே ஊற்றிக் கொண்டிருக்கிறாள்.

மூன்று நான்கு நாட்களாக நினைவே தவறிக் கிடந்தவள் இன்று காலை கண் விழித்துக் கணவனிடம் ஏதோ கேட்டதும், அந்தக் கேள்வி தன் குழந்தையைப் பற்றியது என்பதையும் சாவித்திரி ஊகித்திருந்தாள். ராதையின் கேள்விக்குப் பதில் சொன்ன அவள் கணவனை நர்ஸ் நீலமணி சாடை காட்டி அழைத்துச் சென்றதும் கூடத் தெரியும்.

நினைவு பெற்ற மனைவியோடு பேசத் துடித்த வாலிபனை ஏன் இப்படி இதயம் கலங்க அழைத்துச் செல்லுகிறாள் என்னும் குழம்பியிருந்தாள் சாவித்திரி.

ஒரு கணம்.......

ஒரே கணம்தான்.....

தனக்குத் துணையாகத் தாய்ப்பாசத்தின் துடிப்பிலே வதைப்பட்டுக் கிடக்கும் அந்தப் பெண் முகத்தைப் பார்த்த கண் பார்த்தபடி நின்ற நிலையிலே –

ராதையின் முகம் ஏன் இப்படி கோணி இழுக்கிறது?

''ஸிஸ்டர்!'' என்று கத்தினாள் சாவித்திரி.

''உங்களைத்தானே! எங்கம்மா ஊரிலிருந்து 10 லிட்டர் அரிசி கொண்டு வந்திருக்கா!''

''அதனாலென்ன 15 லிட்டர் சாப்பிடற வரை இருந்து விட்டுத்தான் ஊருக்குக் கிளம்புவாங்க!''



''சாவித்திரியம்மா...உங்களை அழைத்துப் போக உங்கள் கணவர் வந்திருக்கிறார்.....'' என்று ராஜகாந்தம் கூறியபோது சாவித்திரி நம்பவேயில்லை.

பின்னாலேயே யாரோ வருவது தெரிகிறது.

யாரது? வந்தது பார்த்திபன்தானா ?

''டாக்டர் என்னை அழைத்துப் போக அனுமதி தந்து விட்டார்களா.....?''



கணவனிடம் அவள் கேட்ட கேள்வியைத் தன்னைக்கேட்ட கேள்வியாகப் புரிந்துகொண்ட ஆறும் நம்பர், ''டாக்டரம்மா காலையிலேயே எனக்குப் போக அனுமதிகொடுத்திட்டாங்க. நாலு மணிக்கு எம் புருஷன் வரும். வூட்டுக்குப் போறேன்'' என்று சாமான்களை மூட்டை கட்டிக் கொண்டிருந்தாள் பாப்பாத்தி.

சாவித்திரியின் கேள்விக்குப் பதில் சொல்லாமலே பார்த்திபன் அவள் சாமான்களை எடுத்து அடுக்கிக் கொண்டிருந்தான்.

சாவித்திரியின் பார்வை எட்டாம் நம்பர் படுக்கையை நோட்டம் விடுகிறது.

சுவாசம் இயங்குகிறதா இல்லையா என்பதையே புரிந்துகொள்ள முடியாத நிலையிலே உயிரிழை மெலிந்து கொண்டிருந்தது.

உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருக்கும் அந்தத் தாய், உயிரிருந்தும் இல்லாத நிலையிலே உட்கார்ந்து கிடக்கும் அவள் கணவன் விதியோடு போராடி மீட்டு வரும் தாயை எதிர்நோக்கி வீட்டிலே காத்துக் கிடக்கும் குழந்தை —

புஸ்தகத்தைப் பிரித்து அதனிடையே வைத்திருந்த பானுவின் படத்தை எடுத்து உரியவளிடம் சேர்ப்பிக்குமாறு நர்ஸிடம் கொடுத்தாள்.

சுருள் சுருளாக முன் நெற்றியிலே புரளும் குழல் கற்றை..... பட்டு ரோஜாவின் மலர்ச் சிரிப்பு. குறும்புப் பார்வை....

''பானு! நீ அதிர்ஷ்டசாலியாக இருக்க வேண்டும் அம்மா' என்று பிரார்த்தித்தாள்.

கூடவே தன் பாபுவின் நினைவும் வந்த போது அவள் அகம் மலர்ந்தது.

'பாபு..... நீ அதிர்ஷ்டசாலியடா...உன் அதிர்ஷ்டம்தான் உன் அம்மாவுக்கு உன் பிறந்த தினத்தன்றே விடுதலை கிடைத்து விட்டது. உன்னை ஆசிர்வதிக்க ஓடோடி வருவேனடா கண்ணே.....'

பாபுவின் மலர் முகம் தன்னை வாழ்த்தி வரவேற்பது போன்ற இனிய துடிப்பு உடலெங்கும் பாய்கிறது.

சாமான்களோடு முதல் நாள் மாலையிலே கொடுத்த பிஸ்கட் தட்டையும் கணவன் எடுத்த போது, ''அதை என்னிடம் கொடுத்து விடுங்கள்..... நான் பத்திரமாக வைத்துக் கொள்கிறேன். நேற்று மாலையிலே ஆஸ்பத்திரி விழாவிலே கொடுத்தார்கள். நேற்று நீங்கள் வந்தால் கொடுக்கலாமென்றிருந்தேன். வராததும் நல்லதாகிவிட்டதல்லவா? வாசற்படியில் நான் காலை வைத்ததும் குழந்தை என் காலைக் கட்டிக் கொள்ள வருவான். அப்பொழுது என் கையாலேயே பிறந்த நாள் பரிசாக அவனுக்கு இதைக் கொடுப்பேன்.....''

''அதற்கு அவசியமே இல்லை சாவித்திரி!''

பார்த்திபனின் உடல் குலுங்கியது.

அதிர்ச்சியுற்றுப் பார்க்கிறாள் சாவித்திரி.

''அவன் இனி நம்மிடம் எதையும் எதிர் பார்க்க மாட்டான். ஒரு வாரமாக அம்மை நோயிலே அவதிப்பட்டுக் கொண்டிருந்தவன் 'குளிர்ந்து' போய் விட்டான்.''

சாவித்திரிக்கு எல்லாமே புரிந்தது.

அந்நிய வீட்டுச் சாப்பாடு...... கணவன் குறித்த நேரத்துக்கு வர முடியாத தயக்கம்; நேற்று முழுதும் யாருமே எட்டிப் பார்க்காத நிலை எல்லாவற்றுக்கும் காரணம் புரிந்தது. சாவித்திரியின் கரு விழிகள் சுழன்றன; அடிவயிற்றைச் சுண்டி இழுக்கின்றன.....

''பாபு......''

சாவித்திரி மயங்கிச் சாய்கிறாள்.

நர்ஸ் ராஜகாந்தம் தாங்கிப் பிடித்துக் கொண்டாள்.

நினைவு தெளிந்து கண் விழித்தபோது டாக்டரும் நர்சுமாக நிறைந்து போயிருந்தார்கள் வார்டுக்குள்ளே.

தனக்காகவா இத்தனைக் கூட்டம்? இத்தனை பேரும் கூடி ஏன் என் உயிரைப் பிடித்து நிறுத்தியிருக்க வேண்டும்?

''போகலாம் சாவித்திரி!''

பார்த்திபனின் குரல் துயரத்தின் ஆழத்திலிருந்து பேசியது.

நெஞ்சையே கிழிக் கொண்டு பிறப்பது போல் விசும்பல் ஒலி எட்டாம் நம்பர் அருகிருந்து பீறிடுகிறது.

மயங்கிய பார்வையைத் திருப்புகிறாள்.

நர்ஸ் நீலமணி ராதையின் போர்வையை முகம் வரையில் இழுத்து மூடி விடுகிறாள்.

மாலை மணி ஆறு

பார்வையாளர்களின் கூட்டம் கலைந்து நித்தியானந்தா நித்திய ஓய்வில் ஆழ்ந்திருக்கிறது. வெளிகேட் வாசலிலே மூன்று வண்டிகள் தயாராகக் காத்திருந்தன.

முதல் வண்டி குழந்தையைத் தவிக்கவிட்டுச் செல்லும் தாயைச் சுமந்து சென்றது.

இரண்டாவது வண்டி குழந்தையை இழந்து விட்டுத் தவிக்கும் தாயைச் சுமந்து சென்றது;

கலங்கும் விழிகளுடன் இரண்டு வண்டிகளையும் வழியனுப்பி வைத்த கிராமத்து மாதா, நிறைவு பெற்ற தாயாகத் தன் குழந்தையைக் கையிலேந்தி மூன்றாவது வண்டியில் புறப்பட்டுச் சென்றாள்

அன்னை மூவரையும் வழியனுப்பிய நித்தியானந்தா வைத்திய நிலையம் மீண்டும் தன் நித்தியக் கடமைகளிலே தொடர்ந்து இயங்குகிறது.

சொல்லித் தெரிவதில்லை!

டாக்டர் கார்த்திகேயனுக்கு வயது முப்பதுகூட ஆகவில்லை. ஒன்றோ இரண்டோ குறைவுதான். ஆனாலும் நல்ல கைராசி என்று பெயர் வந்து விட்டதனால் மதிப்பும் மரியாதையும் வரும்படியோடு போட்டி போட்டுக் கொண்டு உயர்ந்து விட்டன. சாதாரணக் காய்ச்சல் என்றால்கூட டாக்டர் கார்த்திகேயனிடம்தான் வருவார்கள். ஆச்சு போச்சு என்றாலும் அவர்தான்.

அதனால்தான் கிருத்திகாவுக்கு அவரை அழைத்து வந்து பார்க்கச் சொல்ல வேண்டும் என்று ஓர் அவலாசை அடித்துக் கொண்டது. தன்னைப் பெற்ற அப்பாவுக்கு ஒரு பெண் செய்ய வேண்டிய கடமை அது என்று அவள் நினைத்தாள்.

கடைசியில் அவர்தான் வந்து பார்த்தார். டாக்டரின் கைராசிக்கு அது ஒரு சோதனையாக முடிந்து விட்டது. டாக்டரின் கைராசியைவிடக் காலதேவனுக்குத் தன் கணக்குத்தான் பெரிதாகப் போய் விட்டது.

கிருத்திகாவுக்கு இப்படித்தான் முடிவு என்பது முன்பே தெரியும். இருந்தாலும் செய்ய வேண்டியதைச் செய்து பார்க்க வேண்டாமா? அவள் இருந்த நிலையில் அது சக்திக்கு மீறிய காரியம்தான். ஆனால் உயிருக்குப் போராட்டம் என்று வருகிறபோது எது இருந்தால் என்ன, எது போனால்தான் என்ன? அந்த உறுதியோடுதான் எப்படியோ அவரை அழைத்து வந்து விட்டாள்.

இப்போது நினைத்துப் பார்க்கிறபோது அவளால் நம்பவே முடியவில்லை. புகழிலும் பெருமையிலும் கொழிக்கும் டாக்டர் எங்கே, அவள் எங்கே? அந்தஸ்திலும் சரி, மற்றவைகளிலும் சரி அவர் எங்கேயோ இருந்தார்; அவள் எங்கேயோ இருந்தாள். ஒரு மாதத்துக்கு முன் அவருடைய முகத்தைக்கூட அவள் சரிவரப் பார்த்ததில்லை. ஆனால் இப்போது இவ்வளவு தூரத்துக்கு வரும் என்று யாருக்குத்தான் தெரியும்?

டாக்டர்கள் என்றால் மற்றச் சமயங்களில் எப்படி இருப்பார்களோ, நடந்து கொள்வார்களோ, தெரியாது. ஆனால் பொதுவாக வைத்தியம் என்று வந்து மேஜையின் முன்னே உட்கார்ந்து கொண்டு விட்டால் வாயைத் திறந்து அனாவசியமாக ஒரு வார்த்தை வைத்துக் கொள்வதில்லை. டாக்டர் கார்த்திகேயனும் அந்த வகையைச் சேர்ந்தவர்தான். அது என்ன பொறுமை, அது என்ன பொறுமை! எல்லாம் ஒரு வழிப் பார்வை மாதிரிதான். யார் என்ன சொன்னாலும் காது மட்டும் ஒன்றுவிடாமல் எல்லாவற்றையும் கேட்டு வாங்கிக் கொள்ளும்; கண் என்னவோ தன் காரியத்திலேயேதான் கண்ணாக இருக்கும். வாய் மட்டும் திறக்காது; திறந்தால் முத்து உதிர்ந்து விடுகிற கணக்குத்தான்.

''வாயைத் திற; நாக்கை நீட்டு; வயிற்றைக் காட்டு; பின்னால் திரும்பு'' — ஆத்திரம் தீர எவ்வளவு பேசினாலும் டாக்டரிடமிருந்து வருகிற வார்த்தைகள் இப்படித்தான் இருக்கும்.

நோய், நொடி என்று வருபவர்களிடம் அன்பாக, பரிவோடு கொஞ்சம் பேசினால் தான் என்ன, குறைந்தா போய் விடும்? ஆனாலும் இவர் கொஞ்சம் கர்வம் பிடித்த டாக்டர்தான் என்று நினைத்தாள் கிருத்திகா. ஒருகால் பெண் என்பதால் தன்னிடம் பேசுவதற்கு அவர் கூச்சப்படுகிறாரோ என்றும் எண்ணினாள் அவள். இல்லா விட்டால் பெரிய இடம் என்றால் ஒரு விதம், சின்ன இடம் என்றால் வேறு ஒருவிதம் என்று இருக்குமோ என்றும் அவளுக்குத் தோன்றியது.

''டாக்டர்! இவ்வளவு தூரம் உங்கள் உதவி கிடைக்கும் என்று நான் முதலில் நினைக்கவேயில்லை, டாக்டர்'' என்று நன்றிப் பெருக்கினால் நாத் தழுதழுக்கச் சொன்னாள் கிருத்திகா.

அப்பொழுதும் டாக்டர் கார்த்திகேயன் அதே பொறுமையோடு, மெல்லிய புன்னகையோடு, ''நானும்தான் நினைக்க வில்லை'' என்று வண்டியைக் கிளப்பினார். புத்தம் புதிய வண்டி, ரோசத்தோடு உறுமியது.

''என்னவென்று?''



ஆர்வி

''அதற்குள் நன்றியுரை சொல்லி விடுவாய் என்று!''

அந்த வார்த்தைகள் கிருத்திகாவுக்குச் சுருக்கென்று தைத்தன. அந்த வலியை உணர்வதற்குள் வண்டி சொகுசாகப் புறப்பட்டு விட்டது. கண்களில் முட்டிய நீர் பார்வையைத் திரையிட அவள் தன் வீட்டினுள்ளே நுழைந்தாள். பழங்காலத்து வீடு, கூடம், தாழ்வாரம் எல்லாம் வெறிச்சென்று கிடந்தன. அவள் பிறந்தது முதல் அவளுக்கு அறிமுகமான ஒவ்வொரு பொருளும் பலிக இழந்து அவலட்சணமாகக் காட்சி தந்தது. அவளுடைய அப்பா உடல் இளைத்து உருமாறிப் போய்ப் படுத்திருந்த அந்தப் பழங் காலத்து அகமானகிரிக் கட்டில், மொக்கை விழுந்த மேஜை, கால் கடகடத்த நாற்காலிகள், எந்தக் காலத்திலோ பழுது பார்த்த சுவர்கள், தரைகள், மேல் கூரைத் தளங்கள் எல்லாம் முதுமையையும் கடந்து அச்சுறுத்தின. இந்த வீட்டிலே இருபத்தொரு வருஷங்கள் அவள் எப்படித் தான் வளர்ந்தாளோ? வளைய வந்தாளோ? இன்றைக்குத்தான் அவளுக்குத் தன் பயங்கரமான தனிமையும் நிராதரவான நிலைமையும் தெளிவாக விளங்கின. இருபது வருஷங்களில் ஊரே புதுமைப் பொலிவோடு மாறி இருக்கும்போது அவள் வீடு மட்டும் பழைமை மிஞ்சும் பழைமையாய், தெருவுக்கே அவலட்சணமாய் நிற்பதை இன்றுதான் அவள் கண்கள் பார்த்தன. வீடு என்னவோ பெரிதாகத்தான் இருந்தது. புராதனமான வீடு. தலைமுறை தலைமுறையாய் அவளுடைய முன்னோர்கள் வாழ்ந்த வீடு. அவர்கள் எப்படி வாழ்ந்தார்களோ, அவர்கள் குடும்பத்துக்கும் அந்த வீட்டுக்கும் பட்டாமணியக்காரர் குடும்பம், பட்டாமணியக்காரர் வீடு என்று ஒரு பெயர் வந்திருந்தது. அந்தக் குடும்பப் பெயரைச் சொல்ல இப்போது அவள் ஒருத்திதான் இருந்தாள். ஆனால் எத்தனை நாளைக்கு? இந்த வீடும் அவளுக்கு நிலைத்திருக்குமோ, இருக்காதோ, அதுவும் நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. எந்தக் கடன்காரன் திடீரென்று ஒரு நாள் வாசலில் வந்து நிற்பானோ, தெரியாது.

கிருத்திகா மறந்து போயிருந்த துக்கத்தை யெல்லாம் மறுபடியும் நினைத்துக் கொண்டு இடிந்து போய் உட்கார்ந்திருந்தாள். டாக்டர் கார்த்திகேயனுடைய வண்டியில் கழித்த சில மணி நேரங்களுடன் வாழ்க்கையே முடிந்திருக்கக் கூடாதா என்று கூட அவளுக்கு ஓர் எண்ணம் உண்டாயிற்று. டாக்டர் வலுக் கட்டாயமாக வற்புறுத்தி அழைத்தபோது அவள் மறுத்துச் சொல்லிப் போகாமல் இருந்திருக்கலாம். கவலையைச் சிறிது நேரமாவது மறந்திருக்கலாம் என்றுதான் தாட்சிண்யத்தைத் தட்ட மாட்டாமல் கிலப்போரி வரையில் போனாள். அவள் ஊரை விட்டு, வீட்டை விட்டுச் சமீபத்தில் எங்கும் போனதேயில்லை. ஹைஸ்கூல் படிப்பு முடிந்த பிறகு அவள் கோயிலைத் தாண்டிப் போனதில்லை. அவளோடு படித்த பெண்களெல்லாம் ஒன்று கல்லூரியில் சேர்ந்து படித்தார்கள்; அல்லது மணம் மணக்கக் கல்யாணமாகி, கணவன் குழந்தை என்று பெற்றிருந்தார்கள். 'அவர்கள் கண்ணில் பட அவளுக்கு வெட்கம். 'மேலே படிக்கவில்லையா?' என்று கேட்பார்கள். இதெலாம் வீண் வம்புதானே? ஒவ்வொருத்திக்கும் பதில் சொல்லிக் கொண்டிருக்கும்படி அவர்கள் முகத்தில் விழிப்பானேன்? பிறகு சங்கடப் படுவானேன்?

இன்றைக்கு எல்லாம் அந்த டாக்டரால் தான் வந்தது.

''பேசாமல் வண்டியில் வந்து ஏறிக் கொள்.' சொல்கிறேன். இப்படிக் கொஞ்சம் வெளியில் கிளம்பினால் மனசுக்கு ஆறுதலாகவும் இருக்கும்; உடம்புக்கும் நல்லது'' என்று வற்புறுத்தினான் அவன்.

''எங்கே, காரிலேயா? உங்களோடு தனியாகவா?''

''காரில் வந்தால் என்ன? துணைக்குக் காந்தி இருக்கிறாள். கிலப்போரி வரைக்கும் 'பிக்னிக்' போய் விட்டு வரலாம் என்றுதான் உன்னைக் கூப்பிடுகிறேன். இதில் என்ன தப்பு?'' என்றார் டாக்டர்.

''தப்பு ஒன்றுமில்லை. ஆனால் நான் எதற்கு? அதுதான் காந்தி வருகிறாளே!''

''நீ வருவாய் என்றுதான் துணைக்கு அவளையும் அழைத்துக் கொண்டு வந்தேன்!''

காந்தியை அவளுக்கு நன்றாகத் தெரியும். டாக்டருடைய மனத்துக்கு ஏற்ற நர்ஸ். எல்லாருக்கும் மூத்த சகோதரி போல. வேடிக்கையாகப் பேசி விகல்பமில்லாமல் பழகுவாள். கண்ணும் கருத்துமாக அலுப்புப் பட்டுக் கொள்ளாமல் அவள் பரிவோடு கவனித்துக் கொள்வாள். எல்லாம் சரிதான்; ஆனால் டாக்டரோடு காரில் போவதென்றால் அதற்கேற்ற டிரஸ் வேண்டாமா? பனிச் சென்று அணிந்துகொண்டு புறப்பட அவளுக்கு நாலுக்கான புடவை, ஜாக்கெட் ஏது? ஏதோ சாதாரணமான உடையே போதும் என்றாலும், காதிலே கழுத்திலே ஒன்றுமே வேண்டாமா?

''என் மயங்குகிறாய் என்று எனக்குத் தெரியும். எல்லாம் இந்த டிரஸும் அலங்காரமும் போதும். யாரும் உன்னை வந்து உற்றுப் பார்க்க மாட்டார்கள்; பார்த்தாலும் கேட்க மாட்டார்கள். உடனே கிளம்பு, சொல்கிறேன்!''

அவளுக்குச் சங்கடமாகத்தான் இருந்தது. போகவும் பிடிக்கவில்லை; போகாமல் இருக்கவும் பிடிக்கவில்லை. இவ்வளவு அன்பாக இப்படி வற்புறுத்தி யார் அவளைக் கூப்பிடப் போகிறார்கள்? அவள்தான் எங்கே போகிறாள்?

''பிக்னிக்கு என்று சொன்னீர்கள்?''

''ஆமாம், ஆமாம். புளியோரை, தேங்காய்ச் சாதம், பகாளபாத், பூரி–கிழங்கு, சிப்ஸ், கருவடாம், அப்பளம் இதெல்லாம் கொண்டு போவதென்றால் சாப்பிட ஆட்கள் வேண்டாமா?''

''வேண்டியதுதான்......''

''அப்படியென்றால் சட்டென்று புறப்படு, சொல்கிறேன்!''

ஏதோ அவசரப்படுத்தியதில் ஒன்றும் புரியாமல் அவள் வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டு விட்டாள். காந்தியின் ஆடையலங்காரத்தைப் பார்த்த பிறகுதான்


உங்கள்
வீட்டிற்கு
தேவை
மிக
சிறந்ததே
உஷா
விசிறிகள்
JAY
மெஸர்ஸ் உஷா சேல்ஸ் பிரைவேட் லிமிடெட்
19/20, மூக்கர் நல்லமுத்து தெரு, சென்னை-1

அவளுக்குத் தன் தவறு புரிந்தது. இத்தனைக்கும் காந்தி அப்படியொன்றும் பிரமாதமான ஆடையோ, ஆபரணங்களோ அணிந்திருக்கவில்லை. நர்ஸ் உடையைவிட இது எடுப்பாக இருந்தது என்றும் சொல்ல முடியாதுதான். ஆனால் எதை எப்படி எப்போது அணிந்து கொள்ள வேண்டும் என்று அவளுக்கு நன்றாகத் தெரிந்திருந்ததாகத் தோன்றியது.– பகட்டும் இல்லை; படாடோபமும் இல்லை. ரூபியா வாயில் புடவை; கல்ச்சர் முத்துக் காதணி: இடது கையிலே ஒரு சின்னக் கடிகாரம். இவ்வளவுதான் அவள் அணிந்திருந்தாள். ஆனால் எத்தனை கச்சிதமாக இருந்தது எல்லாம்!

அவர்களுடன் சேர்ந்து புறப்படுவதற்கே தனக்குத் தகுதியில்லை என்று மனம் புழுங்கினாள் கிருத்திகா. ஆனால் மற்ற இருவரும் இந்தத் தகுதியைப் பற்றிச் சிந்தித்ததாகவே தோன்றவில்லை. எப்போதும் போல் மலர்ந்த முகத்தோடு அன்பாகத்தான் அவளிடம் பேசினாள் காந்தி. கார்த்திகேயனும் மதிப்புக் கொடுத்துத்தான் உரையாடினான்.

செவப்பேரி போய்ச் சேருவதற்குள் கிருத்திகாவுக்குத் தன் சிறுமை உணர்ச்சியெல்லாம் போன இடம் தெரியவில்லை. அவர்கள் வற்புறுத்தலுக்கு இணங்கி வராமல் இருந்திருந்தால் இந்த நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்குமா?

சிற்றுண்டி வகைகளின் வாசனை மூக்கைத் துளைத்தது: வாயிலே உமிழ்நீர் பெருகியது. அளவு தெரியாமல் ஆசையோடு போட்டுக் கொண்ட புளியோதரையில் பாதியைக்கூட அவளால் சாப்பிட முடியவில்லை.

''வேண்டாமென்றால் எறிந்து விடேன். பாக்கியிருப்பதை யெல்லாம் யார் சாப்பிடுவார்கள்?'' என்றார் கார்த்திகேயன்.

இந்த மாதிரி ருசியாகச் சாப்பிட்டதே யில்லை. இவ்வளவு சாதத்தைக் கீழே போட்டு விட அவளுக்கு மனசே வரவில்லை. இருந்தாலும் வேறு வழியில்லை. மற்றவற்றை வகைக்குக் கொஞ்சம் போட்டுக்கொண்டாள்.

''இல்லேம்மா..... இப்படி யெல்லாம் – மாதிரி பார்க்கக் கூடாது. நிறையச் சாப்பிட வேண்டும். போஷாக்கு இல்லாமல் போனால் உடம்பு தேறாது. கையும் காலும் குச்சி போலத்தான் இருக்கும். முகத்திலே பச்சை ரத்தம் பாய்ந்தால்தானே பசுமை வரும்? ம்...... ம்..... சாப்பிடு அள்ளி!'' என்று விரட்டினார் கார்த்திகேயன்.

என்ன யோசித்துப் பார்த்தும் அவளுக்கு இதற்கெல்லாம் காரணம் தெரியவில்லை. அவளுக்கே தன் மேனியழகில் அப்படியொன்றும் திருப்தியில்லை. அவளோடு படித்த மஞ்சுளா, நளினி, கமலா இவர்களை யெல்லாம் போலவா அவள் பிரமிக்கிற அழகு படைத்திருந்தாள்? அவளுக்குப் பொறாமையாகக்கூட இருக்கும். பெண்ணுக்குப் பெண்ணே ஆசைப்படுகிற அழகு. மாலதியின் கண் அழகு ஒன்று போதுமே? ராஜியின் முத்துப் பல்வரிசைதான் என்ன அழகு! அவர்களையெல்லாம் போன்ற வனப்பும் ஊட்டமும் தனக்கு இல்லையே என்று அவள் எத்தனையோ தடவை ஏங்கியதுண்டு. கண்ணாடிக்கு முன்னால் போய் நின்றால் தன் முகம் வேறு எப்படியோ இருந்தால் தேவலை போல் இருக்கும் அவளுக்கு. கண்ணும் மூக்கும், நுதலும், உதடும், கன்னமும், கழுத்தும் அவள் எதிர்பார்ப்பது போல் இல்லை என்பது அவளுக்குத் தெரியும்: உடம்புகூட இன்னும் கொஞ்சம் மினுமினுப்பாகப் பூசினாற்போல் இருக்கலாம்: அதிலும் அவளிடம் இருந்த ஆடைகளை உடுத்துக் கொண்டு விட்டாலோ, கேட்கவே வேண்டாம். நாலு பேரைப் பார்த்துப் பழகினால்தானே முதலில் ஆடையை எப்படி அணிந்து கொள்ள வேண்டும் என்பது தெரியும்? கண்ணும் கையும் அத்தனை சூட்சமம் இல்லை; சுருக்கும் இல்லை. ஊரிலே, தெருவிலே எத்தனையோ பச்சைப் பசுங்கிளி போல் பெண்கள் இருக்க, டாக்டருக்கு அப்படி என்ன அவளிடம் ஒரு தனி அக்கறை? பரிவு? புரியவில்லை அவளுக்கே.

அழகும் ஒயிலும் கிடக்கட்டும். ஒருவர் கண் கொண்டு மற்றவர் பார்க்க முடியாது; மதிப்பிடவும் முடியாது. ஆனால் வேறு எந்த வகையில்தான் அவள் சிறந்தவள்? பணத்திலா, குணத்திலா? படிப்பிலா, பேச்சிலா? எதில் சிறந்தவள்? அப்படியாவது ரொம்ப நாள் பழக்கமா? அதுவும் இல்லையே–சமீபத்துப் பழக்கம்தான். அதாவது–

கட்டிலில் கிடந்தவரின் நாடியைப் பரிசோதித்தபோது டாக்டரின் கண்கள் எதிரே நின்ற அவளை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்



தன. சோகமே வடிவாக ஏங்கி நின்றான் அவன். டாக்டரின் பார்வையிலே அவளுக்கு அந்தச் சோகமே ஓர் ஆபரணமாகத் தோன்றியதோ, என்னவோ ?

இவளை இதற்குமுன் ஒரு தடவை பார்த்திருப்பதாக டாக்டருக்குப் பட்டது. ஆனால் எங்கே என்று நினைவுக்கு வரவில்லை. அதனால் மீண்டும் ஒரு தடவை கவனித்தார். கண் வழியே புகுந்த கூச்சம் அவள் மேனியிலே ஒரு மெல்லிய அலையை எழுப்பியது.

டாக்டர் நாடிப் பரிசோதனையை நிறுத்தி விட்டுப் பெருமூச்செறிந்தார். கட்டிலில் கிடந்த உருவத்தையும் எதிரே நின்ற இருத்திகாவையும் மாறி மாறிப் பார்த்தார்.

''ஊசி போடலாம் என்று பார்த்தேன். ஆனால் வேண்டாம்.''

அவளுக்கு அதன் பொருள் நன்றாக விளங்கி விட்டது. கூண்டிலிருந்து மெல்ல மெல்ல நழுவிக் கொண்டிருக்கும் உயிரை வீணாகத் துன்புறுத்தி வதைப்பானேன் ? இனி எல்லாம் நிமிஷக் கணக்குத்தான் !

''யாருக்காவது சொல்லியனுப்ப வேண்டும் என்றால் சொல்லியனுப்பலாம்.''

''வேண்டாம்; அப்படி யாரும் இல்லை.''

டாக்டர் தம்முடைய தோல்பெட்டியை மூடிக் கையில் எடுத்துக் கொண்டார். பெட்டியைக் கையில் எடுத்த நாள் முதல் இப்படி ஓர் அநுபவம் அவருக்கு ஏற்பட்டதில்லை. அந்த இடத்தில் நிற்கவும் முடியவில்லை. போகவும் அரைகுறைத் தயக்கமாக இருந்தது.

''சரி; அவசியமானால்.....'' என்று திரும்பிய டாக்டர் அவள் கையிலிருந்த பத்து ரூபாய் நோட்டையும் அவளையும் மாறி மாறிப் பார்த்தார். பிறகு அந்தப் பெரிய அறையையும் அதன் பஞ்சைத் தோற்றத்தையும் கண்ணோட்டம் விட்டார். நீட்டிய நோட்டை வாங்கிக் கொள்ள மறுத்தது கை.

''இருக்கட்டும்; பிறகு பார்த்துக் கொள்ளலாம்'' என்றார் டாக்டர்.

''பரவாயில்லை, டாக்டர். வாங்கிக் கொள்ளுங்கள். வைத்தியக் கடன் ஆகாது. போதா விட்டால் இன்னும்.....'' என்று மேலும் ஓர் ஐந்து ரூபாயை மட்டும் எடுத்து நீட்டினாள் அவள். டாக்டர் அதை வாங்கிக் கொண்டு, பத்து ரூபாய் நோட்டை அங்கிருந்த மேஜையின் மீதே வைத்தார். ''வருகிறேன்'' என்று திரும்பிப் பார்க்காமல் புறப்பட்டார்.

பளபள வென்று கண்ணைப் பறிப்பது போல் வாசலில் காத்துக் கொண்டிருந்தது அவர் வண்டி. உட்கார்ந்தவர் எதையோ கேட்க விரும்பியது போல் தோன்றியது. பின்னாலேயே வழியனுப்ப வந்த இருத்திகா வண்டியின் பக்கத்தில் வந்து நின்றாள்.

''என்னைக் கூப்பிட வந்தீர்களே, அதற்கு முன்பே உங்களை எங்கேயாவது பார்த்திருக்கிறேனா? பார்த்திருக்கிறதாகத்தான் நினைக்கிறேன். இன்றைக்குக் காலையில் அந்த மார்வாடி வீட்டுக்கு வந்திருந்தீர்கள் இல்லையா?''



இதைக் கேட்டதும் அவள் முகம் சட்டென்று மாறி விட்டது. மார்வாடி வீட்டுக்கு வந்திருந்ததாகவோ, வீட்டிலேயே இருந்த கடையில் ஓரமாக நின்றதாகவோ அவள் எதுவும் சொல்லவில்லை. ஆனால் அவளுடைய கைகள் மட்டும் வெந்திருந்த காதுகளை மறைத்துக் கொள்ள முயன்றன.

வண்டி விசுக்கென்று முன்னால் விரைந்து சென்றது. அது அந்தத் தெரு முனை திரும்பி மறையும் வரையில் அவளால் அடியெடுத்து வைக்க முடியவில்லை. பிறகு தான் மெதுவாக உள்ளே வந்தாள். கட்டில் நினைவிழந்து கிடக்கும் முகத்தையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள். 'கைராசிக்குப் பங்கம் வரக் கூடாது என்று தான் வைத்தியமே செய்யாக் கூடாது' என்று டாக்டர் போய் விட்டாரோ? 'சே, சே கூப்பிட்டதும் மறுக்காமல் வந்த டாக்டரைப் பற்றி இப்படி நினைப்பது சரியல்ல' என்று அவளே சொல்லிக் கொண்டாள். அந்த அறையின் ஓரமாகக் கிடந்த நாற்காலியில் களைப்பு மேலிட உட்கார்ந்து கொண்டாள். துக்கமும் தூக்கமும் அவள் இமைகளை அழுத்தவே மெதுவாகக் கண்களை மூடிச் சாய்ந்து கொண்டாள்.

தோள் மீது யாரோ கை வைப்பதை உணர்ந்து அவள் திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள். பளிச்சென்ற முகமும் வெள்ளை ஆடையுமாக நின்ற பெண்மணியைக் கண்டு எழுந்திருக்கப் போனாள்.

"டாக்டர் கார்த்திகேயன் சொல்லி அனுப்பி உனக்குத் துணையாக வந்திருக்கிறேன். உட்கார், உட்கார். என் பெயர் காந்தி......." என்று அவளே தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

"டாக்டரா?"

"ஒன்றும் கவலைப்படாதே. பணம் கிணம் கேட்பார்களோ என்று பயப்படாதே!"

பயப்படுவதற்கு இனிமேல் என்ன இருக்கிறது? ஒரு மாதமாகப் பயந்து பயந்து நடுங்கியதற்கெல்லாம் ஒரு முடிவு வந்து விட்டது. அவள் மனம் பாறையாக உறைந்து விட்டது. இனிமேல் எந்தக் கடன்காரன் தனக்கு இவ்வளவு ரூபாய் பாக்கி என்று வந்து நிற்கப் போகிறானோ என்ற ஒரு பயம்தான் இப்போது மிஞ்சி நின்றது.

கடைசி வரையில் காந்தி அவளை விட்டுப் பிரியவேயில்லை. ஆக வேண்டிய காரியங்களையெல்லாம்கூட அவளே முன்னால் நின்று பார்த்துக் கொண்டாள். என்ன செலவாயிற்றோ, ஏது பணமோ, கிருத்திகாவுக்கு ஒன்றுமே தெரியாது. கேட்டும் சொல்லவில்லை. அன்று டாக்டர் கார்த்திகேயன் வைத்து விட்டுப் போன பத்து ரூபாயைக் கூட யாரும் சீண்டவில்லை.

"சிஸ்டர், இதற்கெல்லாம் ஈடாக உங்களுக்கு நான் என்னதான் செய்யப் போகிறேனோ? உங்களைக் கோயிலில்தான் வைத்துக் கும்பிட வேண்டும்" என்று குரல் அடைக்கக் கூறினாள் கிருத்திகா.

"என்னைக் கும்பிடுவதா? நல்ல கதை தான் போ! இதற்கெல்லாம் யார் காரணமோ அவர் வந்தால் கும்பிட்டுக் கொள்" என்றாள் காந்தி.

"அவர் ஏன் இங்கே இனி வரப்போகிறார்?"

"யார் கண்டது? அவர் என்ன செய்வாரோ....?"

காரியமெல்லாம் முடியும்வரையில் கூடவேயிருந்த காந்தி போய் விட்டாள். கிருத்திகாவுக்குப் பயம் பிடித்துக் கொண்டது. இனிமேல்தான் கடன்காரர்கள் ஒவ்வொருவராக வருவார்கள். இவர்களுக்கெல்லாம் என்ன ஏற்பாடு செய்வது?

திடீரென்று மறுநாள் மத்தியானம் வாசல் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. மளிகைக் கடைக்காரன் எப்போதும் இந்த நேரத்தில்தான் வருவான். அவனுக்கு என்ன பதில் சொல்வது என்று யோசித்துக்கொண்டே கதவைத் திறந்தாள் கிருத்திகா.

அப்படியே அவள் திகைத்துப் போய் விட்டாள். வந்திருந்தவர் டாக்டர். அவளுக்கு உடலே பறந்து போயிற்று. உபசாரமாக அழைத்து உட்காரச் சொல்லக் கூடத் தெரியவில்லை. பேசாமல் உள்ளே ஓடி, கதவைப் பிடித்துக் கொண்டு நின்றாள்.

கார்த்திகேயன் இதற்கெல்லாம் கலங்கித் தயங்குகிறவராக இல்லை. அவரும் கூடம் வரையில் வந்து ஒரு நாற்காலியில் சொல்லாமலே உட்கார்ந்து கொண்டார்.

"இது என்ன, கடகடத்துப் போய் ஆடுகிறது?"

அவள் ஒன்றும் பதில் சொல்லவில்லை. ஒன்றும் சொல்ல முடியாத பரவச நிலை. ஆனால், "எல்லாமே ஆட்டந்தான்!" என்று வாய் மட்டும் கேட்டும் கேட்காமலும் முணுமுணுத்தது.

"இந்தப் பக்கம் எட்டியே பார்க்கவில்லையென்று எண்ணியிருப்பாய் இல்லையா?"

கிருத்திகா வாயைத் திறக்கவில்லை.

"என்ன?"

"அதெல்லாம் இல்லை; நான் அப்படியெல்லாம் நினைக்கவில்லை."

"அப்படியா?" என்று கார்த்திகேயன் அவளைத் திரும்பிப் பார்த்தார். அவளோ நிலத்தை விரல் நகத்தால் கீறிக்கொண்டிருந்தாள். சிறிது நேரம் இரண்டு பேருமே மௌனமாக இருந்தார்கள்.

"சரி; அதுதான் வந்தேன்....." என்று எழுந்தார் கார்த்திகேயன். அவள் தலையை நிமிர்த்தி அவர் முகத்தைப் பார்த்தாள். அவளுடைய கண்களிலே நன்றிப் பெருக்கு கண்ணீராகக் கசிந்து நின்றது.

"ஏதாவது அவசரமானால் தாராளமாகச் சொல்லியனுப்பலாம். காந்தி வரும்போது சொல்லியனுப்பினாலும் சரிதான்.... நான் வருகிறேன்" என்று சொல்லி விட்டுப் புறப்பட்டவர் சிறிது தயங்கினார். பிறகு பையிலிருந்து சிறிய பொட்டலம் ஒன்றை எடுத்து, "இதோ, இதைக் கொடுக்க மறந்து விட்டேனே!" என்றார்.

"என்ன அது? மாத்திரையா?"

"தெரியாது. அந்த மார்வாடி கொடுக்கச் சொன்னான். அதுதான்."

தேளை மிதித்தால் எப்படியிருக்கும்? அப்படியிருந்தது அவளுக்கு. மார்வாடி வீட்டில்

யாருக்கோ வைத்தியம் பார்க்க டாக்டர் போவது அவளுக்குத் தெரியும். ஆனால் டாக்டர் தன்னைப் பார்க்க வரப் போவது மார்வாடிக்கு எப்படித் தெரியும்?

இதுதான் இரண்டாவது தடவை பார்த்த போது நடந்தது. மூன்றாவது தடவை சந்தித்தபோது நடந்தது கிருத்திகாவின் உள்ளத்தைத் தொட்டு விட்டது.

அடகில் இருந்த ஆபரணங்கள் சிலவற்றை மீட்டுக் கொடுப்பதற்காகவே டாக்டர் வந்திருக்கிறார். இனிமேல் அவர் வரவேண்டிய அவசியம் இல்லை என்றுதான் கிருத்திகா மலைத்துப் போய் உட்கார்ந்திருந்தாள். மனம் என்னவோ குருட்டுக் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தது. மளிகைப் பாக்கி ஒரு மாதம்; ஜவுளி பாக்கி கொஞ்சம், இன்னும் சில்லறைக் கடன்கள்; அப்புறம் டாக்டருக்குச் சேர வேண்டிய பணம் — எல்லாவற்றையும் எப்படி அடைப்பது ? எப்போது அடைப்பது? வீட்டை மறந்துவிட வேண்டியதுதான். கடனை அடைத்து விட்டு, பாக்கிப் பணத்தைப் பாங்கியில் போட்டு வைத்துவிட வேண்டும். தேவைப்படும்போது வாங்கிக் கொள்ளலாம். அப்புறம் காந்தி சொன்னதுபோல் ஏதாவது ஒரு பயிற்சியையும் எடுத்துக் கொள்ளலாம். எத்தனை பெண்கள் தானே சம்பாதித்து முன்னுக்கு வந்திருக்கிறார்கள்? தையல், டைப்பிங், நர்ஸிங் என்று பெண்கள் கற்றுக் கொள்ளும் பயிற்சிகள்தான் இப்போது அதிகமாக இருக்கின்றனவே.....

யாரோ கதவைத் தட்டுகிற ஓசை கேட்டது. மறுபடியும் டாக்டர்தான் திரும்பி வருகிறாரோ என்று ஓடிப் போய் அவள் கதவைத் திறந்து பார்த்தாள். வாசலில் வந்துநின்றது டாக்டர் அல்ல. அவளுடைய அத்தை பிள்ளை பாலுதான். கடைத் தெருவிலே எவர்சில்வர் பாத்திர வியாபாரம். வந்தால் செலவு ஒட்டிக் கொள்ளுமோ என்ற பயத்தில் அவள் சொல்லியனுப்பிய போதுகூட அவன் வந்து எட்டிப் பார்க்கவில்லை. அவளுடைய அப்பாவுக்கு அவனைக் கண்டாலே கொஞ்சமும் ஆகாது.

''அன்றைக்கு என்று பார், கிருத்திகா, வராத மனிதர்கள் வெளியூரிலிருந்து வந்து விட்டார்கள். அவர்களை விட்டு விட்டு எப்படி வருவது?'' என்று ஏதோ சமாதானம் சொன்னான் அவன்.


''ஆமாமாம்; வர முடியாதுதான். அதனால் என்ன? இப்போது தான் வந்திருக்கிறாயே!'' என்றாள் கிருத்திகா.

''மாமா என்னவோ நல்லவர்தான். கொஞ்சம் பிடிவாதம் என்று பேரே தவிர, குணத்திலே தங்கம். ஆனால் உனக்குத்தான் ஒரு வழியும் செய்யாமல் போய்விட்டார்!''

''அவர் என்ன செய்ய முடியும்? ஆண்டவன் அல்லவா வழி செய்ய வேண்டும்! அதற்கு முன்னால் இந்தக் கடன்காரர்களுக்கு என்ன வழி செய்வது?'' என்றுதான் புரியவில்லை.

''கடன்காரர்களா?''

''ஆமாம்; அப்பாதான் படுக்கையில் விழுந்து விட்டாரே. வீட்டுச் செலவு, வைத்தியச் செலவு இன்னும் இல்லையா



தாயார்: ஏண்டாப்பா இப்படி இடிஞ்சு உட்கார்ந்திருக்கே?

மகன்: வேலைக்காரன் என்னை என்ன பேச்சு பேசி விட்டான், தெரியுமா? என்னிடம் செலவைப் பற்றிச் சொன்னால் 'காசா லேசா'ன்னு சொல்றேனும். அதற்காக அதைக் கொஞ்சம் மாற்றி 'நீ காசாலே சா' என்கிறான்!

சில்லறைச் செலவுகள். எனக்குத் தெரிந்து ஒரு ஐந்நூறாவது வேண்டியிருக்கும்......''

''அப்பாடா? அவ்வளவா? இதெல்லாம் உனக்கும் போதாது; உங்க அப்பாவுக்கும் போதாது.......''

கிருத்திகாவுக்கு அவன் சொன்னது கொஞ்சம் ரோசமாகத்தான் இருந்தது. ஆனாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. பாலு மோட்டு வளையைப் பார்த்தான்; கீழே பார்த்தான். பிறகு சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே ஏதோ யோசனை செய்தான். அவனிடம் என்ன பணமா இல்லை? இப்படிப்பட்ட நிராதரவான சமயத்துக்கு 'நான் தருகிறேனே' என்று ஒரு வார்த்தை? அப்பா காரியங்களைத் தனியாக இருந்து எப்படிச் செய்தாள் என்று பேச்சுக்காவது ஒரு வார்த்தை? கிருத்திகாவுக்கு எரிச்சலாக வந்தது.

''உம்..... எனக்கு ஒன்று தோன்றுகிறது. சொல்லலாமோ, என்னவோ, தெரியாது. இருந்தாலும் சொல்லி விடுகிறேனே. இனி இவ்வளவு பெரிய வீட்டில் நீ தனியாக எப்படி இருக்க முடியும்? அதனால் சொல்கிறேன்.......''

கிருத்திகா அவன் பேச்சைக் காதில் வாங்கிக் கொள்ளாமல், ''உன்னால் இந்தச் சமயம் எனக்குப் பணம் கொடுத்து உதவ முடியுமா? அதைச் சொல்'' என்றாள்.

''ஐந்நூறு ?''

''எவ்வளவு முடியுமோ, அவ்வளவு?''

''அதான் சொல்கிறேனே, ஏதோ பார்க்கிறேன். எதற்கும் முன்னாடி சொல்லி விடுவது நல்லதில்லையா? இரண்டு நாட்களாவது பிடிக்கும் பத்திரங்கள் எழுத. அது வரையில் பொறுத்துக் கொள்.''

''பத்திரங்கள் எதற்கு?''

''இந்த வீட்டு நம்பர், மதிப்பு இதெல்லாம் கண்டு பத்திரத்தில் எழுத வேண்டாமா?

இரண்டே நாட்களில் முடியும்படி நான் பார்த்துக் கொள்கிறேன். ஒரு விலை பேசிக் கொடுத்து விடுகிறாயா, இல்லை பந்தகமாகக் கொடுத்தால் போதுமா?''

கிருத்திகாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. வீட்டின் மேல் கடனாகவோ, அல்லது வீட்டையே கிரயமாகவோ வாங்கிக் கொள்ளத்தான் அவன் இப்படிச் சுற்றி வளைத்துப் பேசுகிறான் என்பது தெரிந்ததும் அவளுக்கு அருவருப்பும் ஆத்திரமுமாக வந்தது.

''சரி; எப்படி வேண்டுமானாலும் செய்யலாம். நான் சொல்லியனுப்புகிறேன் உனக்கு!''

''சொல்லியனுப்ப, உனக்கு யார் இருக்கிறார்கள்? பாவம், நானே வருகிறேன். இதைவிட எனக்கு வேறே வேலை?'' என்று சொல்லி விட்டுப் போனான் பானு.

அவனுடைய பேராசையை எண்ணி எண்ணி அவள் மாய்ந்து போனாள். அவன் பேச்சைக் கேட்ட பிறகு வீட்டை அடகு வைப்பதோ, விற்பதோ கூடவே கூடாது என்று தோன்றியது. அப்படியே செய்தாலும் பானுவுக்குக் கொடுப்பது கூடாது என்று ஒரு வைராக்கியம் உண்டாயிற்று. செத்தாலும் சரிதான்; இவ்வளவு கெட்ட எண்ணம் உள்ளவனுடைய உதவி எதற்கு? உறவுதான் எதற்கு?

''கிருத்திகா!''

''யாரு, டாக்டரா?''

''நேற்று வந்த போது உன்னிடம் சொல்ல மறந்து விட்டேன்!''

''என்ன?''

''இதோ, இதில் கொஞ்சம் பணம் இருக்கிறது. எதற்கும் கையில் இருக்கட்டும்.''

''பணமா? இதையெல்லாம் நான் எப்படித் திருப்பித் தருவேன்? எங்கிருந்து இந்தக் கடனை அடைப்பேன்?''

''இப்பொழுது இந்தப் பணம் எனக்கு வேண்டாம். உன்னால் முடிந்த போது கொடுக்கலாம். தப்பாக எண்ணிக் கொள்ளாதே. ஒரு வருஷமோ, இரண்டு வருஷமோ எப்போது கொடுத்தாலும் சரிதான். நாலு வருஷந்தான் ஆகட்டுமே. இனமாக வேண்டாம் என்றால் நீ திருப்பித் தந்து விடலாம்!'' கார்த்திகேயன் ஒரு கவரை அவளிடம் கொடுத்து விட்டு, ''எனக்கு அவசரம்; இன்னொரு சமயம் பார்க்கிறேன்'' என்று திரும்பிப் பார்க்காமலே போனார்.

வந்த மனிதன் உட்காரக்கூட இல்லை. இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்களா என்ன? கிருத்திகா அந்த உறையைப் பிரித்துப் பார்த்தாள். நூறு நூறாக, பத்து நோட்டுகள் இருந்தன. திகைத்துப் போய், அவள் சிலையாக வெகு நேரம் நின்றாள். டாக்டருடைய இந்த உதவி அவளுடைய உள்ளத்தையே ஓர் உலுக்கு உலுக்கியது.

பிறகுதான் அவர் காந்தியையும் அழைத்துக் கொண்டு சிவப்பேரிக்குப் போகலாம் என்று அவளை அழைத்துக்கொண்டு போவதற்காகத் திடீரென்று வந்து நின்றார். அந்த நெருக்கடியில் அவளுக்கு இதைப் பற்றிப் பேசவே சொற்கள் அகப்படவில்லை. ஆனால் வெறிச்சென்றிருந்த காதுகளில் மார்வாடிக் கடையிலிருந்து வந்த தோடுகள் அணி செய்தன. அவளுடைய கண்கள் அதன் மீது ஊர்வதைப் பார்த்தபோது அவள் உள்ளத்தின் நுட்பமான பகுதியைத் தொடுவதுபோல் உணர்ந்து மயங்கினாள். அவருடன் காந்தியும் கூடவே இருந்ததால் இதைப் பற்றிப் பேசவோ நன்றியைக் காட்டவோ அவளுக்கு நேரமே கிடைக்கவில்லை. காந்தியை அவள் வீட்டில் இறக்கி விட்டு விட்டு, கடைசியாக அவளைக் கொண்டுவிட வந்தபோதுதான் அந்த வாய்ப்புக் கிட்டியது. எப்படியோ அதைச் சொல்லி விட்டாள் :

''டாக்டர், இவ்வளவு தூரம் உங்கள் உதவி கிடைக்கும் என்று நான் முதலில் நினைக்கவேயில்லை, டாக்டர்!''

ஆனால் அவர் பதில் சொன்னதுதான் அவளுக்குப் புரியவில்லை. ''அதற்குள் நன்றியுரை சொல்லி விடுவாய் என்று நானும்தான் நினைக்கவில்லை'' என்று டாக்டர் சொன்னாரே, இதன் பொருள் என்ன?

''கிருத்திகா!''

கண்ணீர்த் திரையிட்ட கண்களைத் துடைத்துக் கொண்டு அவள் வந்திருப்பது யார் என்று பார்த்தாள். யாரோ புது முகம். கொஞ்சம் வயதான மனிதர்.

''யார்?'' என்று மெல்ல விசாரித்தாள் அவள். ஆனால் அவரை அடிக்கடி பார்த்திருப்பது போல் இருந்தது.

''என்னைத் தெரியாதோ, உனக்கு?''

''பார்த்திருக்கிறேன். ஆனால் யார் என்று.......''

''நீ பட்டாமணியக்காரர் பெண் கிருத்திகா தானே?''

''ஆமாம்; உங்களை.......''

''உனக்குத் தெரிந்திருக்காது. உங்க அப்பாவுக்கு நான்தான் வக்கீல்!''

அவளுக்குச் 'சொரக்'கென்று இருந்தது.

''செய்தி காதில் விழுந்ததுமே வரலாம் என்றுதான் இருந்தேன். ஆனால் பாரு, என்னையே படுக்கையில் போட்டு விட்டது. அதனால் வரவில்லை. வந்து..... இன்றைக்குத்தான் கேள்விப்பட்டேன். உடனே உன்னைப் பார்க்கலாம் என்று வந்தேன்.''

அவளுக்குத் திகிலாக இருந்தது. டாக்டரைப் பற்றி ஏதாவது கேட்கப் போகிறாரோ?

''பானுதான் வந்து சொன்னான்.''

'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டாள் கிருத்திகா.

நல்ல வேளை; டாக்டரைப் பற்றி இல்லை.


''பைத்தியக்காரன்! அவனுக்கும் நான்தான் வக்கீல். இது தெரிய வேண்டாமோ? அடமானமாகவே இருக்கட்டும்; உன்னை வந்து கேட்கலாமோ? பைத்தியக்காரன், நான் எங்கே போய் விட்டேன்?''

''அது பிசகுதான்! நான் பணம் கேட்டதைச் சொல்கிறேன்.''

''உனக்கு எதற்குப் பணம்? இதைப் போல் இன்னும் நாலு பேருக்கு நீ பணம் கொடுக்க முடியுமே! உன் அப்பா இன்ஷ்யூரன்ஸ் பணமே ஒரு லட்ச ரூபாய் வரப் போகிறதே!''

கிருத்திகாவுக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

''ஆமாம்; உனக்கு இதெல்லாம் தெரியாது. உன் அப்பாவே சொல்லியிருக்கிறார். வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி உன் அப்பா சேர்த்திருக்கிறார். இருந்தவரையில் பாவம்,



பஸ் பிரயாணம் என்றாலே லலிதாவுக்குக் கொண்டாட்டம்

பள்ளி செல்லும் லலிதாவுக்கு பஸ்ஸில் போவது என்றால் என்றுமே உற்சாகம். ஆனால் அவளைப் போன்ற சிறுமி சிறுவர்களுக்கோ இண்டியனாயில் என்னென்ன செய்து வருகிறது என்பது தெரியாது. அவர்களது வருங்கால வாழ்விலே இந்நிறுவனம் எத்தகைய அரிய பங்கு கொள்ளப் போகின்றது என்பதை பெரியவர் அறிவர்.

தற்போது தம் சூழலிலே வாழும் அரசினர் துறைச் சுத்திகரிப்பு நிலையங்கள் தவிர இண்டியனாயில் தொழில் துறைக்கு இன்றியமையாத எண்ணெய்களான பெட்ரோலியம் தயாரிப்புகளையும் விநியோகம் விற்பனை செய்து வருகிறது. போக்குவரத்துத் துறைகள் மட்டுமே இந்தியாவிலுள்ள பெரும்பான்மை நிறுவனங்கள் அனைத்துக்கும் தேவையான எரிபொருள்களையும், எண்ணெய் உயவுப் பொருள்களையும் வழங்கி வருவது இண்டியனாயில்.

INDIANOIL

இண்டியனாயில்

பொருளாதார வளமைக்கான தேசியப் பொதுத்துறை.

இண்டியன் ஆயில் கார்ப்பொரேஷன் லிமிட்டட்

IOC. 4113 TAM

அந்த மனுஷன் ஒரு வேளை நன்றாகச் சாப்பிட்டிருப்பாரோ என்னவோ? இவ்வளவு நாளைக்கு உனக்கு ஒரு வழி வேணுமே என்றுதான்.... இந்த ஊரிலேயே அவருக்கு மூன்று வீடுகள். ஆனால் அவர் இந்தப் பழைய வீட்டில், இதோ பார், ரிப்பேர் செய்தால் பணம் செலவழிந்து விடுமே என்று அதைக் கூடச் செய்யாமல் இருந்திருக்கிறார். 'ஏன் ஐயா இப்படிப் பஞ்சை வேஷம் போட்டுக் கொள்கிறீர்?' என்று கேட்டால் பதிலே பேசமாட்டார். 'எல்லாம் பெண்ணுக்குத்தானே தேடி வைக்கிறீர்? அந்தப் பெண்ணுக்குத்தான் தாராளமாகச் செலவழியுங்களேன்' என்றால் அதையும் பேசாமல் கேட்டுக் கொண்டுதான் இருப்பார். எல்லாம் சேர்ந்தால் இரண்டு லட்சத்துக்கு மேல் பெறும். அப்படியிருக்கிறபோது இந்தப் பைத்தியக்காரனைப் பாரேன். இவன் வந்து உன்னை இப்படிக் கேட்டிருக்கலாமோ? அவன் உனக்கு முறைப் பையன். நாளைக்கு எல்லாமே அவனுக்கு வரவேண்டிய சந்தர்ப்பம் இருக்க, இப்படி அசட்டுத்தனமாகக் கேட்கலாமோ? அப்புறம் அவனைப் பிடித்துத் திட்டினேன். போடா, நான் அந்தப் பெண்ணிடம் பேசி, அப்புறம் உனக்குச் சொல்லியனுப்புகிறேன்' என்று விரட்டினேன்.''

கிருத்திகா வாயைத் திறந்து பேசவில்லை. ஆனால் கடைசியில் ''நல்ல காரியம் செய்தீர்கள்!'' என்று மட்டும் சொன்னாள்.

''எதைச் சொல்கிறாய்?''

''பானுவை விரட்டினேன் என்கிறீர்களே, அதைச் சொல்கிறேன்!''

''என்ன, என்ன?''

''நல்ல காரியம் செய்தீர்கள். விரட்டினதைத்தான் சொல்கிறேன்.''

அவள் சொல்வது விளங்கவில்லை வக்கீலுக்கு. இருந்தாலும் தமது அறியாமையை வெளியில் காட்டிக் கொள்ளாமல் ''உன்னிடம் கையெழுத்தெல்லாம் வாங்க வேண்டியிருக்கிறது. அப்புறம் சொல்லி யனுப்புகிறேன். இல்லையானால் நானே வருகிறேன்'' என்று எழுந்தார்.

இன்னும் அவர் என்னவோ சொல்வதற்காகத் தயங்கினார். அதற்குள் அங்கே கிருத்திகாவைப் பார்க்கக் காந்தி வந்துவிட்டதால் மென்று விழுங்கினார்.

''உனக்கு அவசரமாகப் பணம் ஏதாவது வேண்டுமானால் பானுவையே கொண்டுவந்து கொடுக்கச் சொல்கிறேன். எவ்வளவு வேண்டுமோ சங்கோசப்படாமல் நீ கேட்கலாம்.''

''தேவையானால்தானே?''



பெண் : ''அந்தப் பணக்கார மாப்பிள்ளை எனக்கு வேண்டாம்பா. நான் ஏழையைத்தான் கல்யாணம்செய்துகொள்வேன்.''

''நீ அவனைக் கல்யாணம் செய்துகொண்டவுடனே அவன் ஏழையாய்ப் போய்விடுவான். அதனாலே பெரியவா சொல்றதைக் கேளம்மா!''

''ஏன், இப்போது தேவையில்லையா?''

''உங்களிடம் இருப்பது எங்கே ஓடிப் போகப் போகிறது? எனக்கு வர வேண்டியதெல்லாம் நானே வந்து வாங்கிக் கொள்கிறேன். இதோ இருக்கிறாளே, காந்தி, இவள் எனக்கு ரொம்ப வேண்டியவள். இவள் எனக்குத் துணையாக இருப்பாள்.''

''இந்தப்பெண் யார் தெரியவில்லையே!''

''இவளா? இவள் டாக்டர் கார்த்திகேயன் இருக்கிறாரே, அவருடைய நர்ஸ் காந்தி என்று எல்லோரும் சொல்வார்கள். ஆனால் இவளும் சரி, டாக்டரும் சரி, இவர்கள் எல்லாம் வெறும் மனிதர்கள் அல்ல; எனக்குத் தெய்வம் போல!''

''என்னது? ஒன்றும் புரியவில்லையே!''

''பானுவை யெல்லாம் நீங்கள் புரிந்து கொண்டுவிடலாம் சார். ஆனால் இவர்களைப் புரிந்துகொள்வது கொஞ்சம் கஷ்டம்தான்.''

''என்ன சொல்கிறாய், கிருத்திகா? எனக்குக் கொஞ்சம் புரியும்படிதான் சொல்லேன்!'' என்றான் காந்தி.

''என்னை உனக்கு இன்னும் புரியவில்லையா?''

''டாக்டரையே உன்னால் இன்னும் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லையே. ஒரு மாதப் பழக்கத்தில் உன்னை எப்படிப் புரிந்து கொண்டதாகச் சொல்ல முடியும்?''

வக்கீலுக்கு ஒரே குழப்பமாக இருந்தது.

''டாக்டர் அப்படிப் புரிந்து கொள்ள முடியாதபடி அப்படி என்ன சொல்கிறார்?''

''இப்பொழுதே உன்னைக் கையோடு அழைத்துக்கொண்டு வரவேண்டுமாம். நான் டியூட்டிக்கு வந்து நுழைந்தேன். உடனே இந்த உத்தரவு.''

''எதற்கு?''

''அதுதான் எனக்குப் புரியவில்லை. அவருக்குப் போய் நன்றி சொன்னாயாமே, சொல்லலாமா? யாருக்கு யார் நன்றி சொல்வது? அதுவும் எப்போது சொல்வது? இது தெரிய வேண்டாமா உனக்கு?''

''தப்புத்தான். நன்றியை வாயினால் சொல்வது தப்புத்தான்! இதற்காகவா என்னை அழைத்து வரச் சொல்லி யிருக்கிறார்?''

''அதுதானே எனக்குத் தெரியவில்லை என்கிறேன்!''

''பைத்தியமே! இதெல்லாம் சொல்லித் தெரிவதில்லை!'' என்றாள் கிருத்திகா.

உண்மையில் வக்கீலுக்கு ஒன்றுமே புரியவில்லை. அப்புறம் புரிந்துவிடும்; இல்லையா?

தேச ஐக்கியத்துக்கு இன்றியமையாதது ஆங்கிலம்

ராஜாஜி

ஆட்சி மொழி விஷயத்துக்கு முடிவு காண்பதில் காலம் கடத்துவதோ, வஞ்சகமாக இப்போதிருந்தே மெல்ல மெல்ல ஹிந்திக்கு அடி எடுத்து வைப்பதோ பிரச்னைக்குத் தீர்வு ஆகாது. '1965 ஜனவரி 26லிருந்து ஹிந்தி இந்தியாவின் ஆட்சி மொழியாகும்' என்கிற அரசியல் சாஸனத்தின் 17வது பிரிவை ரத்து செய்து விட்டு, இது வரை இருந்தது போல் ஆங்கிலம் ஒன்றையே நீடிப்பதுதான் ஒரே வழி. உணர்ச்சி வசப்படும் மக்களுக்கு அறிவூட்டி அவர்களை ஒழுங்குபடுத்தித் தேச ஐக்கியத்தைக் காக்க வேண்டியதே தன் கடமை என்பதை ஆள்கிற கட்சி விவேகத்துடன் உணர வேண்டும்.

இரு மொழித் திட்டம் என்பது ஒரு கண்ணி; அது ராஜித் திட்டமோ சமரஸ ஏற்பாடோ, பிரச்னைக்கு உண்மையான தீர்வோ ஆகாது. ஒரு காலத்தில் நானே இரு மொழித் திட்டம் உபயோகமாயிருக்கும் என்று நினைத்ததுண்டு. ஆனல் அந்தத் திட்டம் அராஜகத்துக்கும் பேதத்துக்கும் தான் இடமளிக்குமேயன்றி, ஐக்கியத்துக்கு உதவாது என்பதை இப்போது உறுதியாக உணருகிறேன். இது வரை இருந்தது போல் ஆங்கிலத்தை நீடிப்பதொன்றுதான் நாட்டின் ஐக்கியத்தைக் காக்கும், வேறெந்த மொழியாலும் முடியாது என்று நம்புகிறேன். இதுவரை இருந்து வந்த நடைமுறையை நீடிப்பது யார் மீதும் எதையும் புதிதாகத் திணிப்பதாக ஆகாது.

'சாஸனத்தின் பதினேழாம் பகுதியை நீக்கிவிட்டு அதனிடத்தில் ஆட்சி மொழி பற்றி எந்தப் புதிய பகுதியையும் சேர்க்காமல் விட்டால், அதன்பின் புதிய பார்லிமென்ட் மசோதா மூலம் ஹிந்தியைக் கட்டாயமாக ஆட்சி மொழியாக்கக் கூடுமல்லவா? அப்போது என்ன செய்ய முடியும்?' என்று சிலர் கேட்கிருர்கள். இது சட்ட ரீதியில் விடை சொல்ல வேண்டிய கேள்வி அல்ல. இதற்கு மானுடர்களின் சித்தப் பண்பின் போக்கை வைத்தே விடைகூற வேண்டும். ஹிந்திக்கு எதிராகப் பெரும் கிளர்ச்சி நடந்து, பெருத்த ஆலோசனைகளுக்குப் பின் ஆட்சி மொழி ஷரத்தை ரத்து செய்துவிட்டபின், ஹிந்தியை ஆட்சி மொழியாக்க யாரும் மசோதா கொண்டு வர மாட்டார்கள்.

சமீப காலத்திலோ, வெகு காலம் தள்ளியோ ஹிந்தி ஆட்சி மொழியாக வேண்டும் என்பதை ஒப்புக் கொண்டு விட்டால் இப்போதிருந்தே ஹிந்தியைச் சிறுகச் சிறுகத் திணிக்கத் தொடங்கிவிடுவார்கள்.



ஹிந்திக்கு என்றே ஒரு நாள் இட முண்டு என்று ஒப்புக் கொண்டால் பூர்வாங்க மான திணிப்பை ஆட்சேபிக்க முடியாது. இறுதியில் ஹிந்தியை ஏற்றாக வேண்டு மெனில், இப்போதே அதற்கு ஆரம்பம் செய்தாக வேண்டும் என்பதையும், காலக்கிரமத்தில் அதன் வேகம் விரை வாக்கப்படும் என்பதையும், அதனால் மீண்டும் ஹிந்தி பேசாதோரின் சம வாய்ப்பு உரிமை பறிக்கப்படுமென் பதையும் நாம் உணர வேண்டும். இதை உணராததால்தான் இன்று பலர் 'இறுதியில் ஆங்கிலம் எப்படியும் அகன்று ஹிந்தி ஆட்சி மொழியாக வேண்டியது தான்' என்று கூறுகிறார்கள். இவ்வாறு ஹிந்திக்காக இறுதியில் ஆங்கிலத்தை விட்டுக் கொடுப்பது நம் மக்களின் எதிர்காலத்தை அடியோடு பாழாக்கி விடும். ஒருகாலும் இதுபோல் விட்டுக் கொடுப்பதற்கில்லை.

'என்றோ ஒரு நாள் நாம் ஆங் கிலத்தை அகற்றிவிட வேண்டும்' என்கிற வாதத்துக்கு எவ்வித நியாயமு மில்லை. இது வரை இருந்தாற்போல் இனியும் இந்தியா ஆங்கிலத்தில் நிரு வாகத்தை நடத்துவதில் எவ்வித கௌரவக் குறைவும் இல்லை. நன்றாக நடந்து வரும் நிருவாகப் போக்கில் இப்போது தலையிட்டு மாற்றுவதற்கு எவ்வித அவசியமும் இல்லை. அரசியல் சாஸனத்துக்கு ஆதாரமான 1935ம் ஆண்டின் இந்திய சர்க்கார் சட்டத் தின் (The Government of India Act) 321 பிரிவுகளில் ஆட்சி மொழி பற்றிப் பிரஸ்தாபமே கிடையாது. எனவே அரசியல் சாஸனத்திலும் ஆட்சி மொழி குறித்து விதி இருக்க வேண்டிய அவசியமில்லை.

நாம் சமாளித்தாக வேண்டிய பிரச்னைகள் ஏராளமாக உள்ளன. அவற்றையெல்லாம் கவ னிப்போம். ஆட்சி மொழி விஷயத்தை அப்படியே விட்டு வைப்போம். மெது வாகப் புகுத்தினாலும், விரைவாகப் புகுத்தினாலும் ஹிந்தியால் ஐக்கியப் பிளவு தான் உண்டாகும். இரு



மொழித் திட்டம் அராஜகத்திலும், நாம் எதிர்பார்த்திராத குழப்பத்திலும்தான் கொண்டு விடும். எனவே, தமிழக அரசாங்கம் தமிழ் மக்களின் நியாய மான உணர்ச்சிக்கு மதிப்புக் கொடுத்து, பிரச்னையின் சகல அம்சங்களையும் தீர்க்கமாக ஆலோசித்துப் பின்னர் ராஜ்யத்தின் இரண்டு சட்டசபைகளி லும், 'சாஸனத்தின் பதினேழாம் பிரி வுக்குத் தமிழக அரசாங்கம் இணக்கம் தெரிவிக்க வில்லை' என்று தீர்மானம் நிறைவேற்றி அதைப் பார்லிமென் டுக்கு அனுப்பி வைக்க வேண்டும். ஹிந்தி வழங்காத மற்ற ராஜ்யங் களும் இதே போல் தீர்மானம் நிறை வேற்றினால் அதற்கு அரசியல் சாஸனத் தைப் போன்ற முக்கியத்துவம் இருக் கும். இதன்பின், விஷயத்தைப் புரிந்து கொள்ளாமல் இந்திய ஒற்றுமையைச் சிதைக்கும் ஹிந்தி வெறியினரின் எதிர்ப்பைச் சமாளிக்க இந்திய சர்க் கார் பலம் பெறும்.

தேசியம் வேறு : இராஜரிகம் வேறு

ஆங்கிலத்தின் இடத்தில் ஹிந்தியை அமர்த்துகிற திட்டம் தேசத்தின் ஐக்கியம், முன்னேற்றம் இவற்றின் மீது கோடரியை வீசுகிற திட்ட மாகும். ஆங்கிலத்தை அகற்றி விட் டால் உலக நாடுகளிடையே நமது அந்தஸ்து சிறுகச் சிறுகத் தாழ்ந்து கொண்டே வரும். ஆங்கிலத்தின் நிகழ்கால அந்தஸ்தைக் குறைக்கும் எந்த ஏற்பாடும் ஐக்கியச் சிதைவுக்குக் காரணமாகும் என்பதை அறிவாளிகள் யாவரும் கண்டு ஒன்று சேர்ந்து வரு கிறார்கள். அதே சமயத்தில், இந்தியா பெற்றுள்ள மதிப்பற்ற ஆங்கிலச் செல் வத்தை இழக்கும் வகையில், 'ஆங் கிலம் அந்நிய மொழி; உள்நாட்டு மொழி ஒன்றுதான் ஆட்சி மொழியாக வேண்டும்; அதுவே நமக்குக் கௌர வம்' என்று கூச்சலிடும் இயக்கமும் மக்களின் தவறான சுதே சிப் பற்றினால் சக்தி பெற்று வருகிறது.

சுதேச மொழிதான் ஆட்சி மொழியாக வேண் டும் என்கிற வாதத்தில் பொருளில்லை. 'தேசியம்' என்பதெல்லாம் சர்க்காரு டன் சம்பந்தப்பட வேண் டியதில்லை. தீபாவளி நம் முடைய தேசிய விழா; ஆனால் அது சர்க்கார் கொண்டாட்டம் அல்ல. 'தேசியம்' என்பது ஒரு தேசத்திலுள்ள பெரும் பான்மையோரைப் பொறுத் தது. ஆனால் சர்க்கார் திட்டங்கள் பெரும்பான்மையை மட்டும் கருத்தில் கொள்ளக்கூடாது. ஜனநாயகம் சர்வாதி காரமாக ஆகிவிடாத வரையில் சர்க்கார் திட்டங்கள் தேசத்தில் சகலருக்கும் சம நீதி அளிப்பவையாகவே இருக்க வேண்

டும்: பெரிய ராஜ்யங்களைப் போலவே சிறிய ராஜ்யங்களும் சம உரிமை பெறுவதும் பெரும்பான்மை சமூதாயத்தாரைப் போலவே சிறுபான்மையினரும் சரிசமமான வாய்ப்புப் பெற்றிருப்பதும்தான் ஜனநாயக சர்க்காரின் இலட்சணம்.



சம நீதிக்கு விரோதமான ஒரு திட்டத்தினால் சௌகரியம் பெறும் மக்கள் அதன் தீய விளைவுகளைப் புரிந்து கொள்ளாமல் அதனை ஆதரிக்கக் கூடும். ஆனால் தெளிவான அரசியல் நோக்குடையவர்கள் இதனால் ஏற்படும் அநீதியையும், மகத்தான பொருள் நஷ்டத்தையும், கால நஷ்டத்தையும், மனித சக்தியின் நஷ்டத்தையும் கண்டு அவர்களுக்குப் புத்திமதி புகட்ட வேண்டும். கையிலிருக்கும் சக்தியை இழக்காமல் காப்பதே புத்திசாலித்தனமாகத் திட்டம் வகுப்பதின் அஸ்திவாரம். சுயநலத்தாலும், போலி உணர்ச்சியாலும் தவறான வழியில் சென்று நாம் தற்போது பெற்றுள்ள சக்தியை இழந்துவிடக் கூடாது.

இந்தியாவின் பழைய சரித்திரத்தை மறந்து எதிர்காலத்தை எழுப்ப முடியாது. சரித்திரத்தின் படிப்பினையின் மேல்தான் உறுதியாகவும், நியாயமாகவும் நாட்டு வாழ்க்கையை எழுப்ப முடியும். வரலாற்று உண்மைகளை அலட்சியம் செய்து விட்டு, நிகழ்கால நலனைக் கருதிப் பட்சபாதக் கானல் நீரைப் பின்பற்றினால் நாசமடைவோம். இன்று தேசப் பற்று என்பது கோடிக் கணக்கான மக்களுக்குப் பாதகம் ஏற்படுவதை அலட்சியம் செய்து விட்டு, நமது செயல்களின் பின் விளைவுகள் பற்றிச் சிந்தியாமல் வெறும் உணர்ச்சியுடன்கூட ஓடிவிடுகிற விஷயமல்ல. தெளிவான சிந்தனையும், கடும் உழைப்பும், தன்னலமற்ற சேவையுமே இன்று தேசப் பற்றாகும்.



ஆங்கிலம் தரும் அந்நியச் செலாவணி

தில்லியிலுள்ள மத்திய சர்க்காரின் ஆட்சி மொழி பற்றி நாம் ஏன் கவலை கொள்ள வேண்டும் என்று எண்ணிவிடலாகாது. மத்திய சர்க்கார் என்பது எங்கோ தொலைவிலுள்ள விஷயமல்ல. அதன் சக்தியும் முன்போல் குறைவாக இல்லை. நாடெங்கிலும் பரவி நிருவாகத்திலும், சமூக வாழ்வின் எல்லாத் துறைகளிலும் புகுந்து அவற்றைக் கெட்டியாகச் சுற்றி வளைத்துப் பற்றிக் கொண்டுள்ள பல தலைப் பாம்பாக மத்திய சர்க்கார் வளர்ந்திருக்கிறது. உதாரணமாக, தமிழ்நாட்டின் ஒரு மூலையிலுள்ள ஒரு குக்கிராமத்தின் தபால் முத்திரையில் கூட ஹிந்தியின் லிபியாகிய தேவநாகரியைக் காண்கிறோம் — சில சமயங்களில் ஆங்கிலமின்றித் தேவநாகரியை மட்டுமே காண்கிறோம்.

யாருக்கும் அடிமைப்படாமல் சுதந்திர உரிமையாக நாம் பெற்றுள்ள ஆங்கிலத்தை எதற்காக அகற்ற வேண்டும்? ஆங்கிலத்தை வைத்துக் கொண்டிருப்பதற்காக அந்நியருக்கு நாம் வரி செலுத்துகிறோமா? ஆங்கிலத்துக்கு உலகத்தில் மதிப்பில்லாமல் போய், அதற்காக அம்மொழியை அகற்ற வேண்டுமா? உலகத் தொடர்பில் ஆங்கிலத்தால் நமக்கு மிக உயர்ந்த அந்நியச் செலாவணி கிடைக்கவில்லையா? அந்நியச் செலாவணி பெறுவதற்காக நாம் உற்பத்திசெய்து ஏற்றுமதி செய்ய எண்ணும் பொருள்களை யெல்லாம் விட ஆங்கிலம் நமக்கு வெளி நாடுகளில் அதிக மதிப்புப் பெற்றுத் தருகிறது.

இரு மொழிக் கொள்கை

கீழ்க்கண்ட திட்டம் பிளவைப் பிணைக்கும் பாலமாக உதவும் என்று நினைத்து 1956ல் நான் எழுதியதாவது:

''சுதேசி என்கிற தற்பெருமைக்கும் பகுத்தறிவுக்கு மிடையே உள்ள பிளவைப் பிணைப்பதற்காக, 'ஆங்கிலம் அல்லது ஹிந்தி'யையோ 'ஆங்கிலத்தோடு ஹிந்தி'யையோ மத்திய ஆட்சி மொழியாகக் கொள்வோம். இரு மொழிகளையுமோ, இரண்டில் ஒன்றையோ ராஜ்யங்களுக்கிடையே தொடர்பு மொழியாகக் கொள்வோம். இரண்டு மொழிகளிலும் நிருவாகம் நடைபெற

வேண்டும். தேசத்தின் தெற்கிலோ கிழக்கிலோ உள்ள எந்த ராஜ்யத்துக்கும் அசௌகரியமில்லாதபடி அவை ஆங்கிலத்தைத் தேர்ந்தெடுக்க உரிமை பெற்றிருக்க வேண்டும்.''

இவ்வாறு நான் முன்பு எழுதியதைக் குறித்துப் பிறகு சிந்தித்துப் பார்த்தேன். இத்திட்டம் நடைமுறைக்கு ஒவ்வாது என்றும், குழப்பத்துக்கும் விஷமத்துக்குமே இடமளிக்கும் என்றும் தெளிந்தேன்.

சரித்திரத்தை மாற்ற முடியாது

ராஜ்யங்களிடையே தொடர்பு கொள்வதற்கு எம்மொழி மிகவும் சௌகரியமாக இருக்கிறதோ அம்மொழியில்தான் அரசாங்க அறிக்கைகளும் பத்திரங்களும் இருத்தல் வேண்டும். சரித்திர பூர்வமான காரணங்களினால் ஆங்கிலம் தான் இவ்வாறு எல்லா ராஜ்யங்களுக்குமிடையே மிகச் சிறந்த தொடர்பு மொழியாயிருக்கும். தற்போது ராஜ்யங்களுக்கிடையே உள்ள அலுவல்களையும் மத்திய சர்க்கார் அலுவல்களையும் கவனித்து வரும் சிப்பந்திகள் ஆங்கில மொழியை மிகவும் லாகவமாகவும் சுத்தமாகவும் உபயோகிக்க அறிந்திருக்கிறார்கள். உயர்நிலை அரசாங்க அலுவல்களைப் பொறுத்தமட்டில் தங்கள் தாய்மொழியை விட லாகவமாகவும் சுத்தமாகவும் ஆங்கிலத்தை நம் உத்தியோகஸ்தர்கள் கையாள்கிறார்கள். இந்நிலைமை இருநூறுண்டு சரித்திரத்தின் விளைவாகும். இதற்கும் நமது சுதந்திர அந்தஸ்துக்கும் எந்த விதத் தொடர்புமில்லை. இந்த நல் விளைவை அறிவற்ற ஆசையால் அழித்துவிடலாகாது.


தற்பெருமைக்காகவும், பட்சபாதத்துக்காகவும் நாம் அடைந்த ஒரு சொத்தை விட்டெறிவது புத்திசாலித்தனமல்ல. இந்தியாவின் சகல பகுதிகளிலும் சர்க்கார் ஊழியத்துக்குத் தகுதிபெற்றவர்கள் அனைவரும் ஆங்கில மொழி அறிவு பெற்றிருக்கின்றனர். அவர்களில் இந்தியாவின் பல பகுதிகளில் உள்ளவர்களுக்கு ஹிந்தி அறவே தெரியாது. சுதந்திர இந்தியாவில் சுதேச மொழி ஒன்றுதான் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்ற ஒரு காரணத்துக்காக ஆங்கிலத்தை அகற்றுவது பகுத்தறிவு காட்டும் வழியல்ல. அது தேசியச் செல்வத்தை வீணடிக்கும் யோசனையாகும்.

பொதுமக்களுக்கு அறிவிக்கவேண்டிய சர்க்கார் அறிக்கைகள் யாவும் அந்தந்தப் பிரதேச மக்களின் மொழியில்தான் இருக்க வேண்டும். ஆனால் மத்திய சர்க்கார் அலுவல்கள் ஹிந்தியில் தான் இருக்க வேண்டும் என்பது அபத்தத்தின் எல்லையாகும். இந்தக் குழப்பத் திட்டத்தினால் பெரும் தொல்லைகளும் தவறுகளும் விளையும். ஹிந்தி யறிந்தவர்களையே சர்க்கார் உத்தியோகங்களில் அமர்த்துவதென்பது எண்ணிப் பார்க்க முடியாத யோசனை. அப்படி நடந்தால் அது அநீதமும் அநியாயமுமாகும்.

நியாயமல்ல

ஒரு மொழியை ஆட்சி மொழியாக்கும்போது அது நீதிக்கு உகந்ததா, ஆற்றல் உடையதா என்பது போன்ற பல அம்சங்களையும் எண்ணிப் பார்க்க வேண்டும். இவற்றைக் காணாமல் கண்ணை மூடிக்கொண்டு, எண்ணிக்கைக் கணக்குப்படி பெரும்பான்மைப் பகுதியினரின் மொழியை நேரடியாகவும் மறைமுகமாகவும் அதிகார பூர்வமாகத் திணிப்பது முறையின்மையாகும். இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் சிறு சிறு அளவில் ஹிந்தி பேசுபவர்கள் பரவலாக வாழ்ந்தாலேனும் மொத்தத்தில் ஹிந்தியர் சிறுபான்மையாயிருப்பினும் ஹிந்தி மொழியை ஏற்கச் சிறிது நியாயமிருக்கும். ஆனால் உண்மையில் ஹிந்தி இந்தியா முழுவதிலும் பரவலாயில்லை. தேசத்தின் பல பெரும் பகுதிகளில் ஹிந்தி வழங்கப்படவில்லை. அங்கு வாழும் கோடிக்கணக்கான மக்கள் வேறு மொழிகளைப் பேசுகிறார்கள். இந்தச் சூழ்நிலையில் ஹிந்தி மொழியினர் இருப்பதற்குள் அதிகமாக இருக்கின்றனர் என்று பார்த்து அதை ஆட்சி மொழியாக்குவது ஏற்கத் தக்கதல்ல.

அநேக ராஜ்யங்களிலுள்ள மக்கள் அனைவரையும் இரண்டாம் பட்ச நிலைக்குத் தாழ்த்துகிற ஹிந்தி மொழித் திட்டம் ஜனநாயகத்தின் ஆதார தருமத்துக்கே முற்றிலும் விரோதமாகும். இந்திய யூனியனில் சரிசமமான அந்தஸ்து பெற்ற எல்லா இந்தியர்களுக்



இந்தி தெரிந்தவன்

ளும் ஒரு குறிப்பிட்ட மொழியைப் பேசுகிற காரணத்தினால் சிலர் விசேஷ அனுகூலம் பெற்று முன்னேறவும், மற்ற மொழியினர் பிரதிகூலம் அடைந்து பின்தங்கி நிற்கவும் சட்டம் செய்தால் அந்தச் சட்டம் நியாயமாகி விடாது. ஜனநாயகத்தில் பெரும்பான்மையினரின் முடிவே அமுலாக வேண்டும் என்பது உண்மை. ஆனால் பெரும்பான்மையின ருக்கு மட்டும் மற்ற வர்களை விட விசேஷ அனுகூலங்களை அளித் தால் ஜனநாயகத் துக்கு விபரீத வியாக்கி யானமாகும். அது பெரும்பான்மை யின ரின் கொடுங்கோன் மைக்குச் சமானமே. இது போன்ற கொடுங்கோல் சட்டங்களால் தேசத்தின் பலமும் ஜீவசத்தும் பாழடையும். சிறு பான்மையினர் உள்பட நாட்டில் சகலருக் கும் சமமான நலன்கள் கிடைப்பதற்கே பெரும்பான்மையினர் முடிவு எடுக்க வேண்டும். தங்களுக்கு மட்டும் சௌகரி யமாக அவர்கள் சட்டம் செய்து கொள்வது ஜனநாயகமல்ல.



'முன்பு நீங்கள் அந்நிய மொழியான ஆங்கிலத்தைப் படிக்கவில்லையா? அதே போல் இப்போது ஏன் ஹிந்தியைப் படிக்கக் கூடாது?' என்று சிலர் கேட் கிறார்கள். அந்நிய நாட்டுக் கொடுங் கோலர்களுக்குக் கட்டுப்பட்டுத்தானாக வேண்டும் என்ற அடிமை உணர்வில் முன்பு ஆங்கிலத்தைக் கட்டாய பாட மாக ஏற்றோம். இப்போது நம் விருப் பத்தைத் தெரிவிக்கச் சுதந்திரம் பெற்ற பின்னும், ஹிந்தியர்களை அந்நியக் கொடுங்கோலராக எண்ணி அடிபணிய வேண்டும் என்று ஹிந்தி ஆதரவாளர்கள் கருதுகிறார்களா? ஆண்டவன்தான் இத் தகைய கருத்திலிருந்து காப்பாற்ற வேண்டும். தனிமனிதர் செய்கிற கொடு மைகளைவிட ஒருமொத்தமாக ஓரினத் தார் செய்கிற கொடுமை அதிகத் துன்ப மளிக்கும். இதைச் சிறுபான்மையினர் சகிக்க மாட்டார்கள்.

லாபமில்லை

ஒரு பெரிய தவறு நிகழ்ந்துவிடக் கூடாதே, இந்தியாவின் ஐக்கியம் நாச மாகிவிடக் கூடாதே என்பதால்தான் நான் ஆட்சி மொழி விஷயமாக விடா மல் பேசியும் எழுதியும் வருகிறேன். ஒரு தேச சர்க்காரின் அமைப்பு எவ் வாறு இருப்பினும் அதன் படித்த மக்களில் பெரும்பாலோருக்கு அநீதி இழைத்து, கணிசமான மக்கள் தொகையை நிரந்தரமாக அவல நிலைக்கு ஆட்படுத்தும் யோசனை நிச்சய மாக வேற்றுமைக்கும் வெறுப்புக்கும் பிரிவினைக்கும்தான் வழி செய்யும். இந்தி யாவை ஒரு தேசமாகக் கட்டிக் காக்கத் திறமையும், மனமும் பெற்ற பெரியோர் களுக்கு விரைவிலேயே பஞ்சம் ஏற்பட்டு விடும். ஆங்கிலத்தை இந்தியாவிலிருந்து விலக்கினால் தனது ஒற் றுமையற்ற பழங்கால சரித்திரத்துக்கே நாடு திரும்பிவிடும்.

ஹிந்தியால் நாம் பெறுகிற நஷ்டங் களைக் கண்டோம். ஹிந்தி ஆட்சி மொழி ஆவதால் நாம் பெறும் லாபங்கள் ஏதேனும் உண்டா என்று பார்த்தால் எதுவுமே இல்லை என்று காண்போம். ஹிந்தி பேசுகிறவர்கள் திருப்தி அடைவார்கள். அவ்வளவே. ஹிந்தி பேசும் சில ராஜ்யத்தினரின் திருப்திக்காக மற்ற மக்களின் வெறுப்பை விலை கொடுத்து வாங்குவதாக முடியும். உத்தரப் பிரதேசத்திலும், மத்தியப் பிரதேசத்திலும், பீஹாரிலும் உள்ள ஹிந்தியர்கள் திருப்தியடைய வேண்டு மெனில் அவர்களுடைய ராஜ்யத்தில் ஹிந்தியை ஆட்சி மொழியாக வைத் துக்கொள்ளட்டும். அதற்கு மேல் ஹிந்திக்கு அகில இந்திய அந்தஸ்து தருவதால் ஆபத்துத்தான் விளையும். நவீன காலத்துக்கு ஒவ்வாத மாயச் சுதேசிப் பற்றுக்காக இவ்வித ஆபத்தை வரவேற்பது புத்திசாலித்தனமல்ல. ஏதேனும் லாபமளிக்கும் திட்டமாயின் ஆபத்து இருப்பினும் அதில் ஈடுபட லாம். ஒருவித நல்ல விளைவுமில்லாத ஹிந்தித் திட்டத்துக்காக ஆபத்தை மேற்கொள்வது உசிதமல்ல.

தமிழக சர்க்காரின் தவறு

பரீட்சை, படிப்பு, பப்ளிக் ஸர்வீஸ் கமிஷன் இவற்றை மட்டுமே மனத்தில் வைத்துக் கொண்டு தமிழக சர்க்கார் ஆட்சி மொழிக் கமிஷனிடம் இரு மொழித் திட்டத்தை ஆதரித்தனர். தற்போது உத்தியோகத்தில் உள்ளவர் களுக்கு இந்தப் பரீட்சைகளைக் குறித் துத்தான் முக்கியமான கவனம். ஆனால் பரீட்சையும் மற்ற அம்சங் களும் மொழிப் பிரச்னையின் மேல் பரப்போடு மிதக்கின்றவை. பிரச்னை

யின் வேர் இவற்றில் இல்லை. அது சமவாய்ப்பு என்பதில் நிலைபெற்றது. எனவே தற்போதைய ஸெக்ரிடேரியட் ஊழியர்களின் கவலையை மட்டுமின்றி, பொது மக்களின் கருத்தையும் தமிழக அரசாங்கம் கவனித்து முடிவெடுத்து, இதுவரை இருந்த நடைமுறை நீடிக்க வேண்டும் என உறுதியாக முன்நிற்க வேண்டும். சாஸனத்தின் பதினேழாம் பிரிவை ரத்து செய்துவிட்டு, மொழிச் சர்ச்சைக்கு நிரந்தரமாக மங்களம் பாட வேண்டும் என்று தமிழக அரசாங்கம் வலியுறுத்த வேண்டும்.

மக்களும் நிருவாகமும்

'எவ்வளவு தூரத்துக்கு இயலுமோ அவ்வளவுக்கு மக்களின் மொழியை ஆட்சிமொழியாக்கி, மக்கள் அரசாங்க நடப்புக்களில் ஈடுபட உதவ வேண்டும்' என்று ஹிந்தி ஆதரவாளர்கள் கூறுகிறார்கள். ஹிந்தியை ஆட்சி மொழியாக்குவது அவர்களின் வாதப்படி ஹிந்திப் பகுதிகளுக்கு மட்டுமே பொருந்தும் என்பதை அவர்கள் காணத் தவறுகிறார்கள். தென் இந்தியாவில் உள்ள ஏராளமான மக்கள் ஹிந்தியரைப் போலவே தேச உரிமைகள் பெற்றுள்ளவர்கள். ஹிந்தி ஆட்சி மொழி யாவதால் அவர்களுக்கும் அரசாங்கத்துக்குமுள்ள தொடர்பு எவ்விதத்திலும் வலுப்பெறவில்லை. உத்தரப் பிரதேசமும், பீஹாரும், மத்தியப் பிரதேசமும் போக எஞ்சியுள்ள பிரதேசம் தேசத்தின் பெரும் பகுதியாகும். அங்கு வாழும் மக்களின் மொழி ஹிந்தி அல்ல. எனவே மக்களின் மொழியே நிருவாக மொழியாக வேண்டுமென்பதை அந்தந்த ராஜ்ய நிருவாகத்துக்கு மட்டுமே அமுலாக்க முடியும். ஆனால் நாடு முழுவதற்கும் ஒரு பொது மொழி இல்லாதபடியால் மத்திய சர்க்காரின் நிருவாகத்தில் எம்மொழி **அனைவருக்கும் ஒரு போல நீதி தருமோ** அம் மொழியை வைத்துக் கொள்ள வேண்டும். மக்கள் பேசும் மொழி என்பதைவிட 'சம நீதி' என்பதையே மத்திய நிருவாகத்தின் அளவுகோலாகக் கொள்ள வேண்டும். சம நீதியிலிருந்துதான் தேசம் முழுவதன் விசுவாசமும் மத்திய சர்க்காருக்குக் கிடைக்கும்.



சுதேசிப் பெருமை

முக்கியத்துவம் வாய்ந்த மற்ற பல அம்சங்களின் முன்னால் ஹிந்தியின் சுதேசிப் பெருமை மங்கி விடுகிறது. நிகழ்காலத்தில் சர்வ தேசங்களிலும் மிக அதிகமாக வழங்கப்படும் ஆங்கில மொழியில் நவீன இந்தியாவின் நிருவாகத்தை நடத்துவதில் வெட்கப்படுவதற்கு எதுவும் இல்லை. எல்லா விஷயங்களிலும் இந்தியா கொண்டுள்ள பரந்த மனப்பான்மைக்கு இது இசைவேயாகும். சுதேசிப் பெருமைக்காக ஆங்கிலத்தை இன்றோ அல்லது என்றோ அகற்றுவது மகத்தான முட்டாள்தனமாகும்.

நான் தேச ஐக்கியத்தைக் குலைக்க விரும்புபவனல்ல என்பதை வட இந்திய நண்பர்களுக்கும் சகாக்களுக்கும், அலுக்காமல் சொல்லிக் கொள்ளுகிறேன். ஹிந்தி ஆதரவாளர்கள் எந்த ஐக்கியத்தைக் கோருகிறார்களோ அந்த ஐக்கியத்தைக் காக்க வேண்டும் என்ற ஆர்வத்திலேயே நான் ஹிந்தியை எதிர்க்கிறேன். ஆட்சி மொழியில் செய்கிற மாறுதலால் தேச ஐக்கியமும் நீதி முறைகளும் பாழாகும் என்று மனதாரக் கருதும் ஒரு நீண்ட காலத் தொண்டன் தனது ஆட்சேபத்தைப் பலமாக வெளியிடுவதை மற்றவர்கள் அநுமதிப்பார்கள் என்று நம்புகிறேன்.

ஒரே வழி

ஐக்கியத்தையும் நீதியையும் காக்க ஒரே வழி சாஸனத்தின் பதினேழாவது பிரிவை ரத்துச் செய்வதுதான். அப்பிரிவு சாஸனத்தின் முக்கியமான அம்சமல்ல. அந்தப் பிரிவு சாஸனத்தில் இடம் பெற்றிருக்க வேண்டிய அவசியமேயில்லை. எவ்வாறோ இடம் பெற்று விட்டது. எனவே இப்போது அதை அதிகார பூர்வமாக நீக்கிவிடவேண்டும். செயற்கையாகப் பிரசாரப்படுத்தப்படும் ஹிந்தி மொழி ஒருநாளும் தர முடியாத ஐக்கியத்தை ஆட்சி மொழி ஷரத்தை ரத்து செய்வதால் உடனடியாகப் பெறுவோம். இதை ஒரு மகத்தான உத்தமப் பணியாக எண்ணி ஹிந்தி பேசாதவர்கள் புத்துணர்ச்சி பெறுவார்கள். குறிப்பிட்ட ஒரு நோக்கத்தை நினைத்துச் சிலர் ஒரு திட்டத்தில் மூடப் பித்து

டன் இறங்குவதனுல் அவர்கள் விரும்பும் நோக்கமே நாசமாகிறது. ஹிந்தியால் ஐக்கியம் ஏற்படுத்த முயல்வது இத் தகைய மூடச் செயல்தான்.

ஹிந்தியால் சமநீதி கெட்டுப்போவதைத் தவிர்க்க முடியாது. இதை எடுத்துக்காட்டும்போதெல்லாம் இதற்கு ஒரே விடையாக ஆங்கிலம் அந்நிய மொழி எனச் சொல்லி வருகிருர்கள். ஆங்கிலேய வழக்குப்படி அமைந்த சட்ட சபை ஆட்சியும், நீதிமன்றங்களின் அமைப்பும், நிருவாக முறையும் எப்படி நம் நாட்டுக்குப் பூரணமாகப் பொருந்தி விட்டனவோ அதேபோல் ஆங்கில மொழியும் விதேச வாடையை இழந்து நம்முடையதாகி விட்டது. ஆங்கிலேய பாணியில் அமைந்த சட்ட சபையையும், நீதிமன்றங்களையும், நிருவாகத்தையும் நாம் மாற்ருமல், எதிர்காலத்திலும் தொடரவிருக்கிறோம். இவை யாவும் நம் தேச வாழ்வின் அகப்பொருளாகும். இவற்றை அப்படியே பின்பற்றும்போது, தேச வாழ்வின் புற அம்சமாகிய மொழி விஷயத்தில் 'சுதேசி - விதேசி' என்று வாதிப்பது யுக்தமல்ல.

கம்யூனிஸ்டுகளின் தந்திரம்

ஆங்கிலம் அகல வேண்டும் என்று கம்யூனிஸ்டுகள் விரும்புவதற்கு ஒரு காரணமுண்டு. இந்தியாவை மேற்கத்திய வல்லரசுகளிடமிருந்து பிரிப்பதே அவர்களின் கொள்கை. சூரிய காந்திப் புஷ்பம் சூரியனையே நோக்கித் திரும்புவது போல் கம்யூனிஸ்டுகள் எந்த நாட்டில் இருப்பினும் ருஷியா அல்லது சீனவை நோக்கித் திரும்புவார்கள். (இது அறிஞர் ட்ஜிலாஸ் கூறிய உவமை.) இந்தியாவுக்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் ஒரு தொடர்புச் சங்கிலியாக ஆங்கிலம் இருப்பதை கம்யூனிஸ்டுகள் விரும்பவில்லை. ஆங்கிலத்தின் இடத்தை ஹிந்தி பெறுவதால் மேற்கத்தியத் தொடர்பில் ஒரு வலுவான சங்கிலி அறுந்து போகும் என்கிற துர்எண்ணத்தில் கம்யூனிஸ்ட்கள் ஆங்கிலத்தை எதிர்க்கிருர்கள்.

ஆங்கிலமும் முன்னேற்றமும்

நாம் இதுவரை பெற்றுள்ள நவீனக் கல்வியும், இனி பெற வேண்டிய கல்வியும் ஆங்கில மொழியுடனே இணைந்தவை. வெளிப் பார்வைக்கு மட்டும் நவீன அறிவைப் பெற்றதாகக் காட்டாமல் உண்மையாக நவீனக் கல்வியின் பலனை நாம் பெற்று முன்னேற வேண்டுமெனில் தொழில் துறையிலும் ஸயன்ஸிலும் முன்னேறி வரும் மேற்கு நாடுகளுடன் கெட்டியான தொடர்பு கொள்ள வேண்டும். இதற்கு ஆங்கில மொழியறிவைப் பலவீனமுருமல் காக்க வேண்டியது அத்தியாவசியம். கல்விக்கும் உத்தியோக வாய்ப்புக்கும் உள்ள நெருக்கமான தொடர்பை பிரத்யட்சக் கண்ணேட்டமுள்ள எவரும் மறுக்க முடியாது. இந்தியாவில் நாம் பல துறைகளிலும் காணக்கூடிய முன்னேற்றம் எதுவாயினும் அதற்கு ஆங்கிலத்தின் ஸ்தானமே காரணமாகும். இந்த ஸ்தானத்தைப் பாதிக்கும் வகையில் சட்டம் செய்து விட்டால் அதன் பின் தேசிய முன்னேற்றம் வெகு வேகமாகத் தடைப்படும். தேசியம் என்ற வறட்டுப் பெருமைக்கு



ஆளாகி விட்டவர்கள் இந்த உண்மையைக் காண மறுக்கிருர்கள்.

இந்த மகத்தான நாட்டின் பூரணப் பிரஜைகளாக நாடெங்கும் வாழும் மக்கள் அனைவருக்கும் ஒருபோல் நீதி காட்ட வேண்டும் என்ற கோரிக்கையை விட சுதேசிப் பெருமை முக்கியமானதா? ஜனநாயகத்தின் வேரிலேயே உள்ள தத்துவம் நீதி. அதை அலட்சியம் செய்வது அபாயம்.

ஒரு தவருன வாதம்

வாக்காளர்களின் மனத்தைக் கவரும் வகையில் ஒரு வாதம் செய்யப் படுகிறது. பொதுமக்களிடமிருந்து பிரிந்து நிற்கும் அறிவாளிகளும் படிப்பாளிகளும்

தான் ஹிந்தியை ஆட்சேபிக்கிறார்கள் என்றும், ஏழைகளுக்கும் பின்தங்கியவர்களுக்கும் நண்பர்களான பொதுத் தொண்டர்கள் ஹிந்தியை ஆதரிக்கிறார்கள் என்றும் வாதிக்கப்படுகிறது. இதுவும் இதுபோன்ற மற்ற வாதங்களும் ஹிந்தி வழங்கும் ராஜ்யங்களில் ஆங்கிலத்தை அகற்றி ஹிந்தியைப் புகுத்த வேண்டும் என்பதற்கு மட்டுமே பொருந்தும். தேசத்துக்குப் பொதுவான மத்திய ஆட்சி மொழி விஷயம் வேறு. ஹிந்தி வழங்காத பகுதிகளில் உள்ள படிப்பாளிகள், பாமரர்கள் அனைவருமே அம்மொழியை ஆட்சேபிக்கிறார்கள். அவர்களிடம் 'இது ஒரு சிறிய பகுதியினரின் ஆட்சேபம்தான்' என்று கூறுவது கொடூரமான ஹாஸ்யமேயாகும். தமிழ்



நாட்டின் சின்னஞ் சிறு கிராமத்திலும் ஓரளவேனும் ஆங்கிலமறிந்த ஒரு சிலர் இருக்கிறார்கள். இவர்கள் ஆங்கில அறிக்கைகளை மக்களுக்கு மொழிபெயர்த்துக்கொடுக்கிறார்கள். ஆனால் தமிழ் நாட்டுக் கிராமவாசி ஒருவனுக்கு ஹிந்தி மொழியில் வருகிற அறிக்கை அல்லது மணியார்டர் அல்லது இன்ஷூரென்ஸ் நோட்டீஸை விளக்குவதற்குப் பல கிராமங்களில் ஒருவர் கூட இருக்க மாட்டார்கள். 'மக்கள் மொழி ஹிந்தியே' என்று ஹிந்தியர்கள் கூறும்போது அவர்கள் ஹிந்தி வழங்கும் பகுதி மக்களை மட்டுமே நினைத்துப் பேசுகிறார்கள். அவர்களை விட எண்ணிக்கையில் குறைவில்லாத ஹிந்தி வழங்காத பகுதி மக்களைப் பற்றி ஹிந்தியர் எண்ணவில்லை.

சுயநல ஆசையை ஒரு மொழியின் மேலுள்ள அன்பாக வேஷம் போட்டுக் காட்டிவிடலாம்; ஒரு குறிப்பிட்ட மொழியின் மேலுள்ள பற்றைத் தேசப் பற்றாகவும் வேஷம் போட்டுக் காட்டிவிடலாம். ஆனால் இவ்வாறு நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வது அழகல்ல. தென்னிந்தியர்களின் ஹிந்தி எதிர்ப்பு குறுகின பிரதேசப் பித்தில் பிறந்ததல்ல. ஆங்கிலம் அகன்றால் சமநீதி முறை கெட்டுவிடும்; நிருவாகத்தின் திறமை கெட்டுவிடும் என்று நாம் கூறுகிறோம். இதைப் பிரதேசப் பித்தாகவோ, பிரிவினை வாதமாகவோ எண்ணுவது நியாயமல்ல.

சுதந்திரம் பெற்ற பின் கடந்த பதினேழு ஆண்டுகளில் நாம் ஆங்கிலத்தை நீடித்ததால் எவ்விதத்திலும் நம் கௌரவம் குறைந்துவிடவில்லை என்பதொன்றே ஹிந்தியரின் மூட சுதேசிக் கருத்துக்கு விடையாகும்.

ஒவ்வொரு ராஜ்யத்திலும் அந்தந்த மக்கள் மொழி நிருவாக மொழியாக இருந்தால் மொத்தத்தில் இந்தியா முழுவதுமே மக்கள் மொழி ஆட்சி மொழியானதாகத்தான் அர்த்தம். மொழிவாரியாக ராஜ்யங்களைப் பிரித்த பின் மக்களின் மொழியும் ராஜ்ய மொழியும் ஒன்றாகவே இருக்க எந்தத் தடையுமில்லை.

ஆனால் மத்திய சர்க்காரில் ஹிந்தியை ஆட்சிமொழியாக்குவதால் வங்காளத்திலோ, தமிழ் நாட்டிலோ, மற்ற ஹிந்தி வழங்காத ராஜ்யங்களிலோ உள்ள மக்கள் தங்கள் மொழி ஆட்சி மொழியாகி விட்டது என்று எண்ண முடியாது. ஹிந்தி ஆட்சி மொழியானதை மற்ற மொழிக்காரர்கள் எதிர்ப்பார்களா என்பது ஒருபுறமிருக்கட்டும். மக்கள் மொழிதான் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்ற வாதமொன்றையே கருத்தில் கொண்டோமாயின் இந்திய யூனியனில் எம்மொழியை ஆட்சி மொழியாக்கினாலும் அது கோடானு கோடி மக்களின் மொழியாக இராது என்பதைச் சந்தேகமறக் காண்போம் — எந்தத் தந்திர வாதத்தாலும் இந்நிலையை மாற்ற முடியாது. இருப்பதற்குள் மிக அதிகமான மக்கள், அதாவது ஐந்தில் இரண்டு பகுதியினர், ஹிந்தி பேசுகிறார்கள் என்பதாலோ, மற்ற மொழியினரும் அதை ஆதரிக்குமாறு செய்யக் கூடும் என்பதாலோ அது அகில இந்தியாவின் மக்கள் மொழியாகி விடாது.

தீர யோசித்துப் பார்த்தால் ஆங்கிலம், ஹிந்தி ஆகிய இரண்டுமே அகில

இந்திய மக்கள் மொழியல்ல என்று காண்போம். ஆனால் ஆங்கிலம் நாடு முழுவதிலும் சமமாகப் பரவியிருக்க, ஹிந்தி அவ்வாறு பரவியில்லை. ஆங்கில மொழி இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலுமுள்ள படிப்பாளிகளிடையே பரவியுள்ளது; இந்தியா முழுவதிலும் உள்ள சர்க்கார் ஊழியர்கள் ஆங்கிலம் அறிந்திருக்கிறார்கள். எனவே இந்தியாவில் மக்களின் மொழிகள் பல இருந்தாலும் தேசத்தின் எல்லாப் பகுதிகளிலுமுள்ள படிப்பாளிகள் அறிந்துள்ள ஒரேமொழி ஆங்கிலம்தான்.

நவீன அறிவு

ஆங்கில மொழி அறிவு இதே போல் வருங்காலத்திலும் இந்தியாவில் நீடிக்கும். ஏனெனில் நவீன அறிவுக்கும் உலகத் தொடர்புக்கும் ஆங்கில ஞானம் அவசியம் என்பதை அனைவரும் ஒப்புக் கொள்கிறார்கள். ஆங்கிலம் எல்லா ராஜ்யங்களின் கல்வித் திட்டங்களிலும் இடம் பெறும். இதே போல் ஹிந்தியை எல்லா ராஜ்யங்களிலும் பாடமாக்குவதற்குச் சாதகமான சூழ்நிலை இன்னும் பிறக்கவில்லை. ஒரு மொழியில் ஈடுபாடு உண்டாவது அதன் பயனைக் குறித்துத்தான். ஆங்கில மொழியில் ஈடுபாடு இருப்பதற்குக் காரணம் அம்மொழிப் புத்தகங்கள் நவீன அறிவை ஊட்டுவதேயாகும்.



இன்றோ, வருங்காலத்திலோ ஹிந்தி என்ன புத்தறிவைப் புகட்டப்போகிறது? பொருளைப் புரிந்துகொள்ளாமல் ஆங்கில வார்த்தைகளுக்கு மட்டும் பிரதி பதம் போட்டுப் புத்தகங்களை மொழிபெயர்ப்பதால் என்ன பயன்? புத்தகம் எந்தத் துறையைக் குறித்ததோ அதிலுள்ள நிபுணர்கள் மொழிபெயர்க்கப் போவதில்லை. விஷயமறியாத மொழிபெயர்ப்பாளர்கள் செய்த மொழிபெயர்ப்பை எப்படி நம்பி ஏற்க முடியும்? நவீன அறிவைத் தரும் நூல்கள் இயற்கையாக எந்த மக்களிடையே பிறக்கிறதோ அவர்களின் மொழியில்தான் உருவாகும். ஸயன்ஸ் நிபுணர்களும், தொழில் நுட்ப நிபுணர்களும் ஆங்கிலத்தில்தான் தங்களின் புதுக் கண்டுபிடிப்புகளை வெளியிடுவார்கள். அவற்றை விரைவாகப் பின்பற்ற வேண்டிய சமயத்தில் இரண்டாந்தர மொழிபெயர்ப்புக்காகப் பொழுதை விரயமாக்கி, நம் 'அந்தஸ்தை' நிலைநாட்டிக் கொள்ள வேண்டிய அவசியம் நமக்கோ நமது மாணவர்களுக்கோ இல்லை. நவீன அறிவை உடனடியாகப் பெறுவதைப் பொறுத்தே நாம் முன்னேற்றம் காணலாம்.

பேதத்தை வளர்க்கிறார்கள்!

இந்திய யூனியனின் ஆட்சி மொழியாக ஹிந்தியை அமர்த்துவதால் தேச ஐக்கியம் உண்டாகுமென எண்ணுவது மகத்தான பேதைமையாகும். இதற்கு நேர்மாறான விளைவே உண்டாகும். ஆட்சேபணையும், அதிருப்தியும், பேதமும்தான் உண்டாகும். நீதி முறையை அலட்சியம் செய்வதால் ஏற்படும் புண் விரைவில் ஆறி விடாது. இந்த உண்மையை எடுத்துக் காட்டுபவர் குற்றவாளியல்ல; புண்ணை உண்டாக்கியவர்களே குற்றவாளிகள்.

'இந்த அநீதத் திட்டத்தைக் கைவிட்டு என்னோடு சேர்ந்து, சாஸனத்தின் பதினேழாம் பிரிவை ரத்துச் செய்யக் கோருங்கள்' என்று வட இந்திய நண்பர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன். முன்பு முதிர்ந்த சிந்தனை இல்லாமல் அவசரப்பட்டு அரசியல் சாஸனத்தில் சேர்க்கப்பட்ட பதினேழாம் பிரிவை இப்போது நீக்க வேண்டுமென்று வட இந்தியர்களும் கோரினால் அது நாட்டின் ஐக்கியத்தையும் ஒற்றுமை உணர்ச்சியையும் அற்புதமாக வளர்க்கும்.

இந்தியாவிடம் என் பற்று குறைந்து விட்டதென்றோ, அதன் எல்லா ராஜ்யங்களிலும் எனக்கிருந்த ஈடுபாடு தளர்ந்து விட்டதென்றோ யாரும் எண்ணவேண்டாம். முன்னெப்போதையும் விட அவை

இப்போது அதிகமாகவே இருக்கின்றன. அது காரணமாகவேதான் நான் பலருக்குப் பிடிக்காத முறையில் எழுத நேர்ந்திருக்கிறது. ஹிந்தி பேசாதவர் மீது அம்மொழியைத் திணிக்க விரும்பும் ஹிந்தியர்கள் தங்கள் நலனையே கெடுத்துக் கொள்கிறார்கள். அவர்கள் தங்கள் மொழிப் பற்றைத் தத்தம் ராஜ்யத்தோடு நிறுத்திக் கொள்ள வேண்டுமென்றும், மத்திய சர்க்கார் விஷயத்தில் பந்தயத்தை 'ட்ரா' செய்து பெருமை கொள்ள வேண்டும் என்றும் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். ஹிந்தி அறியாதவரின் நலமீது ஹிந்திக் கத்தி தொங்காமல் ஆங்கிலமே நீடிக்க வழி காண வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

சம்ஸ்கிருதத்தின் உதாரணம்

பரிணாமத்துக்குக் காரணமான அம்சங்கள் ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டு வளர்ந்து வருகின்றன. அவற்றைத் தனித் தனியாகப் பிரித்துப் பார்த்துப் புரிந்து கொள்ள முடியாது. முன்னொரு காலத்தில் அகில இந்தியாவை இணைத்த மகத்தான மொழியாக சம்ஸ்கிருதம் இருந்தது. இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் படிக்கவும், அறியவும், நினைவில் வைத்துக் கொள்ளவும் தகுந்த எல்லா விஷயங்களையும் சம்ஸ்கிருதத்திலேயே எழுதி வைத்தனர்.

பிறகு இதே இடத்தை ஆங்கிலம் பெற்றது. இந்தியாவை அடிமைப் படுத்திய பிரிட்டிஷார்தான் இது ஒரே நாடு என்ற ஐக்கிய உணர்வையும் ஏற்படுத்தியவர்கள் என்பது விந்தையான உண்மை! அதே போல் அந்த அந்நிய ஆட்சியாளரின் மொழியான ஆங்கிலம்தான் இந்நாட்டின் எல்லாப் பகுதி மக்களையும் இணைக்கவும் உதவியது. தேசம் முழுவதும் ஒரே ஆட்சியின்கீழ் அடிமைப் பட்டதால்தான் ஒன்றுபட்டது. அடிமைத்தனத்தில் பிறந்தது என்பதால் அந்த ஐக்கியத்தை நாம் உதறிவிடுவோமா? அதே போல் ஐக்கியத்துக்குக் காரணமான ஆங்கில மொழியையும் அந்நியப் பட்டம் கட்டி உதறிவிடக் கூடாது என்பதே பகுத்தறிவு காட்டும் வழி. தேச கௌரவத்துக்காகச் சுதேச மொழியைத்தான் ஆட்சி பீடமேற்ற வேண்டுமெனில், தேச கௌரவத்தை விட முக்கியமான ஐக்கியத்தையும், நீதியையும் இழந்து விடுவோம்.

சரித்திரம் முன்னேறிக் கொண்டே இருக்கிறது. அதை நிர்ப்பந்தப் படுத்திப் பின்னேறச் செய்ய முடியாது. பாரதம் என்கிற உபகண்டத்தின் பெருந்தொகையான மக்களுக்குச் சரித்திர பூர்வமாகக் கிட்டிய ஒன்றை மாற்றியமைக்க முயல்வது காரிய சாத்தியமல்ல. மறைந்து போன பழங்கால அந்நிய ஆட்சியை நினைக்காமல் எதிர்கால ஐக்கியத்தை மட்டுமே நினைந்து ஆங்கிலத்தை உறுதிப் படுத்துவதே விவேகம்.

நிர்ப்பந்தத்தாலோ, சலுகை காட்டுவதாலோ, முகஸ்துதி செய்வதாலோ, அரசியல் தந்திரம் செய்வதாலோ, அல்லது மறைமுகமான வழிகளாலோ ஒரு வேளை ஹிந்தியை ஆட்சி மொழியாக்கி விடலாம். ஆனால் அதன் பின், மொழியில் அடைந்த வெற்றியால் அரசியலில் படுதோல்வியுற்றுத் தேச ஒற்றுமை நாசமாவதைப்பிரத்யட்சமாகக்காண்போம்.

புண்ணிய க்ஷேத்திரங்களும் அவற்றுக்குச் செல்லும் சாலைகளும் ஒரே கருத்துடையவர்களை ஒன்றுசேர்த்து ஒருவருக்கொருவர் சகாயம் செய்து கொள்ள உதவுவது போலவே சரித்திரத்தின் பற்பல காலங்களில் சில மொழிகள் மக்களை ஒன்று சேர்த்துத் தேச நலனை அபிவிருத்தி செய்கின்றன. ஒரு காலத்தில் ஐரோப்பாவில் கிரேக்க மொழி இவ்வாறு உதவிற்று. ஐரோப்பிய நாடுகள் யாவும் பலவிதங்களில் பேதப்பட்டு இருந்த போது லத்தீன் மொழி அவற்றை அசாதாரணமான முறையில் ஒன்று சேர்த்தது. ஐரோப்பாவில் எல்லா நாடுகளின் அறிவு வளர்ச்சியும் லத்தீன் மூலமே நடைபெற்றது என்பது வரலாறு கூறும் உண்மை. இதேபோல் இந்தியாவில் எவருமே சம்ஸ்கிருதத்தைத் தாங்கள் பேசும் தாய்மொழியாகக் கொண்டிராவிடினும், இந்நாட்டின் பல பகுதி மக்களும் பல்வேறு மொழிகளைப் பேசிவந்தபோதிலும், அவர்களை யெல்லாம் சம்ஸ்கிருதம் ஒன்றாக இணைத்து நாடு முழுவதற்கும் அறிவும் பண்பும் அளித்தது. நாட்டில் அறிவும் பண்பும் வளர்க்க விரும்பியவர்கள் சம்ஸ்கிருதத்தைக் கற்று அம்மொழியில் தங்கள் கருத்தை வெளியிட்டதால் தேசம் முழுவதும் ஆன்மிக உறவில் ஒன்றாக பந்தப்பட்டது.

பல்வேறு மொழி பேசிய இந்தியாவின் மௌனமான நீண்ட பழைய சகாப்தங்களில் சம்ஸ்கிருதம் எந்தப் பணியைப் புரிந்ததோ, பல நாடுகளாகப் பிரிந்திருந்த ஐரோப்பாவில் லத்தீன் மொழி எந்தப் பணியைப் புரிந்ததோ அதையேதான் இன்றைய இந்தியாவில் ஆங்கிலம் செய்து வருகிறது. ஆங்கிலத்தை இந்தியாவில் எவரும் தாய் மொழியாகக் கொள்ளாதிருக்கலாம். எனினும் அதுதான் மற்ற தாய்

மொழிக்காரர்களை யெல்லாம் ஒன்றாக இணைக்கிறது. இவ்வாறு தேச ஐக்கியம் தருவதோடு, ஆங்கிலம்தான் இந்தியாவை வெளி உலகத்துடன் இணைத்து வைக்கிறது. உலகின் நாகரிக நாடுகளின் பண்புச் செல்வங்களை யெல்லாம் நமக்குக் கொண்டு வந்து தரும் சாதனமாக ஆங்கிலமே பணி புரிகிறது.

மனித குலத்தின் பொதுச் சொத்து

மனித குலம் முழுவதும் ஒரு குலமெனில், அது முழுவதற்கும் அறிவூட்டும் ஒரு பொதுச் சாதனம் இருந்தே யாகவேண்டும். அந்தப் பொதுச் சாதனமாக ஆங்கிலம் அரும் பணியாற்றி வருகிறது. ஆங்கிலேயர் இந்தியாவின் பழங்கால விரோதிகள் என்பதால் ஆங்கிலம் தரும் அநுகூலங்களைப் பெற மறுப்பது அறிவீனத்துடன் சேர்ந்த மூடப் பிடிவாதமாகும். நிருவாகத்திலும், நீதிமன்றத்திலும், கலாசாலைகளிலும் ஆழ வேரோடியுள்ள ஆங்கிலத்தை அகற்ற நினைப்பது முட்டாள்தனம். ஆண்டவனும் இயற்கை விதிகளும் எப்போதும் தீமையுடன் நன்மையைக் கலந்தே அளிப்பதை உணர்வோமாக. தீமையோடு சேர்ந்து வந்த நன்மையை எடுத்துக் கொள்ளாமல் அதையும் அவமானகரமானது என நினைத்துத் தீமையுடன் சேர்த்துப் புறக்கணிப்பதால் ஆண்டவனின் நியாயமான ஏற்பாட்டையே பாழாக்கிவிடுவோம்.

பழைய ஏற்பாடு

இந்தியாவில் பிரதேச மொழிகள் பல இருக்கின்றன. இவை ஒவ்வொன்றையும் லட்சக்கணக்கானவர்கள் பேசுகின்றனர். இவை யாவும் இலக்கிய வளம் பொருந்தியவை. இவற்றில் ஹிந்தியும் ஒரு பிரதேச மொழி. மற்ற எந்த ஓர் இந்திய மொழியையும் விட ஹிந்தி மொழி பேசுகிறவர்கள் அதிகம் இருக்கிறார்கள். எனவே இம்மொழியை அகில இந்திய ஆட்சி மொழியாக்கலாம் எனச் சுதந்திரப் போராட்ட காலத்தில் எண்ணப்பட்டது. இந்தியாவின் 'மகத்தான நிருவாக மொழி' யாக ஓர் அந்நிய மொழியை வைத்துக் கொள்ளும் அவமானம் இதனால் நீங்கும் என்று கருதப்பட்டது. இது காரணமாகவே ஹிந்தியை ஆட்சி மொழியாக்கும் விதி அரசியல் சாஸனத்தில் இடம் பெற்றது. அப்போதைக்கு எல்லாச் சிரமங்களையும் ஆட்சேபணைகளையும் ஒத்திப்போட நினைத்து, 1965லிருந்து ஹிந்தியை ஆட்சிமொழியாக்குவதெனச் சட்டம் செய்யப்பட்டது. ஹிந்தி ஆட்சி பீடம் ஏறுவதற்கான காலம் நெருங்கத் தொடங்கியதும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. உடனே அதற்கு எதிர்ப்பும் வெளியாகத் தொடங்கி விட்டது. மற்ற மொழியினர், முக்கியமாக வங்காளத்திலும் தமிழகத்திலும் உள்ளவர்கள், ஆட்சி மொழிச் சட்டத்தை ஆட்சேபிக்கத் தொடங்கினர்.

இப்போதுதான் ஆட்சேபம் வெளிப்படையாயிற்று எனினும் ஹிந்தி முன்பே அமுலாகி யிருந்தாலும் அப்போதே ஆட்சேபமும் ஏற்பட்டிருக்கும். ஹிந்திக்குத் தமிழ் நாட்டில் ஆட்சேபம் இருக்கும் என்பதால்தான் அரசியல் சாஸனம் அளித்த பதினைந்தாண்டு



இடைக்காலத்தில் ஹிந்தியைக் கட்டாய பாடமாக்கத் தமிழ் நாட்டு அரசாங்கம் முன்வரவில்லை. ஆட்சேபம் இருப்பதற்கு நியாயமான காரணமுண்டு. ஹிந்தியரை விடத் தாங்கள் பிரதிகூலமான நிலையில் இருப்போம் என மற்ற மொழியினர் அஞ்சுகிறார்கள். இந்த உண்மையை மக்கள் புரிந்து கொண்டு ஆட்சேபிக்காவிடினும்கூட, ஹிந்தித் திட்டத்தால் மற்ற மொழியினரின் சம வாய்ப்பு உரிமை பறிக்கப்படும் என்பது உண்மை.

எது அந்நியம்?

இந்திய சர்க்கார் என்பது இந்தியா முழுதுடனும், இந்தியாவின் ஒவ்வொரு பகுதியுடனும் ஒரே முறையில் தொடர்பு கொண்டிருக்க வேண்டும். இந்தியாவில் உள்ள ராஜ்யங்களில் பாதிக்கு மேற்பட்டவைகளிலுள்ளோர் நிருவாக காரியங்களுக்கு ஹிந்தியைப் பயன்படுத்த

முடியாதவர்கள். அவர்களுக்கு ஆங்கிலத்தைவிட ஹிந்தியே அந்நியமாயிருக்கும். ஹிந்தி மத்திய நிருவாக மொழியானால் தென்னிந்திய மக்கள் தங்களுக்கும் நிருவாகத்துக்கு மிடையே எவ்விதத் தொடர்பையும் காண மாட்டார்கள். மாறாகத் தாங்கள் பிறப்பாலோ, படிப்பாலோ அறிந்திராத ஒரு மொழியைப் பேசும் இந்தியர்கள் அம்மொழியை அறிந்துள்ள ஒரே காரணத்தால் தங்களை ஆள்கிற வர்க்கத்தினராகி யிருப்பதைக் கண்டு மனம் கொதிப்பார்கள்.

ஆங்கிலம் இன்று நவ பாரத நிருவாகத்தின் எல்லாப் பிரிவுகளிலும் நிலையாக ஊன்றிவிட்டது. அதனைப் பிடுங்கி எறிந்துவிட்டு ஹிந்தியை நிலைநாட்டுவதால் ஏற்படக் கூடிய அசௌகரியத்தை எண்ணிப் பார்க்க வேண்டும். பெரிய மாற்றம் செய்வதால் விளையக் கூடிய இன்னல்களையும் உற்பாதங்களையும் அலட்சியம் செய்வதற்கில்லை. இது அவசியமற்ற மாற்றம் என்பதை உணர்ந்து ஹிந்தித் திட்டத்தைக்கைவிடவேண்டும்.

உண்மையில் ஆங்கிலம் இப்போது நம் நாட்டில் அந்நியமாக இல்லை. ஆனால் ஹிந்தி பேசும் பகுதியிலிருந்து திட்டவட்டமாகப் பிரிக்கப் பட்டுள்ள பாரதத்தின் பாதிக்கு மேற்பட்ட பிரதேச மக்களுக்கு ஹிந்தி முற்றிலும் அந்நியமாயிருக்கிறது. நூற்றைம்பது ஆண்டுகளாக ஆங்கிலத்தைப் பயின்றபடியால், தென்னிந்தியாவில் பெருவாரி மக்களுக்கு ஹிந்தி மொழி ஆங்கிலத்தை விடப் பத்து மடங்கு அந்நியமாயிருக்கிறது.

ஹிந்தியை யூனியன் மொழியாக்கி விடுவதால் ஆங்கிலத்தை அடியோடு அகற்றிவிட முடியாது என்பதை ஒப்புக்கொள்கிறார்கள். நவீன நாகரிக வாழ்முறைக்கும், தொழில் முறைக்கும், அவற்றில் அரசாங்கம் ஆற்ற வேண்டிய பங்குக்கும் ஆங்கிலம் அத்தியாவசியமா யிருக்கும். சமீப காலத்தில் ஆங்கிலப் படிப்பு புறக்கணிக்கப்பட்டு விட்டது என்றும், அதை இனி பலப்படுத்த வேண்டும் என்றும் ஆட்சித் தலைவர்களே கூறுகிறார்கள். இனி எப்படியும் ஆங்கிலம் இருக்க வேண்டும் என்னும்போது, ஆட்சிமொழி ஸ்தானத்திலிருந்து அதனை அகற்றி அதனிடத்தில் ஹிந்தியைப் புகுத்தி வேண்டாத விளைவுகளை உண்டாக்குவது அறிவீனம்.

ஒரு மாயை

ஹிந்தி மொழி பேசாதவர்கள் ஹிந்தியை ஒருபோதும் தங்கள் தாய்மொழியாக்கிக் கொள்ள மாட்டார்கள். எனவே என்றோ ஒரு நாள் ஹிந்தி தேசியப் பொதுமொழியாகும் என்ற எண்ணத்தின் மேல் அதனை ஆட்சிமொழியாக்க நினைப்பவர்கள் தங்கள் எண்ணம் ஒருபோதும் பலிக்காது என்பதை உணர வேண்டும். இந்த மாய எண்ணத்தை வெளியிட்டாலே மற்ற மொழியினர் அதைப் பலமாக ஆட்சேபித்து எதிர்ப்பார்கள்.

இந்தியா முழுவதற்கும் பொதுவான ஒரு தேசிய மொழி ஒருகாலும் ஏற்பட முடியாது. ஒரு பொது தேசிய மொழியை உருவாக்கக் கூடிய காலம் போய்ப் பல நூற்றாண்டுகளுக்கு மேலாகி விட்டது. இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மொழியும் வளமும் வளர்ச்சியும் கொண்ட இலக்கியங்களைப் பெற்றுள்ளது. சக்தியும், அழகும் கொண்ட அம்மொழிகள் யாவும் அவற்றைப் பேசுவோருக்குப் பெருமிதம் அளித்து வருகின்றன. ஹிந்திக்கோ வேறு மொழிக்கோ இந்த இடத்தைத் தர மற்ற மொழி மக்கள் தயாராக இல்லை. இந்தியாவுக்கு ஒரு பொது மொழியை நிர்ப்பந்தப் படுத்துவது ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்புதான் சாத்தியம்.

இன்று நாம் செய்ய வேண்டியதெல்லாம் அகில இந்திய நிருவாகத்துக்கு ஒரு பொது மொழியைக் கொள்வது தான். நிருவாகம் நல்ல முறையில் நடக்க உதவுவதோடு, எல்லாப் பகுதி மக்களுக்கும் வித்தியாசமின்றி ஒரே போலிருக்கக் கூடிய மொழியைத்தான் யாவருக்கும் சம உரிமையுள்ள மத்திய சர்க்காரின் நிருவாக மொழியாகக் கொள்ள முடியும். ஆங்கிலமே இந்தப் பணியை இதுவரை திறம்படச் செய்து வந்திருக்கிறது. ஹிந்திக்கு நிருவாக காரியங்களில் பயனுறும் திறனும் திட்பமும் இல்லை என்பதோடு அது நாட்டு மக்கள் அனைவருக்கும் சமமான வாய்ப்பும் அளிக்கவில்லை.

உறுதிமொழிகள் தகர்ந்தன !

ஹிந்தி பேசாத மக்களின் சிரமங்களை ஹிந்தியர் புரிந்து கொள்ளவில்லை. ஹிந்தியால் தங்களுக்குப் பெருத்த அநுகூலம் கிடைக்கும் என்ற எண்ணத்தில் ஹிந்தியர் பிறர் உரிமையைக் காணத் தவறுகிறார்கள். உயர் அதிகாரிகளும் உண்மை நிலையைத் தைரியமாக எடுத்துச் சொல்லாமல் அரசியல் தலைவர்களுக்குத் தலையாட்டும் காவமாகி விட்டது. அந்நிலையை அதிகாரிகள் தெளிவாக உணர்ந்தபோதிலும் ஹிந்திக்

கும்பலுக்கு உடைந்தையா யிருப்பதே உசிதமென எண்ணுகிருர்கள்.

'திணிப்பு இராது' என்று எத்தனையோ வாக்குறுதிகள் அளிக்கப்பட்டுவிட்டன. ஆனால் வாக்குறுதிக்கு நேர்மாருகவே நடைமுறையில் ஏற்பாடுகள் நடக்கின்றன. பாதிக்கப்பட்டவர்கள் அவ்வப்போது எழுப்பும் புகார் குரலிலிருந்து ஹிந்தித் திணிப்பு நிகழ்ந்து வருவது வெட்டவெளிச்சமாகிவருகிறது.


பத்திரிகைப் புள்ளி விவரம்

மொழிப் பற்று என்பது நாட்டைப் பல பிரிவுகளாக்கி விட்டது. ஒவ்வொரு ராஜ்யத்தையும் மற்ற ராஜ்யங்களிலிருந்து சுவர் எடுத்துப் பிரித்தாற்போல் தாய் மொழிப் பற்று வளர்ந்து விட்டது. ராஜ்ய சர்க்கார்கள் சர்வகலாசாலைகளின் கருத்தை மதிக்காமல், கல்லூரிப் படிப்பு பிரதேச மொழியிலேயே நடைபெற வேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்கின்றன. கல்லூரிப் படிப்புக்கும் உயர் உத்தியோகங்களுக்கும் உள்ள தொடர்பு காரணமாக, விரைவிலேயே பிரதேச மொழியில் கல்வி கற்ற உத்தியோகஸ்தர்கள் நாட்டின் வேறெந்தப் பகுதிக்கும் போகாமல் அந்தந்தப் பிரதேசத்தினர் அந்தந்தப் பகுதிகளிலேயே தேங்கும் நிலை ஏற்பட்டுவிடும். இதேபோல், இந்தியாவின் எந்தச் சர்வகலாசாலையிலும் தங்கு தடையின்றிக் கல்வியைத் தொடருவதற்கு இதுவரை வாய்ப்புப் பெற்றிருந்த மாணவர்கள் இனி தங்களுடைய பிரதேச சர்வகலாசாலைகளை விட்டு வெளிச் செல்ல முடியாது.

இத்தகைய ஆபத்து ஏற்படாமல் தடுத்து இந்தியாவை ஒரு நாடாக்க வழி, கல்லூரிகளிலும் மத்திய சர்க்கார் காரியாலயங்களிலும் ஆங்கிலத்தை நீடிப்பதுதான். கல்வித் துறையிலும் நிருவாகத் துறையிலும் பாரத நாட்டைப் பல திட்டுக்களாகத் துண்டிப்பது ஒருகாலும் விரும்பத் தக்கதல்ல. இந்தியாவின் இரத்த ஓட்டமாகிய ஐக்கியத்தைக் காக்காவிடில் மொழிப் பற்று என்கிற வியாதி வெகு விரைவில் முற்றிவிடும்.

ஹிந்தியை ஆதரித்து எவ்வளவோ பேசப்பட்டபோதும் இன்றும் ஆங்கிலப் பத்திரிகைகள் நம் நாட்டில் பெற்றுள்ள ஸ்தானம் உண்மை நிலையைத் தெளிவாகக் கூறுகிறது. பிரதேச மொழிகளிலுள்ள உள்ளூர்ப் பத்திரிகைகள் நல்ல பணி புரிகின்றன. எனினும் எல்லா ராஜ்யங்களுக்கிடையேயும் அகில இந்திய அடிப்படையில் ஆங்கிலப் பத்திரிகைகள் புரிந்து வரும் தொண்டு மகத்தானது. இப்போது பத்திரிகை உலகில் ஆங்கிலம் செய்து வரும் பணியில் ஒரு சிறிய பங்கைக்கூட ஹிந்தியால் செய்ய முடியாது. யாரும் ஆட்சேபிக்க முடியாத இந்தப் பத்திரிகை உலகப் பிரத்யட்ச நிலையே அகில இந்தியத் தொடர்பு மொழியாக எது இருக்க வேண்டும் என்பதற்குச் சான்ருகும். அறிவுக் கண் குருடாகிப் போனவர் தவிர மற்ற யாரும் இந்த உண்மையை உணருவார்கள்.

ஆங்கிலப் பத்திரிகைகளின் செலாவணி குறித்து வெளியாகியுள்ள அதிகார பூர்வமான புள்ளி விவரம் ஹிந்தி ஆதரவாளர்களுக்கு ஒரு பலத்த அடியாகும். அகில இந்தியாவிலும் தினசரி ஹிந்திப் பத்திரிகைகளுக்கு நாலு லட்சம் பிரதி



கள்தான் செலாவணி. ஆனால் ஆங்கில தினசரிப் பத்திரிகைகளின் செலாவணியோ பத்து லட்சம்! இந்தியாவின் தொடர்பு மொழியாக எதற்குத் தகுதியுண்டு என்பதற்கு இதுவே விடை. தென்னிந்தியாவில் மட்டும் ஹிந்திப் பத்திரிகைகளின் செலாவணி என்ன, ஆங்கிலப் பத்திரிகைகளின் செலாவணி என்ன என்று புள்ளி விவரம் கிடைத்தால் ஹிந்தி தென்னகத்தில் சூக்ஷ்மதரிசனி வைத்துப் பார்க்கும் நிலையிலேயே இருக்கிறது என்பதை வட இந்தியர்கள் மண்டையிலடித்தாற் போல் உணருவார்கள். தென்னிந்தியா என்பது பாரதத்தின் சிறிய பகுதியல்ல. ஆயிரம் லட்சம் மக்கள் கொண்ட பாகம் அது. எவ்வித அரசியல் தலையீடும் நிர்ப்பந்தமுமின்றி, இந்த ஆயிரம் லட்சம் மக்களிடையே ஆங்கிலம் இயல்பாகத் தலை நிமிர்ந்து நிற்கிறது.

ஹிந்தியை சிம்மாதனத்தில் ஏற்று வதற்காக எல்லா முயற்சியும் எடுக்கிற போதும் ஆங்கிலப் பத்திரிகைகளின் செலாவணி நாளுக்குநாள் அதிகமாகி வருவதை இங்கு குறிப்பிட வேண்டும். அகில இந்திய செய்திப் பத்திரிகை என்ற பெயருக்குத் தகுதி வாய்ந்த எல்லாப் பத்திரிகைகளும் ஆங்கிலத்தில் தான் உள்ளன. ஒரு ஹிந்திச் செய்திப் பத்திரிகைக்குக்கூட அகில இந்தியச் செலாவணி இருப்பதாகச் சொல்ல முடியாது. தகுதி, சமயத்தின் தேவை இவற்றை விளக்கு வதற்கு இதை விட என்ன வேண்டும்? நிருவாகக் கொள்கைகளையும் சர்க்கார் நடவடிக்கைகளையும் விவாதிப்பதற்கு மிகவும் ஆற்றலும் சௌகரியமும் வாய்ந்த மொழி ஆங்கிலம்தான் என்பது செய்திப் பத்திரிகைச் சோதனையிலிருந்து நிரூபணமாகிறது.

ஆனபடியால், நாட்டு நலனை இதயத்தில் வைத்துள்ள அனைவரும் கட்சிக் கொள்கைகளையும் தேர்தல் வெற்றி வாய்ப்புக்களையும் கருதாமல் ஆட்சி மொழி என்ற முக்கியமான பிரச்னையில் சத்தியத்தின் சார்பில் பேச வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். அரசியல்வாதிகளும், அரசியல் நடப்புக்களில் அக்கறை கொண்டுள்ள மக்களும் ஆங்கிலச் செய்திப் பத்திரிகைகளை வாங்கிப் படிக்கும் வரையில் ஆங்கிலம் ஒன்றே மத்திய சர்க்காரின் நிருவாக மொழியாகவும், ராஜ்யங்களின் தொடர்பு மொழியாகவும் இருக்க வேண்டும் என்று நான் உறுதியாகக் கூறுகிறேன்.

கீழ்க்கண்டவாறு 1960ம் ஆண்டில் நான் எழுதியது துரதிருஷ்டவசமாக இன்னமும் பொருத்தமாக இருக்கிறது:

> ஆங்கிலத்தை அகற்றிவிட்டு அந்த இடத்தில் ஹிந்தியை அமர்த்தும் பிரச்னை மீண்டும் கூர்ந்த கவனத்துக்கு வந்திருப்பது பற்றி மகிழ்ச்சியடைகிறேன். சென்னைக்கு ராஷ்டிரபதி வரும்போது ஹிந்திக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாக அச்சுறுத்துவது கௌரவமாயில்லை. என்றாலும், இது போல் அவமரியாதை செய்வதும், இன்னல் செய்வதும், ஒழுங்கீனமாக நடந்துகொள்வதும், கிளர்ச்சி செய்வதும் சரியல்ல என்று நாம் வன்மையாகக் கண்டித்தாலும் இதுபோன்ற செய்கைகள் மட்டுமே இன்றைய இந்திய சர்க்காரின் சிந்தனையைத் திருப்பும் சக்தி வாய்ந்த உபாயமாக உள்ளன. இப்படி இருப்பது நம் துரதிருஷ்டம். ஆனால் இதுவே உண்மை நிலை. தற்போது ஆட்சி மொழிப் பிரச்னையும் இதே முறையில் தான் கவனத்துக்குக் கொண்டு வரப் பட்டிருக்கிறது.

பெரும்பான்மையினர் அல்ல

மற்றோர் உண்மையை மறந்துவிடக் கூடாது. பொதுவாக நினைப்பதுபோல் ஹிந்தி பேசுபவர்கள் நாட்டின் பெரும்பான்மையினரல்ல. ஒன்றுக்கொன்று மிகவும் மாறுபட்டுப் பரஸ்பரம் யுத்தம் புரிந்து கொண்டிருக்கும் ஹிந்தி மொழியின் உட்பிரிவுகள் எல்லாவற்றையும் சேர்த்தால்கூட ஹிந்தியர் நாட்டின் மொத்த ஜனத்தொகையில் பெரும்பான்மையினரல்ல.

நிகழ்காலத்தின் நடைமுறைத் தேவையையும் சௌகரியத்தையும் குறித்த பிரச்னையில் பெரும்பான்மை வாதம், சுதேசிப் பற்று, மொழிப் பெருமை இவற்றைக் கலப்பது அறிவீனம். இளைஞனொருவன் காதலியைத் தேர்ந்தெடுப்பது போல நாம் மனக் கிளர்ச்சிக்கு மட்டும் வசமாகி ஆட்சி மொழியைத் தேர்ந்தெடுக்காமலிருப்போமாக. நமது தேர்வில் சிருங்கார ரஸ அழகு இல்லாவிடினும் பாதகமில்லை. பகுத்தறிவுக்குப் பொருந்திய முடிவு எடுத்தாலே போதும்.

பெரும்பான்மை மட்டும் போதாது

ஹிந்தி, ஆங்கிலம் இரண்டு மொழிகளும் இருக்கட்டுமே என்கிறார்கள். இது காகிதத்தில் நன்றாகத் தோன்றும் ராஜித் திட்டம். ஆனால் நடைமுறைக்கு ஒவ்வாது. பொதுமக்களுக்கு வெளியிடப்படும் பிரகடனங்களும், அறிவிப்புக்களும், சட்டங்களும் இரு மொழிகளிலும் வெளியாகலாம். ஆனால் ஒவ்வோர் அலுவலகத்திலுமுள்ள ஊழியர்கள் தங்கள் இஷ்டப்படி ஏதேனும் ஒரு மொழியைத் தேர்ந்தெடுக்க அநுமதித்தால் குழப்பமே விளையும். திறமை, சுறுசுறுப்பு, ஒழுக்கம் எல்லாமே கெட்டுப் போய்ப் பொழுதும் பொருளும் விரயமாகும். அரசாங்கக் காரியாலயங்களில் அரசியல் சர்ச்சைகள் பிரவேசித்துப் பேதமும் திறமையின்மையும் தலையெடுக்க வேண்டுமென்றாலொழிய இரு மொழித் திட்டத்தை அமுலாக்கக் கூடாது. இந்த விபரீத விளைவுகளை உணராமல் விஷயமறிந்தவர்களும் இரு மொழித் திட்டத்தைப் பிரச்னைக்கு நியாயமான தீர்வாக நினைத்து ஆதரிப்பது விந்தை.

பார்லிமென்ட் மசோதாக்களையும் சட்டங்களையும், ராஷ்டிரபதியின் உத்தரவுகளையும் ஆங்கிலம், ஹிந்தி மற்றுமுள்ள எல்லாப் பிரதேச மொழிகளி

லும் வெளியிடலாம். ஆனால் காரியாலயத்துள் நடக்கும் அலுவல்கள் ஒரே மொழியில்தான் இருக்க முடியும். அந்த ஒரே மொழி ஆங்கிலம்தான். உண்டுபார்த்த உணவின் ருசி நமக்கு எப்படித் தெரியுமோ அதுபோல் பல்லாண்டுகளாக உபயோகித்த ஆங்கிலத்தின் பயனை நாம் சந்தேகமற அறிந்திருக்கிறோம். அதை மாற்றி உபத்திரவத்தை வலுவில் வாங்க வேண்டாம் என்கிறேன். மாறுதல் செய்தால் நடைமுறையில் சரியாக இருந்து வருவதவ் வளவும் ஒரே ஒழுங்கீனமாகும்.

சில விஷயங்களில் பெரும்பான்மையினரின் திருப்தியை மட்டும் கவனித்தால் போதாது. அனைவருக்கும் திருப்தி தரவேண்டிய சில அம்சங்களும் அரசாட்சியில் உண்டு. பெரும்பான்மையினர் தங்களுக்கு மட்டும் அநுகூலமான ஒரு புதிய மாறுதலை ஆதரிக்கும்போது அதை எதிர்க்கச் சிறுபான்மையினர் அதிக உரிமை பெற்றிருக்க வேண்டும். இவ்விஷயத்தை எப்படித் தெளிவுபடுத்துவது என்று நான் முயன்று கொண்டிருந்தபோது என் நண்பரொருவர் டீன் ஸ்விஃப்ட் என்ற புகழ் பெற்ற ஆங்கில எழுத்தாளரின் கருத்திலிருந்து மிகப் பொருத்தமான ஒரு மேற்கோள் அனுப்பியுள்ளார். ஸ்விஃப்ட் கூறுகிறார்:

> மக்களையும் அவர்களது சொத்துக்களையும் காக்கும் சட்டங்களை **எல்லா மக்களும்** விரும்பினால்தான் மாற்ற முடியும் என்கிற நிலையில்தான் உண்மையான அரசாங்கத்தின் இலட்சியங்கள் நிறைவேற்றப்படுகின்றன. சர்க்கார் ஒருவர் கையிலிருப்பினும் பலர் கையிலிருப்பினும் இந்த உரிமை உள்ள வரையில்தான் அரசாங்கத்தின் உண்மை லட்சியம் நிறைவேற்றப்படுகிறது. ஆனால் **மக்கள் அனைவருக்கும்** பிரதிநிதித்துவம் வகிக்காத ஒருவரோ, ஒரு குழுவோ அதிகாரத்தைக் கைப்பற்றினால் அப்போது உண்மையான அரசாங்கம் என்பது உயிர்வாழவில்லை. அரிஸ்டாடிலும், அவரது சீடர்களும் கூறியது போல் அரசாங்கத்தின் திரிந்துபோன தோற்றம் தான் அப்போது இருக்கும். அதிகாரத்திலுள்ளவர்களின் எண்ணிக்கை எதுவாயினும் அவர்கள் மனம் போனபடி அதிகாரம் செலுத்தலாமெனில் அந்நிலையை நான் அராஜகத்தைவிடக் கொடிய தீமையாகவே கருதுகிறேன்.

டாக்டர் ஜான்ஸன், ஸ்விஃப்ட் போன்ற ஆங்கில எழுத்தாளர்களுக்கே உரிய முறையில் விஷயம் வெகு தெளிவாகவும், அழுத்தமாகவும் கூறப்பட்டிருக்கிறது.

சில பிரச்னைகளில் **அனைவரின்** அங்கீகாரமும் தேவை. எவ்வளவு பெரும் பகுதியினராயிருப்பினும் ஒரு பாகத்தினரின் அங்கீகாரத்தை மட்டும் கொண்டு சில பிரச்னைகளில் முடிவுகட்டக்கூடாது. புதிய மாறுதல் செய்யும்போது அதனால் பாதிக்கப்படும் சிறு பகுதியினருக்கும் பெரும்பான்மையினருக்குள்ள மதிப்பைத் தந்து அவர்களின் இணக்கம் பெற்றால் மட்டுமே மாற்றம் செய்ய வேண்டும். எண்ணிக்கை பலத்தைக் கொண்டு எதேச்சாதிகாரம் செய்யலாகாது.

தமிழக மந்திரிகள் தயங்கக் கூடாது

நாம் முன்பு இயற்றிய இரட்டை மொழி சூத்திரத்தை இப்போது



நாமே மறுக்கக் கூடாது என்று தமிழ் நாட்டு மந்திரிகள் நினைப்பது வருந்தத்தக்கது. முன்பு இரட்டை மொழிச் சூத்திரம் இயற்றியதே தவறு என்கிறேன். அந்தத் தவற்றை விடாமல் இப்போதும் வலியுறுத்துவது இன்னொரு தவறாகும். மொழிபெயர்ப்புக்காக அநாவசியச் சிப்பந்தி விஸ்தரிப்பும் அதனால் வீண் செலவும் ஏற்படும். ஹிந்தியரல்லாத சிப்பந்திகளை எப்படியெல்லாம் கொடுமைப்படுத்த முடியுமோ அப்படியெல்லாம் பழிவாங்க இருமொழித் திட்டம் இடம் தரும். ஹிந்தியைத் திணிக்கும் திட்டம் அடி

யோடு கை விடப்படவில்லை என்பதை நாம் மறக்கலாகாது. தற்போதைக்கு நேருஜியின் வாக்குறுதியைக் காப்பதற்காக இருமொழித் திட்டத்தைச் சொல்லி வருகிறார்கள். அவ்வளவே! மேற்கு வல்லரசுகளுக்கும் ருஷியாவுக்குமிடையே நடைபெறும் பனிப் போரைப் போல் ஹிந்திக்கும் ஆங்கிலத்துக்குமிடையே சகிக்க முடியாத ஒரு பனிப் போர் நடைபெறவே இருமொழித் திட்டம் வழி செய்யும். நேரு அவர்கள் இருமொழித் திட்டத்தைக் குறித்து வாக்குறுதி அளிக்கவில்லை. ஹிந்தி பேசாதவரின் விருப்பத்தைப் பொறுத்தே இதுவரையில் இருந்து வந்த நடைமுறையை மாற்றலாம் என்பதுதான் அவரது வாக்குறுதி.

ஆங்கிலத்தைத் திணிக்கவில்லை

ஆங்கிலத்தை விரும்பாத ஹிந்தியர் மீது நாம் ஆங்கிலத்தைத் திணிக்கக் கூடாது என்று ஸ்ரீ பக்தவத்ஸலம் அவர்கள் கூறுகிறார். புதிதாக நாம் ஆங்கிலத்தைக் கொண்டு வரவில்லை. சுதந்திரத்துக்கு முற்பட்ட நூற்றாண்டை 'இருள் யுகம்' என்றே ஒதுக்கிவிட்டாலும், சுதந்திரம் பெற்ற பின் பதினேழு ஆண்டுகளாக ஹிந்தியரும் பின்பற்றி வந்த ஆங்கிலத்தைத்தான் இனியும் நீடிக்க வேண்டும் என்று நாம் கேட்கிறோம். இது எப்படித் திணிப்பாகும்? இந்தியாவின் பதினைந்து மொழிகளையும் இயற்கையாகக் காக்கும் மொழி ஆங்கிலமே.

மொழிகளுக்குள் சர்ச்சையில்லை

ஆட்சிமொழிப் பிரச்னை என்பது மொழிகளுக்குள் நடக்கும் சர்ச்சையல்ல. மொழிகள் சர்ச்சை செய்துகொள்வதில்லை. நடக்கிற சர்ச்சைக்கெல்லாம் பேராசையும் சுயநலமும் மிகுந்த மக்களே காரணம். இதைப் புரிந்துகொண்டால் பிரச்னைக்குத் தீர்வு காண முடியும். ஹிந்தியை ஆட்சிமொழியாக்குவதற்காகக் கூறப்படும் வாதங்களும், ஆங்கிலத்தைக் கண்டித்துக் கூறும் காரணங்களும் மொழியைக் குறித்தனவல்ல. ஹிந்திமொழி பேசுகிற தலைவர்கள், மக்கள் இவர்களுடைய பேராசையும் சுயநலமுமே இப்படிப் பேசுகின்றன. கத்தியும் ஈட்டியும் தாமாகவே சண்டை போட்டுக் கொள்வதில்லை. இவற்றைத் தாங்குகிற மக்கள்தான் பொறாமையாலும், பயத்தாலும், துவேஷத்தாலும், பாசத்தாலும் சண்டை செய்து கொள்கிறார்கள். மொழி போன்ற கருவிகளை மறந்து அவற்றுக்குப் பின்னால் உள்ள மனித இதயங்களைப் புரிந்து கொண்டாலே பிரச்னையைத் தீர்க்க முடியும்.

காங்கிரஸ்காரர்கள் இப் பிரச்னையில் இரு மனத்தவராக இருக்கிறார்கள். பகுத்தறிவும் நீதி உணர்ச்சியும் அவர்களை ஒருபுறம் அழைக்கிறது. பிடிவாதம் இன்னொரு புறம் இழுக்கிறது. குளிர் காலத்தில் நீச்சல் குளத்தில் அமிழ்ந்து குளிக்க எண்ணியவன் குளக் கரைக்கு வந்தவுடன் தயங்குவது போல் சத்தியத்தின் விளிம்புக்கு வந்தவுடன் தயங்குகிறார்கள். தவற்றை ஒப்புக்கொண்டு திருத்திக்கொள்வதற்குத் தீரம் தேவை. ஆண்டவன்தான் அந்த தீரத்தை அளிக்க வேண்டும். ஆங்கிலத்தை நீடிக்க வேண்டும் என்று ஒப்புக்கொள்ளும் போதே அதுபற்றி நிபந்தனைகளும் விதிப்பது சத்தியத்தின் மீது சுமத்தப்படும் நிபந்தனைகள். இந்த நிபந்தனைகள் யாவும் எடுபட வேண்டும்.

ஆங்கில மாதா நவீன அறிவு என்கிற ஜீவசாரமான பாலை நமது நாட்டில் உள்ள எல்லா சர்வகலாசாலை மாணவருக்கும் புகட்டுகிறாள். அப்படிப்பட்ட ஆங்கிலத்தின்மீது அந்நியப் பட்டம் சூட்டுவது தகாது. நம் மக்களனைவருக்கும் ஒரு செவிலித் தாயாக உள்ள ஆங்கிலத்தை அதற்குரியபடி மதித்து நடக்க வேண்டும். வட இந்தியர்களைத் தமிழ் படிக்கச் செய்ய வேண்டும் — வட இந்தியாவில் தமிழ்ப் பிரசார சபை அமைக்க வேண்டும் — என்றெல்லாம் பேசுகிறார்கள். இது அர்த்தமற்ற பேச்சு. இவ்வாறு ஒருபோதும் செய்ய முடியாது; செய்யவும் மாட்டார்கள். மக்களை ஏமாற்றுவதற்காக இதுபோன்ற அவசியமற்ற திட்டங்களில் பொருளை விரயம் செய்வது நியாயமுமல்ல.

ஹிந்தி பாஷை அதற்கு இயற்கையாக உள்ள சக்தியின் மூலம் அதற்கு இயல்பான துறைகளில் தானாகவே வளரும். அரசியல் கட்டாயமோ, சர்க்காரின் நிர்ப்பந்தமோ, ஹிந்தியர் கொண்டாடும் விசேஷ அந்தஸ்தோ இன்றி வர்த்தகத் துறையில் ஹிந்தி தானாகவே பரவும். எனினும் ஆங்கிலம் செய்ய வேண்டிய பணியிலிருந்து ஹிந்தியின் பணி முற்றிலும் வித்தியாசமாகவே இருக்கும். ஆங்கிலம், ஹிந்தி இவற்றில் ஒன்றுமட்டும் செய்யக் கூடிய, செய்ய வேண்டிய பணியை இன்னொன்று ஒருபோதும் செய்ய முடியாது. ஐக்கியம் என்கிற பணியை ஆங்கிலம் மட்டுமே செய்ய முடியும்.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor: T. Sadasivam.

...TERED No. M. 4392
...ered as a Newspaper in Ceylon

